இப்பணியானது பூங்காதுறையின் மூலதன நிதியின் மூலம் நடைபெறுவதற்கும் பூங்கா துறைக்காக சென்னை பெருநகர வளர்ச்சி குழுமத்திடமிருந்து நிதி பெறப்படும்பொழுது மூலதன நிதிக்கு நேர் செய்யப்படும் என தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.

மேற்குறிப்பிட்ட பணிக்கு 2014–15ஆம் ஆண்டின் அலுவலக விலை விவரப்படி தயாரிக்கப்பட்டுள்ள ரூ.1,25,89,000/– (ரூபாய் ஒரு கோடி இருபத்தி ஐந்து இலட்சத்து எண்பத்தி ஒன்பதாயிரம் மட்டும்) தயாரிக்கப்பட்டுள்ள மதிப்பீட்டிற்கு நிர்வாக அனுமதியும், ஒப்பம் கோரியமைக்கு சென்னை மாநகர முனிசிபல் சட்டம் விதி 1919ல் விதி (78)ன்படி நிலைக்குழு (பணிகள்) மற்றும் நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி)வின் மூலமாக மன்றத்தின் பின்னேற்பு அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

> ‘‘22.07.2015 அன்று நடைபெற்ற நிலைக்குழு (பணிகள்)வின் கூட்டத்தின் தீர்மான எண்.145/2015 நாள்.22.07.2015ன்படி இதற்கு வார்டுக்குழு தீர்மானம் பெறப்பட வேண்டும் என்ற நிபந்தனையுடன் நிலைக்குழு (பணிகள்) பரிந்துரை செய்து நிலைக்குழு (வரிவிதிப்பு (ம) நிதி)வின் மூலமாக மன்றத்தின் பின்னேற்பு அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.
>
> ‘‘24.07.2015 அன்று நடைபெற்ற நிலைக்குழு (வ.வி.ம.நி) கூட்டத்தின் தீர்மான எண்.166/2015, நாள் 24.07.2015ன்படி இதற்கு நிலைக்குழு (வ.வி.ம.நி) பரிந்துரை செய்து மன்றத்தின் பின்னேற்பு அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது’’.

‘‘இதற்கு மன்றம் பின்னேற்பு அனுமதி அளிக்கின்றது’’

****

வ.இ.அ.(தெ).ந.க.எண்.எ10/012/2015
முதன்மை செயலர் / ஆணையர் அவர்களின் 22.07.2015 நாளிட்ட குறிப்பு

தீர்மான எண்.370/2015 **பொருள் எண்.19**

மதிப்பீடு–2015–16, மண்டலம்–14, கோட்டம்–184 – மூலதன நிதியின் கீழ் 2014–15 ஆம் ஆண்டு விலைப்பட்டியலின் அடிப்படையில் அண்ணா நெடுஞ்சாலையில் ஃபியரி எஸ்டேட் நிறுவனத்திடமிருந்து பெறப்பட்ட திறந்தவெளி நிலத்தில் நடைபாதை, மின்சார வசதி, தண்ணீர் வசதி, சிறுவர் விளையாட்டு திடல், ஸ்கேட்டிங் கோர்ட் உடன் பசுமைப் பூங்கா அமைக்கும் பணிக்காக தயாரிக்கப்பட்டுள்ள ரூ.1,08,67,000/– க்கு நிர்வாக அனுமதியும், ஒப்பம் கோரியமைக்கு பின்னேற்பு அனுமதி

01. பணியின் பெயர்	: மண்டலம்–14, கோட்டம்–184 அண்ணா நெடுஞ்சாலையில் ஃபியரி எஸ்டேட் நிறுவனத்திடமிருந்து பெறப்பட்ட திறந்தவெளி நிலத்தில் நடைபாதை, மின்சார வசதி, தண்ணீர் வசதி, சிறுவர் விளையாட்டு திடல், ஸ்கேட்டிங் கோர்ட் உடன் பசுமைப் பூங்கா அமைக்கும் பணி
02. பரிந்துரை செய்தவரின் விவரம்	: மாண்புமிகு மேயர் அவர்கள்
03. எந்த துறைக்காக இப்பணி செயலாக்கம்	: பூங்காத்துறை வட்டார அலுவலகம்(தெற்கு)
04. சம்பந்தப்பட்ட துறையால் அனுமதி பெறப்பட்டதா ?	: பெறப்பட்டது
05. தொழில்நுட்ப அனுமதி அளித்த அதிகாரி, செயல்முறை ஆணை எண். மற்றும் தேதி	: தலைமை பொறியாளர்(க) தொழில்நுட்ப அனுமதி எண்.
06. மதிப்பீடு எந்த வருடத்தின் அட்டவணை விலைப்பட்டியல் முன் வைத்து தயாரிக்கப்பட்டது	: 2014–15ஆம் ஆண்டு அலுவலக விலைப்பட்டியல்படி தயாரிக்கப்பட்டது
07. மதிப்பீட்டின் தொகை	: ரூ. 10867000.00
(அ) பணியின் செலவினம் மட்டும்	: ரூ. 8861150.98
(ஆ) மேலான மேற்பார்வை செலவு	: ரூ. 886115.10
(இ) சிறு மேற்பார்வை செலவு	: ரூ. 221528.77
(ஈ) தமிழ்நாடு கட்டுமான தொழிலாளர் பொது நல வாரிய நிதி 0.3%	:ரூ. 88611.51
(உ) தரக்கட்டுபாடு	: ரூ. 88611.51
(எ) மற்றைய எதிர்பாரா செலவு	: ரூ. 270982.13
மொத்தம்	: ரூ. 1,08,67,000.00
08. (அ) மழைநீர் வடிகால்வாய் கட்டுவது நடைபாதை பகுதியா / சாலைப்பகுதியா	: –
09. ஒரு சதுர மீட்டருக்கு அல்லது ஒரு மீட்டருக்கு ஆகும் செலவு	:
10. வரைபடம் வைக்கப்பட்டுள்ளதா	:– ஆம்
11. மதிப்பீட்டிற்காக ஒப்புதல் அளித்த குழுவின் பெயர் தீர்மான எண் மற்றும் தேதி	: பின்னர் பெறப்படும்
12. ஏற்கனவே எப்போது செய்யப்பட்டது	: புதிய பணி
13. நிதியின் மூலத்தன்மை	: மூலதன நிதி (பூங்காத்துறை)
இக்கோப்பில் குறிப்பிட்டுள்ள பணிக்கு தேவைப்படும் நிதி	: ரூ. 1,08,67,000/–

இப்பணியானது பூங்காதுறையின் மூலதன நிதியின் மூலம் நடைபெறுவதற்கும் பூங்கா துறைக்காக சென்னை பெருநகர வளர்ச்சி குழுமத்திடமிருந்து நிதி பெறப்படும்பொழுது மூலதன நிதிக்கு நேர் செய்யப்படும் என தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.

மேற்குறிப்பிட்ட பணிக்கு 2014–15ஆம் ஆண்டின் அலுவலக விலை விவரப்படி தயாரிக்கப்பட்டுள்ள ரூ.1,08,67,0000/– (ரூபாய் ஒரு கோடி எட்டு இலட்சத்து ஆறுபத்தி ஏழாயிரம் மட்டும்) தயாரிக்கப்பட்டுள்ள மதிப்பீட்டிற்கு நிர்வாக அனுமதியும், ஒப்பம் கோரியமைக்கு சென்னை மாநகர முனிசிபல் சட்டம் விதி 1919ல் விதி (78)ன்படி நிலைக்குழு (பணிகள்) மற்றும் நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி)வின் மூலமாக மன்றத்தின் பின்னேற்பு அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

> ‘‘22.07.2015 அன்று நடைபெற்ற நிலைக்குழு (பணிகள்)வின் கூட்டத்தின் தீர்மான எண்.146/2015 நாள்.22.07.2015ன்படி இதற்கு வார்டுக்குழு தீர்மானம் பெறப்பட வேண்டும் என்ற நிபந்தனையுடன் நிலைக்குழு (பணிகள்) பரிந்துரை செய்து நிலைக்குழு (வரிவிதிப்பு (ம) நிதி)வின் மூலமாக மன்றத்தின் பின்னேற்பு அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.
>
> ‘‘24.07.2015 அன்று நடைபெற்ற நிலைக்குழு (வ.வி.ம.நி) கூட்டத்தின் தீர்மான எண்.167/2015, நாள் 24.07.2015ன்படி இதற்கு நிலைக்குழு (வ.வி.ம.நி) பரிந்துரை செய்து மன்றத்தின் பின்னேற்பு அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது’’.

‘‘இதற்கு மன்றம் பின்னேற்பு அனுமதி அளிக்கின்றது’’

****

வ.இ.அ.(தெ).ந.க.எண்.எ10/013/2015
முதன்மை செயலர் / ஆணையர் அவர்களின் 22.07.2015 நாளிட்ட குறிப்பு

தீர்மான எண்.371/2015 **பொருள் எண்.20**

மதிப்பீடு–2015–16, மண்டலம்–14, கோட்டம்–184 – மூலதன நிதியின் கீழ் 2014–15 ஆம் ஆண்டு விலைப்பட்டியலின் அடிப்படையில் அண்ணா நெடுஞ்சாலையில் ஃபியரி எஸ்டேட் நிறுவனத்திடமிருந்து பெறப்பட்ட திறந்தவெளி நிலத்தை சுற்றி சுற்று சுவர் கட்டும் பணிக்காக தயாரிக்கப்பட்டுள்ள ரூ.1,30,00,000/–க்கு நிர்வாக அனுமதியும், ஒப்பம் கோரியமைக்கு பின்னேற்பு அனுமதி

	பணியின் பெயர்	:மண்டலம்–14, கோட்டம்–184 அண்ணா நெடுஞ்சாலையில் ஃபியரி எஸ்டேட் நிறுவனத்திடமிருந்து பெறப்பட்ட திறந்தவெளி நிலத்தை சுற்றி சுற்று சுவர்
1.	பரிந்துரை செய்தவரின் விவரம்	: மாண்புமிகு மேயர் அவர்கள்
2.	எந்த துறைக்காக இப்பணி செயலாக்கம்	: பூங்காத்துறை வட்டார அலுவலகம்(தெற்கு)
3.	சம்பந்தப்பட்ட துறையால் அனுமதி பெறப்பட்டதா ?	: பெறப்பட்டது
4.	தொழில்நுட்ப அனுமதி அளித்த அதிகாரி, செயல்முறை ஆணை எண். மற்றும் தேதி	: தலைமை பொறியாளர்(க) தொழில்நுட்ப அனுமதி எண்.
5.	மதிப்பீடு எந்த வருடத்தின் அட்டவணை விலைப்பட்டியல் முன் வைத்து தயாரிக்கப்பட்டது	: 2014–15ஆம் ஆண்டு அலுவலக விலைப்பட்டியல்படி தயாரிக்கப்பட்டது.
6.	மதிப்பீட்டின் தொகை	: ரூ. 13000000.00
	(அ) பணியின் செலவினம் மட்டும்	: ரூ. 11112657.72
	(ஆ) மேலான மேற்பார்வை செலவு	: ரூ. 1111265.77
	(இ) சிறு மேற்பார்வை செலவு	: ரூ. 277816.44
	(ஈ) தமிழ்நாடு கட்டுமான தொழிலாளர் பொது நல வாரிய நிதி 0.3%	:ரூ. 111126.58
	(உ) தரக்கட்டுபாடு	: ரூ. 111126.58
	(எ) மற்றைய எதிர்பாரா செலவு	: ரூ. 276006.91
	மொத்தம்	: ரூ. 1,30,00,000.00
7.	(அ) மழைநீர் வடிகால்வாய் கட்டுவது நடைபாதை பகுதியா / சாலைப்பகுதியா	: –
8.	ஒரு சதுர மீட்டருக்கு அல்லது ஒரு மீட்டருக்கு ஆகும் செலவு	:
9.	வரைபடம் வைக்கப்பட்டுள்ளதா	:– ஆம்
10.	மதிப்பீட்டிற்காக ஒப்புதல் அளித்த குழுவின் பெயர் தீர்மான எண் மற்றும் தேதி	: பின்னர் பெறப்படும்
11.	ஏற்கனவே எப்போது செய்யப்பட்டது	: புதிய பணி
12.	நிதியின் மூலத்தன்மை	: மூலதன நிதி (பூங்காத்துறை)
	இக்கோப்பில் குறிப்பிட்டுள்ள பணிக்கு தேவைப்படும் நிதி	: ரூ. 1,30,00,000/–

இப்பணியானது பூங்காதுறையின் மூலதன நிதியின் மூலம் நடைபெறுவதற்கும் பூங்கா துறைக்காக சென்னை பெருநகர வளர்ச்சி குழுமத்திடமிருந்து நிதி பெறப்படும்பொழுது மூலதன நிதிக்கு நேர் செய்யப்படும் என தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.

மேற்குறிப்பிட்ட பணிக்கு 2014–15ஆம் ஆண்டின் அலுவலக விலை விவரப்படி தயாரிக்கப்பட்டுள்ள ரூ.1,30,00,000/– (ரூபாய் ஒரு கோடியே முப்பது இலட்சம் மட்டும்) தயாரிக்கப்பட்டுள்ள மதிப்பீட்டிற்கு நிர்வாக அனுமதியும், ஒப்பம் கோரியமைக்கு சென்னை மாநகர முனிசிபல் சட்டம் விதி 1919ல் விதி (78)ன்படி நிலைக்குழு (பணிகள்) மற்றும் நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி)வின் மூலமாக மன்றத்தின் பின்னேற்பு அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

> ‘‘22.07.2015 அன்று நடைபெற்ற நிலைக்குழு (பணிகள்)வின் கூட்டத்தின் தீர்மான எண்.147/2015 நாள்.22.07.2015ன்படி இதற்கு வார்டுக்குழு தீர்மானம் பெறப்பட வேண்டும் என்ற நிபந்தனையுடன் நிலைக்குழு (பணிகள்) பரிந்துரை செய்து நிலைக்குழு (வரிவிதிப்பு (ம) நிதி)வின் மூலமாக மன்றத்தின் பின்னேற்பு அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.
>
> ‘‘24.07.2015 அன்று நடைபெற்ற நிலைக்குழு (வ.வி.ம.நி) கூட்டத்தின் தீர்மான எண்.168/2015, நாள் 24.07.2015ன்படி இதற்கு நிலைக்குழு (வ.வி.ம.நி) பரிந்துரை செய்து மன்றத்தின் பின்னேற்பு அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது’’.

‘‘இதற்கு மன்றம் பின்னேற்பு அனுமதி அளிக்கின்றது’’

****

வ.இ.அ.(தெ).ந.க.எண்.எ10/010/2015
முதன்மை செயலர் / ஆணையர் அவர்களின் 22.07.2015 நாளிட்ட குறிப்பு

தீர்மான எண்.372/2015 **பொருள் எண்.21**

மதிப்பீடு–2015–16, மண்டலம்–15, கோட்டம்–198 – மூலதன நிதியின் கீழ் 2014–15 ஆம் ஆண்டு விலைப்பட்டியலின் அடிப்படையில் தமிழ்நாடு வீட்டுவசதி வாரியடத்திடமிருந்து பெற்ற திறந்தவெளி நிலத்தில் பூங்கா அமைக்கும் பணி (பகுதி–2) பணிக்காக தயாரிக்கப்பட்டுள்ள ரூ.1,43,00,700க்கு நிர்வாக அனுமதியும், ஒப்பம் கோரியமைக்கு பின்னேற்பு அனுமதி

01.	பணியின் பெயர்	: மண்டலம்–15, கோட்டம்–198 தமிழ்நாடு வீட்டுவசதி வாரியத்திடமிருந்து பெற்ற திறந்தவெளி நிலத்தில் பூங்கா அமைக்கும் பணி (பகுதி–2) பணி.
02.	பரிந்துரை செய்தவரின் விவரம்	: மாண்புமிகு மேயர் அவர்கள்
03.	எந்த துறைக்காக இப்பணி செயலாக்கம்	: பூங்காத்துறை வட்டார அலுவலகம்(தெற்கு)
04.	சம்பந்தப்பட்ட துறையால் அனுமதி பெறப்பட்டதா ?	: பெறப்பட்டது
05.	தொழில்நுட்ப அனுமதி அளித்த அதிகாரி, செயல்முறை ஆணை எண். மற்றும் தேதி	: தலைமை பொறியாளர்(க) தொழில்நுட்ப அனுமதி எண்.
06.	மதிப்பீடு எந்த வருடத்தின் அட்டவணை விலைப்பட்டியல் முன் வைத்து தயாரிக்கப்பட்டது	: 2014–15ஆம் ஆண்டு அலுவலக விலைப்பட்டியல்படி தயாரிக்கப்பட்டது.
07.	மதிப்பீட்டின் தொகை	: ரூ. 14300700.00
	(அ) பணியின் செலவினம் மட்டும்	: ரூ. 11446852.00
	(ஆ) மேலான மேற்பார்வை செலவு	: ரூ. 1144685.20
	(இ) சிறு மேற்பார்வை செலவு	: ரூ. 286171.30
	(ஈ) தமிழ்நாடு கட்டுமான தொழிலாளர் பொது நல வாரிய நிதி 0.3%	:ரூ. 114468.52
	(உ) தரக்கட்டுபாடு	: ரூ. 114468.52
	(எ) மற்றைய எதிர்பாரா செலவு	: ரூ. 1194054.46
	மொத்தம்	: ரூ. 1,43,00,700.00
08.	(அ) மழைநீர் வடிகால்வாய் கட்டுவது நடைபாதை பகுதியா / சாலைப்பகுதியா	: –
09.	ஒரு சதுர மீட்டருக்கு அல்லது ஒரு மீட்டருக்கு	:
10.	வரைபடம் வைக்கப்பட்டுள்ளதா	:– ஆம்
11.	மதிப்பீட்டிற்காக ஒப்புதல் அளித்த குழுவின் பெயர் தீர்மான எண் மற்றும் தேதி	: பின்னர் பெறப்படும்
12.	ஏற்கனவே எப்போது செய்யப்பட்டது	: புதிய பணி
13.	நிதியின் மூலத்தன்மை	: மூலதன நிதி (பூங்காத்துறை)

இக்கோப்பில் குறிப்பிட்டுள்ள பணிக்கு தேவைப்படும் நிதி : ரூ. 1,43,00,700/–

இப்பணியானது பூங்காதுறையின் மூலதன நிதியின் மூலம் நடைபெறுவதற்கும் பூங்கா துறைக்காக சென்னை பெருநகர வளர்ச்சி குழுமத்திடமிருந்து நிதி பெறப்படும்பொழுது மூலதன நிதிக்கு நேர் செய்யப்படும் என தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.

மேற்குறிப்பிட்ட பணிக்கு 2014–15ஆம் ஆண்டின் அலுவலக விலை விவரப்படி தயாரிக்கப்பட்டுள்ள ரூ.1,43,00,700/– (ரூபாய் ஒரு கோடி நாற்பத்து மூன்று இலட்சத்து ஏழுநூறு மட்டும்) தயாரிக்கப்பட்டுள்ள மதிப்பீட்டிற்கு நிர்வாக அனுமதியும், ஒப்பம் கோரியமைக்கு சென்னை மாநகர முனிசிபல் சட்டம் விதி 1919ல் விதி (78)ன்படி நிலைக்குழு (பணிகள்) மற்றும் நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி)வின் மூலமாக மன்றத்தின் பின்னேற்பு அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

> ‘‘22.07.2015 அன்று நடைபெற்ற நிலைக்குழு (பணிகள்)வின் கூட்டத்தின் தீர்மான எண்.151/2015 நாள்.22.07.2015ன்படி இதற்கு வார்டுக்குழு தீர்மானம் பெறப்பட வேண்டும் என்ற நிபந்தனையுடன் நிலைக்குழு (பணிகள்) பரிந்துரை செய்து நிலைக்குழு (வரிவிதிப்பு (ம) நிதி)வின் மூலமாக மன்றத்தின் பின்னேற்பு அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.
>
> ‘‘24.07.2015 அன்று நடைபெற்ற நிலைக்குழு (வ.வி.ம.நி) கூட்டத்தின் தீர்மான எண்.172/2015, நாள்.24.07.2015ன்படி இதற்கு நிலைக்குழு (வ.வி.ம.நி) பரிந்துரை செய்து மன்றத்தின் பின்னேற்பு அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது’’.

‘‘இதற்கு மன்றம் பின்னேற்பு அனுமதி அளிக்கின்றது’’

****

வ.இ.அ.(தெ).ந.க.எண்.எ10/015/2015
முதன்மை செயலர் / ஆணையர் அவர்களின் 22.07.2015 நாளிட்ட குறிப்பு

தீர்மான எண்.373/2015 **பொருள் எண்.22**

மதிப்பீடு–2015–16, மண்டலம்–15, கோட்டம்–198 – மூலதன நிதியின் கீழ் 2014–15 ஆம் ஆண்டு விலைப்பட்டியலின் அடிப்படையில் தமிழ்நாடு வீட்டுவசதி வாரியடத்திடமிருந்து பெற்ற திறந்தவெளி நிலத்தில் பூங்கா அமைக்கும் பணி (பகுதி–1) பணிக்காக தயாரிக்கப்பட்டுள்ள ரூ.1,56,90,000/– க்கு நிர்வாக அனுமதியும், ஒப்பம் கோரியமைக்கு பின்னேற்பு அனுமதி

01. பணியின் பெயர்	: மண்டலம்–15, கோட்டம்–198 தமிழ்நாடு வீட்டுவசதி வாரியத்திடமிருந்து பெற்ற திறந்தவெளி நிலத்தில் பூங்கா அமைக்கும் பணி (பகுதி–1) .
02. பரிந்துரை செய்தவரின் விவரம்	: மாண்புமிகு மேயர் அவர்கள்
03. எந்த துறைக்காக இப்பணி செயலாக்கம்	: பூங்காத்துறை வட்டார அலுவலகம்(தெற்கு)
04. சம்பந்தப்பட்ட துறையால் அனுமதி பெறப்பட்டதா ?	: பெறப்பட்டது
05. தொழில்நுட்ப அனுமதி அளித்த அதிகாரி, செயல்முறை ஆணை எண். மற்றும் தேதி	: தலைமை பொறியாளர்(க) தொழில்நுட்ப அனுமதி எண்.
06. மதிப்பீடு எந்த வருடத்தின் அட்டவணை விலைப்பட்டியல் முன் வைத்து தயாரிக்கப்பட்டது	: 2014–15ஆம் ஆண்டு அலுவலக விலைப்பட்டியல்படி தயாரிக்கப்பட்டது.
07. மதிப்பீட்டின் தொகை	: ரூ. 15690000.00
(அ) பணியின் செலவினம் மட்டும்	: ரூ. 12562616.66
(ஆ) மேலான மேற்பார்வை செலவு	: ரூ. 1256261.67
(இ) சிறு மேற்பார்வை செலவு	: ரூ. 314065.42
(ஈ) தமிழ்நாடு கட்டுமான தொழிலாளர் பொது நல வாரிய நிதி 0.3%	:ரூ. 125626.17
(உ) தரக்கட்டுபாடு	: ரூ. 125626.17
(எ) மற்றைய எதிர்பாரா செலவு	: ரூ. 1305803.91
மொத்தம்	: ரூ. 1,56,90,000.00
08. (அ) மழைநீர் வடிகால்வாய் கட்டுவது நடைபாதை பகுதியா / சாலைப்பகுதியா	: –
09. ஒரு சதுர மீட்டருக்கு அல்லது ஒரு மீட்டருக்கு ஆகும் செலவு	:
10. வரைபடம் வைக்கப்பட்டுள்ளதா	:– ஆம்
11. மதிப்பீட்டிற்காக ஒப்புதல் அளித்த குழுவின் பெயர் தீர்மான எண் மற்றும் தேதி	: பின்னர் பெறப்படும்
12. ஏற்கனவே எப்போது செய்யப்பட்டது	: புதிய பணி
13. நிதியின் மூலத்தன்மை	: மூலதன நிதி (பூங்காத்துறை)
இக்கோப்பில் குறிப்பிட்டுள்ள பணிக்கு தேவைப்படும் நிதி	: ரூ. 1,56,90,000/–

இப்பணியானது பூங்காதுறையின் மூலதன நிதியின் மூலம் நடைபெறுவதற்கும் பூங்கா துறைக்காக சென்னை பெருநகர வளர்ச்சி குழுமத்திடமிருந்து நிதி பெறப்படும்பொழுது மூலதன நிதிக்கு நேர் செய்யப்படும் என தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.

மேற்குறிப்பிட்ட பணிக்கு 2014–15 ஆம் ஆண்டின் அலுவலக விலை விவரப்படி தயாரிக்கப்பட்டுள்ள ரூ.1,56,90,000/– (ரூபாய் ஒரு கோடி ஐம்பத்தி ஆறு இலட்சத்து தொண்ணூறு ஆயிரம் மட்டும்) தயாரிக்கப்பட்டுள்ள மதிப்பீட்டிற்கு நிர்வாக அனுமதியும், ஒப்பம் கோரியமைக்கு சென்னை மாநகர முனிசிபல் சட்டம் விதி 1919ல் விதி (78)ன்படி நிலைக்குழு (பணிகள்) மற்றும் நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி)வின் மூலமாக மன்றத்தின் பின்னேற்பு அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

> ‘‘22.07.2015 அன்று நடைபெற்ற நிலைக்குழு (பணிகள்)வின் கூட்டத்தின் தீர்மான எண்.152/2015 நாள்.22.07.2015ன்படி இதற்கு வார்டுக்குழு தீர்மானம் பெறப்பட வேண்டும் என்ற நிபந்தனையுடன் நிலைக்குழு (பணிகள்) பரிந்துரை செய்து நிலைக்குழு (வரிவிதிப்பு (ம) நிதி)வின் மூலமாக மன்றத்தின் பின்னேற்பு அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.
>
> ‘‘24.07.2015 அன்று நடைபெற்ற நிலைக்குழு (வ.வி.ம.நி) கூட்டத்தின் தீர்மான எண்.173/2015, நாள் 24.07.2015ன்படி இதற்கு நிலைக்குழு (வ.வி.ம.நி) பரிந்துரை செய்து மன்றத்தின் பின்னேற்பு அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது’’.

‘‘இதற்கு மன்றம் பின்னேற்பு அனுமதி அளிக்கின்றது’’

****

தி.க.மே.து.ந.க.எண்.அ7/2890/2014

முதன்மை செயலர் மற்றும் ஆணையாளர் அவர்களின் 22.07.2015 நாளிட்ட குறிப்பு

தீர்மான எண்.374/2015 **பொருள் எண்.23**

திடக்கழிவு மேலாண்மை துறை – தமிழக அரசிடமிருந்து ரூ.10 கோடி மற்றும் ரூ.8 கோடி திடக்கழிவு மேலாண்மை பணிகளுக்கு மானியமாக பெறப்பட்டது – பணம் செலவிடப்பட்ட விவரம் கோரி உள்ளாட்சி தணிக்கையில் தடை எழுப்பப்பட்டது – நிதி மேலாண்மை குழுமத்திடமிருந்து விவரங்கள் பெறப்பட்டது – பயன்பாட்டு சான்றிதழ் மற்றும் தமிழக அரசின் பின்னேற்பு கோருவதற்கு அனுமதி

உள்ளாட்சி நிதி தணிக்கையின் 2009–2010ஆம் ஆண்டு தணிக்கை அறிக்கையில் பத்தி எண்.8ல் கீழ்வருமாறு தடை எழுப்பப்பட்டுள்ளது.

சென்னை மாநகராட்சிக்கு சொந்தமான பெருங்குடி மற்றும் கொடுங்கையூர் குப்பை கொட்டும் வளாகங்களை மேம்படுத்த தமிழ்நாடு மாசுக்கட்டுப்பாடு வாரியத்தின் கருத்துரை மற்றும் பரிந்துரையின் அடிப்படையில் ரூ.126 கோடிக்கு திட்ட முன்மொழிவு தயாரிக்கப்பட்டு அரசுக்கு சமர்ப்பிக்கப்பட்டதைத் தொடர்ந்து மேற்படி திட்டப்பணியினை நிறைவேற்ற அரசின் மொத்த மானியமாக ரூ.10 கோடியும் பெறப்பட்டது.

குப்பை கொட்டும் வளாகங்களை மேம்படுத்த சென்னை மாநகராட்சியிடமிருந்து பெறப்பட்ட திட்ட முன்மொழிவு அரசின் பரிசீலனைக்குப் பிறகு சென்னை மாநகராட்சி திடக்கழிவு மேலாண்மைப் பணிகளை மேம்பாடு செய்ய விரிவான திட்ட அறிக்கையினைத் தயாரிக்க ஆலோசகர்களை நியமித்துக் கொள்ளவும் மேலும் ஆலோசகர்களுக்கு வழங்க வேண்டிய ஆலோசனை கட்டணச் செலவுகளுக்கு தமிழ்நாடு நகர்புற வளர்ச்சி நிதியம் (TNUDF) மூலம் மானியம் பெற்றுக்கொள்ளவும் அனுமதி அளிக்கப்பட்டுள்ளது. இதைத் தொடர்ந்து அரசாணை எண்.150/நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள்.24.3.2004ன்படி ரூ.6 கோடியும் மற்றும் அரசாணை எண்.162, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள்.30.03.2004ன்படி ரூ.4 கோடியும் ஆகமொத்தம் ரூ.10 கோடி 2003–2004ஆம் ஆண்டில் அரசு மானியமாக பெறப்பட்டுள்ளது. இத்தொகை கணக்கு குறியீட்டு எண்.527ல் வரவு வைக்கப்பட்டுள்ளது.

மேற்படி ரூ.10 கோடி அரசு மானியம் வழங்கப்பட்ட நோக்கத்திற்காக செலவிடப்பட்டு உள்ளதா என்பதனை சரிபார்க்க ரூ.10 கோடிக்கான செலவின விவரத்தைத் தணிக்கைக்கு தாக்கல் செய்யப்பட வேண்டும். மேற்படி அரசு மானியம் ரூ.10 கோடி செலவிடப்படவில்லையானால் அதனை அரசுக்கே திருப்பி அனுப்பப்பட வேண்டும். அரசு மானியம் செலவிடப்பட்ட விவரம் தணிக்கைக்கு அளிக்கப்படவில்லையானால் அரசு நிதி முடக்கம் செய்யப்பட்டு வட்டி இழப்பு ஏற்பட்டுள்ளது என தணிக்கையில் குறைபாடாக சுட்டிக்காட்டப்படுகிறது. இது தவிர வேறு மானியம் ஏதும் இத்துறையால் பெறப்பட்டிருப்பின் அதன் விவரத்தையும் தணிக்கைக்கு காண்பிக்கப்பட வேண்டும். இது குறித்து சென்ற ஆண்டு தணிக்கை அறிக்கையின் பத்தி எண்.8ல் தடை எழுப்பியும் இதுவரை இதற்கான விவரம் ஏதும் தணிக்கைக்கு அளிக்கப்படவில்லை.

தமிழக அரசு, ரூ.6 கோடி மற்றும் ரூ.4 கோடியினை மானியமாக சென்னை மாநகராட்சிக்கு திடக்கழிவு மேலாண்மை திட்டங்களை துவக்க ஆரம்ப கட்ட தொகையாக (Kick Start Fund) அரசாணை எண்.150(பத்தாண்டு), நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல்(மா.ந.1), துறை, நாள்.24.03.2004 மற்றும், அரசாணை எண்.162(பத்தாண்டு), நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல்(மா.ந.1), துறை, நாள்.30.03.2004வழங்கியது. மேற்சொன்ன மானியத்தை வழங்கும் போது, அரசாணை எண்.150(பத்தாண்டு), நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல்(மா.ந.1), துறை, நாள்.24.03.2004ல் தொழில் நுட்ப தேர்வுரிமைகளை ஆராய்வு(weighing) செய்து, திடக்கழிவு மேலாண்மை திட்டத்தை செயலாக்க ஒரு விரிவான திட்ட அறிக்கையினை (Detailed Project Report) மூன்று மாதத்திற்குள் தயாரிக்குமாறு சென்னை மாநகராட்சியினை தமிழக அரசு பணித்தது.

அதன்படி சென்னை மாநகராட்சி தேசிய உற்பத்தி கழகம் (National Productivity Council) அவர்களை சென்னை மாநகராட்சி மேற்சொன்னவாறு திட்டங்களை செயலாக்க அறிக்கைகளை தயாரித்து அளிக்க நியமனம் செய்தது. தேசிய உற்பத்தி கழகம், தளஆய்வுகள் மற்றும் அலுவலர்களுடன் கலந்தாலோசனைகள் நடத்தி அந்த காலக்கட்டத்தில் குப்பை கொட்டும் வளாகங்களின் நிலையினை மேம்பாடு செய்வது மிகவும் முக்கியத்துவம் அளிக்கப்பட வேண்டும் என்று தங்களின் கருத்தினை வெளிப்படுத்தினர். அதன்படி அவர்கள் குப்பை கொட்டும் வளாகங்கள் பற்றி பல்வேறு ஆய்வுகள் நடத்தி குப்பை கொட்டும் வளாகத்தை மேம்படுத்த தங்களின் அறிக்கையினை அளித்தனர்.

தேசிய உற்பத்திக்கழகத்தின் அறிக்கையில் ஏற்கனவே குப்பை கொட்டப்பட்ட இடத்தை மூடவும் மற்றும் சுகாதார முறையில் குப்பைகளை களைய சுகாதார குப்பை கொட்டும் தளங்களை அமைக்கவும் மற்றும் குப்பையிலிருந்து உரம் தயாரிக்கும் வசதிகளை ஏற்படுத்தவும் ரூ.384.97 கோடிக்கான திட்டத்தை

அவர்கள் அளித்தனர். தேசிய உற்பத்திக்கழகத்தினால் சமர்ப்பிக்கப்பட்ட அறிக்கை 25.10.2006ல் அன்று தமிழக அரசுக்கு அனுப்பப்பட்டது.

தேசிய உற்பத்திக்கழகம் அவர்கள்அறிக்கையினை அளித்த காலக்கட்டத்தில், மத்திய அரசாங்கம், ஜவஹர்லால் நேரு தேசிய நகர்புற புனரமைப்பு திட்டம் என்ற ஒரு திட்டத்தை துவங்கியது. தமிழக அரசு அறிவுறுத்தியதன் அடிப்படையில் தேசிய உற்பத்திக்கழகத்தின் அறிக்கையினை சென்னை மாநகராட்சி மத்திய அரசாங்கத்திற்கு அனுப்பி அதில் உள்ள திட்டத்தை ஜவஹர்லால் நேரு தேசிய நகர்புற புனரமைப்பு திட்டத்தின் கீழ் செயல்படுத்த அனுமதி கோரியது.

மத்திய அரசு தங்களின் 27.04.2006 நாளிட்ட கடிதத்தில், தேசிய உற்பத்திக்கழகத்தின் அறிக்கையில் சென்னை மாநகராட்சியில் திடக்கழிவு மேலாண்மையில் நடைமுறையில் உள்ள, குப்பைகளை சேர்த்து வைத்தல்(Storage), சேகரித்தல்(Collection) மற்றும் அவைகளை போக்கு வரத்து செய்தல்(Transportation) ஆகிவைகளில் உள்ள செயல்பாட்டு முறைகளை பற்றி எதுவும் கூறப்பட்டிருக்கவில்லை என்றும், குப்பை கொட்டும் வளாகங்களை சீரமைத்தல் பற்றி மட்டுமே அதில் திட்டங்கள் உள்ளது என்றும், ஒரு விரிவான திட்ட அறிக்கை(Detailed Project Report) என்பது சென்னை மாநகர் முழுமைக்கும் திடக்கழிவு மேலாண்மை நடைமுறையில் உள்ள மற்றும் உத்தேசிக்கப்பட்டுள்ள செயல்பாட்டுமுறை, உட்கட்டமைப்பு ஆகியவைகளை பிரதிபலிக்க வேண்டும் என்றும் தெரிவித்தது. இறுதியாக, மத்திய அரசு அவர்கள் அளித்துள்ள கருத்துக்களை உள்ளடக்கி ஒரு திருத்திய திட்டத்தை ஜவஹர்லால் நேரு தேசிய நகர்புற திட்டத்தின் கீழ் பரிசீலனை செய்ய மத்திய அரசுக்கு அனுப்புமாறு சென்னை மாநகராட்சியினை கோரியது.

அதன் பிறகு, சென்னை மாநகராட்சி ரூ.255.32 கோடிக்கான, குப்பை பதனிடுதல் வசதிகளை ஏற்படுத்துதல், சுகாதார குப்பை கொட்டும் தளங்களை அமைத்தல், நவீன குப்பை மாற்று நிலையங்களை கட்டுதல், போதுமான வாகனங்களையும் தளவாடங்களையும் கொள்முதல் செய்வதன் மூலம் குப்பைகளை கையாளுதல் மற்றும் சேகரிக்கும் செயல்பாட்டு முறைகளை நவீன மயமாக்குதல் ஆகியவைகளை உள்ளடக்கிய, திடக்கழிவு மேலாண்மை திட்டத்திற்கு ஒரு விரிவான திட்ட அறிக்கையினை தயார் செய்து மத்திய அரசிற்கு ஜவஹர்லால் நேரு தேசிய புனரமைப்பு திட்டத்தின் கீழ் பரிசீலனை செய்ய சமர்ப்பித்தது. தமிழ்நாடு நகர்புற நிதி மற்றும் உள்கட்டமைப்பு வளர்ச்சிக்கழகம்(Tamil Nadu Urban Finance and Infrastructure Development Corporation) தங்களது 23.03.2007 நாளிட்ட கடிதத்தில், மேற்சொன்ன சென்னை மாநகராட்சியின் திட்டம் மத்திய அரசினால் ஏற்றுக்கொள்ளப்பட்டது என்று தெரிவித்தனர்.

பின்னர், சென்னை மாநகராட்சியில் நவீன குப்பை மாற்று நிலையங்களை கட்டுதல், அவற்றிற்கு தேவையான சுமையேற்றும் கருவிகளை வாங்குதல், குப்பைகளை சேகரிக்க குப்பைகளை நெருக்கி போக்குவரத்து செய்யும் காம்பாக்டர் வாகனங்களை கொள்முதல் செய்தல், காம்பாக்டர் குப்பை தொட்டிகளை கொள்முதல் செய்தல், வீட்டுக்கு வீடு சென்று குப்பை சேகரிக்க மூன்று சக்கர மிதிவண்டிகள் மற்றும் அதற்கான தொட்டிகளை கொள்முதல் செய்தல் ஆகிய செலவினங்கள் இந்த திட்டத்தின் கீழ் மேற்கொள்ளப்பட்டன. இந்த ஜவஹர்லால் நேரு நகர புனரமைப்பு திட்டத்தின் கீழ் மேற்கொள்ளப்பட்ட செலவினத்திற்கு திட்ட அறிக்கையில் சொல்லப்பட்டுள்ள அனுமதிக்கப்பட்ட மதிப்பீட்டில் 35% மத்திய அரசின் பங்காகவும் 15% மாநில அரசின் பங்காகவும் மீதமுள்ள 50 உள்ளாட்சி அமைப்பின் பங்காகவும் இருக்கவேண்டும். ஆனால் சென்னை மாநகராட்சியினால் இந்த பணிகளுக்கு Tamil Nadu Urban Infrastructure Development Corporation (TUFIDCO) மூலம் மத்திய அரசிடமிருந்து பெறப்பட்ட மானியத்தின் மத்திய அரசின் உரிய பங்குபோக மீதி தொகை நிதி மேலாண்மை குழுமத்தின் மூலம் சென்னை மாநகராட்சியினால் மத்திய அரசுக்கு Tamil Nadu Urban Infrastructure Development Corporation (TUFIDCO) மூலம் திருப்பி அளிக்கப்பட்டுள்ளது.

இந்த சூழ்நிலையில் சென்னை மாநகராட்சிக்கு அரசினால் அளிக்கப்பட்ட மேற்கண்ட மானியமான ரூ.18 கோடி செலவிடப்பட்ட விவரங்கள் கோரி நிதி ஆலோசகர் அவர்களுக்கு குறிப்பு சமர்ப்பிக்கப்பட்டது. அதற்கு நிதி ஆலோசகர் கீழ்வருமாறு பதில் குறிப்பு அளித்துள்ளார்.

திடக்கழிவு மேலாண்மை பணிக்காக (Corpus Fund) பெறப்பட்ட மானியம் ரூ.18 கோடி மற்றும் வட்டித்தொகையினை JNNURM-SWM பணிக்காக செலவினம் மேற்கொள்ளப்பட்டதை ஆணையர் அவர்களின் ஆணை பெற்று நிதி மாற்றம் செய்யப்பட்டுள்ளது.

நிதி மேலாண்மை குழுமம் நவம்பர், 2009ல் ஆணையர் அவர்களுக்கு சமர்ப்பித்த குறிப்பில் கீழ்வருமாறு குறிப்பிடப்பட்டுள்ளது.

திடக்கழிவு மேலாண்மையின் மூலதன பணிகளுக்காக பெறப்பட்ட மானியத் தொகை ரூ.18 கோடி மற்றும் வட்டித்தொகை ரூ.5.74 கோடி ஆக மொத்தம் ரூ.23.74 கோடியினை அதே காரணங்களுக்காக செயல்படும் ஜவஹர்லால் நேரு தேசீய புனரமைப்பு திட்டத்தின் கீழ் (JNNURM) செயல்படுத்தப்படும்

திடக்கழிவு மேலாண்மைப் பணிகளுக்காக சென்னை மாநகராட்சியின் பங்களிப்பாக மாற்றம் செய்திடலாமென தெரிவித்துக்கொள்ளப்படுகிறது.

இயந்திரப்பொறியியல் துறையின் மூலம் திடக்கழிவு மேலாண்மை பணிகளுக்காக வாங்கப்பட்ட வாகனங்களுக்கு மூலதன நிதியிலிருந்து செலவினம் மேற்கொள்ளப்பட்ட ரூ.8.08 கோடியினை சென்னை மாநகராட்சி பொது நிதிக்கு மாற்றம் செய்யவும், மீதமுள்ள ரூ.15.66 கோடி ஜவஹர்லால் நேரு தேசீய புனரமைப்பு திட்டத்தின் கீழ் (JNNURM) செயல்படுத்தப்படும் திடக்கழிவு மேலாண்மை பணிகளுக்கான சென்னை மாநகராட்சி பங்களிப்பாக இத்திட்டத்திற்கான வங்கி கணக்கிற்கு (கனரா வங்கி 20450) மாற்றம் செய்யவும், மாநில அரசிடமிருந்து பெறப்பட்ட மானியத்தொகை ரூ.18.00 கோடி மற்றும் வட்டித் தொகை 5.74 கோடி ஆக மொத்தம் 23.74 கோடிக்கான பயன்பாட்டு சான்றினை (Utilization Certificate) மாநில அரசுக்கு அளித்து நிதி மாற்றம் செய்ததற்கான பின்னேற்பு ஆணையினை அரசிடமிருந்து பெறுவதற்கு, மேற்பார்வை பொறியாளர்(தி.க.மே) அவர்களை கேட்டுக்கொள்ளலாம் என கருதப்படுகிறது.

எனவே, கீழ்க்கண்ட இனங்களுக்கு ஆணையர் அவர்களின் ஆணை பெறப்பட்டது.

1. மாநில அரசிடமிருந்து திடக்கழிவு மேலாண்மையின் மூலதனப் பணிகளுக்காக பெறப்பட்ட மானியத் தொகை ரூ.18.00 கோடி மற்றும் வட்டித்தொகை ரூ.5.74 கோடி ஆக மொத்தம் ரூ.23.74 கோடியினை வைப்புத் தொகை நிதியிலிருந்து முன்முதிர்வு செய்யவும்,
2. முன்முதிர்வு செய்யப்பட்ட தொகை ரூ.23.74 கோடியில், இயந்திரப்பொறியியல் துறையின் மூலம் திடக்கழிவு மேலாண்மை பணிக்காக வாங்கப்பட்ட வாகனங்களுக்கு மூலதன நிதியிலிருந்து மேற்கொள்ளப்பட்ட ரூ.8.06 கோடியினை சென்னை மாநகராட்சி பொது நிதிக்கு மாற்றம் செய்யவும்,
3. மாநில அரசிடமிருந்து பெறப்பட்ட மானியத்தொகை ரூ.18.00 கோடி மற்றும் வட்டித்தொகை ரூ.5.74 கோடி ஆக மொத்தம் ரூ.23.74 கோடியினை, இயந்திரப்பொறியில் துறையின் மூலம் திடக்கழிவு மேலாண்மை பணிக்காக வாங்கப்பட்ட வாகனங்களுக்கு மூலதன நிதியிலிருந்து செலவினம் மேற்கொள்ளப்பட்ட ரூ.8.08 கோடியினை சென்னை மாநகராட்சி பொது நிதிக்கு மாற்றம் செய்யப்பட்டதற்கு மற்றும் மீதமுள்ள ரூ.15.66 கோடி ஜவஹர்லால் நேரு தேசீய நகர புனரமைப்பு திட்டத்தின் கீழ் (JNNURM) செயல்படுத்தப்படும் திடக்கழிவு மேலாண்மை பணிகளுக்கான சென்னை மாநகராட்சி பங்களிப்பு தொகையாக மேற்கொள்ளப்பட்டதற்கு அரசின் பின்னேற்பு பெறுவதற்கு ரூ.23.74 கோடிக்கான பயன்பாட்டு சான்றிதழினை (Utilization Certificate) அரசுக்கு அனுப்பவும் மேற்பொறியாளர் (தி.க.மே) அவர்களை கேட்டுக்கொள்ளவும்,

அதன் பிறகு நவம்பர் 2010ல், திடக்கழிவு மேலாண்மை துறை, துணை ஆணையர்(வ.ம.நி) அவர்களுக்கு சமர்ப்பித்துள்ள குறிப்பில் கீழ்வரும் விவரங்களை சமர்ப்பித்துள்ளது.

A copy of letter written by the Commissioner and the projects covered therein restricting the cost of the project to Rs.37.50 crores on 02.09.2010 vide S.W.M.,C.No.A7/861/2007. So far Resolution of Council has not been obtained for the restricted claim for the solid waste management project of Chennai Corporation for Rs.37.5 crores. TUFIDCO in their letter dated requested to refund the 1313.5 lakhs in view of the reduction of claim of Chennai Corporation for the JNNURM projects.

Already about Rs.55 crores was spent for JNNURM projects and Rs.3191.5 lakhs received towards Subsidy from Government of India and from Corpus fund of Rs.18 crores together with the accrued interest received from the Government of Tamil Nadu released Rs.18 crores to the Corporation of Chennai as budget grant and the same was kept unutilized for years and from institutional fund.

Utilization Certificate could be issued after exhausting the corpus fund fully for the grant of Rs.18 crores with the interest accrued thereon.

Commissioner already written the letter restricting the claim under JNNURM for Rs.37.5 crores. Therefore, this shall be treated as orders of the Commissioner. However, resolution of the Council has to be obtained for returning the subsidy and the eligibility limit for Rs.37.5 crores project.

சென்னை மாநகராட்சி ஏற்கனவே, மத்திய அரசிடமிருந்து பெறப்பட்ட மானியத்தொகையில் ரூ.13,67,71,000./–(ரூபாய் பதிமூன்று கோடி அறுபத்தியேழு இலட்சத்து எழுபத்தோராயிரம் மட்டும்) திரும்ப செலுத்தியுள்ளதாக TUFIDCO அவர்கள் தங்களது, 18.04.2011 நாளிட்ட TUFIDCO/JnNURM/GoTN/M(Mu)/2011 எண்ணிட்ட கடிதத்தில் தெரிவித்து அதற்கான கருவூல செலுத்துச்சீட்டினையும் இணைத்துள்ளனர். மேலும் இந்த தொகை அரசாணை எண். G.O.(D).No.153, Municipal Administration and Water Supply (MA2) Department, dated.6.4.2011ன்படி மத்திய அரசுக்கு திருப்பி அளிக்கப்பட்டுள்ளது.

சென்னை மாநகராட்சி TUFIDCO நிறுவனத்திற்கு அளித்துள்ள கடிதத்தின்படி JNNURM திட்டங்களின் செலவினம் ரூ.3756.81 இலட்சங்கள் என்று குறைத்துக் கொள்ளப்பட்டுள்ளது. ஆனால்

சென்னை மாநகராட்சி திடக்கழிவு மேலாண்மை பணிகளுக்காக/திட்டங்களுக்காக செலவழிக்கப்பட்ட தொகை ரூ.5873.21 இலட்சங்கள் ஆகும். இதில் மத்திய அரசிடமிருந்து பெறப்பட்ட மானியம் ரூ.1276.65 இலட்சங்கள் மற்றும் மாநில அரசின் நிதி மானியம் ரூ.547.14 இலட்சங்கள் ஆக மொத்தம் சென்னை மாநகராட்சி JNNURM திட்டத்திற்காக பெறப்பட்ட மானியம் ரூ.1823.79 இலட்சங்கள் ஆகும். அட்டவணை கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

Finanical Commitement	Sanctioned amount Rupees in lakhs		Revised cost	Receipt of funds	Expenditure approved by CSMC	Balance to be refunded
GOI Share (35)	Initial	25532	1276.65	2234.05	1276.65	957.40
GOTN share (15)	Modified	6500	547.14	957.45	547.14	410.31
ULB share (50)	Further reduced	3750	1823.79	2681.66	1823.79	
Total			**3647.58**	**5873.21**	**3647.58**	**1367.71**

TUFIDCO நிறுவனம் அளித்துள்ள கடிதத்தின் படி JNNURM திட்டங்களின் செலவினம் ரூபாய்.3756.81 இலட்சங்கள் என்று குறைத்துக் கொள்ளப்பட்டுள்ளது. ஆனால் செலவழிக்கப்பட்டுள்ளத் தொகை ரூபாய்.5873.21 இலட்சங்கள் ஆகும். இதில் மானியமாகப் பெறப்பட்ட ரூபாய்.1823.79 இலட்சங்கள் போக மீதம் (ரூ. 5873.21 – ரூ. 1823.79) ரூ. 4059.42 இலட்சங்கள் ஆகும்.

அதாவது ரூபாய்.18 கோடி மற்றும் வட்டித் தொகை ரூபாய்.5.74 கோடி ஆக மொத்தம் ரூபாய்.23.74 கோடி என்பது இந்த செலவுத் தொகை ரூபாய். 4059.42 இலட்சங்களுக்குள் அடங்கும்.

இத்தொகை நிதி மேலாண்மைத் துறை, ஆணையருக்கு சமர்ப்பிக்கப்பட்ட 10.11.2009 நாளிட்ட குறிப்பில் தெரிவித்துள்ளவாறு முறையே ரூ. 8.08 கோடிக்கு திடக்கழிவு மேலாண்மை துறை பணிக்கான வாகனங்கள் இயந்திர பொறியியல் துறையால் கொள்முதல் செய்யப்பட்டதற்கும், மீதமுள்ள ரூ. 15.66 கோடி JNNURM- திட்டத்தின் கீழ் திடக்கழிவு மேலாண்மை துறை பணிகளுக்காக மேற்கொள்ளப்பட்டதற்கும் அரசின் பின்னேற்பு பெறுவதற்காகவும் ரூபாய்.23.74 கோடிக்கான பயன்பாட்டு சான்றிதனை அரசுக்கு அனுப்பவும் மேற்பார்வை பொறியாளர் (தி.க.மே) அவர்களை கேட்டுக் கொள்ள ஆணையரின் ஒப்புதல் பெறப்பட்டுள்ளது.

ஏற்கனவே மத்திய அரசுக்கு JNNURM திட்டத்திற்கு சென்னை மாநகராட்சி செலவழித்த ரூபாய்.5873.21 இலட்சங்கள் மற்றும் கட்டுப்படுத்தப்பட்டத் தொகை ரூபாய்.3647.58 இலட்சங்கள் ஆகியவற்றிற்கு பயன்பாட்டு சான்றிதழ் வழங்கப்பட்டுள்ளது.

எனவே, சென்னை மாநகராட்சிக்கு அரசினால் வழங்கப்பட்ட ரூபாய்.18 கோடி மற்றும் அதில் பெறப்பட்ட வட்டி தொகை ரூபாய்.5.74 கோடி ஆக மொத்தம் ரூபாய்.23.74 கோடியினை JNNURM திட்டத்திற்காக சென்னை மாநகராட்சினால், நிறுவன நிதியிலிருந்து (Institutional fund) சென்னை மாநகராட்சியின் பங்களிப்பாக JNNURM திட்டத்தின் கீழ் செயலாக்கப்பட்ட திடக்கழிவு மேலாண்மை திட்டங்களுக்கு செலவிடப்பட்டதாக கருதலாம் என தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.

தமிழக அரசிடமிருந்து பெறப்பட்ட மானியம் மற்றும் வட்டித் தொகை ஆக மொத்தம் ரூபாய். 23.74 கோடிக்கு என தனியாக பயன்பாட்டு சான்றிதழ் வழங்க இயலாத நிலையில் JNNURM திட்டத்தின் மொத்த செலவினத்திற்கு ஏற்கனவே மத்திய அரசுக்கு அனுப்பப்பட்ட பயன்பாட்டு சான்றிதழை மன்றத்தின் ஒப்புதலோடு அனுப்பவும் மற்றும் இந்த பயன்பாட்டு சான்றிதழ்க்கு மாநில அரசின் பின்னேற்பு ஆணை பெறவும் நிலைக்குழு (பணிகள்) மற்றும் நிலைக்குழு (வரிவிதிப்பு (ம) நிதி)வின் மூலமாக மன்றத்தின் பின்னேற்பு அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

> "22.07.2015 அன்று நடைபெற்ற நிலைக்குழு (பணிகள்)வின் கூட்டத்தின் தீர்மான எண்.155/2015 நாள்.22.07.2015ன்படி நிலைக்குழு (பணிகள்) பரிந்துரை செய்து நிலைக்குழு (வரிவிதிப்பு (ம)நிதி)வின்மூலமாக மன்றத்தின் பின்னேற்பு அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது."

> "24.07.2015 அன்று நடைபெற்ற நிலைக்குழு (வ.வி.ம.நி) கூட்டத்தின் தீர்மான எண்.177/2015, நாள் 24.07.2015–ன்படி இதற்கு நிலைக்குழு (வ.வி.ம.நி) பரிந்துரை செய்து மன்றத்தின் பின்னேற்பு அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது".

"இதற்கு மன்றம் பின்னேற்பு அனுமதி அளிக்கின்றது"

****

ம.வ.அ.ந.க.எண்.இ4/ 5767 /2015

முதன்மை செயலர் மற்றும் ஆணையர் அவர்களின் 08.07.2015 நாளிட்ட குறிப்பு

தீர்மான எண்.375/2015 **பொருள் எண்.24**

மண்டலம்–9, வார்டு–115ல் உள்ள ஜாம்பஜார் தரை தளம்–ஹெல்த் போஸ்ட் மற்றும் முதல் தளம்–இளநிலை பொறியாளர் அலுவலகம் இடிப்பதற்கு அனுமதி

வ. எண்.	விவரம்	குறிப்பு
1	இடிக்கப்பட வேண்டிய கட்டிடத்தின் விவரம்	மண்டலம்–9, வார்டு–115ல் எண்.38, தேவராஜ் தெருவில் தரைத்தளத்தில் உள்ள ஜாம்பஜார் ஹெல்த் போஸ்ட் மற்றும் முதல் தளத்தில் உள்ள இளநிலை பொறியாளர் அலுவலகம் மிகவும் பழுதடைந்த நிலையில் உள்ள கட்டிடம்
2	அந்த கட்டிடம் எப்போது கட்டப்பட்டது	1978 ஆம் ஆண்டு
3	அந்த கட்டிடத்தின் பரப்பளவு தளம் வாரியாக எவ்வளவு ?	தரை தளம் – 154.00 ச.மீ. முதல் தளம் – 154.00 ச.மீ.
4	அந்த கட்டிடம் அமைந்துள்ள இடத்தின் பரப்பளவு எவ்வளவு ?	154.00 ச.மீ.
5	கட்டிடத்தின் தற்போதைய புத்தக மதிப்பு	ரூ.14,95,628.81/–
6	அந்த கட்டிடம் இப்போது பயன்பாட்டில் உள்ளதா ?	ஆம்
7	ஆந்த கட்டிடம் இடிப்பதற்கு பின்பு அவ்விடம் எந்த மாரியான பயன்பாட்டிற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளது ?	இளநிலை பொறியாளர் அலுவலகம் / வார்டு–115
8	கட்டிடத்தை இடிப்பதற்கான காரணம்	தரை மற்றும் முதல் தளம் அதிக விரிசல்களால் மிகவும் பழுதடைந்த நிலையில் உள்ளது.
9	கட்டிடத்தை இடிப்பதற்கு பரிந்துரை செய்தது யார் ?	மண்டல அலுவலர்–9
10	கூார்டு குழு பரிந்துரை தீர்மான எண் / நாள்	9வது மண்டல வார்டு குழு தீர்மான எண்.1047/2014, நாள். 20.10.2014.

எனவே, மண்டலம்–9, வார்டு–115, எண்.38, தேவராஜ் தெருவில் தரைத்தளத்தில் உள்ள ஜாம்பஜார் ஹெல்த் போஸ்ட் மற்றும் முதல் தளத்தில் உள்ள இளநிலை பொறியாளர் அலுவலகம் மிகவும் பழுதடைந்த நிலையில் உள்ள கட்டிடத்தை இடிப்பதற்கு நிலைக்குழு (பணிகள்) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

"22.07.2015 அன்று நடைபெற்ற நிலைக்குழு (பணிகள்)வின் கூட்டத்தின் தீர்மான எண்.156/2015, நாள்.22.07.2015ன்படி நிலைக்குழு (பணிகள்) பரிந்துரை செய்து மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது."

"இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது"

****

ம.அ.8.ந.க.எண்பி2/5837/2015

முதன்மை செயலர் மற்றும் ஆணையர் அவர்களின் 24.07.2015 நாளிட்ட குறிப்பு

தீர்மான எண்.376/2015 **பொருள் எண்.25**

மண்டலம்–8, வார்டு–98 லாக்மா நகரில் பழுதடைந்து உபயோகமற்ற நிலையில் உள்ள பொதுக்கழிப்பிடத்தை இடிப்பதற்கு அனுமதி

வ. எண்	வார்டு எண்–98	மண்டலம்–8
1.	இடிக்கப்பட வேண்டிய கட்டிடத்தின் விவரம்	மண்டலம்–8, வார்டு–98 லாக்மா நகரில் பழுதடைந்து உபயோகமற்ற நிலையில் உள்ள ஆண் மற்றும் பெண் 12 இருக்கைகள் கொண்ட பொதுக்கழிப்பிடம்.
2.	அந்த கட்டிடம் எப்போது கட்டப்பட்டது ?	சென்னை மாநகராட்சி கட்டிடத்துறை 1978–79ஆம் ஆண்டு கட்டப்பட்டது.
3.	அந்த கட்டிடத்தின் பரப்பளவு தளம் வாரியாக எவ்வளவு ?	51.66 ச.மீ
4.	அந்த கட்டிடம் அமைந்துள்ள இடத்தின் பரப்பளவு எவ்வளவு ?	118.80 ச.மீ
5.	கட்டிடத்தின் தற்போதைய புத்தக மதிப்பு	ரூ.12,767/–
6.	அந்த கட்டிடம் இப்போது பயன்பாட்டில் உள்ளதா ?	பயன்பாட்டில் இல்லை
7.	அந்த கட்டிடம் இடித்ததற்கு பின்பு அவ்விடம் எந்த மாதிரியான பயன்பாட்டிற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளது ?	பல்நோக்கு கட்டிடம்
8.	கட்டிடத்தை இடிப்பதற்கான காரணம்	பயனற்று பழுதடைந்த நிலையில் உள்ளது.
9.	கட்டித்தை இடிப்பதற்கு பரிந்துரை செய்தது யார் ?	மாமன்ற உறுப்பினர் வார்டு –98
10.	வார்டு குழு (பரிந்துரை) தீர்மான எண், மற்றும் நாள்.	மண்டலம்–8, வார்டு குழு தீர்மான எண்.75, நாள்.12.8.2014

எனவே, மண்டலம்–8 வார்டு–98 லாக்மா நகரில் பழுதடைந்து உபயோகமற்ற நிலையில் உள்ள பொதுக்கழிப்பிடத்தை இடித்துவிட்டு அவ்விடத்தில் புதிதாக பல்நோக்கு கட்டிடம் கட்டுவதற்கு நிலைக்குழு (பொது சுகாதாரம்) மற்றும் நிலைக்குழு (பணிகள்) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

"ஏற்கனவே நிலைக்குழு (பொது சுகாதாரம்) வின் கூட்டம் 16.07.2015 அன்று முடிவடைந்த நிலையில் இப்பொருளின் அவசரம் மற்றும் அவசியத்தன்மையை கருத்தில் கொண்டு 03.08.2015 அன்று தீர்மான எண்.30/2015,–ன்படி இதற்கு வார்டுகுழு தீர்மானம் பெறப்பட வேண்டும் என்ற நிபந்தனையுடன் நிலைக்குழு (பொது சுகாதாரம்) சுற்றின் மூலம் பெரும்பான்மை உறுப்பினர்களின் பரிந்துரையை பெற்று நிலைக்குழு (பணிகள்) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது ".

"ஏற்கனவே நிலைக்குழு (பணிகள்) கூட்டம் 22.07.2015 அன்று முடிவடைந்த நிலையில் இப்பொருளின் அவசரம் மற்றும் அவசியத்தன்மையை கருத்தில் கொண்டு 03.08.2015 அன்று தீர்மான எண்.157/2015ன்படி இதற்கு நிலைக்குழு (பணிகள்) சுற்றின் மூலம் பெரும்பான்மை உறுப்பினர்களின் பரிந்துரையை பெற்று மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது ".

"இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது"

****

நி.ம.உ.து.ந.க.எண்.எஎ2/1892/2015

முதன்மை செயலர் மற்றும் ஆணையர் அவர்களின் 08.07.2015 நாளிட்ட குறிப்பு

தீர்மான எண்.377/2015 **பொருள் எண்.26**

நிலம் மற்றும் உடைமைத்துறை – மண்டலம்–9, பகுதி–26, வார்டு–113ல் உள்ள பாலமுத்து கிருஷ்ணா தெரு உள்ள பல்நோக்கு கட்டிடத்தை திருவல்லிக்கேணி நகர்ப்புற கூட்டுறவு சங்கம் லிட்., நியாய விலை கடை நடத்துவதற்கு மாத வாடகை அடிப்படையில் ஒதுக்கீடு செய்ய அனுமதி

மத்திய வட்டார துணை ஆணையரின் 06.05.2015 நாளிட்ட கடிதத்தில் தி.நகர் அபிபுல்லா தெருவில் உள்ள ஒரே கட்டிடத்தில் இரண்டு நியாய விலைகடைகள் இயங்கி வருவதாகவும், இதனால் அத்தியாவசிய பொருள்கள் விநியோகிப்பது சிரமமாக உள்ளதாகவும், சென்னை மாநகராட்சி மூலம் மண்டலம்–9, பகுதி–26, வார்டு–113ல் பாலமுத்து கிருஷ்ணா தெருவில் உள்ள பல்நோக்கு கட்டிடம் பொது மக்களுக்கு பயன்படும் வகையில் பல்நோக்கு கட்டிடத்தை நுகர்பொருள் வாணிப கழகத்திற்கு வாடகைக்குவிட வார்டுகுழு தீர்மானம் எண்.82/2015 நாள்.18.02.2015–ல் தீர்மானம் நிறைவேற்றுப்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் வாடகைக்கு விட உத்தேசிக்கப்பட்டுள்ள கட்டிடத்தின் நீளம்–50 அடி, அகலம்–10 அடி, மொத்தம் பரப்பளவு 500 சதுர அடி ஆகும், மேற்படி கட்டிடம் RCC தளம் கொண்டு 2014 ஆம் ஆண்டு கட்டி முடிக்கப்பட்டுள்ளது என்றும் மேற்படி கட்டிடத்தை திருவல்லிக்கேணி நகர்ப்புற கூட்டுறவு சங்கத்திற்கு மாத வாடகை அடிப்படையில் ஒதுக்கீடு செய்யவும், இக்கட்டிடத்திற்கு வாடகை மற்றும் முன்பணம் நிர்ணயம் செய்து தருமாறு மேலாண்மை இயக்குநர்/கூடுதல் பதிவாளர்திருவல்லிக்கேணி நகர்புற கூட்டுறவு சங்கம் சென்னை–5 அவர்கள் கோரியுள்ளதாகவும், தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலாண்மை இயக்குநர்/கூடுதல் பதிவாளர், திருவல்லிக்கேணி நகர்ப்புற கூட்டுறவு சங்கம் அவர்களின் 11.12.2014–ஆம் நாளிட்ட கடிதத்தில் நியாயவிலை கடைகள் இயங்குவதற்கு பல்நோக்கு கட்டிடம் மாத வாடகை அடிப்படையில் வழங்கும்படி கோரப்பட்டுள்ளது.

மேலாண்மை இயக்குநர்/கூடுதல் பதிவாளர், திருவல்லிக்கேணி நகர்ப்புற கூட்டுறவு சங்கம் கடித எண்.350/2010/பி2, 11.12.2014 நாளிட்ட குறிப்பில் மேற்படி பல்நோக்கு கட்டிடத்தை திருவல்லிக்கேணி நகர்ப்புற கூட்டுறவு சங்கத்திற்கு வாடகைக்கு விட வார்டு குழுத்தீர்மான எண்.82/2015,நாள்.18.02.2015–ல் தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது .

மன்ற தீர்மானத்தில் 22.05.2013 அன்று நடைபெற்ற மாமன்ற கூட்ட தீர்மானம் எண்.312/2013ல் பொது மக்கள் நலன் கருதி வியாபார நோக்கமின்றி செயல்படும் அரசு நிறுவனமான நுகர்பொருள் வாணிப கழக நியாய விலைக்கடைகளுக்கும் கூட்டுறவு நியாயவிலை கடைகளுக்கு மாத வாடகை ச.அடிக்கு ரூ.5/– நிர்ணயம் செய்ய மன்றம் அனுமதி அளித்துள்ளது.

எனவே, மண்டலம்–9, பகுதி–26, வார்டு–113ல் பாலமுத்து கிருஷ்ணா தெருவில் உள்ள பல்நோக்கு கட்டிடமான 500 சதுர அடி பரப்பளவு கொண்ட கட்டிடத்திற்கு சதுர அடிக்கு ரூ.5/– வீதம் மாத வாடகை ரூ.2500/– மற்றும் 12 மாத முன்பணமான ரூ. 30000/–யை செலுத்த வேண்டும் என்றும் கட்டிடத்தில் ஏதேனும் மாற்றம் செய்யயிருப்பின் சென்னை மாநகராட்சியின் அனுமதி பெற்று தான் செய்ய வேண்டும் என்ற நிபந்தனையுடனும் திருவல்லிக்கேணி நகர்ப்புற கூட்டுறவு சங்கத்திற்கு நியாய விலை கடை நடத்துவதற்கு ஒதுக்கீடு செய்ய நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி)வின் மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

> "ஏற்கனவே நிலைக்குழு (வ.வி.ம.நி) வின் கூட்டம் 24.07.2015 அன்று முடிவடைந்த நிலையில் இப்பொருளின் அவசரம் மற்றும் அவசியத்தன்மையை கருத்தில் கொண்டு 03.08.2015 அன்று தீர்மான எண்.181/2015ன்படி இதற்கு நிலைக்குழு (வ.வி.ம.நி)வின் சுற்றின் மூலம் பெரும்பான்மை உறுப்பினர்களின் பரிந்துரையை பெற்று மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது ".

"இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது"

****

நி.ம.உ.து.ந.க.எண்.(LE-3)AA-3/1013/2014

முதன்மை செயலர் மற்றும் ஆணையர் அவர்களின்27.07.2015 நாளிட்ட குறிப்பு

தீர்மான எண்.378/2015 **பொருள் எண்.27**

மண்டலம்–10, வார்டு–137 – சென்னை குடிநீர் மற்றும் வடிகால் வாரியத்திற்கு சொந்தமான இடத்தில் – அண்ணா பிரதான சாலை மற்றும் ஏரிக்கரை சாலை – இணைப்பதற்கு சென்னை மாநகராட்சிக்கு நிலம் ஒப்படைப்பு செய்ய சென்னை குடிநீர் வடிகால் வாரியத்தின் கருத்துரை கோரப்பட்டது – நிலம் ஒப்படைப்பு செய்ய சம்மதம் தெரிவிக்கப்பட்டது – இரு சாலைகளையும் இணைக்க வார்டுகுழு பரிந்துரையினை எதிர்நோக்கி அரசுக்கு முன்மொழிவு அனுப்ப அனுமதி

மண்டல அலுவலர் அவர்கள் அனுப்பப்பட்ட கடிதம் எண்.Z.O.X.C.No.A8 /2545/2014, **14.11.2014** நாளிட்ட குறிப்பில், சென்னை மாநகராட்சி மண்டலம்–10, வார்டு–137–ல் அமைந்துள்ள சென்னை குடிநீர் (ம) கழிவு நீர் வடிகால் வாரியத்திற்கு சொந்தமான இடத்தில் அண்ணா பிரதான சாலையும், ஏரிக்கரை சாலையும் இணைப்பது தொடர்பாக கடந்த **28.10.2014** அன்று நாளில் சென்னை மாநகராட்சி முதன்மைச் செயலர்/ஆணையர், இணை ஆணையர் (பணிகள்), மண்டல அலுவலர், தலைமை பொறியாளர் மற்றும் சென்னை குடிநீர் (ம) வடிகால் வாரிய பொறியாளர் மற்றும் மேற்பார்வை பொறியாளர் அவர்களுடன் நடைபெற்ற கூட்டத்தில் சென்னை குடிநீர் (ம) கழிவுநீர் அகற்று வாரியத்திடமிருந்து மேற்கண்ட சாலைகளை இணைப்பதற்கு தேவைப்படும் **4644** ச.மீ. நிலத்தை சென்னை மாநகராட்சிக்கு ஒப்படைப்பு செய்யுமாறும், அதற்கு ஈடாக சென்னை மாநகராட்சிக்கு சொந்தமான **4320** ச.மீ. பரப்பளவு உள்ள ஏரிக்கரை பூங்காவை சென்னை குடிநீர் (ம) வடிகால் வாரியத்திற்கு சென்னை மாநகராட்சியின் பராமரிப்பு நிபந்தனைகளுடன் ஒப்படைக்கலாம் என தெரிவிக்கப்பட்டது.

மேற்படி மண்டலம்–10, வார்டு–137, அண்ணா பிரதான சாலை மற்றும் ஏரிக்கரை சாலை இணைப்பதற்கு தேவையான **4644** ச.மீ. பரப்பளவுள்ள நிலத்தை பொது மக்களுக்கு பயன்படும் வகையில் சென்னை மாநகராட்சி வசம் ஒப்படைப்பு செய்ய **14.11.2014** நாளிட்ட மேற்குறிப்பில் முதன்மைச்செயலர்/ஆணையர் அவர்களின் உத்தரவின்படி மேற்கண்ட இரு சாலைகளையும் இணைப்பதற்கு அரசுக்கு முன்மொழிவு அனுப்பும் பொருட்டு இப்பொருள் தொடர்பாக மன்றத்தில் பொருள் சமர்ப்பிக்கவும், மேற்படி இரு சாலைகளை இணைப்பதற்கு தேவையான **4644** சதுர மீட்டர் நிலத்தை சென்னை மாநகராட்சி வசம் ஒப்படைப்பு செய்வது தொடர்பான கருத்துருவினை அனுப்பி வைக்குமாறு சென்னை குடிநீர் (ம) கழிவு நீரகற்று வாரிய தலைமைப்பொறியாளரிடம் இவ்வலுவலக கடிதம் எண். நி.ம.உ.து.ந.க.எண்.(LE-3) AA-3/1013/**2014**, **10.02.2015** நாளிட்ட கடிதம் மூலம் கேட்டுக்கொள்ளப்பட்டது.

மேலும், மாண்புமிகு மேயர் அவர்களும் முதன்மை செயலர் மற்றும் ஆணையர் அவர்களும் இவ்விடத்தினை **17.04.2015** மற்றும் **26.04.2015** ஆகிய நாட்களில் களஆய்வு செய்து உரிய நடவடிக்கை எடுக்க அறிவுறுத்தப்பட்டது.

இதனை தொடர்ந்து மேலாண்மை இயக்குநர், சென்னை குடிநீர் (ம) கழிவு நீர் வடிகால் வாரியம் அவர்களின் கடித எண்.CMWSSB(T&T)S/ Nesapakkam STP/ spl/2015, நாள்.21.5.2015 படி இரு சாலைகளையும் இணைப்பதற்கு கீழ்குறிப்பிட்டுள்ள நிபந்தனைகளின்படி இசைவு தெரிவிக்கப்பட்டுள்ளது.

நிபந்தனைகள்

1. மேற்படி இணைப்பு சாலைக்கு தேவைப்படும் நிலத்தை சென்னை மாநகராட்சிக்கு ஒப்படைப்பு செய்யவும், அதற்கு ஈடாக சென்னை மாநகராட்சிக்கு சொந்தமான ஏரிக்கரை பூங்காவை சென்னை குடிநீர் மற்றும் கழிவுநீர் வடிகால் வாரியத்திற்கு வழங்குவதற்கும்,
2. மேற்படி இணைப்பு சாலையில் அமைந்திருக்கும் கட்டமைப்புகளை வேறு இடத்திற்கு மாற்றுவதற்கும் மீள கட்டுமானப்பணிகளை மேற்கொள்வதற்கு தேவைப்படும் செலவினத்தொகையை **2.50** கோடி ரூபாயை வைப்புத்தொகையாக வழங்கவும்
3. மேற்படி இணைப்பு சாலையில் காணப்படும் மரங்களை வெட்டுவதற்கும் பசுமை காக்கும் வகையில் அதற்கு ஈடாக மரக்கன்றுகள் நடுவதற்கு பதிலாக மாண்புமிகு மேயர் அவர்களின் அறிவுறுத்தலின்படி இணைப்புச்சாலையில் உள்ள மரங்களை வெட்டுவதற்குப்பதிலாக அவற்றை வேருடன் பிடுங்கி உடன் நடுவதற்கான நடவடிக்கையை மேற்கொள்ள வேண்டும் எனவும், எக்காரணம் கொண்டும் மரங்களை வெட்டக்கூடாது எனவும் அறிவுறுத்தியுள்ளார்.

எனவே மண்டலம்.10, வார்டு–137, அண்ணா பிரதான சாலை மற்றும் ஏரிக்கரை சாலையை இணைப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளவும், அதற்கு தேவையான 4644 சதுர மீட்டர் பரப்பளவுள்ள நிலத்தை பொதுமக்களுக்கு பயன்படும் வகையில் சென்னை மாநகராட்சி வசம் ஒப்படைப்பு செய்ய நடவடிக்கை மேற்கொள்ளவும் , அதற்கு ஈடாக சென்னை மாநராட்சி ஏரிக்கரை பூங்காவை சென்னை குடிநீர் மற்றும் கழிவு நீர் அகற்று வாரியத்திற்கு ஒப்படைக்கவும், இது குறித்து அரசுக்கு முன்மொழிவு அனுப்ப வார்டுகுழு பரிந்துரையினை எதிர்நோக்கி மேற்குறிப்பிட்ட நிபந்தனையுடன் நிலைக்குழு (வரிவிதிப்பு (ம) நிதி)வின் மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

> ‘‘ஏற்கனவே நிலைக்குழு (வ.வி.ம.நி) வின் கூட்டம் 24.07.2015 அன்று முடிவடைந்த நிலையில் இப்பொருளின் அவசரம் மற்றும் அவசியத்தன்மையை கருத்தில் கொண்டு 03.08.2015 அன்று தீர்மான எண்.178/2015ன்படி இதற்கு நிலைக்குழு (வ.வி.ம.நி)வின் சுற்றின் மூலம் பெரும்பான்மை உறுப்பினர்களின் பரிந்துரையை பெற்று மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது ’’.

‘‘இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது’’

****

க.து.ந.க.எண்.பி3/ 3977/2015

முதன்மை செயலர் / ஆணையர் அவர்களின் 17.07.2015 நாளிட்ட குறிப்பு

தீர்மான எண்.379/2015 **பொருள் எண்.28**

கல்வித்துறை – சென்னை தொடக்க/நடுநிலைப்பள்ளிகளில் 100 மழலையர் வகுப்புகள் புதிதாகத் தொடங்க மன்றத்தின் அனுமதி

மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களின் ஆணைக்கிணங்க, மாண்புமிகு மேயர் அவர்களின் சென்னை மாநகராட்சி வரவு செலவுத்திட்ட அறிவிப்புகள் 2014–2015ல் சென்னை மாநகர மக்களின் வரவேற்பையும், தேவையையும் கருத்திற் கொண்டு சிறந்த சூழலுடன் கூடிய மழலையர் பள்ளிகள் புதியதாக தொடங்கப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

பெற்றோர்கள் தங்கள் குழந்தைகளை 3 வயதிலேயே மழலையர் வகுப்பு பள்ளிகளில் சேர்க்க விரும்புகின்றனர். பொருளாதாரத்தில் பின்தங்கிய பெற்றோர்கள் தங்கள் குழந்தைகளை மழலையர் பள்ளியில் சேர்க்க விருப்பப்பட்டும் சேர்க்க முடியாத சூழ்நிலையில் உள்ளனர். அப்பெற்றோர்களின் விருப்பத்தை நினைவாக்க கடந்த ஆண்டு மட்டும் சென்னை மாநகராட்சி பள்ளிகளில் 25 மழலையர் வகுப்புகள் துவங்கப்பட்டு தற்சமயம் 65 பள்ளிகளில் மழலையர் வகுப்புகள் சீரும், சிறப்புடனும் நல்ல முறையில் செயல்பட்டு வருகிறது. கடந்த ஆண்டு மட்டும் சுமார் 2500 மாணவர்கள் மழலையர் வகுப்புகளில் புதிதாக சேர்ந்துள்ளனர். மேலும், சென்னை மாநகராட்சி பள்ளிகளில் மாணவர்களை சேர்த்துவிட்டால் L.K.G. முதல் 12–ம் வகுப்பு வரை படிக்க வாய்ப்பு உள்ளது. எனவே, பெற்றோர்கள் தங்கள் குழந்தைகளை சென்னை மாநகராட்சி பள்ளிகளில் சேர்க்க ஆர்வம் கொண்டு மழலையர் பள்ளிகளில் சேர்த்து வருகின்றார்கள்.

கடந்த ஆண்டு (2014–15) சென்னை மாநகராட்சி மழலையர் பள்ளிகளில் **L.K.G.** மற்றும் **U.K.G.** மாணவர்களின் மொத்த எண்ணிக்கை 5422 ஆகும். இது முந்தைய கல்வியாண்டைவிட (2013–2014) மாணவர்களின் எண்ணிக்கை சுமார் 2500 அதிகமாகும். இதன் மூலம் சென்னை மாநகராட்சி பள்ளிகளில் மாணவர்களின் எண்ணிக்கை அதிகரிக்க அதிகமான வாய்ப்புகள் உள்ளது.

எனவே, இத்திட்டத்தின் மூலம் சென்னை மாநகராட்சிப் பள்ளிகளில் மாணவர்கள் எண்ணிக்கை அதிகரிப்பதனால் இத்திட்டத்தை விரிவுபடுத்தும் வகையில் இக்கல்வியாண்டிலும் (2015–2016) 100 பள்ளிகளில் மழலையர் வகுப்புகள் புதிதாகத் தொடங்க முதன்மைச் செயலர்/ஆணையர் அவர்களின் அனுமதி பெறப்பட்டுள்ளது. 110 பள்ளிகளில் மழலையர் பள்ளிகள் தொடங்க உத்தேசிக்கப்பட்டு மாணவர் சேர்க்கை ஆரம்பிக்கப்பட்டது. இதில் 10 பள்ளிகளில் எவ்வித மாணவர் சேர்க்கை நடைபெறாததால் அப்பள்ளிகளின் பெயர் பட்டியலில் இருந்து நீக்கம் செய்யப்பட்டுள்ளது. தற்போது 100 பள்ளிகளின் விவரங்கள் பின்வருமாறு:

வ.எண்	புதிய மண்டலம்	கோட்டம்	பள்ளியின் பெயர்
1.	4	35	செ.ந.நி.பள்ளி, சின்னாண்டி மடம்
2.	4	37	செ.தொ.பள்ளி, உதய சூரியன் நகர்
3.	4	37	செ.தொ.பள்ளி, R.R.நகர்
4.	4	37	செ.தொ.பள்ளி, எம்.ஜி.ஆர்.நகர்
5.	4	39	செ.உ.பெ.தொ.பள்ளி, செரியன் நகர்
6.	4	40	செ.தொ.பள்ளி, திருவள்ளுவர் நகர்
7.	4	40	செ.ந.நி.பள்ளி, G.P.W.காலனி
8.	4	41	செ.தொ.பள்ளி, ஜே.ஜே.நகர்
9.	4	41	செ.தொ.பள்ளி, எம்.ஜி.ஆர்.நகர்
10.	4	42	செ.தொ.பள்ளி, சேனியம்மன் கோயில் தெரு
11.	4	43	செ.ந.நி.பள்ளி, கும்மாளம்மன் கோயில் தெரு
12.	4	47	செ.ந.நி.பள்ளி, புத்தா தெரு
13.	4	47	செ.தொ.பள்ளி, O.L.K. ஏரியா
14.	4	47	செ.ந.நி.பள்ளி, ரங்கநாதபுரம்
15.	4	47	செ.தொ.பள்ளி, அரிநாராயணபுரம்
16.	4	48	செ.ந.நி.பள்ளி, 540 டி.எச்.ரோடு
17.	5	50	செ.ந.நி.பள்ளி, துரை தெரு
18.	5	51	செ.தொ.பள்ளி, சிமெண்ட்டி ரோடு
19.	5	51	செ.தொ.பள்ளி, எம்.எம்.6வது லேன்
20.	5	52	செ.தொ.பள்ளி, ஆஞ்சநேய நகர்
21.	5	53	செ.தொ.பள்ளி, காத்பாடா

22.	5	53	செ.ந.நி.பள்ளி, படவட்டம்மன் கோயில் தெரு
23.	5	55	செ.ந.நி.பள்ளி, ஏழுகிணறு தெரு
24.	5	56	செ.ந.நி.பள்ளி, எஸ்.வி.கோயில் தெரு
25.	5	56	செ.ந.நி.பள்ளி, ராமசாமி தெரு
26.	5	57	செ.ந.நி.பள்ளி, அண்ணாபிள்ளை தெரு
27.	5	58	செ.ந.நி.பள்ளி, 72 அவதானம் தெரு
28.	5	58	செ.ந.நி.பள்ளி, வைக்ககாரன்தெரு
29.	5	58	செ.ந.நி.பள்ளி, வி.கே. பிள்ளை தெரு
30.	5	60	செ.ந.நி.பள்ளி, அங்கப்பா தெரு
31.	5	61	செ.உ.பெ.தொ.பள்ளி, ஆயிரம் விளக்கு
32.	5	61	செ.ந.நி.பள்ளி, எழும்பூர்
33.	6	65	செ.தொ.பள்ளி, சீனிவாச நகர்
34.	6	65	செ.தொ.பள்ளி, கொளத்தூர்–I
35.	6	65	செ.தொ.பள்ளி, கே.எம்.காலனி–2
36.	6	66	செ.ந.நி.பள்ளி, கே.சி.கார்டன்
37.	6	67	செ.ந.நி.பள்ளி, ரங்கசாயி தெரு
38.	6	68	செ.உ.தொ.பள்ளி, செம்பியம்
39.	6	68	செ.ந.நி.பள்ளி, கோபாலபுரம்
40.	6	68	செ.தொ.பள்ளி, டி.வி.கே.நகர்
41.	6	68	செ.தொ.பள்ளி, மதுரைசாமி மடம்
42.	6	69	செ.ந.நி.பள்ளி, மடுமா நகர்
43.	6	70	செ.தொ.பள்ளி, 2எ பள்ளிச் சாலை
44.	6	70	செ.தொ.பள்ளி, அருந்ததிப்பாளையம்
45.	6	71	செ.ந.நி.பள்ளி, ஏகாங்கிபுரம்
46.	6	71	செ.தொ.பள்ளி, மங்களாபுரி
47.	6	72	செ.ந.நி.பள்ளி, எச் & எஸ் பேக்டரி
48.	6	73	செ.தொ.பள்ளி, அம்மையம்மாள் தெரு
49.	6	74	செ.தொ.பள்ளி, சின்னபாபு தெரு
50.	6	75	செ.ந.நி.பள்ளி, வெங்கடம்மாள் தெரு
51.	6	76	செ.ந.நி.பள்ளி, 118 அங்காளம்மன் கோயில்தெரு
52.	6	76	செ.தொ.பள்ளி, ஸ்ட்ராஹன்ஸ் சாலை
53.	6	77	செ.உ.பெ.தொ.பள்ளி, போகிப்பாளையம்
54.	8	97	செ.தொ.பள்ளி, சோலைத்தெரு
55.	8	102	செ.தொ.பள்ளி, தமிழர் நகர்
56.	8	102	செ.ந.நி.பள்ளி, அமைந்தகரை
57.	8	102	செ.ந.நி.பள்ளி, குஜ்ஜி தெரு
58.	8	103	செ.தொ.பள்ளி, கீழ்பாக்கம்
59.	8	104	செ.ந.நி.பள்ளி, சுந்தரம் தெரு
60.	8	104	செ.ந.நி.பள்ளி, புல்லாபுரம்
61.	8	104	செ.ந.நி.பள்ளி, வெள்ளாளத்தெரு
62.	8	107	செ.ந.நி.பள்ளி, சிவராஜபுரம்
63.	8	107	செ.தொ.பள்ளி, சுப்பராயன் தெரு
64.	8	108	செ.தொ.பள்ளி, எம்.எம்.டி.எ.–II
65.	9	109	செ.தொ.பள்ளி, நமச்சிவாயபுரம்
66.	9	112	செ.தொ.பள்ளி, வரதராஜன்பேட்டை
67.	9	113	செ.ந.நி.பள்ளி, ராமா தெரு
68.	9	114	செ.ந.நி.பள்ளி, தைப்பூன் அலிகான்
69.	9	114	செ.உ.பெ.ந.நி.பள்ளி, தாயார்சாகிப் தெரு
70.	9	114	செ.ந.நி.பள்ளி, பங்காரு தெரு

71.	9	114	செ.ந.நி.பள்ளி, பெல்ஸ் சாலை
72.	9	115	செ.ந.நி.பள்ளி, சூரப்பா தெரு
73.	9	115	செ.தொ.பள்ளி, டாக்டர் பெசண்ட் சாலை
74.	9	116	செ.ந.நி.பள்ளி, வி.ஆர்.பிள்ளை
75.	9	117	செ.தொ.பள்ளி, கிரியப்பா தெரு
76.	9	118	செ.ந.நி.பள்ளி, வெள்ளாள தேனாம்பேட்டை
77.	9	119	செ.ந.நி.பள்ளி, பாலாஜி நகர்
78.	9	119	செ.உ.பெ.ந.நி.பள்ளி, 10 பீட்டர்ஸ் சாலை
79.	9	119	செ.உ.ஆ.தொ.பள்ளி, மீர்சாகிப்பேட்டை
80.	9	121	செ.உ.ஆ.தொ.பள்ளி, மைலாப்பூர்
81.	9	123	செ.ந.நி.பள்ளி, திருவள்ளுவர்பேட்டை
82.	9	123	செ.தொ.பள்ளி, திருவள்ளுவர் சாலை
83.	9	124	செ.தொ.பள்ளி, சிலேட்டர் புரம்
84.	9	124	செ.ந.நி.பள்ளி, எம்.கே.அம்மன் தெரு
85.	9	126	செ.தொ.பள்ளி, கெனால்பேங்க்
86.	10	132	செ.தொ.பள்ளி, அசோக் நகர்
87.	10	133	செ.தொ.பள்ளி, முல்லை நகர்
88.	10	134	செ.தொ.பள்ளி, காமராஜர் சாலை
89.	10	135	செ.தொ.பள்ளி, ஈஸ்வரன் கோயில் தெரு
90.	10	139	செ.தொ.பள்ளி, ஜாபர்கான் பேட்டை
91.	10	140	செ.ந.நி.பள்ளி, வண்டிக்காரன் தெரு
92.	10	141	செ.தொ.பள்ளி, சி.ஐ.டி.நகர்
93.	10	142	செ.தொ.பள்ளி, பஜார் சாலை
94.	13	171	செ.தொ.பள்ளி, வெங்கடாபுரம்
95.	13	173	செ.ந.நி.பள்ளி, என்.எஸ்.கார்டன்
96.	13	175	செ.தொ.பள்ளி, இந்திரா நகர்
97.	13	175	செ.தொ.பள்ளி, காமராஜ் அவென்யூ
98.	13	176	செ.தொ.பள்ளி, சாஸ்திரி நகர்
99.	13	177	செ.தொ.பள்ளி, குயில்குப்பம்
100.	13	179	செ.தொ.பள்ளி, உதயம் நகர்

எனவே,

1. சென்னை மாநகராட்சி 2014–2015 வரவு–செலவுத் திட்ட அறிவிப்புகளின்படி இந்த கல்வியாண்டிலும் (2015–2016) 100 மழலையர் பள்ளிகள் புதிதாக தொடங்க அனுமதியும்,
2. சென்னை மாநகராட்சியின் வரவு செலவு திட்ட அறிவிப்புகளின்படி ஏற்கனவே உள்ள 65 பள்ளிகளுக்கு வழங்கப்படும் அனைத்து நலத்திட்டங்களும் புதிதாக தொடங்கப்பட்ட 100 மழலையர் பள்ளிகளுக்கும் வழங்கவும்,

மேற்கண்ட 1 மற்றும் 2 வரை உள்ள இனங்களுக்கு நிலைக்குழு (கல்வி) மற்றும் நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி)வின் மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

"ஏற்கனவே நிலைக்குழு (கல்வி) கூட்டம் 20.07.2015 அன்று முடிவடைந்த நிலையில் இப்பொருளின் அவசரம் மற்றும் அவசியத்தன்மையை கருத்தில் கொண்டு 03.08.2015 அன்று தீர்மான எண்.17/2015ன்படி இதற்கு நிலைக்குழு(கல்வி) சுற்றின் மூலம் பெரும்பான்மை உறுப்பினர்களின் பரிந்துரையை பெற்று நிலைக்குழு (வ.வி.ம.நி)வின் மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது ".

மேலும் இப்பணி கூவம் ஆற்றின் ஓரம் அமைவதால் இப்பணியிடத்திற்கு கட்டட பொருள்கள் இயந்திரங்கள் மூலம் கொண்டு செல்வது இயலாது என்றும் எனவே கூடுதல் பணியாளர்கள் கொண்டு Head Load (Manual)ஆக தான் கட்டட பொருள்கள் எடுத்துச் செல்ல இயலும் என்றும், மேலும் இப்பணியில் கூடுதல் மின்விளக்குகள் மற்றும் ஜெனரேட்டர்களை ஒப்பந்ததாரரே அமைக்க வேண்டும் என்றும் தெரிவிக்கப்பட்டது.

இப்பணி முடிக்கப்பட்ட நாளிலிருந்து ஒரு வருட காலத்திற்கு பூங்கா மற்றும் நடைபாதையினை ஒப்பந்ததாரரே பராமரிக்க வேண்டும் என்றும் ஒப்ப விதியில் உள்ளது என்றும் தெரிவிக்கப்பட்டது.

மேலும் இப்பணி மேற்சொன்ன மூன்று துறையினரோடு சேர்ந்து மேற்கொள்வதால் பணி முடிவடையும் காலம் மூன்று ஆண்டுகள் என ஒப்பத்தில் தெரிவித்து உள்ளதாலும், இந்த மூன்று ஆண்டு காலத்திற்கு பணி மேற்கொள்ளும்போது "Price Variation Clause" படி விலை உயர்வு அளிக்கப்படமாட்டாது என்று ஒப்பந்ததாரருக்கு தெரிவிக்கப்படும் என்றும் சமர்ப்பிக்கப்பட்டது.

எனவே இப்பணியினை குறைந்த ஒப்பத்தொகை அளித்த ஒப்பந்ததாரரான திருவாளர்கள். G.K.எண்டர்பிரைசஸ் அவர்களுக்கு வழங்கலாம் எனவும் தெரிவிக்கப்பட்டது.

மேலும் ஒப்பங்கள் பரிசீலிக்கும் குழுமம் 21.07.2015 அன்று மேற் சொன்ன காரணங்களை கூர்ந்தாய்வு செய்து, மேற்கண்ட பணிக்கு குறைந்த ஒப்பந்தப்புள்ளி அளித்த ஒப்பந்ததாரர் திருவாளர்கள்.G.K.எண்டர்பிரைசஸ் அவர்களுக்கு ரூ.3,40,25,707.87க்கு ஒப்பம் பணிக்காலமாக நிர்ணயிக்கப்பட்ட மூன்று ஆண்டுகளுக்கு "Price Variation" விலை உயர்வு அளிக்கப்பட மாட்டாது என்று தெரிவித்து, திருவாளர்கள்.G.K.எண்டர்பிரைசஸ் அவர்களுக்கு ஒப்பம் வழங்கலாம் என பரிந்துரை செய்துள்ளது.

எனவே, இப்பணிக்கான ஒப்பத்தினை திருவாளர்கள்.G.K.எண்டர்பிரைசஸ் அவர்களுக்கு ஒப்பத்தொகை ரூ.3,40,25,707.87, மதிப்பிற்கு பணிகள் அளிக்கவும் 2014–15ஆம் ஆண்டு விலை பட்டியல் படி தயாரிக்கப்பட்ட மதிப்பீட்டை விட (+)9.79 % அதிகம் ஆகும் . இது சந்தை விலையோடு ஒப்பிடுகையில் (+)3.00% அதிகம் எனவே திருவாளர்கள்.G.K.எண்டர்பிரைசஸ் அவர்களுக்கு ஒளிவு மறைவற்ற ஒப்பந்தப்புள்ளி சட்டம் 1998 பிரிவு 7(1) மற்றும் 7(2)ன்படி ஒப்பம் வழங்க நிலைக்குழு (பணிகள்) மற்றும் நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

> "ஏற்கனவே நிலைக்குழு (பணிகள்) கூட்டம் 22.07.2015 அன்று முடிவடைந்த நிலையில் இப்பொருளின் அவசரம் மற்றும் அவசியத்தன்மையை கருத்தில் கொண்டு 03.08.2015 அன்று தீர்மான எண்.162/2015ன்படி இதற்கு நிலைக்குழு(பணிகள்) சுற்றின் மூலம் பெரும்பான்மை உறுப்பினர்களின் பரிந்துரையை பெற்று நிலைக்குழு (வ.வி.ம.நி)வின் மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது ".

> "ஏற்கனவே நிலைக்குழு (வ.வி.ம.நி) வின் கூட்டம் 24.07.2015 அன்று முடிவடைந்த நிலையில் இப்பொருளின் அவசரம் மற்றும் அவசியத்தன்மையை கருத்தில் கொண்டு 03.08.2015 அன்று தீர்மான எண்.187/2015ன்படி இதற்கு நிலைக்குழு (வ.வி.ம.நி)வின் சுற்றின் மூலம் பெரும்பான்மை உறுப்பினர்களின் பரிந்துரையை பெற்று மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது ".

"இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது"

****

பூ.து.ந.க.எண்.பி1/0357/2015

முதன்மை செயலர் மற்றும் ஆணையர் அவர்களின் 25.07.2015 நாளிட்ட குறிப்பு

தீர்மான எண்.387/2015 **பொருள் எண்.36**

ஒப்பம் – 2015–16 – பூங்கா துறை – மண்டலம்–7, வார்டு எண்.93ல் உள்ள மதுரவாயல் கோல்டன் ஜார்ஜ் ரத்தினம் சாலை பாலம் அருகில் இடது கரையோரம் பூங்கா அமைக்கும் பணிக்கு (சங்கிலி தொடர் 17050 மீட்டர் முதல் 17450 மீட்டர் வரை) – ஒப்பம் பெறப்பட்டது – ஒப்பம் திருவாளர்கள்.S.P.பில்டர்ஸ் அவர்களுக்கு வழங்க அனுமதி

அரசாணை நிலை எண்.9, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள் 13.01.2015ன்படி, பூங்கா துறை மூலம் மதுரவாயல் கோல்டன் ஜார்ஜ் ரத்தினம் சாலை பாலம் அருகில் இடது கரையோரம் பூங்கா அமைக்கும் பணிக்கு (Ch.17050 மீட்டர் முதல் 17450 மீட்டர் வரை) நிர்வாக ஒப்புதல் பெறப்பட்டது. இப்பணிக்கு சென்னை மாநகராட்சி தலைமை பொறியாளர் (பொது) அவர்கள் 15.04.2015 அன்று தொழில்நுட்ப ஒப்புதல் அளித்துள்ளார். இப்பணிக்கு சென்னை மாநகராட்சி, ஒப்பந்த புள்ளி செய்தி மலர் மூலம் ஒப்பங்கள் பெறுவதற்கான செய்தி வெளியிடப்பட்டு, ஒப்பங்கள் பெறப்பட்டது ஒப்பப்புள்ளி மற்றும் விலைப்புள்ளி 22.06.2015 மற்றும் 09.07.2015 அன்று திறக்கப்பட்டு, ஒப்பம் பரிசீலிக்கும் குழுமம் மூலம் பரிந்துரைக்கப்பட்ட குறைந்த ஒப்பம் அளித்த திருவாளர்கள்.S.P.பில்டர்ஸ் அவர்களுக்கு ஒப்பம் வழங்க மாமன்றத்தின் ஒப்புதல் வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

01.	பணியின்பெயர்	:	மண்டலம்–7, வார்டு எண்.93ல் உள்ள மதுரவாயல் கோல்டன் ஜார்ஜ் ரத்தினம் சாலை பாலம் அருகில் இடது கரையோரம் பூங்கா அமைக்கும் பணி (சங்கிலி தொடர் 17050 மீட்டர் முதல் 17450 மீட்டர் வரை)
02.	மதிப்பீட்டிற்கு மன்றத்தின் ஒப்புதல் தீர்மான எண்/ நாள்	:	––
03.	திட்ட குறியீட்டு எண்	:	பின்னர் பெறப்படும்
04.	ஒப்புதல் பெற்ற மதிப்பீட்டின் தொகை அலுவலக விலைப்பட்டியல் எடுத்துக் கொள்ளப்பட்ட ஆண்டு	:	2014 – 2015
	(அ) பணி செலவினம் மட்டும்	:	ரூ. 7,31,12,475.78
	(ஆ) மேலான செலவீனம் மட்டும்	:	––
	(இ) சிறு மேற்பார்வை செலவு	:	ரூ. 18,27,811.89
	(ஈ) மற்றைய எதிர்பாரா செலவு	:	ரூ. 11,78,587.57
	(உ) தரக்கட்டுப்பாடு செலவு	:	ரூ. 7,31,124.76
	(ஊ) சர்வீஸ் லைன் மாற்றும் செலவு	:	ரூ. 1,50,000.00
	மொத்தம்	:	ரூ.7,70,00,000.00
05.	எந்தெந்த பத்திரிக்கையில் ஒப்பம்	:	இ டெண்டர் சென்னை மாநகராட்சி செய்தி மலர் 21 நாள்.23.04.15 நியூ இந்தியன் எக்ஸ்பிரஸ் நாள். 23.04.2015 மக்கள் குரள் நாள். 23.04.2015
06.	ஒப்ப படிவம் பெற குறிக்கப்பட்ட நாள்	:	14.05.2015
07.	ஒப்பந்தப்புள்ளி ஏற்றுக் கொள்வதற்கான கடைசி நாள்	:	05.06.2015 அலுவலகக் காரணங்களுக்காக 22.06.2015 அன்று ஒத்திவைக்கப்பட்டது.

08.	ஒப்பம் செய்தித்தாளில் பிரசுரிக்கப்பட்ட நாளிலிருந்து ஒப்பம் பெறுவதற்கு குறைந்தது 15 நாட்கள் ஒதுக்கப்பட்டுள்ளதா இல்லை எனில் உரிய அலுவலரின் ஒப்புதல் பெற்ற விவரம் குறிப்பிடவும்.	:	ஆம்
09.	எத்தனை ஒப்பங்கள் விற்பனை செய்யப்பட்டன ?	:	2 (கணினி மூலம் பதிவேற்றம்)
10.	எத்தனை ஒப்பங்கள் பெறப்பட்டன ?	:	2 (கணினி மூலம் பதிவிறக்கம்)
11.	ஒப்பத்தில் பங்கேற்றவர் விவரம்	:	இரண்டு ஒப்பங்கள் பெறப்பட்டது. இதில் தொழில் நுட்ப பரிசீலனையில் இரண்டு ஒப்பந்ததாரர் தேர்ச்சி பெற்றுள்ளார்.

குறிப்பு : Two Cover System என்பதால் தொழில் நுட்ப ஒப்பத்தில் தேர்ச்சி பெற்ற விலைப்புள்ளி ஒப்பம் அளித்த கீழ்காணும் ஒப்பந்ததாரர்கள் அளித்த ஒப்ப விவரம்.

வ. எண்	ஒப்பத்தில் பங்கேற்றவர் பெயர் (திரு. / திருவாளர்கள்)	பணியின் அலுவலக மதிப்பு ரூ.	ஒப்பந்ததாரரின் ஒப்பத் தொகை ரூ.	2014–15ம் ஆண்டு விலையோடு ஒப்பிடுகையில் ஒப்பந்ததாரரின் % அதிகம் / குறைவு
1.	S.P.பில்டர்ஸ்	7,31,12,475.78	9,44,81,939.00	(+) 29.23 % அதிகம்
2.	S.S.S.ஹைடெக் பிரைவேட் லிமிடெட்	7,31,12,475.78	10,05,69,640.69	(+) 37.55 % அதிகம்

குறிப்பு: மேற்கண்ட இரண்டு ஒப்பங்களில் திருவாளர்கள்.S.P.பில்டர்ஸ், ஒப்பந்ததாரர் குறைந்த விலைபுள்ளியாக (+) 29.23 % அதிகம் அளித்துள்ளார்.

12.	குறைந்த ஒப்பம் அளித்தவருடன் பேச்சு வார்த்தை தேவையா ? ஆம் எனில் நடத்தப்பட்ட நாள்	:	ஆம் 17.07.2015 (முதலாவது பேச்சுவார்த்தை) 20.07.2015 (இரண்டாவது பேச்சுவார்த்தையில் மேலும் விலை குறைப்பு செய்ய இயலாது என கடிதம் அளித்துள்ளார்)
13.	இரண்டாவது பேச்சுவார்த்தைக்குப்பின் ஒப்பத் தொகை ஒப்ப சதவீதம்	:	ரூ. 8,02,66,064.00 (+) 9.78 % அதிகம்
14.	குறைந்த ஒப்ப சதவீதம் அளித்த ஒப்பந்ததாரரின் பதவின் நிலை பதிவு நாள்	:	கட்டடத்துறையில் முதலாம் வகுப்பு நாள் 11.02.2014
15.	கூடுதல் பிணை வைப்புத் தொகை செலுத்தப்பட்ட விவரம் அ) கேட்பு காசோலை எண்/நாள் வங்கியின் பெயர்	:	––
16.	பணிக்கான நிதி ஆதாரம் உள்ளதா ? அ) வரவு செலவுத்திட்ட தலைப்பு	:	ஆம், சென்னை நதிநீர் புனரமைப்பு இயக்கம் (CRRT)
17.	ஒப்பந்தப்புள்ளி செல்லத்தக்க காலம்	:	21.09.2015

மேற்கண்ட பணிக்காக ஒப்பங்கள் கோரப்பட்டு, இறுதி நாளான 22.06.2015 அன்று இரண்டு ஒப்பங்கள் பெறப்பட்டன.தொழில்நுட்ப ஒப்பத்திலும் தேர்ச்சிபெற்ற இவ்விரு ஒப்பந்ததாரர்கள் அளித்த ஒப்பத்தில் குறைந்த ஒப்பப்புள்ளி அளித்த ஒப்பந்ததாரர் திருவாளர்கள்.S.P.பில்டர்ஸ், அவர்கள் அளித்த ஒப்பத்தொகை ரூ.9,44,81,939.00 ஆகும். 2014–2015 ஆம் ஆண்டின் அலுவலக பணி மதிப்பீட்டு தொகையான ரூ.7,31,12,475.78யுடன் ஒப்பிடுகையில் இவ் ஒப்பந்ததாரர் அளித்துள்ள ஒப்பத் தொகை (+)29.23% அதிகம் ஆகும். ஏனவே 17.07.2015 அன்று நடந்த முதல் பேச்சு வார்த்தைக்கு பின் அளித்த ஒப்ப தொகை ரூ.8,02,66,064.00 ஆகும். இது 2014–2015 ஆம் ஆண்டின் அலுவலக விலை பட்டியல் படி (+)9.78%.அதிகம் ஆகும். எனவே ஒப்பந்ததாரர் இரண்டாவது பேச்சுவார்த்தைக்குஅழைக்கப்பட்டார். இந்த இரண்டாவது பேச்சுவார்த்தைக்கு பின் ஒப்பந்ததாரர் மேலும் விலைப்புள்ளி குறைக்க இயலாது என்றும் தெரிவித்துள்ளார். இதன்படி ஒப்பந்ததாரர் அளித்துள்ள இறுதி ஒப்பத்தொகை ரூ.8,02,66,064.00 ஆகும் மற்றும் ஒப்ப சதவீதம் (+)9.78%.அதிகம் ஆகும். மேலும் இவ் ஒப்பத் தொகை 04.07.2015 நாளிட்ட சந்தை விலையுடன் ஒப்பிடுகையில் ஒப்பத்தொகை (+)2.97% அதிகம் ஆகும்.

ஒப்பந்ததாரரின் இறுதி ஒப்பத் தொகை	ரூ.8,02,66,064.00
ஒப்பந்ததாரரின் இறுதி ஒப்ப சதவீதம் பேச்சு வார்த்தைக்கு பின் 2014–2015 ஆம் ஆண்டிண் அலுவலக விலை பட்டியல்படி	(+)9.78% அதிகம்

இது சம்பந்தமாக கீழ்காணும் விவரங்கள் ஒப்பங்கள் பரிசீலிக்கும் குழுமத்தில் சமர்ப்பிக்கப்பட்டது.

ஒப்பங்கள் பரிசீலிக்கும் குழுமத்தில், இப்பணி பொதுப்பணித் துறையினர் கூவம் ஆற்றில் தூர்வாரி, கரை அமைத்த பின் மற்றும் மாநகராட்சி கட்டடத்துறை மேற்கொள்ளும் சுற்றுசுவர் பணி அமைத்த பின் மற்றும் திடக்கழிவு மேலாண்மை துறையினர் ஆற்றோரம் உள்ள கட்டட இடிபாடுகள் மற்றும் திடகழிவுகள் அகற்றும் பணி ஆகிய பணிகள் முடித்த பின்னே பணி மேற்கொள்ள வேண்டி இருக்கும் என்றும் தெரிவிக்கப்பட்டது.

மேலும் இப்பணி கூவம் ஆற்றின் ஓரம் அமைவதால் இப்பணியிடத்திற்கு கட்டட பொருள்கள் இயந்திரங்கள் மூலம் கொண்டு செல்வது இயலாது என்றும் எனவே கூடுதல் பணியாளர்கள் கொண்டு Head Load (Manual)ஆக தான் கட்டட பொருள்கள் எடுத்துச் செல்ல இயலும் என்றும், மேலும் இப்பணியில் கூடுதல் மின்விளக்குகள் மற்றும் ஜெனரேட்டர்களை ஒப்பந்ததாரரே அமைக்க வேண்டும் என்றும் தெரிவிக்கப்பட்டது.

இப்பணி முடிக்கப்பட்ட நாளிலிருந்து ஒரு வருட காலத்திற்கு பூங்கா மற்றும் நடைபாதையினை ஒப்பந்ததாரரே பராமரிக்க வேண்டும் என்றும் ஒப்ப விதியில் உள்ளது என்றும் தெரிவிக்கப்பட்டது.

மேலும் இப்பணி மேற்சொன்ன மூன்று துறையினரோடு சேர்ந்து மேற்கொள்வதால் பணி முடிவடையும் காலம் மூன்று ஆண்டுகள் என ஒப்பத்தில் தெரிவித்து உள்ளதாலும், இந்த மூன்று ஆண்டு காலத்திற்கு பணி மேற்கொள்ளும் போது “Price Variation Clause” படி விலை உயர்வு அளிக்கப்படமாட்டாது என்று ஒப்பந்ததாரருக்கு தெரிவிக்கப்படும் என்றும் சமர்ப்பிக்கப்பட்டது.

எனவே இப்பணியினை குறைந்த ஒப்பத்தொகை அளித்த ஒப்பந்ததாரரான திருவாளர்கள். S.P. பில்டர்ஸ்க்கு வழங்கலாம் எனவும் தெரிவிக்கப்பட்டது.

மேலும் ஒப்பங்கள் பரிசீலிக்கும் குழுமம் 21.07.2015 அன்று மேற் சொன்ன காரணங்களை கூர்ந்தாய்வு செய்து, மேற்கண்ட பணிக்கு குறைந்த ஒப்பந்தப்புள்ளி அளித்த ஒப்பந்ததாரர் திருவாளர்கள். S.P. பில்டர்ஸ் அவர்களுக்கு ரூ.8,02,66,064.00க்கு ஒப்பம் பணிக்காலமாக நிர்ணயிக்கப்பட்ட மூன்று ஆண்டுகளுக்கு “Price Variation “ விலை உயர்வு அளிக்கப்பட மாட்டாது என்று தெரிவித்து, திருவாளர்கள். S.P. பில்டர்ஸ் அவர்களுக்கு ஒப்பம் வழங்கலாம் என பரிந்துரை செய்துள்ளது.

எனவே, இப்பணிக்கான ஒப்பத்தினை திருவாளர்கள்.S.P.Builders, அவர்களுக்கு ஒப்பத்தொகை ரூ.8,02,66,064.00, மதிப்பிற்கு பணிகள் அளிக்கவும் 2014–15ஆம் ஆண்டு விலை பட்டியல் படி தயாரிக்கப்பட்ட மதிப்பீட்டை விட (+)9.78 % அதிகம் ஆகும் . இது சந்தை விலையோடு ஒப்பிடுகையில் (+)2.97% அதிகம். எனவே திருவாளர்கள்.S.P.Builders அவர்களுக்கு ஒளிவு மறைவற்ற ஒப்பந்தப்புள்ளி சட்டம் 1998 பிரிவு 7(1) மற்றும் 7(2)ன்படி ஒப்பம் வழங்க நிலைக்குழு (பணிகள்) மற்றும் நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

> ‘‘ஏற்கனவே நிலைக்குழு (பணிகள்) கூட்டம் 22.07.2015 அன்று முடிவடைந்த நிலையில் இப்பொருளின் அவசரம் மற்றும் அவசியத்தன்மையை கருத்தில் கொண்டு 03.08.2015 அன்று தீர்மான எண்.163/2015ன்படி இதற்கு நிலைக்குழு(பணிகள்) சுற்றின் மூலம் பெரும்பான்மை உறுப்பினர்களின் பரிந்துரையை பெற்று நிலைக்குழு (வ.வி.ம.நி)வின் மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது ’’.
>
> ‘‘ஏற்கனவே நிலைக்குழு (வ.வி.ம.நி) வின் கூட்டம் 24.07.2015 அன்று முடிவடைந்த நிலையில் இப்பொருளின் அவசரம் மற்றும் அவசியத்தன்மையை கருத்தில் கொண்டு 03.08.2015 அன்று தீர்மான எண்.188/2015ன்படி இதற்கு நிலைக்குழு (வ.வி.ம.நி)வின் சுற்றின் மூலம் பெரும்பான்மை உறுப்பினர்களின் பரிந்துரையை பெற்று மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது ’’.
>
> ‘‘இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது’’

****

ம.நீ.வ.து.ந.க.எண்.பி4/2184/2009
முதன்மை செயலர்/ஆணையர் அவர்களின் 25.07.2015 நாளிட்ட குறிப்பு

தீர்மான எண்.388/2015 **பொருள் எண்.37**

ஒப்பம் – ஜவஹர்லால் நேரு தேசிய நகர்ப்புற புனரமைப்புத்திட்டம் – மழைநீர் வடிகால்வாய் அமைக்கும் பணி – மாம்பலம் மற்றும் நந்தனம் கால்வாயில் மழைநீர் வடிகால்வாய் அமைக்கும் பணி மற்றும் நீர்வழிக்கால்வாய் மேம்படுத்தும் பணிக்காக பணிக்கால நீட்டிப்பு வழங்க அனுமதி

மாம்பலம் மற்றும் நந்தனம் கால்வாயில் மழைநீர் வடிகால்வாய் அமைக்கும் பணி மற்றும் நீர்வழிக்கால்வாய் மேம்படுத்தும் பணிக்காக ரூ.100,60,77,292/–க்கு ஒப்பந்ததாரர் திருவாளர்கள் ஆர்.கிருஷ்ணமூர்த்தி அண்டு கோ அவர்களுக்கு 05.05.2010 அன்று பணி ஆணை வழங்கப்பட்டு பணி நடைபெற்று வந்தது. இப்பணியின் காலம் 26 மாதங்கள் ஆகும். அதாவது 04.07.2012க்குள் முடிக்கப்பட வேண்டும்.

மேலும், மழைக்காலங்கள் மற்றும் சட்டமன்ற தேர்தல் மற்றும் சில எதிர்பாராத காரணங்களுக்காகவும், மழைநீர் வடிகால்வாயில் குடிநீர் மற்றும் கழிவுநீர் தொடர்ச்சியாக வருவதினாலும், சேவைத்துறையினரின் பணிகளாலும், போக்குவரத்து காவல் துறையினரின் அனுமதி மற்றும சில இடர்பாடுகளாலும் மூன்று முறை பணி கால நீட்டிப்பு வழங்கப்பட்டது.

மன்ற தீர்மானம் மூலம், மாம்பலம் மற்றும் நந்தனம் கால்வாய் பகுதிகளில் ஆக்கிரமிப்புகளை அகற்றப்பட்டு தமிழ்நாடு குடிசை மாற்று வாரியம் மூலம் மறுகுடியமைப்பு செய்வதினால் இப்பணி காலதாமதம் ஏற்பட்டதினால் 31.03.2015க்குள் பணிகள் முடிக்க இயலாத நிலை ஏற்பட்டுள்ளதால் மாம்பலம் மற்றும் நந்தனம் கால்வாய் மழைநீர் வடிகால்வாய் அமைக்கும் பணி மற்றும் நீர்வழிக்கால்வாய் மேம்படுத்தும் பணிகளுக்கு முழுவதுமாக முடிக்க நான்காம் முறையாக 01.10.2014 முதல் 31.03.2015 வரை கால நீட்டிப்பு வழங்கலாம் என தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

ஒப்பந்ததாரர் கடிதத்தில், மாம்பலம் மற்றும் நந்தனம் கால்வாயில் மழைநீர் வடிகால்வாய் அமைக்கும் பணி மற்றும் நீர்வழிக்கால்வாய் பணியிடத்தில் ஆக்கிரமிப்புகள் அகற்றும் பணி முடிக்கப்பட்டு மறுகுடியமர்வு பணி மேற்கொள்ளப்பட்டு வருவதால், மாம்பலம் மற்றும் நந்தனம் மழைநீர் வடிகால்வாய் அமைக்கும் பணியில் மீதம் உள்ள பணிகளை விரைந்து முடிக்க கால நீட்டிப்பு வழங்க வேண்டியுள்ளனர். மேலும், இப்பணிக்கு வேலை விகிதாச்சார உயர்வு (Escalation charges) வழங்க கேட்டுக்கொண்டுள்ளனர்.

இதன் மூலம் தெரிவிப்பது யாதெனில், மாம்பலம் மற்றும் நந்தனம் கால்வாயில் மழைநீர் வடிகால்வாய் அமைக்கும் பணிகளுக்கு மாம்பலம் மற்றும் நந்தனம் கால்வாய் பகுதியில் நீர்வழிக்கால்வாய் மேம்படுத்தும் பணியிடத்தில் கால்வாய் பகுதியில் ஆக்கிரமிப்புகளை அகற்றப்பட்டு தமிழ்நாடு குடிசை மாற்று வாரியம் மூலம் மறுகுடியமைப்பு செய்து வருகின்றனர். இப்பணி முழுவதும் முடிவடைந்ததும் அப்பகுதியில் உடனே பணி மேற்கொண்டு முழுவதும் முடிக்கப்படும். எனவே, 31.03.2015குள் பணிகள் முடிக்க இயலாத நிலை ஏற்பட்டுள்ளதால் மாம்பலம் மற்றும் நந்தனம் கால்வாய் மழைநீர் வடிகால்வாய் அமைக்கும் பணி மற்றும் நீர்வழிக்கால்வாய் மேம்படுத்தும் பணிகளுக்கு முழுவதுமாக முடிக்க 01.04.2015 முதல் 30.06.2015 வரை கால நீட்டிப்புடன் வேலை விகிதாச்சார தொகையுடன் வழங்கலாம் என கருதப்படுகிறது.

இதனால் இப்பணிக்கு 31.03.2015 வரை இறுதியான கால நீட்டிப்பு வழங்கியதற்கு விலக்களித்து 01.04.2015 முதல் 30.06.2015 வரை இறுதியாக பணி நீட்டிப்பு வழங்கலாம் என கருத்து தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.

எனவே,

(1) திருவாளர்கள் ஆர்.கிருஷ்ணமூர்த்தி அண்டு கோ அவர்களுக்கு ஒப்பந்த துணை விதி 7 – F. ஒப்பந்த சிறப்பு விதிகளின் மாம்பலம் மற்றும் நந்தனம் கால்வாய் நீர்ப்பிடிப்பு பகுதியில் மழைநீர் வடிகால்வாய் அமைக்கும் பணி மற்றும் நீர்வழிக்கால்வாய் மேம்படுத்தும் பணிக்கு முழுவதுமாக முடிப்பதற்கு 31.03.2015 வரை இறுதியான கால நீட்டிப்பு வழங்கியதற்கு விலக்களித்து 01.04.2015 முதல் 30.06.2015 வரை பணி கால நீட்டிப்புற்கு பின்னேற்பு அனுமதியும் இறுதியாக பணி நீட்டிப்பு வழங்கவும்,

(2) மாம்பலம் மற்றும் நந்தனம் பகுதியில் நீர்வழிக்கால்வாய் மேம்படுத்தும் பணிக்கு வேலை விகிதாச்சார உயர்வு (Without Escalation charges) 01.04.2015 முதல் வழங்குவதற்கும்,

(3) மேற்கண்ட பணிக்கு ஒப்ப விதிகளின் அடிப்படையில் திருத்திய மைல் கல் (Milestone) 01.04.2015 தேதியில் நிர்ணயம் செய்யவும்.

மேற்கண்ட (1) முதல் (3) வரையிலான இனங்களுக்கு நிலைக்குழு (பணிகள்) மற்றும் நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி)யின் மூலமாக மன்றத்தின் பின்னேற்பு அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

> ‘‘ஏற்கனவே நிலைக்குழு (பணிகள்) கூட்டம் 22.07.2015 அன்று முடிவடைந்த நிலையில் இப்பொருளின் அவசரம் மற்றும் அவசியத்தன்மையை கருத்தில் கொண்டு 03.08.2015 அன்று தீர்மான எண்.164/2015ன்படி இதற்கு நிலைக்குழு(பணிகள்) சுற்றின் மூலம் பெரும்பான்மை உறுப்பினர்களின் பரிந்துரையை பெற்று நிலைக்குழு (வ.வி.ம.நி)வின் மூலமாக மன்றத்தின் பின்னேற்பு அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது ’’.
>
> ‘‘ஏற்கனவே நிலைக்குழு (வ.வி.ம.நி) வின் கூட்டம் 24.07.2015 அன்று முடிவடைந்த நிலையில் இப்பொருளின் அவசரம் மற்றும் அவசியத்தன்மையை கருத்தில் கொண்டு 03.08.2015 அன்று தீர்மான எண்.182/2015ன்படி இதற்கு நிலைக்குழு (வ.வி.ம.நி)வின் சுற்றின் மூலம் பெரும்பான்மை உறுப்பினர்களின் பரிந்துரையை பெற்று மன்றத்தின் பின்னேற்பு அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது ’’.
>
> ‘‘இதற்கு மன்றம் பின்னேற்பு அனுமதி அளிக்கின்றது’’

****

க.து.ந.க.எண்.இ1/404/2015

முதன்மை செயலர் மற்றும் ஆணையர் அவர்களின் 08.07.2015 நாளிட்ட குறிப்பு

தீர்மான எண்.389/2015 **பொருள் எண்.38**

வயது முதிர்வு ஓய்வு பின்னேற்பு அனுமதி

25.06.2015 நாளிட்ட கண்காணிப்பு பொறியாளர் (கட்டடம்) அவர்களின் கடிதத்தில், 05.12.2014 நாளிட்ட சுற்றறிக்கையின்படி, சென்னை மாநகராட்சியில் கட்டடத்துறையில் பணியாற்றி வரும் திரு.கே.அமிர்தலிங்கம், உதவி செயற்பொறியாளர், கட்டடத்துறை அவர்கள் 30.06.2015 அன்று வயது முதிர்வு ஓய்வில் செல்ல அனுமதிக்கப்பட்டார்.

30.06.2015 நாளிட்ட முதன்மை செயலர் / ஆணையர் அவர்களின் செயல்முறை ஆணையின்படி திரு.கே.அமிர்தலிங்கம், உதவி செயற்பொறியாளர், கட்டடத்துறை அவர்கள், மன்றத்தின் பின்னேற்பு அனுமதிக்குட்பட்டு 30.06.2015 அன்று வயது முதிர்வு ஓய்வு செல்ல ஆணையிடப்பட்டது.

திரு.கே.அமிர்தலிங்கம், உதவி செயற்பொறியாளர், கட்டடத்துறை அவர்கள், சென்னை மாநகராட்சியில் முதன்முதலில் 26.09.1978 அன்று பணியில் சேர்ந்து பின்னர் பதவி உயர்வில் இளநிலை பொறியாளராக 15.09.1984 முதலும், உதவி செயற்பொறியாளராக 30.01.2014 முதல் 29.01.2014 வரையிலும் தொடர்ந்து பணியாற்றி, தற்போது கட்டடத்துறையில் பணிபுரிந்து வருகிறார்.

மேலும் தனியர் சென்னை மாநகராட்சியில் பணிபுரிந்த கீழ்க்குறிப்பிட்ட அனைத்து துறை/மண்டலங்களிலிருந்து தனியரை பொறுப்பாக்கும் தணிக்கைத் தடை மற்றும் நேர் செய்யப்படாத முன்பணங்கள் மற்றும் ஒழுங்கு நடவடிக்கைகள் ஏதும் நிலுவையில் இல்லை என சான்றுகள் பெறப்பட்டுள்ளது.

வகித்த பதவிகள்	துறை / மண்டலம்	முதல்	வரை
வரைவாளர்	தெற்கு மாவட்ட அலுவலகம் (தற்போது மண்டலம்–10)	26.09.1978	14.09.1984
இளநிலை பொறியாளர்	கட்டடத்துறை	15.09.1984	06.05.1992
இளநிலை பொறியாளர்	பழைய மண்டலம் 3 புதிய மண்டலம் 6	07.05.1992	12.01.1994
இளநிலை பொறியாளர்	கட்டடத்துறை	13.01.1994	09.02.1996
இளநிலை பொறியாளர்	பழைய மண்டலம் 8 புதிய மண்டலம் 10	10.02.1996	29.01.2014
உதவி செயற்பொறியாளர்	வடக்கு வட்டார அலுவலகம்	30.01.2014	02.12.2014
உதவி செயற்பொறியாளர்	கட்டடத்துறை	03.12.2014	நாளது தேதி வரை

22.06.2015 நாளிட்ட நிதி ஆலோசகர் அவர்களின் அறிக்கையில், தனியர் பழைய மண்டலம் 9ல் பணிபுரிந்த போது 2008–2009ஆம் ஆண்டு தணிக்கை அறிக்கை பத்தி எண் 35ல் கூட்டு பொறுப்பில் உள்ள தணிக்கை தடைக்கான மொத்த நிதி இழப்பீடு ரூ.302373/– தொகையில் தனியரின் பங்கு ரூ.60475/– மற்றும் புதிய மண்டலம்–10ல் பணிபுரிந்த போது 2012–2013ஆம் ஆண்டு தணிக்கை அறிக்கை பத்தி எண்.37ல் வரிசை எண் 1, 2, 4, 5 கூட்டு பொறுப்பில் உள்ள தணிக்கை தடைக்கான மொத்த நிதி இழப்பீடு ரூ.485821/– தொகையில் தனியரின் பங்கு ரூ.161940/– ஆக மொத்தம் ரூ.2,22,415/– (ரூபாய் இரண்டு லட்சத்து இருபத்திரெண்டாயிரத்து நானூற்றி பதினைந்து மட்டும்) கீழ்கண்டவாறு நிலுவையில் உள்ளது என தெரிவிக்கப்பட்டுள்ளது.

வ. எ ண்	மண்டலம்/ துறைகள்	ஆண்டு	பத்தி எண்	தணிக்கைக் குட்படுத்தப் பட்ட தொகை ரூ	தடைக்கு பொறுப்பான பணியாளர்களின் எண்ணிக்கை மொத்தம்	தனியரை பொறுப்பாக்கும் தணிக்கைத்தடை தொகை ரூ.
1	பழைய மண்டலம்–9	2008–09	35	302373	3	60475.00
2	புதிய மண்டலம்–10	2012–13	37(வ.எண்.1, 2,4,5.	485821	3	161940.00
மொத்தம்						ரூ.2,22,415.00

நிதி ஆலோசகரின் அறிக்கையுடன் இணைக்கப்பட்டுள்ள இணை இயக்குநர் (பொ), உள்ளாட்சி நிதித்தணிக்கை அவர்களின் தொ.க.எண்.6/ஈ2/(2012–2013)/15, நாள்.19.06.2015 நாளிட்ட கடிதத்தில் தனியர் மீது 2012–2013ஆம் ஆண்டில் கூட்டு பொறுப்பிலுள்ள தணிக்கை தடை பத்தி எண் 37 (வரிசை எண் 1, 2, 4, 5)ல் கண்டுள்ள ரூ.4,92,859/–ஐ நீக்கம் செய்யப்பட்டுள்ளது.

சென்னை மாநகராட்சி விழிப்பு அலுவலர் அவர்களின் 18.05.2015 நாளிட்ட கடிதத்தில், திரு கே. அமிர்தலிங்கம், உதவி செயற்பொறியாளர் (கட்டடம்) அவர்கள் மீது இன்றைய தேதியில் சென்னை மாநகராட்சி விழிப்பு குழுமத்தில் விசாரணைகள் ஏதும் நிலுவையில் இல்லை என அறிக்கை வழங்கப்பட்டுள்ளது. மேலும் தனியர் மீது துறை சார்ந்த ஒழுங்கு நடவடிக்கைகளோ அல்லது விசாரணைகளோ நிலுவையில் ஏதும் இல்லை என கண்காணிப்பு பொறியாளர் (கட்டடம்) அவர்களின் 25.06.2015 நாளிட்ட கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தனியர் சென்னை மாநகராட்சி அலுவலர் கூட்டுறவு சங்கத்தில் உறுப்பினராக இல்லை என சான்று பெறப்பட்டுள்ளது.

மேலும் தனியர் சென்னை மாநகராட்சியில் முதன்முதலில் பணியில் சேர்ந்த நாளான 26.09.1978 முதல் நாளது தேதி வரை அனைத்து துறை மற்றும் மண்டலங்களில் பணிபுரிந்த காலங்களில் தன்னை பொறுப்பாக்கும் தணிக்கை தடை மற்றும் முன்பணங்கள் நேர்செய்யப்படாத முன்பணங்கள் ஏதேனும் நிலுவைகள் இருப்பின் தனக்கு வழங்கவிருக்கும் ஓய்வூதிய அகவிலைப்படி மற்றும் பணிக்கொடையில் பிடித்தம் செய்து கொள்ள சம்மதம் தெரிவித்து உறுதி மொழி கடிதம் அளித்துள்ளார்.

தனியர் வகித்துவரும் உதவி செயற்பொறியாளர் பதவி வகுப்பு–2ன் கீழ்வருவதால் வயது முதிர்வு ஓய்வில் செல்ல அனுமதிக்க மன்றத்தின் ஒப்புதல் பெறப்பட வேண்டும்.

தனியர் மீது தனிப்பொறுப்பில் ரூ.2,22,415/–ற்கான தணிக்கைத்தடை நிலுவையிலுள்ளதாக நிதி ஆலோசகர் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதால், இத்தணிக்கைத்தடையை நீக்கம் செய்ய தவறும் பட்சத்தில் இத்தொகையை தனியரின் ஓய்வூதியப்பயன்களில் பிடித்தம் செய்துக்கொள்ளப்படும் என்ற நிபந்தனைக்குட்பட்டும், ஜூன் 2015ல் சட்டமன்ற பேரவை உறுப்பினருக்கான இடைத்தேர்தல் நடத்தை விதி முறை அமுலில் இருந்ததால் ஜூன் 2015ல் மன்றக்கூட்டம் நடைபெறாத நிலையில் மன்றத்தின் பின்னேற்பு அனுமதிக்குட்பட்டு, தனியரை 30.06.2015ல் வயது முதிர்வு ஓய்வில் செல்ல முதன்மைச்செயலர்/ஆணையர் பொ.து.ந.க.எண். ஈ1/26719/2015 நாள்.30.06.2015ன் வாயிலாக அனுமதித்து ஆணையிடப்பட்டது.

எனவே திரு கே. அமிர்தலிங்கம் உதவி செயற்பொறியாளர் கட்டடத்துறை அவர்கள் மீது கூட்டு பொறுப்பில் உள்ள தணிக்கை தடையில் தனியரின் தனிப்பொறுப்பிலுள்ள ரூ.2,22,415/– (ரூபாய் இரண்டு லட்சத்து இருபத்திரண்டாயிரத்து நானூற்றி பதினைந்து மட்டும்) நீக்கம் செய்ய தவறும் பட்சத்தில், இத்தொகையையும் மற்றும் மேற்கொள்ளப்படவிருக்கும் தணிக்கையில், சென்னை மாநகராட்சிக்கு நிதி இழப்பீடு ஏற்படுத்தும் தணிக்கை தடைகள் மற்றும் நேர் செய்யப்படாத முன்பணங்கள் ஏதேனும் நிலுவையில் இருப்பது பின்னர் தெரியவரின், அதற்கு தனியரை பொறுப்பாக்கி அதற்குண்டான தொகையினை தனியரின் பணிக்கொடை மற்றும் ஓய்வூதியம் மற்றும் ஓய்வூதிய அகவிலைப்படியில் பிடித்தம் செய்யப்படும் என்ற நிபந்தனைக்குட்பட்டும் மன்றத்தின் பின்னேற்பு அனுமதிக்குட்பட்டும் தனியரை 30.06.2015 பிற்பகல் முதல் வயது முதிர்வு ஓய்வில் செல்ல அனுமதி அளித்ததற்கு, நியமனக்குழு மூலமாக மன்றத்தின் பின்னேற்பு அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

"இதனை நியமனக்குழு பரிந்துரைத்து மன்றத்தின்
பின்னேற்பு அனுமதி வேண்டி சமர்ப்பிக்கின்றது."

"இதற்கு மன்றம் பின்னேற்பு அனுமதி அளிக்கின்றது"

****

பொ.து.ந.க.எண்.ஈ2/24173/2015

முதன்மை செயலர் மற்றும் ஆணையர் அவர்களின் 22.07.2015 நாளிட்ட குறிப்பு

தீர்மான எண்.390/2015 **பொருள் எண்.39**

வயது முதிர்வு ஓய்வு பின்னேற்பு அனுமதி

டாக்டர்.P.G.மணிமேகலை, மருத்துவ அலுவலர், இராயபுரம் மண்டலம் அவர்கள் சென்னை மாநகராட்சி, மாவட்ட குடும்ப நலத்துறையில் மருத்துவ அலுவலராக 14.11.2007 முதல் பணியில் சேர்ந்து இதுவரை பணிபுரிந்துள்ளார். இவருடைய பிறந்த தேதி 21.06.1957 வயது முதிர்வு ஓய்வு நாள்: 30.06.2015.

தனியர், மருத்துவ அலுவலர் பதவியில் நியமனக்குழு தீர்மானம் எண்.141/2011, நாள்: 14.11.2007ன்படி, 14.11.2007 முதல் பணிவரன்முறை படுத்தியும், 13.11.2009 பிற்பகல் முதல் தகுதிகாண் பருவம் முடித்தவராக அறிவித்தும் ஆணை வழங்கப்பட்டுள்ளது.

டாக்டர்.P.G.மணிமேகலை, மருத்துவ அலுவலர், இராயபுரம் மண்டலம், அவர்கள் மீது இன்றைய தேதி வரையில் சென்னை மாநகராட்சி விழிப்பு குழுமத்தில் விசாரணை ஏதும் நிலுவையில் இல்லை என்று விழிப்புத்துறையின் 03.06.2015 நாளிட்ட கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும், துறையில் கடந்த 5 ஆண்டுகளில் குற்றவியல்/ஒழுங்கு நடவடிக்கை ஏதுமில்லை எனவும், அன்னாரது சம்பள சான்றின்படி எவ்வித நீண்ட கால முன்பணம் ஏதும் பிடித்தம் செய்ய வேண்டியது இல்லை எனவும், சென்னை மாநகராட்சி, உள்ளிருப்பு குடியிருப்பு ஏதும் ஒதுக்கி தரப்படவில்லை எனவும், தெரிவித்து துணை திட்ட ஒருங்கிணைப்பாளரால் சான்றுகள் அளிக்கப்பட்டுள்ளது. மேலும் கூட்டுறவு சங்கக்கடன் ஏதும் நிலுவை இல்லை என்ற சான்றும் பெறப்பட்டுள்ளது.

தனியர் மீது தனிப்பட்ட முறையிலோ கூட்டு பொறுப்பிலோ நிதி இழப்பீடு இருப்பது தெரியவரின் தனியருக்கு வழங்கப்படவுள்ள ஓய்வூதிய பயன்/ஓய்வூதிய அகவிலைப்படியில் பிடித்தம் செய்து கொள்ள துறைத்தலைவர் முன்னிலையில் ரூ 20/– முத்திரை தாளில் சம்மதித்து ஒப்புதல் அளித்துள்ளார்.

தனியர் பணிபுரிந்த துறை/மண்டலங்களில் இருந்து தனியர் மீது தணிக்கை தடை, ஒழுங்கு நடவடிக்கை மற்றும் இழப்பீடுகள் ஏதும் நிலுவையில் இல்லை என சான்றுகள் பெறப்பட்டுள்ளது.

மேலும், நிதி ஆலோசகர் அவர்களின் 25.06.2015 நாளிட்ட அறிக்கையில், தனியர் மருத்துவ அலுவலராக மாவட்ட குடும்ப நலத்துறையில் பணிபுரிந்த காலங்களில் 2012–13ஆம் ஆண்டு முடியவுள்ள தணிக்கை அறிக்கை குறித்த பத்திகள், இவ்வலுவலகத்தில் உள்ள உள்ளாட்சி நிதி தணிக்கை அறிக்கைகளின்படி, 2008–09ஆம் ஆண்டு தணிக்கை தடை பத்தி எண்.22ல் நிலுவை தொகை ரூ.1,56,600/– கூட்டுப் பொறுப்பில் உள்ளதாகவும், அதில் தனியருக்கு மட்டும் உள்ள தொகை ரூ.2700/– நிலுவை எனவும், மேலும் 2013–14ஆம் ஆண்டு முதல் 2015–16ஆம் ஆண்டு வரை உள்ளாட்சி நிதி தணிக்கை துறையால் தணிக்கை அறிக்கைகள் வெளியிடப்படவில்லை எனவும், தனியருக்குண்டான இழப்புத் தொகை விவரங்கள் அறிய இயலாத நிலை உள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தனியர் வகித்து வரும் பதவி வகுப்பு 2ன் கீழ் வருவதால் தனியரை பணியிலிருந்து விடுவிக்கும் அதிகாரம் சென்னை மாநகராட்சி மன்றத்திற்கு பகிர்ந்தளிக்கப்பட்டுள்ளது.

டாக்டர்.P.G.மணிமேகலை, மருத்துவ அலுவலர், இராயபுரம் மண்டலம், அவர்கள் மீது தனிப்பொறுப்பில் நிலுவையில் உள்ள ரூ.2700/–ற்கான தணிக்கை தடையை நீக்கம் செய்ய தவறும்பட்சத்தில், இத்தொகையையும் மற்றும் நிதி சம்பந்தப்பட்ட தணிக்கை தடைகளால் மாநகராட்சிக்கு நிதி இழப்பீடு, நீண்ட கால முன் பணம் பெற்று தீர்வு செய்யப்படாமை ஆகிய காரணங்களால் நிதி இழப்பீடு ஏதேனும் நிலுவையில் இருப்பது பின்னர் தெரியவரின் அவைகளுக்கும் தனியரை பொறுப்பாக்கி அத்தொகைகளை பங்களிப்பு ஓய்வூதிய திட்டத்தின் கீழ் அவரது ஓய்வூதிய பயன்களிலிருந்து பிடித்தம் செய்யப்படும் என்ற நிபந்தனைகளுக்குட்பட்டும், மன்றத்தின் பின்னேற்புக்குட்பட்டும் தனியரை 30.06.2015 அன்று பிற்பகல் வயது முதிர்வு ஓய்வளித்து பணியிலிருந்து விடுவித்து 29.06.2015 நாளிட்ட செயல்முறை ஆணை பிறப்பிக்கப்பட்டது.

ஆகவே, டாக்டர்.P.G.மணிமேகலை, மருத்துவ அலுவலர், இராயபுரம் மண்டலம், அவர்கள் மீது தனிப்பொறுப்பில் நிலுவையில் உள்ள ரூ.2700/–ற்கான தணிக்கை தடையை நீக்கம் செய்ய தவறும்பட்சத்தில், இத்தொகையையும் மற்றும் நிதி சம்பந்தப்பட்ட தணிக்கை தடைகளால் மாநகராட்சிக்கு நிதி இழப்பீடு, நீண்ட கால முன் பணம் பெற்று தீர்வு செய்யப்படாமை ஆகிய காரணங்களால் நிதி இழப்பீடு ஏதேனும் நிலுவையில் இருப்பது பின்னர் தெரியவரின் அவைகளுக்கும் தனியரை பொறுப்பாக்கி அத்தொகைகளை பங்களிப்பு ஓய்வூதிய திட்டத்தின் கீழ் அவரது ஓய்வூதியம் மற்றும் ஓய்வூதிய அகவிலைப்படியிலிருந்து பிடித்தம் செய்யப்படும் என்ற நிபந்தனைகளுக்குட்பட்டும், மன்றத்தின் பின்னேற்புக்குட்பட்டும் தனியரை 30.06.2015 அன்று பிற்பகல் வயது முதிர்வு ஓய்வளித்து பணியிலிருந்து விடுவிக்கப்பட்ட நிகழ்வுக்கு நியமனக்குழு மூலமாக மன்றத்தின் பின்னேற்பு அனுமதி வேண்டப்படுகிறது.

"இதனை நியமனக்குழு பரிந்துரைத்து மன்றத்தின்
பின்னேற்பு அனுமதி வேண்டி சமர்ப்பிக்கின்றது."

"இதற்கு மன்றம் பின்னேற்பு அனுமதி அளிக்கின்றது"

****

பொ.து.ந.க.எண்.ஈ2/21719/2015
முதன்மை செயலர் மற்றும் ஆணையர் அவர்களின் 22.07.2015 நாளிட்ட குறிப்பு

தீர்மான எண்.391/2015 **பொருள் எண்.40**

வயது முதிர்வு ஓய்வு பின்னேற்பு அனுமதி

டாக்டர்.ஷெனாஸ் அக்தர், மருத்துவ அலுவலர், மண்டலம்–5 அவர்கள் சென்னை மாநகராட்சியில் மருத்துவ அலுவலராக 09.09.1988 அன்று பணியில் சேர்ந்து 31.05.2015 வரை பணிபுரிந்துள்ளார். தனியருடைய பிறந்த தேதி 11.05.1957 இதன்படி தனியரின் வயது முதிர்வு ஓய்வு நாள் 31.05.2015 ஆகும்.

தனியர் சென்னை மாநகராட்சியில் கீழ்கண்ட மண்டலம் / துறைகளில் பணிபுரிந்துள்ளார்.

வ. எண்.	பதவியின் பெயர்	பணிபுரிந்த மண்டலம் மற்றும் துறைகளின் பெயர்	பணிபுரிந்த காலம்	
			முதல்	வரை
1.	மருத்துவ அலுவலர்	மண்டலம்–6 (பழைய மண்டலம்–3)	09.09.1988	22.05.1992
2.	மருத்துவ அலுவலர்	மண்டலம்–9 (பழைய மண்டலம்–6)	23.05.1992	30.09.2011
3.	மருத்துவ அலுவலர்	மண்டலம்–5 (பழைய மண்டலம்–2)	01.10.2011	31.05.2015

தனியருக்கு மருத்துவ அலுவலர் பதவியில் அரசாணை (2ப) எண்.85, ந.நி.ம.கு.வ. (மா.ந.3) துறை, நாள்:02.07.1998ன்படி, உறுதியாக்கம் செய்து ஆணையிடப்பட்டுள்ளது. மேலும் மன்றத்தீர்மானம் எண்.301/2004, நாள்:30.09.2004ன்படி, மருத்துவ அலுவலர் பதவியில் 09.09.1990 முதல் தகுதிகாண் பருவம் முடித்தவராக அறிவிக்கப்பட்டுள்ளது.

டாக்டர்.ஷெனாஸ் அக்தர், மருத்துவ அலுவலர், மண்டலம்–5, அவர்கள் மீது இன்றைய தேதி வரையில் சென்னை மாநகராட்சி விழிப்பு குழுமத்தில் விசாரணை ஏதும் நிலுவையில் இல்லை என்று விழிப்புத்துறையின் 26.05.2015 நாளிட்ட கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும், தனியர் மீது துறை சார்ந்த ஒழுங்கு நடவடிக்கைகள் ஏதும் நிலுவையில் இல்லை என வடக்கு வட்டார துணை ஆணையர் அவர்களின் 19.05.2015 நாளிட்ட கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது. மேலும் தனியர் கூட்டுறவு சங்கத்தில் உறுப்பினர் இல்லை என்ற சான்றும் பெறப்பட்டுள்ளது.

தனியர் பணிபுரிந்த துறை / மண்டலங்களிலிருந்து தணிக்கை தடைகள் மற்றும் ஒழுங்கு நடவடிக்கைகள் ஏதும் நிலுவையில் இல்லை என சான்றுகள் வழங்கப்பட்டுள்ளது.

தனியரின் பணிப்பதிவேடு முன்தணிக்கை மேற்கொள்வதற்காக உள்ளாட்சி நிதி தணிக்கை துறைக்கு அனுப்பப்பட்டு உள்ளாட்சி நிதித் தணிக்கைத் துறை நி.மு.எண்.எ41/1029/2015, நாள்:08.04.2015ன்படி சான்று பெறப்பட்டுள்ளது.

தனியர் 23.05.1992 முதல் 30.09.2011 வரை (பழைய மண்டலம்–6) புதிய மண்டலம்–9ல் பணிபுரிந்த காலத்தில் தனியரை பொறுப்பாக்கும் தணிக்கை தடை (1998–1999 பத்தி எண்.108) நிலுவையில் இருப்பதாக மண்டல அலுவலர், மண்டலம்–9 அவர்களின் 21.05.2015 நாளிட்ட அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தனியர் 01.10.2011 முதல் இதுநாள் வரை மண்டலம்–5ல் பணிபுரிந்த காலத்தில் தணிக்கை அறிக்கை மற்றும் தணிக்கை குறிப்பு புத்தகங்கள் உள்ளாட்சி தணிக்கைத் துறையிடமிருந்து அளிக்கப்படவில்லை என மண்டல அலுவலர்–5 அவர்களின் 18.05.2015 நாளிட்ட குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தனியர் வகித்து வரும் பதவி வகுப்பு 2ன் கீழ் வருவதால் தனியரை பணியிலிருந்து விடுவிக்கும் அதிகாரம் சென்னை மாநகராட்சி மன்றத்திற்கு பகிர்ந்தளிக்கப்பட்டுள்ளது.

டாக்டர்.ஷெனாஸ் அக்தர், மருத்துவ அலுவலர், மண்டலம்–5, அவர்கள் மீது நிலுவையில் உள்ள 1998–1999ஆம் ஆண்டிற்கான தணிக்கை அறிக்கை பத்தி எண்.108ல் குறிப்பிடப்பட்டுள்ள தணிக்கை தடையை நீக்கம் செய்ய தவறும்பட்சத்தில் தணிக்கை தடையில் குறிப்பிடப்பட்டுள்ள தொகையையும் மற்றும் நிதி சம்பந்தப்பட்ட தணிக்கை தடைகளால் மாநகராட்சிக்கு நிதி இழப்பீடு, நீண்ட கால முன் பணம் பெற்று தீர்வு செய்யப்படாமை ஆகிய காரணங்களால் நிதி இழப்பீடு ஏதேனும் நிலுவையில் இருப்பது பின்னர் தெரியவரின் அவைகளுக்கு தனியரை பொறுப்பாக்கி அத்தொகைகளை அவரது ஓய்வூதிய பயன்களிலிருந்து பிடித்தம் செய்யப்படும் என்ற நிபந்தனைகளுக்குட்பட்டும், மன்றத்தின் பின்னேற்பு அனுமதிக்குட்பட்டும், தனியரை 31.05.2015 அன்று பிற்பகல் வயது முதிர்வு ஓய்வளித்து பணியிலிருந்து விடுவித்து 29.05.2015 நாளிட்ட செயல் முறை ஆணை பிறப்பிக்கப்பட்டது.

ஆகவே, டாக்டர்.ஷெனாஸ் அக்தர், மருத்துவ அலுவலர், மண்டலம்–5, அவர்கள் மீது நிலுவையில் உள்ள 1998–1999ஆம் ஆண்டிற்கான தணிக்கை அறிக்கை பத்தி எண்.108ல் குறிப்பிடப்பட்டுள்ள தணிக்கை தடையை நீக்கம் செய்ய தவறும்பட்சத்தில் தணிக்கை தடையில் குறிப்பிடப்பட்டுள்ள தொகையையும் மற்றும் நிதி சம்பந்தப்பட்ட தணிக்கை தடைகளால் மாநகராட்சிக்கு நிதி இழப்பீடு, நீண்ட கால முன் பணம் பெற்று தீர்வு செய்யப்படாமை ஆகிய காரணங்களால் நிதி இழப்பீடு ஏதேனும் நிலுவையில் இருப்பது பின்னர் தெரியவரின் அவைகளுக்கு தனியரை பொறுப்பாக்கி அத்தொகைகளை அவரது ஓய்வூதியம் மற்றும் ஓய்வூதிய அகவிலைப்படியிலிருந்து பிடித்தம் செய்யப்படும் என்ற நிபந்தனைகளுக்குட்பட்டும், மன்றத்தின் பின்னேற்பு அனுமதிக்குட்பட்டும், தனியரை 31.05.2015 அன்று பிற்பகல் வயது முதிர்வு ஓய்வளித்து பணியிலிருந்து விடுவிக்கப்பட்ட நிகழ்விற்கு நியமனக்குழு மூலமாக மன்றத்தின் பின்னேற்பு அனுமதி வேண்டப்படுகிறது.

''இதனை நியமனக்குழு பரிந்துரைத்து மன்றத்தின்
பின்னேற்பு அனுமதி வேண்டி சமர்ப்பிக்கின்றது.''

''இதற்கு மன்றம் பின்னேற்பு அனுமதி அளிக்கின்றது''

****

பொ.து.ந.க.எண்.ஈ2/24976/2015
முதன்மை செயலர் மற்றும் ஆணையர் அவர்களின் 22.07.2015 நாளிட்ட குறிப்பு

தீர்மான எண்.392/2015 **பொருள் எண்.41**

வயது முதிர்வு ஓய்வு பின்னேற்பு அனுமதி

டாக்டர்.S.மணியம்மை, மண்டல மருத்துவ அலுவலர், அடையாறு மண்டலம் அவர்கள் மருத்துவ அலுவலராக 17.10.1988 முதல் பணியில் சேர்ந்து, திருவொற்றியூர் நகராட்சியில் 17.10.1988 முதல் 04.09.1989 வரையிலும், கடலூர் பெருநகராட்சியில் 05.09.1989 முதல் 16.09.1991 வரையிலும், பின்னர் திருவொற்றியூர் நகராட்சியில் 16.09.1991 முதல் 16.05.1997 வரையிலும், ஆலந்தூர் நகராட்சியில் 23.05.1997 முதல் 13.10.2012 வரையிலும், பின்னர் ஆலந்தூர் நகராட்சி சென்னை மாநகராட்சி எல்லையுடன் இணைக்கப்பட்ட 14.10.2012 முதல் 24.08.2014 வரை சென்னை மாநகராட்சி, மாவட்ட குடும்ப நலத்துறையில் ஆலந்தூர் மண்டலத்திலும், பின்னர் மண்டல மருத்துவ அலுவலராக பதவி உயர்வு பெற்று 25.08.2014 முதல் இன்று வரை அடையாறு மண்டலத்திலும், பணிபுரிந்துள்ளார். இவருடைய பிறந்த தேதி 10.06.1957 வயது முதிர்வு ஓய்வு நாள்: 30.06.2015.

தனியர், மருத்துவ அலுவலர் பதவியில் மூ.மு.2771/93 சி1, நாள்: 28.12.1993இன்படி, 30.10.1991ம் தேதி பிற்பகல் முதல் தகுதிகாண் பருவம் முடித்தவராக அறிவித்து ஆணை வழங்கப்பட்டுள்ளது.

டாக்டர்.S.மணியம்மை, மண்டல மருத்துவ அலுவலர், அடையாறு மண்டலம், அவர்கள் மீது இன்றைய தேதி வரையில் சென்னை மாநகராட்சி விழிப்பு குழுமத்தில் விசாரணை ஏதும் நிலுவையில் இல்லை என்று விழிப்புத்துறையின் 03.06.2015 நாளிட்ட கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் துறையில் கடந்த 5 ஆண்டுகளில் குற்றவியல்/ஒழுங்கு நடவடிக்கை ஏதுமில்லை எனவும், அன்னாரது சம்பள சான்றின்படி எவ்வித நீண்ட கால முன்பணம் ஏதும் பிடித்தம் செய்ய வேண்டியது இல்லை எனவும், சென்னை மாநகராட்சி, உள்ளிருப்பு குடியிருப்பு ஏதும் ஒதுக்கி தரப்படவில்லை எனவும், தெரிவித்து துணை திட்ட ஒருங்கிணைப்பாளரால் சான்றுகள் அளிக்கப்பட்டுள்ளது. மேலும் கூட்டுறவு சங்கத்தில் உறுப்பினர் இல்லை என்ற சான்றும் பெறப்பட்டுள்ளது.

தனியர் மீது தனிப்பட்ட முறையிலோ கூட்டு பொறுப்பிலோ நிதி இழப்பீடு இருப்பது தெரியவரின் தனியருக்கு வழங்கப்படவுள்ள ஓய்வூதிய பயன்/ஓய்வூதிய அகவிலைப்படியில் பிடித்தம் செய்து கொள்ள துறைதலைவர் முன்னிலையில் ரூ.20/– முத்திரை தாளில் சம்மதித்து ஒப்புதல் அளித்துள்ளார்.

தனியர் பணிபுரிந்த துறை/மண்டலங்களில் இருந்து தனியர் மீது தணிக்கை தடை, ஒழுங்கு நடவடிக்கை மற்றும் இழப்பீடுகள் ஏதும் நிலுவையில் இல்லை என சான்றுகள் பெறப்பட்டுள்ளது.

மேலும், நிதி ஆலோசகர் அவர்களின் 29.06.2015 நாளிட்ட அறிக்கையில் சென்னை மாநகராட்சியுடன் 25.10.2011 முதல் இணைக்கப்பட்ட திருவொற்றியூர் மண்டலம் தொடாபாக தணிக்கை அறிக்கைகளில் 1988–89, 1992–93, 1993–94, 1995–96 மற்றும் 1996–97 ஆகிய ஆண்டுக்கான இவ்வலுவலக தணிக்கை அறிக்கை குறித்த பத்திகள் அன்னாரை பொறுப்பாக்கும் தணிக்கை தடை பத்திகள் நிலுவை இல்லை எனவும், மேற்கண்ட தணிக்கை அறிக்கைகள் தவிர மற்ற தணிக்கை அறிக்கைகள் பெறப்படவில்லை எனவும், பணியாளர், ஆலந்தூர் மண்டலத்தில் 23.05.1997 முதல் 31.03.2015 வரை பணியாற்றிய காலங்களில், 2011–12 தணிக்கை அறிக்கை தவிர மற்ற தணிக்கை அறிக்கைகள் இவ்வலுவலகத்தில் பெறப்படவில்லை எனவும், 2011–12ஆம் ஆண்டு தணிக்கை அறிக்கை இவ்வலுவலகத்தில் பெறப்பட்டு ஆய்வு செய்யப்பட்டதில் தனியரை பொறுப்பாக்கும் தணிக்கை தடை பத்திகள் நிலுவை ஏதும் இல்லை எனவும், அடையாறு மண்டலத்தில் 01.04.2015 முதல் 30.06.2015 வரை பணியாற்றியுள்ளதாகவும், மேலும், 2012–13 முதல் 2015–16 வரை உள்ளாட்சி நிதி தணிக்கைத் துறையால் தணிக்கை அறிக்கைகள் வெளியிடப்படவில்லை எனவும், தணிக்கை அறிக்கைகள் வெளியிடப்பட்ட பின்னர் தனியரை பொறுப்பாக்கும் தணிக்கை தடை பத்திகள் நிலுவை இருப்பின், அதன் பொறுப்பு பணியாளரையே சாரும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தனியர் வகித்து வரும் பதவி வகுப்பு 2ன் கீழ் வருவதால் தனியரை பணியிலிருந்து விடுவிக்கும் அதிகாரம் சென்னை மாநகராட்சி மன்றத்திற்கு பகிர்ந்தளிக்கப்பட்டுள்ளது.

டாக்டர்.S.மணியம்மை, மண்டல மருத்துவ அலுவலர், அடையாறு மண்டலம், அவர்கள் மீது நிதி சம்பந்தப்பட்ட தணிக்கை தடைகளால் மாநகராட்சிக்கு நிதி இழப்பீடு, நீண்ட கால முன் பணம் பெற்று தீர்வு செய்யப்படாமை ஆகிய காரணங்களால் நிதி இழப்பீடு ஏதேனும் நிலுவையில் இருப்பது பின்னர் தெரியவரின் அவைகளுக்கு தனியரை பொறுப்பாக்கி அத்தொகைகளை அவரது ஓய்வூதியம் மற்றும் அகவிலைப்படியிலிருந்து பிடித்தம் செய்யப்படும் என்ற நிபந்தனைகளுக்குட்பட்டும், மன்றத்தின் பின்னேற்புக்குட்பட்டும் தனியரை 30.06.2015 அன்று பிற்பகல் வயது முதிர்வு ஓய்வளித்து பணியிலிருந்து விடுவித்து 30.06.2015 நாளிட்ட செயல்முறை ஆணை பிறப்பிக்கப்பட்டது.

ஆகவே, டாக்டர்.S.மணியம்மை, மண்டல மருத்துவ அலுவலர், அடையாறு மண்டலம், அவர்களை மன்றத்தின் பின்னேற்புக்குட்பட்டு 30.06.2015 அன்று பிற்பகல் வயது முதிர்வு ஓய்வளித்து பணியிலிருந்து விடுவிக்கப்பட்ட நிகழ்வுக்கு நியமனக்குழு மூலமாக மன்றத்தின் பின்னேற்பு அனுமதி வேண்டப்படுகிறது.

"இதனை நியமனக்குழு பரிந்துரைத்து மன்றத்தின்
பின்னேற்பு அனுமதி வேண்டி சமர்ப்பிக்கின்றது."

"இதற்கு மன்றம் பின்னேற்பு அனுமதி அளிக்கின்றது"

****

பொ.து.ந.க.எண்.ஈ2/24172/2015

முதன்மை செயலர் மற்றும் ஆணையர் அவர்களின் 22.07.2015 நாளிட்ட குறிப்பு

தீர்மான எண்.393/2015 **பொருள் எண்.42**

வயது முதிர்வு ஓய்வு பின்னேற்பு அனுமதி

டாக்டர்.B.மணிமேகலை, மருத்துவ அலுவலர், ஆலந்தூர் மண்டலம் அவர்கள் மருத்துவ அலுவலராக 15.11.1989 முதல் பணியில் சேர்ந்து, திருவண்ணாமலை நகராட்சியில் 15.11.1989 முதல் 22.05.1992 வரையிலும், ஆவடி பெருநகராட்சியில் 29.05.1992 முதல் 22.05.1997 வரையிலும், 23.05.1997 முதல் ஆலந்தூர் நகராட்சியிலும் பின்னர் ஆலந்தூர் நகராட்சி சென்னை மாநகராட்சியில் இணைக்கப்பட்டது முதல் இன்று வரையிலும், சென்னை மாநகராட்சி, மாவட்ட குடும்ப நலத்துறையில் பணிபுரிந்துள்ளார். இவருடைய பிறந்த தேதி 30.06.1957 வயது முதிர்வு ஓய்வு நாள்: 30.06.2015.

தனியர், மருத்துவ அலுவலர் பதவியில் ந.க.556/97/ஜே, நாள்: 18.03.1997இன்படி, 14.11.1991ம் தேதி பிற்பகல் முதல் தகுதிகாண் பருவம் முடித்தவராக அறிவித்து ஆணை வழங்கப்பட்டுள்ளது.

டாக்டர்.B.மணிமேகலை, மருத்துவ அலுவலர், ஆலந்தூர் மண்டலம், அவர்கள் மீது இன்றைய தேதி வரையில் சென்னை மாநகராட்சி விழிப்பு குழுமத்தில் விசாரணை ஏதும் நிலுவையில் இல்லை என்று விழிப்புத்துறையின் 03.06.2015 நாளிட்ட கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் துறையில் கடந்த 5 ஆண்டுகளில் குற்றவியல்/ஒழுங்கு நடவடிக்கை ஏதுமில்லை எனவும், அன்னாரது சம்பள சான்றின்படி எவ்வித நீண்ட கால முன்பணம் ஏதும் பிடித்தம் செய்ய வேண்டியது இல்லை எனவும், சென்னை மாநகராட்சி, உள்ளிருப்பு குடியிருப்பு ஏதும் ஒதுக்கி தரப்படவில்லை எனவும், தெரிவித்து துணை திட்ட ஒருங்கிணைப்பாளரால் சான்றுகள் அளிக்கப்பட்டுள்ளது. மேலும் கூட்டுறவு சங்கத்தில் உறுப்பினர் இல்லை என்ற சான்றும் பெறப்பட்டுள்ளது.

தனியர் மீது தனிப்பட்ட முறையிலோ கூட்டு பொறுப்பிலோ நிதி இழப்பீடு இருப்பது தெரியவரின் தனியருக்கு வழங்கப்படவுள்ள ஓய்வூதிய பயன்/ஓய்வூதிய அகவிலைப்படியில் பிடித்தம் செய்து கொள்ள துறைதலைவர் முன்னிலையில் ரூ.20/– முத்திரை தாளில் சம்மதித்து ஒப்புதல் அளித்துள்ளார்.

தனியர் பணிபுரிந்த துறை/மண்டலங்களில் இருந்து தனியர் மீது தணிக்கை தடை, ஒழுங்கு நடவடிக்கை மற்றும் இழப்பீடுகள் ஏதும் நிலுவையில் இல்லை என சான்றுகள் பெறப்பட்டுள்ளது.

மேலும், நிதி ஆலோசகர் அவர்களின் 25.06.2015 நாளிட்ட அறிக்கையில் சென்னை மாநகராட்சியுடன் 25.10.2011 முதல் இணைக்கப்பட்ட ஆலந்தூர் மண்டலம் தொடர்பான தணிக்கை அறிக்கைகளில் 2011–12 ஆம் ஆண்டு தணிக்கை அறிக்கைகளை தவிர மற்ற தணிக்கை அறிக்கைகள் இவ்வலுவலகத்தில் பெறப்படாததால், தனியர் ஆலந்தூர் மண்டலத்தில் 23.05.1997 முதல் இன்று வரை பணிபுரிந்த காலங்களில் அன்னாரை பொறுப்பாக்கும் தணிக்கை அறிக்கை குறித்த பத்திகள் விவரங்கள் கண்டறிய இயலாத நிலையில் உள்ளதாகவும், தற்போது ஆலந்தூர் மண்டலத்தில் 2011–12 தணிக்கை அறிக்கைகளை ஆய்வு செய்யப்பட்டதில் தனியரை பொறுப்பாக்கும் தணிக்கை தடை பத்திகள் நிலுவை ஏதும் இல்லை எனவும், மேலும், 2012–13 முதல் 2015–16 வரை உள்ளாட்சி நிதி தணிக்கை துறையால் தணிக்கை அறிக்கைகள் வெளியிடப்படவில்லை எனவும், தணிக்கை அறிக்கைகள் வெளியிடப்பட்ட பின்னர் தனியரை பொறுப்பாக்கும் தணிக்கை தடை பத்திகள் நிலுவை இருப்பின் அதன் பொறுப்பு பணியாளரையே சாரும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தனியர் வகித்து வரும் பதவி வகுப்பு 2ன் கீழ் வருவதால் தனியரை பணியிலிருந்து விடுவிக்கும் அதிகாரம் சென்னை மாநகராட்சி மன்றத்திற்கு பகிர்ந்தளிக்கப்பட்டுள்ளது.

டாக்டர்.B.மணிமேகலை, மருத்துவ அலுவலர், ஆலந்தூர் மண்டலம், அவர்கள் மீது நிதி சம்பந்தப்பட்ட தணிக்கை தடைகளால் மாநகராட்சிக்கு நிதி இழப்பீடு, நீண்ட கால முன் பணம் பெற்று தீர்வு செய்யப்படாமை ஆகிய காரணங்களால் நிதி இழப்பீடு ஏதேனும் நிலுவையில் இருப்பது பின்னர் தெரியவரின் அவைகளுக்கு தனியரை பொறுப்பாக்கி அத்தொகைகளை அவரது ஓய்வூதியம் மற்றும் அகவிலைப்படியிலிருந்து பிடித்தம் செய்யப்படும் என்ற நிபந்தனைகளுக்குட்பட்டும், மன்றத்தின் பின்னேற்புக்குட்பட்டும் தனியரை 30.06.2015 அன்று பிற்பகல் வயது முதிர்வு ஓய்வளித்து பணியிலிருந்து விடுவித்து 29.06.2015 நாளிட்ட செயல் முறை ஆணை பிறப்பிக்கப்பட்டது.

ஆகவே, டாக்டர்.B.மணிமேகலை, மருத்துவ அலுவலர், ஆலந்தூர் மண்டலம், அவர்களை மன்றத்தின் பின்னேற்புக்குட்பட்டு **30.06.2015** அன்று பிற்பகல் வயது முதிர்வு ஓய்வளித்து பணியிலிருந்து விடுவிக்கப்பட்ட நிகழ்வுக்கு நியமனக்குழு மூலமாக மன்றத்தின் பின்னேற்பு அனுமதி வேண்டப்படுகிறது.

"இதனை நியமனக்குழு பரிந்துரைத்து மன்றத்தின்
பின்னேற்பு அனுமதி வேண்டி சமர்ப்பிக்கின்றது."

"இதற்கு மன்றம் பின்னேற்பு அனுமதி அளிக்கின்றது"
****

ப.து.ந.க.எண்.0159/2015

முதன்மை செயலர் / ஆணையர் அவர்களின் 28.07.2015 நாளிட்ட குறிப்பு

தீர்மான எண்.394/2015 **பொருள் எண்.43**

தானபத்திரம்

மண்டலம்–10, வார்டு–135ல் திரு.A.சலீம் பாட்ஷா மற்றும் திருமதி.S. உம்மாள் பூஹாரி அவர்கள் கதவு எண்.52, பிருந்தாவன் சாலை, மேற்கு மாம்பலம், சென்னை T.S.No.23/1, Block No.50, புலியூர் கிராமத்தில் அமைந்துள்ள இடத்திற்கு திட்ட மற்றும் கட்டட அனுமதி வேண்டி சென்னை மாநகராட்சி, மத்திய வட்டார அலுவலகத்தில் விண்ணப்பித்துள்ளார். அவர் திட்ட மற்றும் கட்டட அனுமதி வேண்டி விண்ணப்பித்த இடத்தை ஒட்டிய சாலை "சென்னை முழுமை வளர்ச்சித் திட்டம் II" ன் படி பிருந்தாவன் சாலை 18மீ சாலையாக விரிவாக்கம் செய்யப்பட வேண்டும். சென்னை பெருநகர வளர்ச்சி குழுமத்தின் விதிகளின்படி சாலை விரிவாக்கத்திற்கு நிலத்தினை தான பத்திரம் மூலம் உள்ளாட்சி அமைப்புகளிடம் ஒப்படைத்த பிறகு தான் திட்ட அனுமதி வழங்க இயலும். எனவே திரு.A.சலீம் பாட்ஷா மற்றும் திருமதி.S.உம்மாள் பூஹாரி, மனை உரிமையாளர் அவர்கள் தங்களிடத்திலிருந்து சாலை விரிவாக்கம் செய்ய வேண்டி (5.02மீ x 3.12மீ) 15.67 ச.மீ நிலத்தினை சென்னை மாநகராட்சிக்கு தானபத்திரம் மூலம் வழங்க சம்மதித்துள்ளார்.

மத்திய வட்டார துணை ஆணையாளர் அவர்கள், மேற்கண்ட விவரங்களுடன் பணித் துறைக்கு மேல் நடவடிக்கைகாக அனுப்பியுள்ளார்.

இந்நிலத்தினை சென்னை மாநகராட்சி எடுத்துக் கொள்ளலாம் என்று கருதப்படுகிறது.

எனவே,

(1) மனை உரிமையாளர் திரு.A.சலீம் பாட்ஷா மற்றும் திருமதி.S.உம்மாள் பூஹாரி கதவு எண்.52 பிருந்தாவன் சாலை மேற்கு மாம்பலம், சென்னை T.S.No.23/1, Block No.50, புலியூர் கிராமம் பகுதியில் உள்ள 15.67 ச.மீ நிலத்தினை சென்னை மாநகராட்சி சாலை விரிவாக்கத்திற்கு தானமாக பெற்றுக் கொள்ளவும்,

(2) தானமாக வழங்கப்பட்ட பகுதியில் சாலை விரிவாக்கப் பணிகளை மேற்கொள்ள செவாகும் செலவீனம் ரூ.26,500/– யை **"ஆணையர் சென்னை மாநகராட்சி"** என்ற பெயரில் வரைவு காசோலையாக விண்ணப்பதாரரிடம் இருந்து பெற்று கொள்ளவும்,

(3) தானமாக வழங்கிய நிலத்திற்கு தளப்பரப்பு குறியீடு (FSI) உபயோகப்படுத்தாததால் நிலத்தின் உரிமையாளருக்கு தானமாக பெறப்படும் இடத்திற்கு "வளர்ச்சி உரிமை சான்றிதழ்" சென்னை பெருநகர் வளர்ச்சி குழுமத்தின் மூலம் வழங்க வேண்டி பரிந்துரைப்பதற்கும்,

மேற்கண்ட 1 முதல் 3 வரை உள்ள இனங்களுக்கு நிலைக்குழு(நகரமைப்பு)வின் மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

"ஏற்கனவே நிலைக்குழு (நகரமைப்பு) கூட்டம் 15.07.2015 அன்று முடிவடைந்த நிலையில் இப்பொருளின் அவசரம் மற்றும் அவசியத்தன்மையை கருத்தில் கொண்டு 03.08.2015 அன்று தீர்மான எண்.25/2015ன்படி இதற்கு நிலைக்குழு(நகரமைப்பு) சுற்றின் மூலம் பெரும்பான்மை உறுப்பினர்களின் பரிந்துரையை பெற்று மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது ".

"இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது"

****

க.து.ந.க.எண்.இ2/10129/2015

முதன்மை செயலர் / ஆணையர் அவர்களின் 28.07.2015 நாளிட்ட குறிப்பு

தீர்மான எண்.395/2015 **பொருள் எண்.44**

கல்வித் துறை – சென்னை மழலையர் பள்ளிகளில் பயிலும் மாணவர்களின் நலனுக்காக கற்றல், கற்பித்தல், போன்ற பள்ளி சார் பணிகளில் ஏற்படும் தேவைகளை பூர்த்தி செய்திட மேலும் மேம்படுத்திட அந்தந்தப் பள்ளி தலைமையாசிரியரே மேற்கொள்ள அனுமதி – தலைமையாசிரியர்களுக்குத் தேவைப்படும் நிதியை கல்வி அலுவலர் மூலம் நேரடியாக வழங்க அனுமதி

சென்னை மாநகராட்சி கல்வித்துறையின் கீழ் இயங்கும் சென்னை தொடக்க/ நடுநிலைப்பள்ளிகளில் 2012–2013 ம் கல்வியாண்டில் 30 மழலையர் வகுப்புகள் இயங்கி வந்தது. 2013–2014ம் கல்வியாண்டில் கூடுதலாக 10 மழலையர் பள்ளிகள் விரிவாக்கம் செய்யப்பட்டது. அதனை தொடர்ந்து 2014–2015 ம் கல்வியாண்டில் 25 மழலையர் பள்ளிகளும் தொடங்கப்பட்டது. மேலும், புதிதாக 2015–2016 ம் கல்வியாண்டில் 100 மழலையர் வகுப்புகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. தற்சமயம் சென்னை மாநகராட்சி கல்வித்துறையில் 165 மழலையர் பள்ளிகள் செயல்பட்டு வருகிறது.

மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி, சென்னை மழலையர் பள்ளிகளில் கற்றல், கற்பித்தல் போன்ற பணிகள் சீரும் சிறப்புடனும் செயல்பட்டு வருவதுடன் நம் பள்ளிகளில் கடந்த கல்வி ஆண்டைவிட சுமார் 4000 மாணவர்கள் அதிகரித்து 01.07.2015ன் நிலவரப்படி 9020க்கும் மேல் மாணவர்கள் சேர்ந்துள்ளனர். இதனால் நம் சென்னை பள்ளிகளில் மாணவர்களின் எண்ணிக்கை கடந்த ஆண்டை விட அதிகரித்துள்ளது.

ஆகவே, மழலையர் பள்ளி மாணவர்களின் நலனுக்காக கற்றல், கற்பித்தல் போன்ற பள்ளிசார் பணிகளில் ஏற்படும் தேவைகள் மற்றும் அப்பள்ளியின் செயல்பாடுகளை மேம்படுத்திட அந்தந்தப் பள்ளி தலைமையாசிரியரே ஜூன்–2015 முதல் மார்ச்–2016 வரை (10 மாதங்கள்) ஆகும் செலவுகளை மேற்கொள்ள அவர்களுக்கு நேரடியாக தேவைப்படும் நிதியை அளிக்கலாம் என ஆலோசிக்கப்பட்டுள்ளது.

எனவே,

1. சென்னை மழலையர் பள்ளிகளில் நடைப்பெறும் கற்றல் பணி, கற்பித்தல் பணிகளில் ஏற்படும் பள்ளிசார் தேவைகளை சந்தித்திட, மேலும் மேம்படுத்திட மாணவ/மாணவியர்களின் நலனுக்காக பள்ளியின் தலைமையாசிரியரே ஜூன்–2015 மாதம் முதல் மார்ச்–2016 வரை நேரடியாக மேற்கொள்ள அனுமதியும்,
2. இப்பணியை மேற்கொள்வதற்காக பள்ளியின் தலைமையாசிரியர்களுக்குத் தேவைப்படும் நிதியை அந்தந்த பள்ளி தலைமை ஆசிரியர்களுக்கு கல்வி அலுவலர் மூலம் நேரடியாக வழங்க அனுமதியும்,
3. இச்செலவினங்களுக்காக 200 ஆசிரியருக்கு ரூ. 8000/- வீதமும், 200 ஆயாக்களுக்கு ரூ.3000/- வீதமும், 10–மாதத்திற்கு ரூ.2,20,00,000/- (ரூபாய் இரண்டு கோடியே இருபது இலட்சம் மட்டும்) வழங்க அனுமதியும்,
4. இத்தொகையை தொடக்க கல்வி நிதி கணக்கு குறியீடு எண்.80–82–06, 230–11–02–02 கல்வி செலவினங்கள் என்பதில் கூடுதல் நிதியாக ரூ.2.00கோடியினை அளிக்கவும்,

மேற்கண்ட 1 முதல் 4 வரை உள்ள இனங்களுக்கு நிலைக்குழு (கல்வி) மற்றும் நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி)வின் மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

"ஏற்கனவே நிலைக்குழு (கல்வி) கூட்டம் 20.07.2015 அன்று முடிவடைந்த நிலையில் இப்பொருளின் அவசரம் மற்றும் அவசியத்தன்மையை கருத்தில் கொண்டு 03.08.2015 அன்று தீர்மான எண்.20/2015ன்படி இதற்கு நிலைக்குழு(கல்வி) சுற்றின் மூலம் பெரும்பான்மை உறுப்பினர்களின் பரிந்துரையை பெற்று நிலைக்குழு (வ.வி.ம.நி)வின் மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது ".

"ஏற்கனவே நிலைக்குழு (வ.வி.ம.நி) வின் கூட்டம் 24.07.2015 அன்று முடிவடைந்த நிலையில் இப்பொருளின் அவசரம் மற்றும் அவசியத்தன்மையை கருத்தில் கொண்டு 03.08.2015 அன்று தீர்மான எண்.211/2015ன்படி இதற்கு நிலைக்குழு (வ.வி.ம.நி)வின் சுற்றின் மூலம் பெரும்பான்மை உறுப்பினர்களின் பரிந்துரையை பெற்று மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது ".

"இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது"

****

சு.து.ந.க.எண்.பி1/4026/2015

முதன்மை செயலர் மற்றும் ஆணையர் அவர்களின் 29.07.2015 நாளிட்ட குறிப்பு

தீர்மான எண்.396/2015 **பொருள் எண்.45**

பொதுசுகாதாரத்துறை– மாவட்ட நல சங்கத்தின் கீழ் திருத்திய தேசிய காசநோய் கட்டுப்பாடு திட்டத்தின் (RNTCP) கீழ் காச நோயாளிகளுக்கு இலவசமாக மருத்துவ சிகிச்சை அளித்தல் – மற்ற மாவட்டங்களில் விவசாயிகள் நல திட்டம் மூலம் காசநோயாளிகளுக்கு மாதம் ரூபாய் 1000/– வழங்கப்படுவது போல் – சென்னை மாநகராட்சியில் எம்.டி.ஆர் மற்றும் எக்ஸ்.டி.ஆர் காசநோயாளிகளுக்கு இந்நலதிட்டத்தை செயல்படுத்த மன்றத்தின் அனுமதி

மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களின் ஆணைப்படி மற்ற மாவட்டங்களில் 2012ஆம் ஆண்டு முதல் காசநோயால் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு ஊக்கத் தொகையாக மாதந்தோறும் ரூ.1000/ வழங்கப்பட்டுவருவது போல சென்னை மாநகராட்சியிலுள்ள எம்.டி.ஆர். மற்றும் எக்ஸ்.டி.ஆர் காசநோயளிகள் அனைவருக்கும் மாதந்தோறும் ரூ.1000/–ம் ஊக்கத் தொகையாக வழங்க தெரிவிக்கப்பட்டுள்ளது.

சென்னை மாநகரில் வாழும் ஏழை எளிய மக்களுக்கு இலவசமாக மருத்துவ சேவைகள் அளிக்கும் வகையில் திருத்திய தேசிய காச நோய் கட்டுப்பாடு திட்டத்தின் கீழ் அனைத்து காசநோயாளிகளுக்கும் நேரடி பார்வையில் டாட்ஸ் மருந்துகள் வழங்கப்படுகிறது.

எம்.டி.ஆர் காசநோயளிகளுக்கு 2 வருடங்களுக்கு தினந்தோறும் மருந்துகள் வழங்கப்படுகிறது. இந்த சிகிச்சை கால கட்டத்தில் பெரும்பாலான நோயாளிகள் நோயின் தாக்கத்தால் வேலைக்கு செல்ல முடியாக சூழ்நிலை ஏற்படுகிறது. இதனால் நோயாளிகளின் குடும்ப பொருளாதாரம் பாதிக்கப்பட்டு, நோயாளிகள் சிகிச்சையினை நிறுத்தி விடுகின்றனர். மேலும் சென்னை மாநகரில் விவசாயிகளுக்கான அட்டை இல்லாத காரணத்தினால் அவர்களுக்கு மாதந்தோறும் ரூ.1000/ உதவி அளிக்கும் திட்டம் செயல்பாட்டில் இல்லை.

சென்னை மாநகராட்சியில் காசநோய் திட்டத்தின்படி கண்டறியப்படும் எம்.டி.ஆர் மற்றும் எக்ஸ்.டி.ஆர் காசநோயளிகள் மேற்படி சிகிச்சையை முழுவதுமாக எடுத்துக்கொள்ள, வருவாய்த்துறை (LR.1(2))அரசாணை எண்.285, நாள்.06.08.2012ன்படி மாதம் ரூ.1000/– வழங்கும்பட்சத்தில் நோயாளிகளுக்கு பயனுள்ளதாக இருக்கும் என கருதப்படுகிறது. தற்போது சென்னை மாநகரில் 199 எம்.டி.ஆர் மற்றும் 4 எக்ஸ்.டி.ஆர் காசநோயாளிகள் சிகிச்சையில் உள்ளனர். மேலும் தொடர் சிகிச்சையின் காரணமாக ஒரு வருடத்திற்கு 100 எம்.டி.ஆர் மற்றும் எக்ஸ்.டி.ஆர் காசநோயாளிகள் கண்டறியப்பட வாய்ப்புள்ளது. இவர்களுக்கும் இந்த உதவித்தொகை வழங்கப்பட வேண்டியுள்ளது. இத்திட்டத்தின்கீழ் உதவித்தொகை கீழ்க்கண்டவாறு நடைமுறைபடுத்த உத்தேசிக்கப்பட்டுள்ளது.

“ஒரு காச நோயாளி பதிவு செய்த உடன் அவரை களப்பணியாளர் (Health Visitor) மாதம் முழுவதும் கவனித்துக்கொள்கிறார். நோயாளி தொடர்ந்து சிகிச்சை எடுத்துக்கொண்டார் என மாதத்தின் கடைசியில் மூத்த சிகிச்சை மேற்பார்வையாளர் (Senior Treatment Supervisor) காசநோய் திட்ட அலுவலருக்கு ஆரம்ப சுகாதார நிலையத்தில் உள்ள மருத்துவ அலுவலர் மூலமாக சான்றளிக்கப்படும். இதனடிப்படையில் திட்ட நோயாளியின் வங்கி கணக்கில் ஊக்கத்தொகையாக ரூ.1000/ நேரடியாக செலுத்தப்படும்“.

தற்போது சென்னை மாநகராட்சியில் கண்டறியப்பட்ட எம்.டி.ஆர் மற்றும் எக்ஸ்.டி.ஆர் காசநோயாளிகளின் எண்ணிக்கை (தோரயமாக) 203 ஆகும். மேலும் வருட காலத்தில் கூடுதலாக கண்டறியப்பட உள்ளதாக எதிர்நோக்கும் நோயாளிகளின் எண்ணிக்கை (தோராயமாக)– 100 என கணக்கிடப்பட்டுள்ளது. இந்த திட்டத்திற்கு இந்த வருடத்திற்கு (2015–2016) ஆகும் தோராய செலவினம் 303 x 1000 x 12 = ரூ.36,36,000/– ஆகும். மேலும் இத்திட்டத்தினை இனிவரும் காலங்களிலும் தொடந்து செயல்படுத்தும் போது காசநோயினால் பாதிக்கப்பட்டுள்ள ஏழை எளிய மக்கள் பயன்பெறுவதுடன், எம்.டி.ஆர் மற்றும் எக்ஸ்.டி.ஆர் காசநோயாளிகள் குணமடையும் சதவிகிதம் அதிகரிக்க வாய்ப்புள்ளது.

முதன்மை செயலர்/ஆணையர் அவர்களின் 23.04.2015 நாளிட்ட குறிப்பில் இத்திட்டத்தினை செயல்படுத்த மன்ற அனுமதி பெற தெரிவிக்கப்பட்டுள்ளது.

எனவே,

1. சென்னை மாநகராட்சி, பொது சுகாதாரதுறையின் கீழ் உள்ள மருத்துவமனைகளில் சிகிச்சை பெறும் எம்.டி.ஆர் மற்றும் எக்ஸ்.டி.ஆர் காசநோயாளிகளுக்கு மாதம் தோறும் ரூ.1000/ (அதிகபட்சமாக இரண்டு முதல் இரண்டரை வருட காலங்களுக்கு) வழங்க அனுமதியும்,
2. இத்திட்டத்தினை இனிவரும் காலங்களிலும் தொடர்ந்து நடத்த அனுமதியும்,
3. இத்திட்டம் காசநோய் திட்ட அலுவலர் மூலமாக மின்னணு அனுமதி சேவையின் மூலமாக (ECS) காசநோயாளிகளின் வங்கி கணக்கிற்கு நேரடியாக இந்த உதவித்தொகையை வழங்கும் திட்டத்திற்கு ஒப்புதல் வழங்கவும்,
4. இந்த ஆண்டில் (2015–16) இப்பணிகளுக்கென தோராய செலவினம் ரூ.36,36,000/ (ரூபாய் முப்பத்தி ஆறு லட்சத்து முப்பத்தி ஆறாயிரம் மட்டும்) மற்றும் வரும் காலங்களில் நோயாளிகளின் எண்ணிக்கை ஏற்றவாறு செலவு செய்ய நிர்வாக அனுமதியும்,
5. இச்செலவினம், சென்னை மாநகராட்சி நிதியிலிருந்து மேற்கொள்ளவும்,
6. இந்த செலவினத்தினை பிரிவு குறியீடு 30–31–01 மற்றும் கணக்கு குறியீடு 250–20–04–01ல் கூடுதல் நிதி ரூ.37,00,000/– அளித்து செலவினம் மேற்கொள்ள அனுமதியும்,
7. இதற்கென திட்ட அலுவலருக்கென தனியாக வங்கி கணக்கு தொடங்க அனுமதியும்,

மேற்கண்ட 1 முதல் 7 வரை உள்ள இனங்களுக்கு நிலைக்குழு(சுகாதாரம்) மற்றும் நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

"ஏற்கனவே நிலைக்குழு (பொது சுகாதாரம்) கூட்டம் 16.07.2015 அன்று முடிவடைந்த நிலையில் இப்பொருளின் அவசரம் மற்றும் அவசியத்தன்மையை கருத்தில் கொண்டு 03.08.2015 அன்று தீர்மான எண்.29/2015ன்படி இதற்கு நிலைக்குழு(பொதுசுகாதாரம்) சுற்றின் மூலம் பெரும்பான்மை உறுப்பினர்களின் பரிந்துரையை பெற்று நிலைக்குழு (வ.வி.ம.நி)வின் மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது ".

"ஏற்கனவே நிலைக்குழு (வ.வி.ம.நி) வின் கூட்டம் 24.07.2015 அன்று முடிவடைந்த நிலையில் இப்பொருளின் அவசரம் மற்றும் அவசியத்தன்மையை கருத்தில் கொண்டு 03.08.2015 அன்று தீர்மான எண்.208/2015ன்படி இதற்கு நிலைக்குழு (வ.வி.ம.நி)வின் சுற்றின் மூலம் பெரும்பான்மை உறுப்பினர்களின் பரிந்துரையை பெற்று மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது ".

"இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது"

****

த.பொ.(பொது).ந.க.எண்.அ1/956/2015

முதன்மை செயலர் / ஆணையர் அவர்களின் 29/07/2015 நாளிட்ட குறிப்பு

தீர்மான எண்.397/2015 **பொருள் எண்.46**

சென்னை மாநகராட்சி – தலைமைப்பொறியாளர்(பொது) அலுலகம்– மண்டலம் 1 முதல் 15 வரையுள்ள உட்புறசாலைகள் அமைக்கும் பணி – தமிழ்நாடு நகர்புற நிதி மற்றும் உட்கட்டமைப்பு வளர்ச்சி கழகம்(TUFIDCO) மற்றும் தமிழ்நாடு நகர்புற வளர்ச்சி நிதி நிறுவனத்திடம் (TNUDF) மற்றும் இதர வங்கிகள் மூலம் கடன் பெறுவதற்கு அனுமதி

சென்னை மாநகரில் அமைந்துள்ள உட்புற சாலைகள் பல்வேறு திட்டத்தின் கீழ் சீரமைக்கப்பட்டு வருகிறது. இதுவரை மண்டலம்–1 முதல் 15 வரை சீர் செய்யப்படாமல் உள்ள உட்புற சாலைகளை பொதுமக்களின் நலன் மற்றும் அவசரம், அவசியம் கருதி உடனடியாக சீர் செய்ய, சென்னை மாநகராட்சியின் மூலதனநிதி மூலம் மேற்கொள்வதற்கு மன்ற தீர்மானங்களின்படி அனுமதி பெறப்பட்டுள்ளது.

ஆகவே, 3168 எண்ணிக்கையிலான, 566.56 கி.மீ நீளத்திற்கு தார்சாலைகள் ரூ.479.30 கோடி மதிப்பீட்டிலும் மற்றும் 1974 எண்ணிக்கையிலான 247.73 கி.மீ நீளத்திற்கு சிமெண்ட் கான்கிரீட் சாலைகள் ரூ.228.10 கோடி மதிப்பீட்டிலும், மொத்தம் 5142 சாலைகள் ரூ.707.40 கோடி மதிப்பீட்டில் சீரமைக்க / புதியதாக அமைக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது.

மேற்கண்ட பணிகளை மேற்கொள்வதற்காக தேவைப்படும் நிதியை தமிழ்நாடு நகர்புற நிதி மற்றும் உட்கட்டமைப்பு வளர்ச்சி கழகம்(TUFIDCO) மற்றும் தமிழ்நாடு நகர்புற வளர்ச்சி நிதி நிறுவனத்திடம் (TNUDF) கடன் பெறுவதற்கு கடிதம் அனுப்பப்பட்டுள்ளது.

எனவே, சென்னை மாநகராட்சியின் 5142 உட்புற சாலைகள் ரூ.707.40 கோடி மதிப்பீட்டில் சீரமைக்க / புதியதாக அமைக்க தேவைப்படும் நிதியை தமிழ்நாடு நகர்புற நிதி மற்றும் உட்கட்டமைப்பு வளர்ச்சி கழகம்(TUFIDCO) மற்றும் தமிழ்நாடு நகர்புற வளர்ச்சி நிதி நிறுவனத்திடம் (TNUDF) மற்றும் இதர வங்கிகள் மூலம் கடன் பெறுவதற்கு நிலைக்குழு (பணிகள்) மற்றும் நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

> "ஏற்கனவே நிலைக்குழு (பணிகள்) கூட்டம் 22.07.2015 அன்று முடிவடைந்த நிலையில் இப்பொருளின் அவசரம் மற்றும் அவசியத்தன்மையை கருத்தில் கொண்டு 03.08.2015 அன்று தீர்மான எண்.180/2015ன்படி இதற்கு நிலைக்குழு(பணிகள்) சுற்றின் மூலம் பெரும்பான்மை உறுப்பினர்களின் பரிந்துரையை பெற்று நிலைக்குழு (வ.வி.ம.நி)வின் மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது ".

> "ஏற்கனவே நிலைக்குழு (வ.வி.ம.நி) வின் கூட்டம் 24.07.2015 அன்று முடிவடைந்த நிலையில் இப்பொருளின் அவசரம் மற்றும் அவசியத்தன்மையை கருத்தில் கொண்டு 03.08.2015 அன்று தீர்மான எண்.202/2015ன்படி இதற்கு நிலைக்குழு (வ.வி.ம.நி)வின் சுற்றின் மூலம் பெரும்பான்மை உறுப்பினர்களின் பரிந்துரையை பெற்று மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது ".

"இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது"

****

சி.தி.து.ந.க.எண்.பி1/138/2015

முதன்மை செயலர் / ஆணையர் அவர்களின் 29/07/2015 நாளிட்ட குறிப்பு

தீர்மான எண்.398/2015 **பொருள் எண்.47**

சிறப்பு திட்டங்கள் துறை – போக்குவரத்து வளர்ச்சி கொள்கைக்கான நிறுவனம் (Institute for Transportation & Development Policy) சென்னை மாநகராட்சியுடன் இணைந்து சென்னை தெருக்களின் வாழ்கையை மாற்றுவதற்கு – நமது சென்னை நமக்கே என்ற நோக்கத்தில் பிரதி ஞாயிற்று கிழமைகளில் கார்கள் அற்ற நாளாக கடைபிடிப்பதற்கான ஏற்பாடுகளை செய்வதற்கு அனுமதி

சென்னை மாநகராட்சி மோட்டார் வாகனமில்லா போக்குவரத்து கொள்கை (Corporation of Chennai Non-Motorised Transport Policy) வரையறுக்கப்பட்டுள்ளது. இதில் மோட்டார் அல்லாத போக்குவரத்தான நடப்பது, சைக்கிள் ஓட்டுவது மற்றும் மனிதனால் இயக்கப்படும் மோட்டார் அல்லாத போக்குவரத்து சாதனங்களை பயன்படுத்துவதற்கு ஏதுவாக உட்கட்டமைப்பு மேற்கொள்வதற்கான வழிவகைகள் வகுக்கப்பட்டுள்ளது. மேலும், சாலையின் வடிவமைப்பு பாதசாரிகள் மற்றும் அனைத்துவகை போக்குவரத்து வசதிகளும் உள்ளடக்கிய சிறந்த நடைமுறைகள் மேற்கொள்ளுவதன் மூலம் ஒருவரின் வயது அல்லது வாழ்க்கை அந்தஸ்து வித்தியாசமாகவும் பாதுகாப்பான மோட்டார் அல்லாத போக்குவரத்து வசதியை வழங்குவதற்கான வழிகாட்டுதலை "சென்னை மாநகராட்சி மோட்டார் அல்லாத போக்குவரத்து கொள்கை" வகுத்துள்ளது.

இதன் தொடர்பாக போக்குவரத்து வளர்ச்சி கொள்கைக்கான நிறுவனம் (Institute for Transportation & Development Policy) சென்னை மாநகராட்சியுடன் இணைந்து "நமது சென்னை நமக்கே" என்ற நோக்கத்தில் பிரதி ஞாயிற்றுக்கிழமையில் முக்கிய சாலைகளில் குறிப்பிட்ட நேரங்களில் மட்டும் கார்கள் அற்ற நாளாக (Car Free Day) கடைபிடிக்க ஆலோசனை தெரிவித்துள்ளனர். இந்த கார் அற்ற நாளாக கடைப்பிடிக்கும் முறை உலகளவில் நடைமுறையில் உள்ளது. இது அனைத்து சேவைகளையும் உள்ளடக்கிய நகரங்களைக் கட்டமைப்பதில், தெருக்களின் முக்கியத்துவத்தைக் கொண்டாடுவதற்கான ஒரு பிரசாரம்.

இந்த முன்முயற்சியானது தற்காலிகமாக சில குறிப்பிட்ட சாலைகளை நகரபோக்குவரத்துக்கு தடைசெய்து அவற்றைப் பாதுகாப்பான உயிர்த்துடிப்புள்ள பொது இடங்களாக மாற்றுவதை நோக்கமாகக் கொண்டிருக்கிறது. அங்கு அனைவரும நடைப்பயிற்சி செய்யலாம். பாதுகாப்பாக சைக்கிள் ஓட்டலாம், சிறுவர்கள் சுதந்திரமாக விளையாடலாம், வயது முதிர்ந்தவர்கள் ஓய்வாக அமர்ந்து இருக்கலாம், பருவ வயதினர் தங்களது நட்புக்குழுக்களுடன் ஒன்றாகக் கூடிக் களித்து மகிழலாம். குடும்பங்கள் ஒன்றாகச் சேர்ந்து நேரத்தைக் கழிக்கலாம். நமது நகரங்களின் மிக மதிப்பு மிக்க சொத்துகளில் ஒன்று தெருக்கள் ஆகும். அவை ஒரு இடத்தில் இருந்து இன்னொரு இடத்திற்குச் செல்லும் ஒரு பாதையாக மட்டும் இல்லை. அவை மக்கள் ஒருவரையொருவர் சந்தித்து கலந்துரையாடுவதற்கான பொது இடங்களும் கூடஇருந்தும், தற்பொழுது தெருக்கள் வாகனம் செல்வதற்காக மட்டுமே முதன்மையாக வடிவமைக்கப்பட்டு உள்ளன.

இந்த அணுகுமுறையானது நெரிசலையும், காற்று மாசுபடுவதையும், சாலை விபத்துகளையும் அதிகரித்திருக்கிறது மற்றும் ஒரு சோம்பலான வாழ்க்கை முறையைக் கொண்டு வந்திருக்கிறது. திரும்பவும் அதன் மையத்தை மக்களை நோக்கித் திருப்பும் வகையில், "நம்ம சென்னை நமக்கே" என்னும் நோக்கத்தின் மூலம் இந்த சாலைகளை மீட்டெடுப்பது, ஒரு சிறந்த வாழ்க்கைத் தரத்திற்கு ஆதரவு தரும் வகையில் பொது இடங்கள் என்ற முறையில் தெருக்களை அலங்காரக் காட்சியகமாக ஆக்குவதையும் நோக்கமாகக் கொண்டிருக்கிறது.

இந்தியாவில் கார்கள் அற்ற நாளாக (Car Free Day) கடைபிடிக்க முறை முதன்முதலில் அஹமதாபாத் நகரில் 2009 ஆம் வருடம் முதல் நடைமுறையில் உள்ளது. இந்த இயக்கமானது ராஹ்கிரி நாள் என்று பிரிதி ஞாயிற்றுகிழமை டில்லியின் அருகில் உள்ள கூர்வாவ் நகரத்தில் நடைப்பெற்று வருகிறது. இதனை மத்திய நகர மேம்பாட்டு அமைச்சகம் (MoUD) மற்றும் இந்திய நகர போக்குவரத்து நிறுவனத்தால் (IUT) அங்கீகரிக்கப்பட்டு விருது வழங்கப்பட்டுள்ளது. இது நவி மும்பை, லூதியானா, டில்லி, மற்றும் மும்பை ஆகிய நகரங்களில் நடைமுறையில் உள்ளது. தமிழ்நாட்டில் கோயம்புத்தூர் நகராட்சியில் 09.08.2015 முதல் "கோயம்புத்தூர் சந்தோஷமான தெருக்கள்" என்ற தலைப்பில் இந்நிகழ்வு நடைமுறைப்படுத்தப்படவுள்ளது. சென்னையில் கார் அற்ற நாளாக (Car Free Day) கடைபிடிப்பது குறித்து அரசிடம் அனுமதி கோரப்பட்டது. இதுகுறித்து அரசிடம் ஆலோசிக்கப்பட்டதில், சென்னை மாநகராட்சியின் மாமன்றம் இதுகுறித்து முடிவெடுக்க ஆலோசனை அளிக்கப்பட்டது.

சென்னை ஒருங்கிணைந்த நகர்ப்புற போக்குவரத்து ஆணைக் குழுவின் (CUMTA) கீழ் இயங்கும் துணைக்குழுவான உள்கட்டமைப்பு மற்றும் மோட்டார் வாகனமில்லா போக்குவரத்து கொள்கைக்கான துணைக்குழுவில் 10.07.2015 அன்று இப்பொருள் குறித்து விவாதிக்கப்பட்டு கார் அற்ற நாளாக (Car Free Day) கடைபிடிக்க ஒருமித்தமாக அங்கீகரிக்கப்பட்டது.

எனவே, முக்கிய சாலைகளில் வசிப்பவர்களின் தற்பொழுது நடைமுறையில் உள்ள வாழ்கை முறைகளை மேம்படுத்தக்கூடியவண்ணம், சென்னை போக்குவரத்து காவல் துறையின் ஒத்துழைப்புடன் பிரதி ஞாயிறு அன்று முக்கிய சாலைகளில் குறிப்பிட்ட நேரங்களில் கார்கள் அற்ற நாள் (Car Free Day) என்ற நடைமுறையினை, மற்ற நகரங்களில் உள்ளதுபோல, சென்னையிலும் அமுல்படுத்த நிலைக்குழு (பணிகள்) மற்றும் நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

"ஏற்கனவே நிலைக்குழு (பணிகள்) கூட்டம் 22.07.2015 அன்று முடிவடைந்த நிலையில் இப்பொருளின் அவசரம் மற்றும் அவசியத்தன்மையை கருத்தில் கொண்டு 03.08.2015 அன்று தீர்மான எண்.179/2015ன்படி இதற்கு நிலைக்குழு(பணிகள்) சுற்றின் மூலம் பெரும்பான்மை உறுப்பினர்களின் பரிந்துரையை பெற்று நிலைக்குழு (வ.வி.ம.நி)வின் மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது ".

"ஏற்கனவே நிலைக்குழு (வ.வி.ம.நி) வின் கூட்டம் 24.07.2015 அன்று முடிவடைந்த நிலையில் இப்பொருளின் அவசரம் மற்றும் அவசியத்தன்மையை கருத்தில் கொண்டு 03.08.2015 அன்று தீர்மான எண்.203/2015ன்படி இதற்கு நிலைக்குழு (வ.வி.ம.நி)வின் சுற்றின் மூலம் பெரும்பான்மை உறுப்பினர்களின் பரிந்துரையை பெற்று மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது ".

"இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது"

****

நி.ம.உ.து.ந.க.எண். எல்இ9 /3978/2014

முதன்மை செயலர் மற்றும் ஆணையர் அவர்களின் 28.07.2015 நாளிட்ட குறிப்பு

தீர்மான எண்.399/2015 **பொருள் எண்.48**

நிலம் மற்றும் உடைமைத்துறை– மண்டலம்–13, வார்டு–171 –உள்ள அங்கன்வாடி மைய எண்.10053 மிகவும் பழுதடைந்த நிலையில் உள்ளதால் என். செல்வராஜூலு செட்டி டிரஸ்ட் மூலம் புதிய கட்டிடம் கட்ட இசைவு தெரிவித்துள்ளதால் தடையின்மைச்சான்று வழங்க அனுமதி

மாவட்ட வருவாய் அலுவலர்/மண்டல அலுவலர்–13 அவர்களின் கடித எண். 10641/2014, 14.11.2014 நாளிட்ட குறிப்பில் மண்டலம்–13, வார்டு–171 குழந்தை வளர்ச்சித் திட்ட–10ன் கீழ் இயங்கி வரும் அங்கன்வாடி மைய எண். 10053 கட்டிடம் சுமார் 25 ஆண்டுகளாக இயங்கி வருவதாகவும், இக்கட்டிடம் மிகவும் பழுதடைந்துள்ளதாகவும் அதனை என். செல்வராஜூலு செட்டி டிரஸ்ட் அவர்கள் குழந்தைகள் நல மையத்திற்கு புதிய கட்டிடம் கட்ட இசைவு தெரிவித்துள்ளதால், சென்னை மாநகராட்சியின் தடையின்மை சான்று வழங்குமாறு குழந்தை வளர்ச்சித் திட்ட அலுவலர் அவர்களின் கடித ந.க.எண்.10/2014, 29.09.2014ன் மூலம் குழந்தை வளர்ச்சி திட்ட அலுவலர் கேட்டுக்கொண்டுள்ளதாகவும், மேலும் வெங்கடாபுரம் குடிசைப்பகுதியில் உள்ள சாலைகள், அங்கன்வாடி மையம் (ம) ஆரம்ப சுகாதார நிலையம் அமைந்துள்ள இடங்கள் தமிழ்நாடு குடிசை மாற்று வாரியத்தினால் சென்னை மாநகராட்சி வசம் ஒப்படைக்கப்பட்டுள்ளதாகவும், எனவே சமூக நலத்துறைக்கு அங்கன்வாடி மையம் கட்டித்தர தடையின்மை சான்று வழங்கலாம் என தெரிவித்து மேல் நடவடிக்கைக்காக இத்துறைக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

என். செல்வராஜூலு செட்டி டிரஸ்ட் நிறுவன தலைவர் அவர்களின் கடித நாள். 29.5.2014 (ம) 9.3.2015 நாளிட்ட கடிதத்தில் மண்டலம்–13, வார்டு–171 வெங்கடாபுரம் குடிசைப்பகுதியில் உள்ள பழுதடைந்த அங்கன்வாடி மையத்தை அறக்கட்டளை மூலம் கட்டுவதற்கு தடையின்மைச்சான்று வழங்குமாறு கோரப்பட்டுள்ளது.

மேற்படி கட்டிடத்தின் உறுதித்தன்மை, தனியார் மூலம் மாற்றுத்துறைக்கு கட்டிடம் கட்ட இயலுமா, தனியார் மூலம் கட்டப்படும் கட்டிடத்தினை மாநகராட்சி ஏற்றுக்கொள்ள வழிவகை உண்டா போன்ற விவரங்களை இத்துறைக்கு அனுப்பி வைக்குமாறு கட்டிடத்துறைக்கு அனுப்பப்பட்ட இவ்வலுவலக குறிப்பு நி.ம.உ.து.ந.க.எண்.எல்இ6/3978/2014, 29.12.2014 நாளிட்ட குறிப்பின் மூலம் கட்டிடத்துறை மேற்பார்வைபொறியாளரிடம் கேட்டுக்கொள்ளப்பட்டது.

கட்டிடத்துறை கண்காணிப்பு பொறியாளரின் கடித ந.க.எண்.பி3/887/2015, 26.2.2015 நாளிட்ட குறிப்பில் மேற்கண்ட கட்டிடத்தை ஆய்வு செய்யப்பட்டதில் இக்கட்டிடமானது மிகவும் பழுதடைந்து பயன்படுத்த முடியாத நிலை உள்ளதாகவும், அதை இடித்துவிட்டு தனியர் மூலம் புதிய கட்டிடம் கட்ட நிபந்தனைகளுக்கு உட்படுத்தி தனியர் இப்பணியினை நிறைவேற்றலாம் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

எனவே மண்டலம்–13, வார்டு–171 வெங்கடாபுரம் குடிசைப்பகுதியில் பழுதடைந்த அங்கன்வாடி மைய எண்.10053 கட்டிடத்தை இடித்துவிட்டு என்.செல்வராஜூலு செட்டி அறக்கட்டளை நிர்வாக செலவில் புதிய கட்டிடம் கட்ட சென்னை மாநகராட்சியின் தடையின்மை சான்று வழங்குவதற்கும்

நிபந்தனைகள்

1. தனியார் இந்நிலத்தில் உரிமை ஏதும் கோரப்படக்கூடாது
2. இக்கட்டிடத்திற்கான வரைப்படம் சென்னை மாநகராட்சி ஒப்புதல் பெறப்பட வேண்டும்
3. சென்னை மாநகராட்சி மேற்பார்வையில் இக்கட்டிடம் கட்டப்பட வேண்டும்
4. தனியார் இக்கட்டிட வேலைகளை அவர் நியமிக்கும் ஆட்களை கொண்டு கட்டிடத்தரவும் இக்கட்டிடம் கட்ட தேவையான பண வசதி குறித்தும் சென்னை மாநகராட்சிக்கு உறுதி அளித்திடல் வேண்டும்.
5. கட்டிய கட்டிடத்திற்கு எவ்வித உரிமையும் கோரப்படக்கூடாது என்ற உறுதி மொழியையும் தனியர் வழங்கிட வேண்டும்.
6. கட்டிடத்தை குறிப்பிட்ட காலக்கெடுவிற்குள் கட்டி முடித்து சென்னை மாநகராட்சி வசம் ஒப்படைப்பு செய்ய உறுதியளிக்க வேண்டும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.
7. தனியர் தன் சுயநலத்திற்காக மேற்படி கட்டிடத்தை எந்த ஒரு நிகழ்ச்சியையும் நடத்த அனுமதி கோர இயலாது.

மேற்கண்ட 1 முதல் 7 வரையிலுள்ள நிபந்தனைக்குட்பட்டு வார்டுகுழு பரிந்துரையினை எதிர்நோக்கி நிலைக்குழு (வரிவதிப்பு மற்றும் நிதி)வின் மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

> "ஏற்கனவே நிலைக்குழு (வ.வி.ம.நி) வின் கூட்டம் 24.07.2015 அன்று முடிவடைந்த நிலையில் இப்பொருளின் அவசரம் மற்றும் அவசியத்தன்மையை கருத்தில் கொண்டு வார்டுகுழு தீர்மானம் பெறப்படவேண்டும் என்ற நிபந்தனையுடன் 03.08.2015 அன்று தீர்மான எண்.189/2015ன்படி இதற்கு நிலைக்குழு (வ.வி.ம.நி)வின் சுற்றின் மூலம் பெரும்பான்மை உறுப்பினர்களின் பரிந்துரையை பெற்று மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது ".

"இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது"

****

பே.சா.து.ந.க.எண்.பி1/3182/2015

முதன்மை செயலர் மற்றும் ஆணையளர் அவர்களின் 29.07.2015 நாளிட்ட குறிப்பு

தீர்மான எண்.400/2015 **பொருள் எண்.49**

பேருந்து சாலைகள் துறை – மண்டலம் 10, கோட்டம் – 137ல் உள்ள அண்ணா பிரதான சாலை மற்றும் ஏரிக்கரை சாலையை இணைக்கும் இணைப்பு சாலை உருவாக்குதலுக்கான (Forming of Link Road) மதிப்பீட்டிற்கு அனுமதி

மண்டலம் 10, கோட்டம் – 137ல் உள்ள அண்ணா பிரதான சாலை மற்றும் ஏரிக்கரை சாலையை இணைக்கும் இணைப்பு சாலை உருவாக்குவதற்கு சென்னை பெருநகர் வளர்ச்சி குழுமம் இரண்டாம் மாஸ்டர் பிளானில் குறிப்பிடப்பட்டுள்ளதையொட்டி இச்சாலையை புதியதாக உருவாக்குவதற்கான இடம் சென்னை குடிநீர் மற்றும் கழீவு நீர் அகற்று வாரியத்திற்கு சொந்தமான 4644 சதுர மீட்டர் நிலத்தை கையகப்படுத்த சென்னை குடிநீர் மற்றும் கழீவு நீர் அகற்று வாரியத்திற்கு கடிதம் அனுப்பப்பட்டது.

21.04.2015 அன்று மாலை 5.30 நிமிடத்திற்கு நடைபெற்ற சென்னை குடிநீர் மற்றும் கழீவு நீர் அகற்று வாரியத்தின் 329வது இயக்குநர்களின் கூட்டத்தில் தீர்மான எண்.34/2015ன்படி மண்டலம்–10, கோட்டம்–137ல் உள்ள அண்ணா பிரதான சாலை மற்றும் ஏரிக்கரை சாலையை இணைக்கும் இணைப்பு சாலை உருவாக்குதல் (Forming of Link Road) பொருள் சம்மந்தமாக கீழ்க்கண்ட நிபந்தனைகளுடன் தீர்மான நிறைவேற்றி அனுமதி அளித்துள்ளது.

1) சென்னை மாநகராட்சி கையகப்படுத்தவிருக்கும் நில அளவுக்கு அதற்கு ஈடாக பசுமை நிறைந்த வேறொரு இடம் கொடுக்க வேண்டும்
2) இணைப்பு சாலை அமையவிருக்கும் பகுதிகளுக்குள் அமைந்துள்ள சென்னை குடிநீர் மற்றும் கழீவுநீர் வாரியத்தின் கட்டமைப்புகளை மாற்றம் செய்வதற்காக ரூ.2.50 கோடி வைப்புத் தொகையாக செலுத்த வேண்டும்
3) இணைப்பு சாலையில் அமைந்துள்ள 30 மரங்களுக்கு பதிலாக தேவையான அளவு மரக்கன்றுகள் நட வேண்டும்

மண்டலம்–10, கோட்டம்–137ல் உள்ள அண்ணா பிரதான சாலை மற்றும் ஏரிக்கரை சாலையை இணைக்கும் இணைப்பு சாலை உருவாக்குதற்கு (Forming of Link Road) தயாரிக்கப்பட்ட மதிப்பீட்டின் விவரங்கள் பின்வருமாறு

01. தொழில் நுட்ப ஒப்புதல் அளித்த அதிகாரி செயல்முறை ஆணை எண் மற்றும் தேதி : தலைமைப் பொறியாளர் (பொது) எண்: 210/2015 நாள்: 28.07.2015

02. மதிப்பீடு எந்த வருடத்தின் அட்டவணை விலைப்பட்டியல் முன் வைத்து தயாரிக்கப்பட்டது : 2014 – 2015

03. மதிப்பீட்டின் தொகை :

வ. எண்	விவரங்கள்	இரண்டு மதிப்பீடுகளின் மொத்த தொகை
1	பணியின் செலவீனம்	ரூ. 24121516.90
2	மேற்பார்வை செலவீனம்	ரூ. 2412151.69
3	சிறு மேற்பார்வைசெலவீனம்	ரூ. 603037.92
2	தரக்கட்டுப்பாடு செலவு	ரூ. 241215.17
3	தமிழ்நாடு உடல் உழைப்போர் நல நிதி	ரூ. 241215.17
4	மற்றைய எதிர்பார செலவீனம்	ரூ. 610863.15
	மொத்த தொகை	ரூ. 28230000.00

04. ஒரு சதுர மீட்டருக்கு ஆகும் செலவு :

05. வரைப்படம் வைக்கப்பட்டுள்ளதா ? : ஆம்

06. நிதியின் மூலத்தன்மை : சென்னை மாநகராட்சி மூலதன நிதி

எனவே,

1) மண்டலம் 10, கோட்டம் – 137ல் உள்ள அண்ணா பிரதான சாலை மற்றும் ஏரிக்கரை சாலையை இணைக்கும் இணைப்பு சாலை உருவாக்குவதற்கு (Forming of Link Road) தயாரிக்கப்பட்ட ரூ. 2,82,30,000/– மதிப்பீட்டிற்கு ஆட்சி முறை ஒப்பளிப்பு அனுமதி அளிக்கவும்
2) சென்னை குடிநீர் மற்றும் கழீவு நீர் அகற்று வாரியம் அளித்துள்ள நிபந்தனைகளின்படி சென்னை மாநகராட்சி கையகப்படுத்தவிருக்கும் நில அளவுக்கு அதற்கு ஈடாக பசுமை நிறைந்த வேறொரு இடம் கொடுப்பதற்கு சென்னை மாநகராட்சி நிலம் (ம) உடமைத்துறையின் மூலம் நடவடிக்கை மேற்கொள்ளவும்,
3) இணைப்பு சாலை அமையவிருக்கும் பகுதிகளுக்குள் அமைந்துள்ள சென்னை குடிநீர் மற்றும் கழீவுநீர் வாரியத்தின் கட்டமைப்புகளை மாற்றம் செய்வதற்காக ரூ.2.50 கோடி வைப்புத் தொகையாக செலுத்தவும்
4) மாண்புமிகு மேயர் அவர்களின் அறிவுறுத்தலின்படி இணைப்பு சாலையில் அமைந்துள்ள 30 மரங்களை வேறுடன் பிடுங்கி உடன் அதே சாலையில் அல்லது வேறிடத்தில் நடுவதற்கும்,

மேற்குறிப்பிட்டுள்ள பணிக்காக தயாரிக்கப்பட்டுள்ள மதிப்பீட்டிற்கு நிர்வாக அனுமதியும் மற்றும் சென்னை குடிநீர் மற்றும் கழீவுநீர் அகற்று வாரியம் அளித்துள்ள நிபந்தனைகளின் அடிப்படையில் பணி மேற்கொள்ளவும், மேற்கண்ட 1 முதல் 4 வரை உள்ள இனங்களுக்கு நிலைக்குழு (பணிகள்) மற்றும் நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

"ஏற்கனவே நிலைக்குழு (பணிகள்) கூட்டம் 22.07.2015 அன்று முடிவடைந்த நிலையில் இப்பொருளின் அவசரம் மற்றும் அவசியத்தன்மையை கருத்தில் கொண்டு 03.08.2015 அன்று தீர்மான எண்.185/2015ன்படி இதற்கு நிலைக்குழு(பணிகள்) சுற்றின் மூலம் பெரும்பான்மை உறுப்பினர்களின் பரிந்துரையை பெற்று நிலைக்குழு (வ.வி.ம.நி)வின் மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது ".

"ஏற்கனவே நிலைக்குழு (வ.வி.ம.நி) வின் கூட்டம் 24.07.2015 அன்று முடிவடைந்த நிலையில் இப்பொருளின் அவசரம் மற்றும் அவசியத்தன்மையை கருத்தில் கொண்டு 03.08.2015 அன்று தீர்மான எண்.210/2015ன்படி இதற்கு நிலைக்குழு (வ.வி.ம.நி)வின் சுற்றின் மூலம் பெரும்பான்மை உறுப்பினர்களின் பரிந்துரையை பெற்று மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது ".

"இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது"

****

க.து.ந.க.எண்.பி11/1598/2015
முதன்மை செயலர் மற்றும் ஆணையர் அவர்களின் 29.07.2015 நாளிட்ட குறிப்பு

தீர்மான எண்.401/2015 **பொருள் எண்.50**

மண்டலம்–11, வார்டு–148, நெற்குன்றத்தில் நகர்புற ஆரம்ப சுகாதார மையம் கட்டும் பணிக்கான மதிப்பீட்டிற்கு அனுமதி

வார்டு எண் :148 **மண்டலம் : 11**

1	பணியின் பெயர்.	:	மண்டலம்–11, வார்டு–148, நெற்குன்றத்தில் நகர்புற ஆரம்ப சுகாதார மையம் கட்டும் பணி
2	பரிந்துரை செய்தவரின் விவரம்	:	மாநகர சுகாதார அலுவலர்
3	எந்த துறைக்காக இந்த பணி செயலாக்கம்	:	மண்டலம்–11
4	சம்பந்தப்பட்ட துறையால் அனுமதி	:	பெறப்பட்டுள்ளது
5	தொழில் நுட்ப அனுமதி அளித்த அதிகாரி செயல்முறை ஆணை மற்றும் நாள்	:	பின்னர் பெறப்படும்
6	மதிப்பீடு எந்த வருடத்தின் விலைப் பட்டியலை முன் வைத்து தயாரிக்கப்பட்டது	:	2014 -2015 ஆம் ஆண்டின் அலுவலக விலை விவரப்படி
7	மதிப்பீட்டின் தொகை	:	ரூ. 1,38,00,000.00
	(அ) கட்டுமான பணி செலவு	:	ரூ . 1,17,55,755.14
	(ஆ) மேலான மேற்பார்வை செலவு	:	ரூ. 11,75,575.51
	(இ) சிறு மேற்பார்வை செலவு	:	ரூ. 2,93,893.88
	(ஊ) தமிழ்நாடு கட்டுமாண தொழிலாளர்கள் நல வாரியம் 1%	:	ரூ. 1,17,557.55
	(எ) தர நிர்ணயம்	:	ரூ. 1,17,557.55
	(ஏ) எதிர்பாரா செலவு	:	ரூ. 3,09,660.37
	(ஐ) மின்சாரம்/குடிநீர் இணைப்பு மற்ற பிற இனங்கள்	:	ரூ. 30,000.00
	மொத்தம்	:	ரூ. 1,38,00,000.00
8	வரைபடம் வைக்கப்பட்டுள்ளதா	:	ஆம்
9	மதிப்பீட்டிற்கு ஒப்புதல் அளித்த வார்டு குழுவின் தீர்மான எண் மற்றும் நாள்	:	பெறப்படவுள்ளது
10	ஏற்கனவே எப்போது செய்யப்பட்டது	:	புதிய பணி
11	நிதியின் தன்மை	:	அரசு நிதி (என்.யு.எச்.எம்.) சுகாதாரத்துறை கட்டடங்கள்
12	இக்கோப்பில் குறிப்பிட்டுள்ள பணிக்கு தேவைப்படும் நிதி	:	ரூ. 1,38,00,000.00

மேற்கண்ட பணிக்காக 2014-2015 ஆம் ஆண்டின் அலுவலக விலை விவரப்படி ரூ.1,38,00,000/–க்கு (ரூபாய் ஒரு கோடியே முப்பத்தெட்டு இலட்சம் மட்டும்) தயாரிக்கப்பட்டுள்ள திட்ட மதிப்பீட்டிற்கு தமிழ்நாடு அரசு சிறப்பிதழ் எண்.6/2008, நாள்.26.08.2008ல் வெளியிடப்பட்டுள்ள கூடுதல் அதிகாரங்களின்படி சென்னை மாநகர முனிசிபல் சட்டம் விதி 1919ல் விதி (78)ன்படி நிலைக்குழுக்கள்(சுகாதாரம்), (பணிகள்) மற்றும் (வரிவிதிப்பு (ம) நிதி)வின் மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

"ஏற்கனவே நிலைக்குழு (பொது சுகாதாரம்) வின் கூட்டம் 16.07.2015 அன்று முடிவடைந்த நிலையில் இப்பொருளின் அவசரம் மற்றும் அவசியத்தன்மையை கருத்தில் கொண்டு 03.08.2015 அன்று தீர்மான எண்.26/2015,–ன்படி இதற்கு வார்டுகுழு தீர்மானம் பெறப்பட வேண்டும் என்ற நிபந்தனையுடன் நிலைக்குழு (பொது சுகாதாரம்) சுற்றின் மூலம் பெரும்பான்மை உறுப்பினர்களின் பரிந்துரையை பெற்று நிலைக்குழு (பணிகள்) மற்றும் நிலைக்குழு(வரிவிதிப்பு மற்றும் நிதி) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது ".

"ஏற்கனவே நிலைக்குழு (பணிகள்) கூட்டம் 22.07.2015 அன்று முடிவடைந்த நிலையில் இப்பொருளின் அவசரம் மற்றும் அவசியத்தன்மையை கருத்தில் கொண்டு 03.08.2015 அன்று தீர்மான எண்.182/2015ன்படி இதற்கு நிலைக்குழு(பணிகள்) சுற்றின் மூலம் பெரும்பான்மை உறுப்பினர்களின் பரிந்துரையை பெற்று நிலைக்குழு (வ.வி.ம.நி)வின் மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது ".

"ஏற்கனவே நிலைக்குழு (வ.வி.ம.நி) வின் கூட்டம் 24.07.2015 அன்று முடிவடைந்த நிலையில் இப்பொருளின் அவசரம் மற்றும் அவசியத்தன்மையை கருத்தில் கொண்டு 03.08.2015 அன்று தீர்மான எண்.205/2015ன்படி இதற்கு நிலைக்குழு (வ.வி.ம.நி)வின் சுற்றின் மூலம் பெரும்பான்மை உறுப்பினர்களின் பரிந்துரையை பெற்று மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது ".

"இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது"

****

க.து.ந.க.எண்.பி13/1599/2015

முதன்மை செயலர் மற்றும் ஆணையர் அவர்களின் 29.07.2015 நாளிட்ட குறிப்பு

தீர்மான எண்.402/2015 **பொருள் எண்.51**

மண்டலம்–13, வார்டு–170, ஈக்காட்டு தாங்கல் அண்ணா சாலையில்(AGS சர்ச்அருகில்) நகர்புற ஆரம்ப சுகாதார மையம் கட்டும் பணிக்கான மதிப்பீட்டிற்கு அனுமதி

வார்டு எண் :170 **மண்டலம் :13**

1	பணியின் பெயர்.	:	மண்டலம்–13,வார்டு–170, ஈக்காட்டு தாங்கல் அண்ணா சாலையில் (AGS சர்ச்அருகில்) நகர்புற ஆரம்ப சுகாதார மையம் கட்டும் பணி
2	பரிந்துரை செய்தவரின் விவரம்	:	மாநகர சுகாதார அலுவலர்
3	எந்த துறைக்காக இந்த பணி செயலாக்கம்	:	மண்டலம்–13
4	சம்பந்தப்பட்ட துறையால் அனுமதி	:	பெறப்பட்டுள்ளது
5	தொழில் நுட்ப அனுமதி அளித்த அதிகாரி செயல்முறை ஆணை மற்றும் நாள்	:	பின்னர் பெறப்படும்
6	மதிப்பீடு எந்த வருடத்தின் விலைப்பட்டியலை முன் வைத்து தயாரிக்கப்பட்டது	:	2014 -2015 ஆம் ஆண்டின் அலுவலக விலை விவரப்படி
7	மதிப்பீட்டின் தொகை	:	ரூ. 1,38,00,000.00
	(அ) கட்டுமான பணி செலவு	:	ரூ . 1,17,55,755.14
	(ஆ) மேலான மேற்பார்வை செலவு	:	ரூ. 11,75,575.51
	(இ) சிறு மேற்பார்வை செலவு	:	ரூ. 2,93,893.88
	(ஊ) தமிழ்நாடு கட்டுமாண தொழிலாளர்கள் நல வாரியம் 1%	:	ரூ. 1,17,557.55
	(எ) தர நிர்ணயம்	:	ரூ. 1,17,557.55
	(ஏ) எதிர்பாரா செலவு	:	ரூ. 3,09,660.37
	(ஐ) மின்சாரம்/குடிநீர் இணைப்பு மற்ற பிற இனங்கள்	:	ரூ. 30,000.00
	மொத்தம்	:	ரூ. 1,38,00,000.00
8	வரைபடம் வைக்கப்பட்டுள்ளதா	:	ஆம்
9	மதிப்பீட்டிற்கு ஒப்புதல் அளித்த வார்டு குழுவின் தீர்மான எண் மற்றும் நாள்	:	பெறப்படவுள்ளது
10	ஏற்கனவே எப்போது செய்யப்பட்டது	:	புதிய பணி
11	நிதியின் தன்மை	:	அரசு நிதி (என்.யு.எச்.எம்.) சுகாதாரத்துறை கட்டடங்கள்
12	இக்கோப்பில் குறிப்பிட்டுள்ள பணிக்கு தேவைப்படும் நிதி	:	ரூ. 1,38,00,000.00

மேற்கண்ட பணிக்காக 2014-2015 ஆம் ஆண்டின் அலுவலக விலை விவரப்படி ரூ.1,38,00,000/–க்கு (ரூபாய் ஒரு கோடியே முப்பத்தெட்டு இலட்சம் மட்டும்) தயாரிக்கப்பட்டுள்ள திட்ட மதிப்பீட்டிற்கு தமிழ்நாடு அரசு சிறப்பிதழ் எண்.6/2008, நாள்.26.08.2008ல் வெளியிடப்பட்டுள்ள கூடுதல் அதிகாரங்களின்படி சென்னை மாநகர முனிசிபல் சட்டம் விதி 1919ல் விதி (78)ன்படி நிலைக்குழுக்கள்(சுகாதாரம்), (பணிகள்) மற்றும் (வரிவிதிப்பு (ம) நிதி)வின் மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

"ஏற்கனவே நிலைக்குழு (பொது சுகாதாரம்) வின் கூட்டம் 16.07.2015 அன்று முடிவடைந்த நிலையில் இப்பொருளின் அவசரம் மற்றும் அவசியத்தன்மையை கருத்தில் கொண்டு 03.08.2015 அன்று தீர்மான எண்.27/2015ன்படி இதற்கு வார்டுகுழு தீர்மானம் பெறப்பட வேண்டும் என்ற நிபந்தனையுடன் நிலைக்குழு (பொது சுகாதாரம்) சுற்றின் மூலம் பெரும்பான்மை உறுப்பினர்களின் பரிந்துரையை பெற்று நிலைக்குழு (பணிகள்) மற்றும் நிலைக்குழு(வரிவிதிப்பு மற்றும் நிதி) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது ".

"ஏற்கனவே நிலைக்குழு (பணிகள்) கூட்டம் 22.07.2015 அன்று முடிவடைந்த நிலையில் இப்பொருளின் அவசரம் மற்றும் அவசியத்தன்மையை கருத்தில் கொண்டு 03.08.2015 அன்று தீர்மான எண்.183/2015ன்படி இதற்கு நிலைக்குழு(பணிகள்) சுற்றின் மூலம் பெரும்பான்மை உறுப்பினர்களின் பரிந்துரையை பெற்று நிலைக்குழு (வ.வி.ம.நி)வின் மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது ".

"ஏற்கனவே நிலைக்குழு (வ.வி.ம.நி) வின் கூட்டம் 24.07.2015 அன்று முடிவடைந்த நிலையில் இப்பொருளின் அவசரம் மற்றும் அவசியத்தன்மையை கருத்தில் கொண்டு 03.08.2015 அன்று தீர்மான எண்.206/2015ன்படி இதற்கு நிலைக்குழு (வ.வி.ம.நி)வின் சுற்றின் மூலம் பெரும்பான்மை உறுப்பினர்களின் பரிந்துரையை பெற்று மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது ".

"இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது"

****

பே.சா.து.ந.க.எண்.பி6/2382/2015

முதன்மை செயலர் மற்றும் ஆணையளர் அவர்களின் 29.07.2015 நாளிட்ட குறிப்பு

தீர்மான எண்.403/2015 **பொருள் எண்.52**

மதிப்பீடு – 2015–2016 ம் ஆண்டிற்கான பணி – மண்டலம்–13, வார்டு எண்.174ல் உள்ள ரேஸ் கோர்ஸ் சாலையினை அகலப்படுத்துதல் மற்றும் உருவாக்கல், பேருந்து உட்பக்க வளைவு நிறுத்தம், மைய தடுப்பான்கள், நடைபாதை அமைத்தல் மற்றும் மழைநீர் வடிகால்வாய் கட்டுதல் ஆகிய பணிகளுக்கு– 2014–2015ம் ஆண்டின்அலுவலக விலைப்பட்டியல்களின் அடிப்படையில் தயாரிக்கப்பட்டுள்ள மதிப்பீடு ரூ.2,08,70,000/– ஆட்சி முறை ஒப்பளிப்பு மற்றும் ஒப்பம் கோர அனுமதி

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களின் அறிவுரைக்கிணங்க, மாண்புமிகு மேயர் அவர்களால் நடவடிக்கை எடுக்கப்பட்டு, மண்டலம்–13, வார்டு –174ல் உள்ள ரேஸ் கோர்ஸ் சாலையில் போக்குவரத்து நெரிசலை தவிர்க்கும் பொருட்டு சாலையினை அகலப்படுத்த மெட்ராஸ் ரேஸ் கோர்ஸ் கிளப்பிற்கு சொந்தமான நிலத்தினை கையகப்படுத்த உரிய நடவடிக்கை எடுக்கும் பொருட்டு மன்றத்தீர்மான எண் 357/2014, நாள்.24.06.2014ன்படி அனுமதி பெறப்பட்டுள்ளது. சாலை விரிவாக்கத்திற்கு தேவைப்படும் நிலத்தினை 23.06.2014 நாளிட்ட கடிதத்தில் மெட்ராஸ் ரேஸ் கோர்ஸ் கிளப் ஆட்சேபனை இன்மை கடிதம் வழங்கியுள்ளது. மேலும் இந்நிலம் இரயில்வே துறைக்கு சொந்தமானது என இரயில்வே நிறுவகத்தினருடன் பேச்சு வார்த்தை நடத்தப்பட்டது. பேச்சுவார்த்தைக்குப்பின் 19.02.2015 நாளிட்ட கடிதத்தில் மாநகராட்சி ஆணையர் அவர்களுக்கு சாலையின் கிழக்கு பக்கம் சாலை விரிவாக்கப் பணிக்கு தேவைப்படும் நிலத்தை வழங்க ஆட்சேபனை இன்மை கடிதம் வழங்கியுள்ளது. மேலும் இக்கடிதத்தில் தாங்கள் தரும் இடத்திற்கு மாற்றாக ஒத்த மதிப்புள்ள இடம் தரப்பட வேண்டும் என்றும், இடம் தருவதில் மாற்றம் இருப்பின் குத்தகைப் பணம் வசூலிக்க வாய்ப்பு இருப்பதாக குறிப்பிட்டுள்ளனர். சாலை விரிவாக்கத்திற்கு தேவைப்படும் (370 மீ நீளம் மற்றும் 6 மீ அகலமுடைய 2220 ச.மீ இடத்தினை) நிலத்தினை கையகப்படுத்தி, மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களின் அறிவுரைக்கிணங்க, மாண்புமிகு மேயர் அவர்களால் நடவடிக்கை எடுக்கப்பட்டு, மேற்கண்ட பகுதியில் சாலையினை அகலப்படுத்துதல் மற்றும் உருவாக்கல், பேருந்து உட்பக்க வளைவு நிறுத்தம், மைய தடுப்பான்கள், நடைபாதை அமைத்தல் மற்றும் மழைநீர் வடிகால்வாய் கட்டுதல் ஆகிய பணிகளுக்காக தயாரிக்கப்பட்ட மதிப்பீடு அனுமதிக்காக சமர்ப்பிக்கப்படுகிறது.

01. பணியின் பெயர்

வ. எண்	மண்டலம் /வார்டு எண்	பணியின் விவரம்	நீளம் மீ.	பரப்பளவு ச.மீ.	மதிப்பீட்டுத் தொகை ரூ.
1	13 /174	ரேஸ் கோர்ஸ் சாலையினை அகலப்படுத்துதல் மற்றும் உருவாக்கல், பேருந்து உட்பக்க வளைவு நிறுத்தம், மைய தடுப்பான்கள், நடைபாதை அமைத்தல் மற்றும் மழைநீர் வடிகால்வாய் கட்டுதல் ஆகிய பணிகள்	370மீ	2440ச.மீ	2,08,70,000/–

02. பரிந்துரை செய்தவரின் விவரம் : மேற்பார்வைபொறியாளர் /பே.சா.து.

03. எந்த துறைக்காக இப்பணி செயலாக்கம் : பேருந்து சாலைகள் துறை

04. சம்பந்தப்பட்ட துறையால் அனுமதி : ஆம், அளிக்கப்பட்டது.

05. தொழில் நுட்ப ஒப்புதல் அளித்த : தலைமைப் பொறியாளர் (பொது)
அதிகாரி செயல்முறை ஆணை எண் மற்றும் தேதி : எண்: /2015–16 நாள்:

06. மதிப்பீடு எந்த வருடத்தின் அட்டவணை விலைப்பட்டியல் முன் வைத்து தயாரிக்கப்பட்டது : 2014 – 2015

07. மதிப்பீட்டின் தொகை :

(அ) பணி செலவினம் மட்டும்	:	ரூ. 1,78,45,911.90
(ஆ) மேற்பார்வை செலவினம்	:	ரூ. 17,84,591.19
(இ) சிறு மேற்பார்வை செலவினம்	:	ரூ. 4,46,147.80
(இ) மற்றைய எதிர்பாரா செலவு	:	ரூ. 4,36,430.87
(ஈ) தரக்கட்டுப்பாடு செலவு	:	ரூ. 1,78,459.12
(உ) உடல் உழைப்போர் நலத்திட்டத் தொகை	:	ரூ. 1,78,459.12
		ரூ. 2,08,70,000.00

08. ஒரு சதுர மீட்டருக்கு ஆகும் செலவு	:	ரூ. / ச.மீ
09. ஏற்கனவே எப்போது செய்யப்பட்டது	:	
10. மதிப்பீட்டிற்கு ஒப்புதல் அளித்த குழுவின் பெயர், தீர்மான எண். மற்றும் தேதி, நாள்	:	மண்டலம் 13 வார்டு குழுவின் தீர்மானம் பின்னர் பெறப்படும்.
11. வரைப்படம் வைக்கப்பட்டுள்ளதா ?	:	ஆம்
12. நிதியின் மூலத்தன்மை	:	மூலதன நிதி
(அ) வரவு செலவு ஒதுக்கீடு	:	
(ஆ) மதிப்பீடுகளுக்கு இதுவரை ஒதுக்கப்பட்ட நிதி	:	ரூ.
(இ) மீதம் உள்ள நிதி (அ–ஆ)	:	ரூ.
(ஈ) இக்கோப்பில் குறிப்பிட்டுள்ள பணிக்கு தேவைப்படும் நிதி	:	ரூ.2,08,70,000.00

மேற்குறிப்பிட்டுள்ள பணிக்காக தயாரிக்கப்பட்டுள்ள ரூ.2,08,70,000.00/–க்கான,2014–2015ம் ஆண்டின் அலுவலக விலைப்பட்டியலின்படி தயாரிக்கப்பட்டுள்ள மதிப்பீட்டிற்கு ஆட்சி முறை ஒப்பளிப்பு மற்றும் இப்பணியின் அவசர மற்றும் அவசியம் கருதி பணிக்கான ஒப்பம் கோரவும் சென்னை மாநகராட்சி முனிசிபல் சட்டம் விதி 1919ன் கீழ் திருத்தப்பட்ட சட்டப்பிரிவு விதி78(பி)ன் படி நிலைக்குழு (பணிகள்) மற்றும் நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

"ஏற்கனவே நிலைக்குழு (பணிகள்) கூட்டம் 22.07.2015 அன்று முடிவடைந்த நிலையில் இப்பொருளின் அவசரம் மற்றும் அவசியத்தன்மையை கருத்தில் கொண்டு வார்டுகுழு தீர்மானம் பெறப்படவேண்டும் என்ற நிபந்தனையுடன் 03.08.2015 அன்று தீர்மான எண்.181/2015ன்படி இதற்கு நிலைக்குழு(பணிகள்) சுற்றின் மூலம் பெரும்பான்மை உறுப்பினர்களின் பரிந்துரையை பெற்று நிலைக்குழு (வ.வி.ம.நி)வின் மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது ".

"ஏற்கனவே நிலைக்குழு (வ.வி.ம.நி) வின் கூட்டம் 24.07.2015 அன்று முடிவடைந்த நிலையில் இப்பொருளின் அவசரம் மற்றும் அவசியத்தன்மையை கருத்தில் கொண்டு 03.08.2015 அன்று தீர்மான எண்.209/2015ன்படி இதற்கு நிலைக்குழு (வ.வி.ம.நி)வின் சுற்றின் மூலம் பெரும்பான்மை உறுப்பினர்களின் பரிந்துரையை பெற்று மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது ".

"இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது"

****

மி.து.ந.க.எண்/வடக்கு/3462/2015

முதன்மை செயலர் மற்றும் ஆணையளர் அவர்களின் 29.07.2015 நாளிட்ட குறிப்பு

தீர்மான எண்.404/2015 **பொருள் எண்.53**

மறு மின்னணு ஒப்பம் –மண்டலம்–4 , வார்டு .37,44,45 மற்றும் 46ல் பல்வேறு தெருக்களில் 490 எண்ணிக்கையில் தெருவிளக்கு கம்பங்கள் பிட்டிங்குகள் 7 ஆண்டுகள் உத்திரவாதத்துடன் வழங்கி, நிறுவி, சோதித்து இயக்கி வைக்கும் பணி–3.7.2015 தொழில் நுட்ப ஆவணம் அன்று திறக்கப்பட்டது – குறைந்த ஒப்பப்புள்ளி ஒப்புதலுக்காக பரிந்துரைக்க அனுமதி

1 . பணியின் பெயர் : மண்டலம்–4, வார்டு–37,44,45 மற்றும் 46ல் பல்வேறு தெருக்களில் 490 எண்ணிக்கையில் தெருவிளக்கு கம்பங்கள் எல்.ஈ.டி.பிட்டிங்குகள் 7 ஆண்டுகள் உத்திரவாதத்துடன் வழங்கி, நிறுவி, சோதித்து இயக்கி வைக்கும் பணி

வ. எண்	மதிப்பீட்டின் எண்	மதிப்பீட்டு தொகை ரூ	பணியிடம்	இணை ஆணையர் (பணிகள் ஒப்புதல் பெற்ற நாள்
1	L/2014-15/28246	3775000	MPM st Main Road div- 45	21.03.2015
2	L/2014-15/28347	1896000	Palla street in div- 46	21.03.2015
3	L/2014-15/28303	2602000	A-B Kalyanapuram div- 46	21.03.2015
4	L/2014-15/28232	4986000	R.R Nagar (A Block to J Block) div- 37	21.03.2015
5	L/2014-15/28350	2208000	Vyasar Nagar and Shanthi nagar div- 45	21.03.2015
6	L/2014-15/28244	2283000	Foot Over Bridge at North Avenue Road div- 37	21.03.2015
7	L/2014-15/28245	2585000	MPM Street Main Road div- 44	21.03.2015

2. திட்டக் குறியீடு எண். : 05/L/7318,7301,7317,7298,7299,7297,7300/2014-15

3 மதிப்பீட்டின் தொகை அலுவலக : 2014–15 விலைப்பட்டில் எடுத்துக் கொள்ளப்பட்ட ஆண்டு

4. அ. பணியின் செலவினம் : ரூ. 17270450.56

ஆ .உபரி செலவினம் : ரூ. 434036.19

இ . மேற்பார்வை செலவு : ரூ. 1726306.1

ஈ . சிறு மேற்பார்வை செலவு : ரூ. 431576.54

உ. த .நா தொ.மே நிதி 1% : ரூ. 172630.61

ஊ. மின்சாரம் செலவினம் : ரூ. 300000.00

மொத்தம் : ரூ. 2,03,35,000.00

5. எந்தெந்த பத்திரிக்கையில் ஒப்பம் பிரசுரிக்கப்பட்டது/நாள் : சென்னை மாநகராட்சி மலர் – 07.05.2015
தி நியு இண்டியன்எக்ஸ்பிரஸ் – 07.05.2015
மக்கள் குரல் – 07.05.2015

6. ஒப்ப படிவம் பெற குறிக்கப்பட்ட இறுதி நாள் : 05.06.2015 3.00 pm

7. ஒப்பந்தப் புள்ளி ஏற்றுக்கொள்வதற்கான கடைசி நாள் : 05.06.2015 (இடைத்தேர்தல் காரணமாக 3.7.15 திறக்கப்பட்டது) (நிதி ஆவணதிறப்பு நாள் 13.7.15)

8. ஒப்பம் சென்னை மாநகராட்சி செய்தி மலரில் பிரசுரிக்கப்பட்ட நாளிலிருந்து ஒப்பம் பெறுவதற்கு குறைந்தது 15 நாட்கள் ஒதுக்கப்பட்டதா, ஆம் எனில்உரிய அலுவலரின் ஒப்புதல் பெற்ற விவரம் குறிப்பிடவும். : ஆம்

9. ஒப்பத்திற்கான மாதிரியை,நிறுவனங்கள்

வழங்குவதற்கான இறுதி நாள் : 19.05.2015

10.மாதிரி அளித்த நிறுவனங்களின் விவரம் :

வ. எண்.	மாதிரி அளித்த நிறுவனங்கள்
1	M/s. Sabhari Electrical
2	M/s. Veera Electricals
3	M/s. Murugan Electrical Traders
4	M/s. Orient Poles
5	M/s. RKM Electrical
6	M/s. Balamurugan Electrical Contractor
7	M/s. P&C Project PVT Ltd
8	M/s. Kumaran Industries

11. மாதிரி தேர்ச்சி பெற்ற நிறுவனங்களின் விவரம் :

வ. எண்.	தேர்ச்சி பெற்ற நிறுவனங்கள்
1	M/s. Orient Poles.
2	M/s. Sabhari Electrical.
3	M/s. Murugan Electrical Traders
4	M/s. RKM Electrical
5	M/s. Balamurugan Electrical Contractor

12. எத்தனை ஒப்ப நாமூனாக்கள் விற்பனை செய்யப்பட்டன. : மின்னணு ஒப்பம் (இணைய தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்யப்பட்டுள்ளது)

13. எத்தனை ஒப்பங்கள் பெறப்பட்டன : இரண்டு

14. ஒப்பத்தில் பங்கேற்றவர் விவரம்

வ. எண்.	ஒப்பத்தில் பங்கேற்றவர் பெயர் திருவாளர்.
1	M/s. Orient Poles.
2	M/s. Sabhari Electrical.

15. ஒப்பத்தில் பங்கேற்ற இரு நிறுவனங்கள் தொழில் நுட்ப ஆவணத்தில் (Technical Bid) தேர்ச்சி பெற்றுள்ளனர். இரு நிறுவனங்களின் நிதி ஆவணம் அடங்கிய மின்னனு ஒப்பம் 13.07.2015 அன்று திறக்கப்பட்டது.

16. நிதி ஆவணத்தில் நிறுவனங்கள் அளித்த ஒப்பப்புள்ளியின் விவரம்:

வ. எண்.	ஒப்பத்தில் பங்கேற்றவர் பெயர் திருவாளர்.	பணியின் அலுவலக மதிப்பு (2014–15 ஆண்டு விலை விகிதம்) ரூ.	ஒப்பந்ததாரரின் ஒப்பத் தொகை ரூ.	2014–15 ஆண்டு விலை விகிதம் விழுக்காடு அதிகம்./ குறைவு	தற்போது ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ள 2015–16 ஆண்டு விலை விகிதம் விழுக்காடு அதிகம்./ குறைவு
1	ஓரியன்ட் போல்ஸ்	**1,72,22,628.36**	**2,29,74,101**/-	(+)33.39 % அதிகம்	(+)7.82% அதிகம்
2	சபரி எலக்ட்டிரிகல்ஸ்	**1,72,22,628.36**	**2,19,83,712**/-	(+)27.64 % அதிகம்	(+)3.17 % அதிகம்

17. குறைந்த ஒப்பம் அளித்தவருடன் பேச்சுவார்த்தை ஆம் மூன்று பேச்சுவார்த்தைகள்

தேவையா ? ஆம் எனில் நடத்தப்பட்ட நாள். : நாள் 17,22,23.07.15. மேலும் குறைக்க மறுத்துள்ளார்

18. பேச்சுவார்த்தைக்குப்பின் ஒப்பத்தொகை/ ஒப்ப சதவீதம். : ரூ. 2,12,86,456/– (+) 23.60 % அதிகம்

19. குறைந்த ஒப்ப சதவீதம் அளித்த ஒப்பந்ததாரரின் பதிவின் நிலை, பதிவு நாள், : 1 வது வகுப்பு, நாள்:27.09.2004

20. கூடுதல் பினை வைப்புத் தொகை செலுத்தப் பட்ட விபரம் : –

அ. கேட்புகாசோலை எண். / நாள். : –

வங்கியின் பெயர்.

21. பணிக்கான நிதி ஆதாரம் உள்ளதா ? : உள்ளது.

அ. வரவு செலவு திட்ட தலைப்பு. : மூலதனம்

22. ஒப்பந்தப் புள்ளி செல்லத்தக்க காலம். : 90 நாட்கள்

23. சந்தை விலை கணக்கிடப்பட்ட நாள் : 04.07.2015

மேற்குறிப்பிட்ட பணிக்காக பெறப்பட்ட இரண்டு ஒப்பங்களில் பேச்சு வார்த்தைக்குப்பின் திருவாளர். சபரி எலக்ட்டிரிகல்ஸ் அவர்கள் அளித்த ஒப்பத் தொகை ரூ.2,12,86,456/– ஆகும். இதன்படி அவர் அளித்த ஒப்ப விழுக்காடு 2014–15 ம் ஆண்டின் அலுவலக விலையை விட (+) 23.60 % அதிகம் மற்றும் 2015–16 ம் ஆண்டின் அலுவலக விலையை விட (–) 0.10 % குறைவு. மன்றத் தீர்மானத்தின்படி (தீர்மான எண் 512/2007, நாள். 25/09/07)

1. அடிப்படை இனங்கள் தொழிலாளர்களின் ஊதியம் மற்ற பொருட்களின் சந்தை விலைகள் கொண்டு சந்தை விலை விவரப் பட்டியல் தயாரிப்பதற்கும் (source – Builders Association Hindu news paperல்) பிரசுரிக்கப்பட்டதை கையாளவும்,
2. அவ்வாறு தயாரிக்கப்பட்ட சந்தை விவரப்பட்டியல் கொண்டு ஒப்பந்தங்கள் பெறப்படும் பொழுது, ஒப்பீடு செய்து அதற்கேற்றவாறு ஒப்பந்தங்களைக் கையாளவும்,
3. மேலும், சந்தை விலைகளின் மாற்றங்கள் நிகழும் பொழுது, அதற்கேற்றவாறு சந்தை விலை விவரப்பட்டியல் மாற்றியமைத்து ஒப்பீடு செய்து ஒப்பந்தங்களைக் கையாளவும் மன்றம் அனுமதி அளித்துள்ளது.

எனவே, இப்பணிகளின் தன்மையை (Nature of Work) கருத்தில் கொண்டு 04.07.2015 நாளிட்ட சந்தை விலைப்படி கணக்கிட்டு ஒப்பிடுகையில் ஒப்பந்ததாரர் அளித்துள்ள தொகையான ரூ.2,12,86,456/–ஆனது, சந்தை விலையான ரூ.2,32,14,331.06 உடன் ஒப்பிடுகையில் (–) 8.30 சதவீதம் குறைவாக உள்ளது.

ஒப்பீட்டுத் தாள் கோப்பில் இணைக்கப்பட்டுள்ளது.

2014–15 ம் ஆண்டின் அலுவலக விலையை விட(+) 23.60% அதிகம் மற்றும் 2015–16ம் ஆண்டின் அலுவலக விலையை விட (–) 0.10% குறைவாக அளித்த திருவாளர் சபரி எலக்ட்டிரிகல்ஸ் ஒப்பத் தொகை. ரூ.2,12,86,456/– ஆகும். இந்த கோப்பு ஒப்ப கூர்ந்தாய்வு குழு பரிந்துரைக்காக சமர்ப்பிக்கப்பட்டது .29.7.2015 அன்று நடைபெற்ற ஒப்ப கூர்ந்தாய்வு குழு பரிந்துரைப்படி திருவாளர். சபரி எலக்ட்டிரிகல்ஸ் ஒப்பப்புள்ளி ஏற்புதலுக்காக பரிந்துரைக்கப்படுகிறது.

எனவே,

1. மண்டலம்–4, வார்டு–37,44,45 மற்றும் 46ல் பல்வேறு தெருக்களில் 490 எண்ணிக்கையில் தெருவிளக்கு கம்பங்கள் எல்.ஈ.டி. பிட்டிங்குகள் 7 ஆண்டுகள் உத்திரவாதத்துடன் வழங்கி, நிறுவி, சோதித்து இயக்கி வைக்கும் பணிக்கு ஒப்பப்புள்ளி அளித்துள்ள திருவாளர். சபரி எலக்ட்டிரிகல்ஸ் அவர்கள் அளித்த துறையின் மதிப்பீட்டை விட (+)23.60% அதிகம், 2015–16ம் ஆண்டின் அலுவலக விலையை விட (–)0.10% குறைவு மற்றும் 04.07.2015 நாளிட்ட சந்தை விலையை விட (–) 8.30 சதவீதம் குறைவாக அளித்த ஒப்பத்தை ஏற்கவும், மற்றும் ரூ. 2,12,86,456/– தொகைக்கு பணி ஆணை வழங்கவும்.

2. இந்த பணிக்கான செலவினத்தை மின்துறையின் ஒப்புதல் பெற்ற மதிப்பீட்டின் கீழ்

மேற்கொள்ளவும்.

3. ஒப்ப நாமூனாவில் குறிப்பிட்டுள்ள நிபந்தனையின்அடிப்படையில் துறையின் அளவீட்டு புத்தகத்தில் குறிக்கப்பட்டு பணம் பட்டுவாட செய்யவும்

மேற்காணும் 1 முதல் 3 வரை உள்ள இனங்களுக்கு ஒளிவு மறைவற்ற ஒப்பந்தபுள்ளி சட்டம் 1998 பிரிவு 7(1) & (2) ன்படி நிலைக்குழு (பணிகள்) மற்றும் நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

"ஏற்கனவே நிலைக்குழு (பணிகள்) கூட்டம் 22.07.2015 அன்று முடிவடைந்த நிலையில் இப்பொருளின் அவசரம் மற்றும் அவசியத்தன்மையை கருத்தில் கொண்டு 03.08.2015 அன்று தீர்மான எண்.166/2015ன்படி இதற்கு நிலைக்குழு(பணிகள்) சுற்றின் மூலம் பெரும்பான்மை உறுப்பினர்களின் பரிந்துரையை பெற்று நிலைக்குழு (வ.வி.ம.நி)வின் மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது ".

"ஏற்கனவே நிலைக்குழு (வ.வி.ம.நி) வின் கூட்டம் 24.07.2015 அன்று முடிவடைந்த நிலையில் இப்பொருளின் அவசரம் மற்றும் அவசியத்தன்மையை கருத்தில் கொண்டு 03.08.2015 அன்று தீர்மான எண்.190/2015ன்படி இதற்கு நிலைக்குழு (வ.வி.ம.நி)வின் சுற்றின் மூலம் பெரும்பான்மை உறுப்பினர்களின் பரிந்துரையை பெற்று மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது ".

"இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது"

****

மி.து.ந.க.எண்/வடக்கு/5443/2015

முதன்மை செயலர் மற்றும் ஆணையளர் அவர்களின் 29.07.2015 நாளிட்ட குறிப்பு

தீர்மான எண்.405/2015 **பொருள் எண்.54**

மறு மின்னணு ஒப்பம் –மண்டலம்–4 , பல்வேறு தெருக்களில் 731 எண்ணிக்கையில் தெருவிளக்கு கம்பங்கள் எல்.ஈ.டி. பிட்டிங்குகள் 7 ஆண்டுகள் உத்திரவாதத்துடன் வழங்கி, நிறுவி, சோதித்து இயக்கி வைக்கும் பணி–3.7.2015 தொழில் நுட்ப ஆவணம் அன்று திறக்கப்பட்டது – குறைந்த ஒப்பப்புள்ளி ஒப்புதலுக்காக பரிந்துரைத்தல் அனுமதி

1 . பணியின் பெயர்: மண்டலம்–4 , பல்வேறு தெருக்களில் 731 எண்ணிக்கையில் தெருவிளக்கு கம்பங்கள் எல்.ஈ.டி. பிட்டிங்குகள் 7 ஆண்டுகள் உத்திரவாதத்துடன் வழங்கி, நிறுவி, சோதித்து இயக்கி வைக்கும் பணி.

வ. எண்	மதிப்பீட்டின் எண்	மதிப்பீட்டு தொகை ரூ,	பணியிடம்	இணை ஆணையர் (பணிகள் ஒப்புதல் பெற்ற நாள்
1	L/2014-15/ 28384	2807400	T.H Road (From Cross Road Jn to Tolgate Jn) in Dn 39	26.03.2015
2	L/2014-15/ 28385	3468200	T.H Road (From Old Vaidyanathan St to A.E Koil St) in Dn-40	26.03.2015
3	L/2014-15/ 28386	2114500	T.H Road (From Old Cross road Jn to A.E Koil St) in Dn-39	26.03.2015
4	L/2014-15/ 28387	1487800	Ennore High Road(From Parameswari Nagar to IOC Bus Stand) in Dn-38	26.03.2015
5	L/2014-15/ 28934	1503400	Pudumanai Kuppam in Dn- 43	26.03.2015
6	L/2014-15/ 28943	1263800	Cross Road in Dn-40	26.03.2015
7	L/2014-15/ 28944	3504300	Sundaram Pillai Nagar in Dn-38	26.03.2015
8	L/2014-15/ 29008	1737300	Vedhanda Murgappan main Road in Dn-34	26.03.2015
9	L/2014-15/ 29030	1022200	North Avenue Road in Dn-35	26.03.2015
10	L/2014-15/ 29040	1068300	South Avenue Road in Dn-35	26.03.2015
11	L/2014-15/ 29046	1243000	Rlswan Road in Dn-34	26.03.2015
12	L/2014-15/ 29288	2485000	Sivaji Nagar in Dn-41	26.03.2015
13	L/2014-15/ 29299	1854000	Thiruvallur Nagar in Dn-41	26.03.2015
14	L/2014-15/ 29312	1019000	Undiveeran St, Pitty Munusamy St in Dn-47	26.03.2015
15	L/2014-15/ 29319	2167000	Theyagappa St, Ekkabairam St in Dn-47	26.03.2015
16	L/2014-15/ 29019	2582500	Tondiarpet High Road in Dn-35	26.03.2015

17	L/2014-15/ 29321	1479000	Jawanmal Sowcar St, Egappan St, Muniyappan St in Dn-74	26.03.2015
18	L/2014-15/ 29078	2047700	Ethirajsami Salai in Dn-36	26.03.2015
19	L/2014-15/ 29331	675000	Ramujyam Iyer St in Dn-48	26.03.2015
20	L/2014-15/ 29333	925000	Muthaiah Mudali St in Dn-48	26.03.2015
21	L/2014-15/ 29337	874000	Parthasarathy Main St in Dn-48	26.03.2015

2. திட்டக் குறியீடு எண்.:
05/L/7572,7573,7559,7571,7570,7553,7558,7560,7552,7556,7551,7569,7561,7562,7563,7554,7564,7555,7566,7567,7565/2014-15

3. மதிப்பீட்டின் தொகை அலுவலக விலைப்பட்டில் எடுத்துக் கொள்ளப்பட்ட ஆண்டு : **2014–15**

4. அ. பணியின் செலவினம் : ரூ. 31836979.64
ஆ .உபரி செலவினம் : ரூ. 813428.11
இ . மேற்பார்வை செலவு : ரூ. 3183697.96
ஈ . சிறு மேற்பார்வை செலவு : ரூ. 795924.5
உ. த .நா தொ.மே நிதி 1% : ரூ. 318369.79
ஊ. மின்சாரம் செலவினம் : ரூ. 380000
மொத்தம் : **ரூ. 3,73,28,400.00**

5. எந்தெந்த பத்திரிக்கையில் ஒப்பம் பிரசுரிக்கப்பட்டது/நாள் : சென்னை மாநகராட்சி மலர் –21.05.2015
தி நியு இண்டியன்எக்ஸ்பிரஸ் -21.05.2015
மக்கள் குரல் **–21.05.2015**

6. ஒப்ப படிவம் பெற குறிக்கப்பட்ட இறுதி நாள் : **19.06.2015 3.00** pm

7. ஒப்பந்தப் புள்ளி ஏற்றுக்கொள்வதற்கான கடைசி நாள் : **19.06.2015 (** இடைத்தேர்தல் காரணமாக **3.7.15** திறக்கப்பட்டது **) (**நிதி ஆவணதிறப்பு நாள் **13.7.15)**

8. ஒப்பம் சென்னை மாநகராட்சி செய்தி மலரில் பிரசுரிக்கப்பட்ட நாளிலிருந்து ஒப்பம் பெறுவதற்கு குறைந்தது **15** நாட்கள் ஒதுக்கப்பட்டதா, ஆம் எனில்உரிய அலுவலரின் ஒப்புதல் பெற்ற விவரம் குறிப்பிடவும். : ஆம்

9. ஒப்பத்திற்கான மாதிரியை,நிறுவனங்கள் வழங்குவதற்கான இறுதி நாள் :**05.06.2015**

10.மாதிரி அளித்த நிறுவனங்களின் விவரம் :

வ.எண்.	மாதிரி அளித்த நிறுவனங்கள்
1	M/s. Sabhari Electrical
2	M/s. Vin Semi Conductor
3	M/s. RKM Electrical
4	M/s. Veera Electricals
5	M/s. P&C Project PVT Ltd

11. மாதிரி தேர்ச்சி பெற்ற நிறுவனங்களின் விவரம் :

வ.எண்.	தேர்ச்சி பெற்ற நிறுவனங்கள்
1	M/s. RKM Electrical.
2	M/s. Sabhari Electrical.

12. எத்தனை ஒப்ப நாமூனாக்கள் விற்பனை செய்யப்பட்டன. : மின்னணு ஒப்பம் (இணைய தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்யப்பட்டுள்ளது)

13. எத்தனை ஒப்பங்கள் பெறப்பட்டன : இரண்டு

14. ஒப்பத்தில் பங்கேற்றவர் விவரம்

வ.எண்.	ஒப்பத்தில் பங்கேற்றவர் பெயர் திருவாளர்.
1	M/s. RKM Electrical.
2	M/s. Sabhari Electrical.

15. ஒப்பத்தில் பங்கேற்ற இரு நிறுவனங்கள் தொழில் நுட்ப ஆவணத்தில் (Technical Bid) தேர்ச்சி பெற்றுள்ளனர். இரு நிறுவனங்களின் நிதி ஆவணம் அடங்கிய மின்னனுஒப்பம் 13.07.2015 அன்று திறக்கப்பட்டது.

16. நிதி ஆவணத்தில் நிறுவனங்கள் அளித்த ஒப்பப்புள்ளியின் விவரம்:

வ. எண்.	ஒப்பத்தில் பங்கேற்றவர் பெயர் திருவாளர்.	பணியின் அலுவலக மதிப்பு (2014–15 ஆண்டு விலை விகிதம்) ரூ.	ஒப்பந்ததாரரின் ஒப்பத் தொகை ரூ.	2014–15 ஆண்டு விலை விகிதம் விழுக்காடு அதிகம்./ குறைவு	தற்போது ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ள 2015–16 ஆண்டு விலை விகிதம் விழுக்காடு அதிகம்./ குறைவு
1	ஆர். கே. எம். எலக்ட்டிரிகல்ஸ்	**3,17,47,464.18**	**4,39,27,377/–**	(+)38.36 % அதிகம்	(+)15.82% அதிகம்
2	சபரி எலக்ட்டிரிகல்ஸ்	**3,17,47,464.18**	**4,03,28,197/–**	(+)27.03% அதிகம்	(+)6.33 % அதிகம்

17. குறைந்த ஒப்பம் அளித்தவருடன் பேச்சுவார்த்தை தேவையா ? ஆம் எனில் நடத்தப்பட்ட நாள். : ஆம் மூன்று பேச்சுவார்த்தைகள் நாள் 17,22,23.07.15. மேலும் குறைக்க மறுத்துள்ளார்

18. பேச்சுவார்த்தைக்குப்ப் பின் ஒப்பத்தொகை/ ஒப்ப சதவீதம். : ரூ. 3,78,87,827/– (+) 19.34 % அதிகம்

19. குறைந்த ஒப்ப சதவீதம் அளித்த ஒப்பந்ததாரரின் பதிவின் நிலை, பதிவு நாள், : 1 வது வகுப்பு, நாள்:27.09.2004

20. கூடுதல் பினை வைப்புத் தொகை செலுத்தப் பட்ட விபரம் : –

அ. கேட்புகாசோலை எண். / நாள். வங்கியின் பெயர். : –

21. பணிக்கான நிதி ஆதாரம் உள்ளதா ? : உள்ளது.

அ. வரவு செலவு திட்ட தலைப்பு. : மூலதனம்

22. ஒப்பந்தப் புள்ளி செல்லத்தக்க காலம். : 90 நாட்கள்

23. சந்தை விலை கணக்கிடப்பட்ட நாள் : 04.07.2015

மேற்குறிப்பிட்ட பணிக்காக பெறப்பட்ட இரண்டு ஒப்பங்களில் பேச்சு வார்த்தைக்குப்பின் திருவாளர். சபரி எலக்ட்டிரிகல்ஸ் அவர்கள் அளித்த ஒப்பத் தொகை ரூ.3,78,87,827/– ஆகும். இதன்படி அவர் அளித்த ஒப்ப விழுக்காடு 2014–15 ம் ஆண்டின் அலுவலக விலையை விட (+) 19.34% அதிகம் மற்றும் 2015–16 ம் ஆண்டின் அலுவலக விலையை விட (–) 0.10 % குறைவு.

மன்றத் தீர்மானத்தின்படி (தீர்மான எண் 512/2007, நா. 25/09/07)

01) அடிப்படை இனங்கள் தொழிலாளர்களின் ஊதியம் மற்ற பொருட்களின் சந்தை விலைகள் கொண்டு சந்தை விலை விவரப் பட்டியல் தயாரிப்பதற்கும் (source – Builders Association Hindu news paperல்) பிரசுரிக்கப்பட்டதை கையாளவும்,

02) அவ்வாறு தயாரிக்கப்பட்ட சந்தை விவரப்பட்டியல் கொண்டு ஒப்பந்தங்கள் பெறப்படும் பொழுது, ஒப்பீடு செய்து அதற்கேற்றவாறு ஒப்பந்தங்களைக் கையாளவும்,

03) மேலும், சந்தை விலைகளின் மாற்றங்கள் நிகழும் பொழுது, அதற்கேற்றவாறு சந்தை விலை விவரப்பட்டியல் மாற்றியமைத்து ஒப்பீடு செய்து ஒப்பந்தங்களைக் கையாளவும் மன்றம் அனுமதி அளித்துள்ளது.

எனவே, இப்பணிகளின் தன்மையை (Nature of Work) கருத்தில் கொண்டு 04.07.2015 நாளிட்ட சந்தை விலைப்படி கணக்கிட்டு ஒப்பிடுகையில் ஒப்பந்ததாரர் அளித்துள்ள தொகையான ரூ.3,78,87,827/– ஆனது, சந்தை விலையான ரூ.4,07,25,877.07 உடன் ஒப்பிடுகையில் (–) 6.97 சதவீதம் குறைவாக உள்ளது.

ஒப்பீட்டுத் தாள் கோப்பில் இணைக்கப்பட்டுள்ளது.

2014–15 ம் ஆண்டின் அலுவலக விலையை விட(+)19.34% அதிகம் மற்றும் 2015–16ம் ஆண்டின் அலுவலக விலையை விட (–)0.10% குறைவாக அளித்த திருவாளர் சபரி எலக்ட்டிரிகல்ஸ் ஒப்பத் தொகை. ரூ. 3,78,87,827/– ஆகும். இந்த கோப்பு ஒப்ப கூர்ந்தாய்வு குழு பரிந்துரைக்காக சமர்ப்பிக்கப்பட்டது 29.7.2015 அன்று நடைபெற்ற ஒப்ப கூர்ந்தாய்வு குழு பரிந்துரைப்படி திருவாளர். சபரி எலக்ட்டிரிகல்ஸ் ன் ஒப்பப்புள்ளி ஏற்புதலுக்காக பரிந்துரைக்கப்படுகிறது.

எனவே,

1. மண்டலம்–4, பல்வேறு தெருக்களில் 731 எண்ணிக்கையில் தெருவிளக்கு கம்பங்கள் எல்.ஈ.டி. பிட்டிங்குகள் 7 ஆண்டுகள் உத்திரவாதத்துடன் வழங்கி, நிறுவி, சோதித்து இயக்கி வைக்கும் பணிக்கு ஒப்பப்புள்ளி அளித்துள்ள திருவாளர். சபரி எலக்ட்டிரிகல்ஸ் அவர்கள் அளித்த துறையின் மதிப்பீட்டை விட (+) 19.34% அதிகம், 2015–16 ம் ஆண்டின் அலுவலக விலையை விட (–)0.10% குறைவு மற்றும் 04.07.2015 நாளிட்ட சந்தை விலையை விட (–)6.97 சதவீதம் குறைவாக அளித்த ஒப்பத்தை ஏற்கவும், மற்றும் ரூ.3,78,87,827/– தொகைக்கு பணி ஆணை வழங்கவும்,
2. இந்த பணிக்கான செலவினத்தை மின்துறையின் ஒப்புதல் பெற்ற மதிப்பீட்டின் கீழ் மேற்கொள்ளவும்,
3. ஒப்ப நாமூனாவில் குறிப்பிட்டுள்ள நிபந்தனையின் அடிப்படையில் துறையின் அளவீட்டு புத்தகத்தில் குறிக்கப்பட்டு பணம் பட்டுவாட செய்யவும்,

மேற்கண்ட 1 முதல் 3 வரை உள்ள இனங்களுக்கும் ஒளிவு மறைவற்ற ஒப்பந்தபுள்ளி சட்டம் 1998 பிரிவு 7(1) & (2)ன்படி நிலைக்குழு (பணிகள்) மற்றும் நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

"ஏற்கனவே நிலைக்குழு (பணிகள்) கூட்டம் 22.07.2015 அன்று முடிவடைந்த நிலையில் இப்பொருளின் அவசரம் மற்றும் அவசியத்தன்மையை கருத்தில் கொண்டு 03.08.2015 அன்று தீர்மான எண்.173/2015ன்படி இதற்கு நிலைக்குழு(பணிகள்) சுற்றின் மூலம் பெரும்பான்மை உறுப்பினர்களின் பரிந்துரையை பெற்று நிலைக்குழு (வ.வி.ம.நி)வின் மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது ".

"ஏற்கனவே நிலைக்குழு (வ.வி.ம.நி) வின் கூட்டம் 24.07.2015 அன்று முடிவடைந்த நிலையில் இப்பொருளின் அவசரம் மற்றும் அவசியத்தன்மையை கருத்தில் கொண்டு 03.08.2015 அன்று தீர்மான எண்.197/2015ன்படி இதற்கு நிலைக்குழு (வ.வி.ம.நி)வின் சுற்றின் மூலம் பெரும்பான்மை உறுப்பினர்களின் பரிந்துரையை பெற்று மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது ".

"இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது"

****

மி.து.ந.க.எண்/மையம்/ 3464/2015

முதன்மை செயலர் மற்றும் ஆணையளர் அவர்களின் 29.07.2015 நாளிட்ட குறிப்பு

தீர்மான எண்.406/2015 **பொருள் எண்.55**

மறு மின்னணு ஒப்பம் – மின் துறை – மண்டலம் 6–ல் பல்வேறு இடங்களில் 301 எண்ணிக்கையில் கம்பங்கள் எல் இ டி விளக்குகளுடன் 7 ஆண்டுகள் மாற்று பிட்டிங் வழங்கும் உத்திரவாதத்துடன் வழங்கி, நிறுவும் பணி – தொழில் நுட்ப ஆவணம் 3.7.15 அன்று திறக்கப்பட்டது – குறைந்த ஒப்பப்புள்ளி ஒப்புதலுக்காக பரிந்துரைத்தல் – அனுமதி

1 . பணியின் பெயர் : மண்டலம் 6–ல் பல்வேறு இடங்களில் 301 எண்ணிக்கையில் கம்பங்கள் எல்இடி விளக்குகளுடன் 7 ஆண்டுகள் மாற்று பிட்டிங் வழங்கும் உத்திரவாதத்துடன் வழங்கி, நிறுவும் பணி.

வ. எண்	மதிப்பீட்டின் எண்	மதிப்பீட்டு தொகை ரூ,	பணியிடம்	இணை ஆணையர் (பணிகள் ஒப்புதல் பெற்ற நாள்
1	L/2014-15/ 22720	2498600	Perambur high road inDn 70	20.315
2	L/2014-15/ 22722	2355700	Perambur high road inDn 70	20.315
3	L/2014-15/ 27801	1292400	Jambulingam main road in Dn 65	20.315
4	L/2014-15/ 27794	2234100	Jambulingam main road in Dn 67	20.315
5	L/2014-15/ 27859	3493800	Kannigapuram area (phase 2) in Dn 72	20.315
6	L/2014-15/ 27797	2007500	Kuravan kulam Subba naidu street , Govindan street and surrounding area in Dn 78	20.315
7	L/2014-15/ 27845	2300000	Demellows road in Dn 77	20.315

2. திட்டக் குறியீடு எண். : 05/L/7198,7199,7325,7323,7357,7326,7324,/2014-15

3. மதிப்பீட்டின் தொகை அலுவலக விலைப்பட்டில் எடுத்துக் கொள்ளப்பட்டஆண்டு : **2014–15**

4. அ. பணியின் செலவினம் : ரூ. 13812248.26

ஆ .உபரி செலவினம் : ரூ. 345198.23

இ . மேற்பார்வை செலவு : ரூ. 1381224.82

ஈ . சிறு மேற்பார்வை செலவு : ரூ. 345306.21

உ. TNMWGW FUND 0.3% : ரூ. 138122.48

ஊ. மின்சாரம் செலவினம் : ரூ. 160000.00

எ. Road Restoration charges : ரூ. –

மொத்தம் : **ரூ. 1,61,82,100.00**

5. எந்தெந்த பத்திரிக்கையில் ஒப்பம் பிரசுரிக்கப்பட்டது/நாள் : சென்னை மாநகராட்சி செய்தி மலர் – 7.5.15
தி நியு இண்டியன்எக்ஸ்பிரஸ் -7.5.15
மக்கள் குரல் –7.5.15

6. ஒப்ப படிவம் பெற குறிக்கப்பட்ட இறுதி நாள் : **5.6.15 3.00** pm .

7. ஒப்பந்தப் புள்ளி ஏற்றுக்கொள்வதற்கான : **5.6.15 (**இடைத்தேர்தல் காரணமாக **3.7.15** கடைசி நாள் திறக்கப்பட்டது
(நிதி ஆவணத்திறப்பு நாள் –13.7.**2015)**

8. ஒப்பம் சென்னை மாநகராட்சி செய்தி மலரில்

பிரசுரிக்கப்பட்ட நாளிலிருந்து ஒப்பம் பெறுவதற்கு : ஆம் குறைந்தது 15 நாட்கள் ஒதுக்கப்பட்டதா, ஆம் எனில்உரிய அலுவலரின் ஒப்புதல் பெற்ற விவரம் குறிப்பிடவும்..

9. ஒப்பத்திற்கான மாதிரியை,நிறுவனங்கள் வழங்குவதற்கான இறுதி நாள் : 19.5.15

10.மாதிரி அளித்த நிறுவனங்களின் விவரம் :

வ.எண்.	மாதிரி அளித்த நிறுவனங்கள்
1	சபரி எலக்ட்டிரிகல்ஸ்
2	ஆர். கே. எம். எலக்ட்டிரிகல்ஸ்
3	முருகன் எலக்ட்டிரிகல் டிரேடர்ஸ்
4	பால முருகன் எலக்ட்டிரிகல் கான்ட்ராக்டர்
5	வீரா எலக்ட்ரிகல்ஸ்
6	குமரன் இண்டஸ்டிரிஸ்
7	P&C Project Pvt Ltd
8	ஓரியன்ட் போல்ஸ்

சென்னை மாநகர பகுதியில் உருவாகும் ஏராளமான குப்பைகளால் சுகாதாரக் கேடு ஏற்படா வண்ணம் உடனுக்குடன் அப்புறப்படுத்த வேண்டியது அவசியம் ஆகும். இதற்காக குப்பை தொட்டிகள் வட்டார அளவில் கொள்முதல் செய்ய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்ட நிலையில் 11.06.2014 அன்று துணை ஆணையர் (சுகாதாரம்) அவர்களின் தலைமையில் நடைபெற்ற சீராய்வு கூட்டத்தில் இரும்பு உலோகத்திலான காம்பாக்டர் குப்பை தொட்டிகள் தற்பொழுது சரியான முறையில் கையாளப்படுவதில்லை என்ற காரணத்தினால் அடிக்கடி சேதமடைவதாகவும், பணிகளின் போது வடிவமைப்பால் சிரமம் ஏற்படுவதாகவும், பழுதுபார்க்கும் பணிகளுக்கு தேவையற்ற செலவீனம் ஏற்படுவதாகவும், சிரமத்தை தவிர்க்கும் பொருட்டு இனி வரும் காலங்களில் இரும்பு உலோக குப்பை தொட்டிகளுக்கு பதிலாக அடர்த்திமிகு பிளாஸ்டிக் குப்பை தொட்டிகள் உலக தரத்தில் தரக்குறியீட்டுக்குட்பட்டு கொள்முதல் செய்து பயன்படுத்துமாறு அறிவுறுத்தினார். அதன் அடிப்படையில் மூன்று வட்டார அலுவலகங்களுக்கு 2500 எண்ணிக்கையிலான அடர்த்திமிகு பிளாஸ்டிக் குப்பை தொட்டிகள் உலகதரத்தில் தரக்குறியீட்டுக்குட்பட்ட ஒரு குப்பைத் தொட்டியின் விலை ரூ. 17,000/– வீதம் 2500 தொட்டிகள் ரூ.4,25,00,000/– தோராய மதிப்பீட்டில் கொள்முதல் செய்ய மன்ற தீர்மானம் பெறப்பட்டு, வட்டார அலுவலகங்கள் மூலம் கொள்முதலை மேற்கொள்ள அறிவுறுத்தப்பட்டது. விரைந்து கொள்முதல் செய்வது குறித்த நடவடிக்கை மேற்கொள்ளுமாறு 11.09.2014, 05.11.2014 மற்றும் 24.2.2015 நாளிட்ட நினைவூட்டு குறிப்புகள் அனுப்பபட்டடது.

வடக்கு வட்டார அலுவலகத்தில் அடர்த்திமிகு பிளாஸ்டிக் குப்பைத் தொட்டிகளை கொள்முதல் செய்ய 24.10.2014 மற்றும் 14.11.2014 அன்றும் இரு முறை ஒப்பங்கள் கோரப்பட்டும் ஒப்பந்ததாரர்கள் யாரும் பங்கேற்காததால் ஒப்பங்கள் ரத்து செய்யப்பட்டது. தெற்கு மற்றும் மத்திய வட்டார அலுவலகங்களில் பிளாஸ்டிக் குப்பை தொட்டிகளை கொள்முதல் செய்ய நடவடிக்கை மேற்கொள்ளவில்லை. வட்டார அலுவலகங்கள் மூலம் குப்பைத் தொட்டிகள் கொள்முதல் செய்ய நடவடிக்கை மேற்கொள்ளப்படாத நிலையில், சில மண்டலங்களில் மட்டும் இரும்பிலான குப்பை தொட்டிகள் கொள்முதல் செய்யப்பட்டுள்ளன.

வாகனங்களை பணிக்கு அனுப்புவதற்கு (Marchout) தடையாக உள்ள காரணங்கள் குறித்து துணை ஆணையர் (பணிகள்) மற்றும் துணை ஆணையர் (சுகாதாரம்) ஆகியோர் முன்னிலையில் 19.02.2015 அன்று நடைப்பெற்ற கலந்தாய்வு கூட்டத்தில் மூன்று வட்டாரங்களை சேர்ந்த மேற்பார்வை பொறியாளர் மற்றும் செயற் பொறியாளர்கள் மற்றும் உதவி செயற் பொறியாளர்கள் வாகனங்களில் குப்பை தொட்டிகளால் அடிக்கடி ஏற்படும் பழுதின் காரணமாக இலகுரக காம்பெக்டர் வாகனங்கள் தேவையான எண்ணிக்கை மற்றும் குறித்த நேரத்திலும் March-Out செய்ய இயலவில்லை என தெரிவித்தனர்.

தெருக்களில் பல இடங்களில் குப்பை தொட்டிகள் நிரம்பி வழிவதாகவும் இதனால் சுகாதார கேடு விளைவதாகவும் ஊடகங்கள் மற்றும் செய்தி தாள்களில் சென்னை மாநகராட்சி குப்பை தொட்டிகள் குறித்து எதிர்மறை விமர்சனங்கள் வந்த வண்ணம் உள்ளது என்பதால் முதன்மை செயலர் / ஆணையர் அவர்களின் அறிவுறுத்தலின்படி, 12.03.2015 அன்று துணை ஆணையர் (பணிகள்) அவர்கள் முன்னிலையில் நடைப்பெற்ற சீராய்வுக் கூட்டத்தில் அவசர அவசியத்தை முன்னிட்டு இக்கொள்முதல் பணியினை இயந்திரப் பொறியியல் துறை மூலம் மேற்கொள்ளுமாறு அறிவுறுத்தப்பட்டது.

இயந்திரப் பொறியியல் துறையால் ஒரு வாகனத்திற்கு தோராயமாக 36 குப்பைத் தொட்டிகள் வீதம் 123 இலகுரக காம்பாக்டர் வானங்களுக்கு 4428 எண்ணிக்கையிலான காம்பாக்டர் குப்பைத் தொட்டிகள் தேவைப்படுகின்றது என்றும், ஏற்கனவே மன்றத் தீர்மானத்தில் 2500 எண்ணிக்கையிலான அடர்த்திமிகு பிளாஸ்டிக் காம்பாக்டர் குப்பைத் தொட்டிகள் கொள்முதல் செய்ய நிர்வாக அனுமதி பெறப்பட்டுள்ள

நிலையில் மொத்த தேவையான 4428ல் முதற்கட்டமாக 2500 எண்ணிக்கையிலான அடர்த்திமிகு பிளாஸ்டிக் குப்பைத் தொட்டிகள் கொள்முதல் செய்யலாம் என இயந்திர பொறியியல் துறையால் முதன்மை செயலர் / ஆணையர் அவர்களின் 18.3.2015 நாளிட்ட ஒப்புதல் பெறப்பட்டுள்ளது.

சென்னையில் பல பகுதிகளில் தொழிற்பட்டறைகள், மார்க்கெட் பகுதிகள் மற்றும் மக்கள் தொகை ஆகியவை அதிக அளவில் உள்ளன என்றும் இங்கு அதிக அளவில் தொழிற்சாலை கழிவுகள், மார்க்கெட் கழிவுகள் மற்றும் குப்பைகள் ஆகியவைகளை அகற்ற வேண்டிய நிலை உள்ளது என்றும் மேலும் குறுகலான தெருக்கள் அதிகம் உள்ளதால் கனரக காம்பெக்டர்களை பயன்படுத்த இயலாத நிலை உள்ளதால் இலகுரக காம்பெக்டர் வாகனங்களில் இரும்பு உலோகத்தினலான காம்பெக்டர் குப்பை தொட்டிகளை பயன்படுத்துவதால் காம்பெக்டர் வாகனங்களின் டெயில் கேட் பகுதியில் உள்ள குப்பை தொட்டிகளை தூக்கும்பகுதி (Bin Lifter Area) உடையும் நிலை ஏற்பட்டு வாகனங்கள் அடிக்கடி பழுதாகும் நிலை ஏற்படுவதாக இயந்திர பொறியியல் துறையால் தெரிவிக்கப்பட்டது. இதனால் குப்பைகள் அகற்றும் பணி மிகவும் பாதிப்பு அடைகிறது என்றும் மேலும் கனரக காம்பெக்டர் வாகனங்கள் (14 CUM) க்கு இரும்பு உலோக குப்பை தொட்டிகள் பயன்படுத்துவதால் எந்தவித பாதிப்பும் இல்லை என்று இயந்திர பொறியியல் துறையால் அக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

எனவே, பரிட்சார்த்த முறையில் முதற்கட்டமாக கொள்முதல் செய்யப்படும் அடர்த்திமிகு பிளாஸ்டிக் குப்பைத் தொட்டிகளை இலகுரக வாகனங்கள் பயன்பாட்டிற்கு வழங்கலாம் என கருத்து தெரிவிக்கப்பட்டு 2500 எண்ணிக்கையில் அடர்த்திமிகு பிளாஸ்டிக் குப்பைத் தொட்டிகளை மன்றத்தின் பின்னேற்பிற்க்கு உட்பட்டு இயந்திர பொறியியல் துறை மூலம் கொள்முதல் செய்ய ஒப்பங்கள் கோருவதற்கு ஆணையர் அவர்களின் 18.3.2015 தேதியிட்ட ஆணை இயந்திர பொறியியல துறையால் பெறப்பட்டது.

இதன்படி, 2500 எணணிக்கையில் அடர்த்திமிகு பிளாஸ்டிக் குப்பைத் தொட்டிகளை கொள்முதல் செய்ய இயந்திர பொறியியல் துறையில் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. இது குறித்து சமர்ப்பிப்பதுயாதெனில், இவ்வகையான குப்பை தொட்டிகள் அயல்நாட்டில் உற்பத்தி செய்யப்பட்டு உள்நாட்டிலுள்ள விநியோகஸ்தர்களால் வழங்கப்படுகின்றன. எனவே இவ்வகையான குப்பை தொட்டிகளுக்கு ஒப்பந்ததாரர்கள் உத்தரவாதம் (Warranty) அளிப்பதில்லை மற்றும் பிளாஸ்டிக் குப்பை தொட்டிகள் அயல் நாடுகளில் உற்பத்தி செய்யப்படுவதால் பணி ஆணை வழங்கப்பட்ட நாளிலிருந்து குப்பை தொட்டிகள் வழங்க குறைந்தபட்சம் ஆறுமாத காலமாகும் என அறியப்பட்டு கொள்முதல் பணி நிறுத்தப்பட்டது.

இந்நிலையில், மாண்புமிகு மேயர் அவர்களின் தலைமையில் 9.5.2015 அன்று துப்புரவு பணிகள் குறித்த சீராய்வு கூட்டம் நடைபெற்றது. இக் கூட்டத்தில் முதன்மை செயலர் / ஆணையர், துணை ஆணையர் (சுகாதாரம்), துணை ஆணையர் (பணிகள்) ,தலைமை பொறியாளர்கள், அனைத்து கண்காணிப்பு பொறியாளர்கள், அனைத்து மண்டல அலுவலர்கள், அனைத்து செயற்பொறியாளர்கள் அனைவரும் கலந்து கொண்டனர். இக் கூட்டத்தில் மாண்புமிகு மேயர் அவர்கள் மண்டலங்களில் போதிய அளவு குப்பை தொட்டிகள் இல்லாததால் குப்பைகள் அள்ளுவதில் தொய்வு ஏற்படுகிறது என்றும் இதனால் பொது மக்களிடமிருந்து புகார்கள் எழுகிறது என்றும் தேவையான அளவு குப்பை தொட்டிகள் கொள்முதல் செய்யப்பட வேண்டும். அதாவது மொத்தம் உள்ள குப்பை தொட்டிகள் அனைத்தையும் மாற்றி வைக்க தேவையான அளவு கொள்முதல் செய்ய கொள்முதல் ஆணை வழங்கப்பட வேண்டும்.

ராம்கி நிறுவனத்தினரால் துப்புரவு பணிகள் மேற்கொள்ளப்படும் மண்டலங்களில் தேவையான அளவு குப்பை தொடிகள் வைக்கப்பட வேண்டும். பழுதடைந்த குப்பை தொட்டிகள் உடனுக்குடன் அகற்றப்பட்டு புதிய குப்பை தொட்டிகள் வைக்கப்பட வேண்டும். அதிகளவில் குப்பை சேரும் இடங்களில் கூடுதல் எண்ணிக்கையான குப்பை தொட்டிகள் வைக்கப்பட வேண்டும். தேவையான அளவில் குப்பை தொட்டிகளை வைக்கப்படவில்லை என்றாலோ, பழுதடைந்த குப்பை தொட்டிகள் மாற்றியமைப்படவில்லை என்றாலோ சென்னை மாநகராட்சியால் குப்பை தொட்டிகள் வைக்கப்பட்டு அதற்குரிய தொகை ராம்கி நிறுவனத்திடருந்து பிடித்தம் செய்யப்பட வேண்டும் என அறிவுறுத்தியுள்ளார்கள். துப்புரவு பணிகளை துரிதப் படுத்த காம்பாக்டர் குப்பை தொட்டிகளை உடனடியாக கொள்முதல் செய்யுமாறு அறிவுறுத்தினார்கள். இதற்கு பதில் அளித்த துணை ஆணையர் (சுகாதாரம்) அவர்கள் சுமார் 15,000 எண்ணிக்கையில் இரும்பு குப்பை தொட்டிகள் இரு வேறு அளவுகளில் கொள்முதல் செய்ய நடவடிக்க எடுக்க உள்ளதாக தெரிவித்தார்.

எனவே துப்புரவு பணிகள் குந்தகம் இன்றி நடைபெற, பிளாஸ்டிக் குப்பை தொட்டிகள் கொள்முதல் செய்வதில் மேலே தெரிவிக்கப்பட்ட இடர்பாடுகளினால் அதனை தவிர்த்து அதற்கு பதிலாக இரும்பு உலோகத்திலான குப்பை தொட்டிகள் செய்யலாம் என இக் கூட்டத்தில் முடிவு எடுக்கப்பட்டது.

இயந்திர பொறியியல் துறையால் இலகுரக காம்பாக்டர் வாகனங்களில் அடிக்கடி ஏற்படும் பழுதினை தவிர்க்கும் பொருட்டு குறைந்த எடை உடைய இரும்பு குப்பை தொட்டிகள் கொள்முதல் செய்யலாம் என இயந்திர பொறியியல் துறையால் முடிவெடுக்கப்படடதின் அடிப்படையில் இலகுரக வாகனங்கள் செல்லும் அனைத்து வழித்தடங்களிலும் 660 லிட்டர் கொள்ளளவுடைய இரும்பு உலோகத்திலான குப்பை தொட்டிகள் கொள்முதல் செய்யலாம் என கருத்து தெரிவிக்கப்பட்டு, இதன் எடை சுமார் 90 கிலோ ஆகும் என்றும் இதன் மூலம் இலகுரக காம்பாக்டர் வாகனங்களின் தூக்கும்பகுதி (Bin Lifter Area) அடிக்கடி உடைவது தவிர்க்கப்படும் என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது.

இதனடிப்படையில் இலகுரக காம்பாக்டர் வண்டிகள் செல்லும் அனைத்து சாலைகளிலும் 660 லிட்டர் கொள்ளளவுடைய இரும்பு உலோகத்திலான குப்பை தொட்டிகள் பயன்படுத்துவது என்றும் அந்த சாலைகளில் உள்ள 1100 லிட்டர் கொள்ளளவுடைய இரும்பு உலோகத்திலான குப்பை தொட்டிகளில் பழுதடைந்த நிலையில் உள்ளவைகளை தவிர்த்து மிகவும் நல்ல நிலையில் உள்ள குப்பை தொட்டிகளை கனரக காம்பாக்டர் வண்டிகள் செல்லும் தேவையான சாலைகளுக்கு கொண்டு செல்லலாம் என கருத்து தெரிவிக்கப்பட்டு தெற்கு வட்டார அலுவலகத்திற்கு துப்புரவு பணிகளுக்கு தேவையான 1100 லிட்டர் கொள்ளளவுடைய குப்பை தொட்டிகள் 200 எண்ணிக்கையும் மற்றும் 660 லிட்டர் கொள்ளளவுடைய குப்பை தொட்டிகள் 1400 எண்ணிக்கையிலும் கொள்முதல் செய்ய மன்றத்தின் அனுமதி வேண்டி குறிப்பு ஆணையர் அவர்களுக்கு சமர்ப்பிக்கப்பட்டது. இக் குறிப்பில் ஆணையர் அவர்கள் நிதி நிர்வாக பிரிவின் மூலம் சமர்ப்பிக்குமாறு அறிவுறுத்தினார்கள்.

துணை ஆணையர் (வருவாய் மந்றும் நிதி) அவர்கள் கடந்த ஆண்டுகளில் கொள்முதல் செய்த குப்பை தொட்டிகளின் செலவினங்களை மேற்கொள்காட்டி, கனரக வாகனங்கள் செல்லும் வழிதடங்களில் குப்பை தொட்டிகளின் விவரங்கள் மற்றும் இலகுரக வாகனங்கள் செல்லும் வழிதடங்களில் குப்பை தொட்டிகளின் விவரங்களை தெரியபடுத்துமாறு தெரிவித்துள்ளார்கள். துணை ஆணையர் (வருவாய் மந்றும் நிதி) அவர்களின் மேற்குறிப்பின்படி கீழ்கண்டவாறு பதில் அளிக்கப்பட்டது.

கடந்த 2013–14 ம் ஆண்டில் பொது பண்டகசாலையிலிருந்து தெற்கு வட்டார அலுவலகத்திற்கு 406 எண்ணிக்கையில் குப்பை தொட்டிகள் வழங்கப்பட்டுள்ளது. மேலும் வட்டார அலுவலகம் 2014–ம் ஆண்டிலிருந்து இன்றைய நாள் வரை 225 எண்ணிக்கை குப்பை தொட்டிகள் கொள்முதல் செய்துள்ளார்கள். மொத்தம் 631 எண்ணிக்கை குப்பை தொட்டிகள் ஆகும்.

மேலும் கனரக வாகன பாதையில் 1636 குப்பை தொட்டிகளும், இலகுரக வாகன பாதையில் 735 குப்பை தொட்டிகளும் ஆக மொத்தம் 2371 எண்ணிக்கை குப்பை தொட்டிகள் உள்ளன. இதில் 2 ஆண்டுகளுக்கு குறைவாக பயன்படுத்தப்படும் குப்பை தொட்டிகளின் எண்ணிக்கை 631 ஆகும். ஆதலால் இதில் மாற்றப்பட வேண்டிய 2 வருடங்களுக்கு மேலாக பயன்படுத்தப்பட்ட பழைய குப்பை தொட்டிகள் 1740 ஆக கணக்கிடப்பட்டுள்ளது. இந்த குப்பை தொட்டிகள் மாற்றப்பட வேண்டியுள்ளது. மேலும் வாங்கப்பட வேண்டிய கனரக வாகன பாதையில் 1100 லிட்டர் கொள்ளளவுடைய குப்பை தொட்டிகள் 1005 எண்ணிக்கை தேவைப்படுகிறது. இதில் 20 சதவீதம் கூடுதலாக கணக்கிடும் பொழுது 1200 எண்ணிக்கை 1100 லிட்டர் கொள்ளளவுடைய குப்பை தொட்டிகள் கொள்முதல் செய்யலாம் எனவும், இலகுரக வாகன பாதையில் 735 குப்பை தொட்டிகள் உள்ளது. 1100 லிட்டர் கொள்ளளவுடைய குப்பை தொட்டிகள் வைக்கப்பட வேண்டிய இடத்தில் 660 லிட்டர் கொள்ளளவுடைய குப்பை தொட்டிகள் 2 மடங்காக வைக்க வேண்டியுள்ளதால் 1000 குப்பை தொட்டிகள் கொள்முதல் செய்யலாம் எனவும் தெரிவிக்கப்பட்டது.

மாண்புமிகு மேயர் அவர்கள் தெரிவித்துள்ளபடி, குப்பை தொட்டிகள் இல்லாத தொழில் நுட்பம் (Binless Technology) பரிட்சார்த்த முறையில் பரிசோதனை செய்யப்படுகிறது. மேலும் இதனை விரிவாக்கம் செய்து உபயோகிக்கும் முறை நடைமுறையில் கொண்டுவர கால அளவு தேவைப்படும் என்ற காரணத்தாலும் மற்றும் எதிர்நோக்கும் மழைக்காலத்தில் குப்பைகள் தேங்காவண்ணம் இருக்கவும் காம்பாக்டர் குப்பை தொட்டிகள் கொள்முதல் செய்யலாம் என கருத்து தெரிவிக்கப்பட்டு, அதனடிப்படையில் தெற்கு வட்டார அலுவலகத்தின் கீழ் உள்ள மண்டலங்களின் குப்பை தொட்டிகளின் தேவை 1100 லிட்டர் கொள்ளளவுடைய குப்பை தொட்டிகள் 1200 எண்ணிக்கையும், 660 லிட்டர் கொள்ளளவுடைய குப்பை தொட்டிகள் 1000 எண்ணிக்கையில் கொள்முதல் செய்யலாம் எனத் தெரிவிக்கப்பட்டு அவசர அவசியத்தை முன்னிட்டு மன்றத்தின் பின்னேற்புக்குட்பட்டு முதன்மை செயலர் மற்றும் ஆணையர் அவர்களின் ஒப்புதல் பெறப்பட்டது.

எனவே 2 எம்.எம். தடிமனுடைய இரும்பு தகடுகளான 1100 லிட்டர் கொள்ளளவுடைய குப்பை தொட்டிகளை சுமார் 118 கிலோ எடையுள்ள ஒரு குப்பை தொட்டியின் தோராய விலை ரூ.19,130/– ஆகும். இலகுரக வாகனங்களுக்கு பயன்படுத்த 1.6 எம்.எம். தடிமனுடைய இரும்பு தகடுகளான 660 லிட்டர் கொள்ளளவுடைய குப்பை தொட்டிகளை சுமார் 90 கிலோ எடையுள்ள ஒரு குப்பை தொட்டியின் தோராய

விலை ரூ.15,970/– ஆகும். இந்த குப்பை தொட்டிகளை ஒரு வருட உத்தரவாதத்துடன் கொள்முதல் செய்யலாம் என கருத்து தெரிவிக்கப்படுகிறது. குப்பை தொட்டிகளின் மதிப்பீடு கீழ்கண்டவாறு தயாரிக்கப்பட்டுள்ளது.

A· Basic cost of 1100 litre capacity compactor metal bin

1.	Weight of the bin – 118 kg,(App) (Material : Galvanized Iron) G.I.Sheet price 2015 (Rs.58/kg (118kg*58) Sheet thickness : 2 mm	-	Rs. 6844.00
2.	Compactor bin wheel (8” wheel) Rs.700*4 Nos.	-	Rs. 2800.00
3.	Material (welding rod+consumables)	-	Rs. 1000.00
4.	Painting Anti-corrasive rubbersied blackpaint (Approximate consumption of 2 ltrs. per bin)	-	Rs. 1500.00
5.	Painting and lettering works	-	Rs. 1350.00
6.	Labour cost	-	Rs. 2200.00
7.	Transportation cost	-	Rs. 500.00

	Total basic cost	-	Rs.16600.00
	E.D. @ 12.5 %	-	Rs. 2024.00
	VAT @ 5 %	-	Rs. 911.00

	Total cost		Rs.19129.00
			or
	R/o		Rs.19,130.00

B) Basic cost of 660 litre capacity compactor metal bin

1.	Weight of the bin – 90 kg,(App) (Material : Galvanized Iron) G.I.Sheet price 2015 (Rs.58/kg (90 kg*58) Sheet thickness : 1.6 mm	-	Rs. 5220.00
2.	Compactor bin wheel (6” wheel) Rs.600*4 Nos.	-	Rs. 2400.00
3.	Material (welding rod + consumables)	-	Rs. 1000.00
4.	Painting Anti-corrasive rubbersied black paint (Approximate consumption of 1.5 ltrs. per bin)	-	Rs. 1100.00
5.	Painting and lettering works	-	Rs. 1200.00
6.	Labour cost	-	Rs. 2100.00
7.	Transportation cost	-	Rs. 500.00

	Total basic cost	-	Rs.13520.00
	E.D. @ 12.5 %	-	Rs. 1690.00
	VAT @ 5 %	-	Rs. 761.00

	Total cost		Rs.15971.00
			or
	R/o		Rs.15,970.00

ஆகவே 1100 லிட்டர் கொள்ளளவுடைய இரும்பு உலோகத்திலான குப்பை தொட்டிகள் 1200 எண்ணிக்கையும் மற்றும் 660 லிட்டர் கொள்ளளவுடைய குப்பை தொட்டிகள் 1000 எண்ணிக்கை யிலும் திடக்கழிவு மேலாண்மை துறையில் கொள்முதல் செய்யலாம் எனத் தெரிவிக்கப்படுகிறது. இக் கொள்முதல் தோராய மதிப்பு ரூ.3,89,26,000/–ஆகும்.

எனவே,

1. தெற்கு வட்டார அலுவலகத்திற்கு தேவையான 1100 லிட்டர் கொள்ளளவுடைய இரும்பு உலோகத்திலான குப்பை தொட்டி ஒன்றின் தோராய விலை ரூ.19,130/– வீதம் 1200 எண்ணிக்கைக்கான தொகை ரூ.2,29,56,000/–ற்கும் மற்றும் 660 லிட்டர் கொள்ளளவுடைய குப்பை தொட்டி ஒன்றின் தோராய விலை ரூ.15,970/– வீதம் 1000 எண்ணிக்கைக்கான தொகை

ரூ.1,59,70,000/–ற்கும் ஆக மொத்த தோராய மதிப்பான ரூ.3,89,26,000/–ற்கு கொள்முதல் செய்ய நிர்வாக அனுமதி அளிக்கவும்;

2. மேற்கண்ட காம்பாக்டர் குப்பை தொட்டிகளை கொள்முதல் செய்ய ஒப்பந்தங்கள் கோரவும்;
3. இதற்கான நிதி ஒதுக்கீட்டினை 2015–16ம் நிதியாண்டிற்கான திடக்கழிவு மேலாண்மை துறை மூலதன நிதியிலிருந்து மேற்கொள்ளவும்,

மேற்காணும் இனங்கள் 1 முதல் 3 வரை உள்ள இனங்களுக்கு நிலைக்குழு (பணிகள்) மற்றும் நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) மூலமாக மன்றத்தின் பின்னேற்பு அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

"ஏற்கனவே நிலைக்குழு (பணிகள்) கூட்டம் 22.07.2015 அன்று முடிவடைந்த நிலையில் இப்பொருளின் அவசரம் மற்றும் அவசியத்தன்மையை கருத்தில் கொண்டு 03.08.2015 அன்று தீர்மான எண்.189/2015ன்படி இதற்கு நிலைக்குழு (பணிகள்) சுற்றின் மூலம் பெரும்பான்மை உறுப்பினர்களின் பரிந்துரையை பெற்று நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) மூலமாக மன்றத்தின் பின்னேற்பு அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது ".

"ஏற்கனவே நிலைக்குழு (வ.வி.ம.நி) வின் கூட்டம் 24.07.2015 அன்று முடிவடைந்த நிலையில் இப்பொருளின் அவசரம் மற்றும் அவசியத்தன்மையை கருத்தில் கொண்டு 03.08.2015 அன்று தீர்மான எண்.217/2015ன்படி இதற்கு நிலைக்குழு (வ.வி.ம.நி)வின் சுற்றின் மூலம் பெரும்பான்மை உறுப்பினர்களின் பரிந்துரையை பெற்று மன்றத்தின் பின்னேற்பு அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது ".

"இதற்கு மன்றம் பின்னேற்பு அனுமதி அளிக்கின்றது"

****

தி.க.மே.பொ.ப.சா.ந.க.எண்.அ3/16/2015

முதன்மை செயலர் / ஆணையர் அவர்களின் நாளிட்ட 31.07.2015 குறிப்பு

தீர்மான எண்.433/2015 **பொருள் எண்.82**

திடக்கழிவு மேலாண்மை துறை – மத்திய வட்டார அலுவலகத்தின் கீழ் உள்ள மண்டலங்களின் திடக்கழிவு மேலாண்மைத்துறை பயன்பாட்டிற்காக 1100 லிட்டர் கொள்ளளவுடைய இரும்பு உலோகத்திலான காம்பாக்டர் குப்பை தொட்டிகள் 100 எண்ணிக்கையிலும் மற்றும் 660 லிட்டர் கொள்ளளவுடைய இரும்பு உலோகத்திலான காம்பாக்டர் குப்பை தொட்டிகள் 2000 எண்ணிக்கையிலும் கொள்முதல் செய்ய பின்னேற்பு அனுமதி

சென்னை மாநகராட்சியின் எல்லைகள் 174 சதுர கிலோ மீட்டரிலிருந்து 426 சதுர கிலோ மீட்டராக விரிவாக்கம் செய்யப்பட்டது. விரிவாக்கம் செய்யப்பட்ட சென்னை மாநகராட்சியின் வட்டார அலுவலகங்கள் செயல்பட ஏதுவாக ஜனவரி–2014ல் பெருமளவில் நிர்வாக மாற்றங்கள் செய்யப்பட்டது. முதன்மை செயலர் / ஆணையர் அவர்களின் ஒப்புதல்படி குப்பை தொட்டிகளின் கொள்முதல் வட்டார அளவில் மேற்கொள்ள அறிவுறுத்தப்பட்டது.

சென்னை மாநகர பகுதியில் உருவாகும் ஏராளமான குப்பைகளால் சுகாதாரக் கேடு ஏற்படா வண்ணம் உடனுக்குடன் அப்புறப்படுத்த வேண்டியது அவசியம் ஆகும். இதற்காக குப்பை தொட்டிகள் வட்டார அளவில் கொள்முதல் செய்ய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்ட நிலையில் 11.06.2014 அன்று துணை ஆணையர் (சுகாதாரம்) அவர்களின் தலைமையில் நடைபெற்ற சீராய்வு கூட்டத்தில் இரும்பு உலோகத்திலான காம்பாக்டர் குப்பை தொட்டிகள் தற்பொழுது சரியான முறையில் கையாளப்படுவதில்லை என்ற காரணத்தினால் அடிக்கடி சேதமடைவதாகவும், பணிகளின் போது வடிவமைப்பால் சிரமம் ஏற்படுவதாகவும், பழுதுபார்க்கும் பணிகளுக்கு தேவையற்ற செலவீனம் ஏற்படுவதாகவும், சிரமத்தை தவிர்க்கும் பொருட்டு இனி வரும் காலங்களில் இரும்பு உலோக குப்பை தொட்டிகளுக்கு பதிலாக அடர்த்திமிகு பிளாஸ்டிக் குப்பை தொட்டிகள் உலக தரத்தில் தரக்குறியீட்டுக்குட்பட்டு கொள்முதல் செய்து பயன்படுத்துமாறு அறிவுறுத்தினார். அதன் அடிப்படையில் மூன்று வட்டார அலுவலகங்களுக்கு 2500 எண்ணிக்கையிலான அடர்த்திமிகு பிளாஸ்டிக் குப்பை தொட்டிகள் உலகதரத்தில் தரக்குறியீட்டுக்குட்பட்ட ஒரு குப்பைத் தொட்டியின் விலை ரூ. 17,000/– வீதம் 2500 தொட்டிகள் ரூ.4,25,00,000/– தோராய மதிப்பீட்டில் கொள்முதல் செய்ய மன்ற தீர்மானம் பெறப்பட்டு, வட்டார அலுவலகங்கள் மூலம் கொள்முதலை மேற்கொள்ள அறிவுறுத்தப்பட்டது. விரைந்து கொள்முதல் செய்வது குறித்த நடவடிக்கை மேற்கொள்ளுமாறு 11.09.2014, 05.11.2014 மற்றும் 24.2.2015 நாளிட்ட நினைவூட்டு குறிப்புகள் அனுப்பபட்டடது.

வடக்கு வட்டார அலுவலகத்தில் அடர்த்திமிகு பிளாஸ்டிக் குப்பைத் தொட்டிகளை கொள்முதல் செய்ய 24.10.2014 மற்றும் 14.11.2014 அன்றும் இரு முறை ஒப்பங்கள் கோரப்பட்டும் ஒப்பந்ததாரர்கள் யாரும் பங்கேற்காததால் ஒப்பங்கள் ரத்து செய்யப்பட்டது. தெற்கு மற்றும் மத்திய வட்டார அலுவலகங்களில் பிளாஸ்டிக் குப்பை தொட்டிகளை கொள்முதல் செய்ய நடவடிக்கை மேற்கொள்ளவில்லை. வட்டார அலுவலகங்கள் மூலம் குப்பைத் தொட்டிகள் கொள்முதல் செய்ய நடவடிக்கை மேற்கொள்ளப்படாத நிலையில், சில மண்டலங்களில் மட்டும் இரும்பிலான குப்பை தொட்டிகள் கொள்முதல் செய்யப்பட்டுள்ளன.

வாகனங்களை பணிக்கு அனுப்புவதற்கு (Marchout) தடையாக உள்ள காரணங்கள் குறித்து துணை ஆணையர் (பணிகள்) மற்றும் துணை ஆணையர் (சுகாதாரம்) ஆகியோர் முன்னிலையில் 19.02.2015 அன்று நடைப்பெற்ற கலந்தாய்வு கூட்டத்தில் மூன்று வட்டாரங்களை சேர்ந்த மேற்பார்வை பொறியாளர் மற்றும் செயற் பொறியாளர்கள் மற்றும் உதவி செயற் பொறியாளர்கள் வாகனங்களில் குப்பை தொட்டிகளால் அடிக்கடி ஏற்படும் பழுதின் காரணமாக இலகுரக காம்பெக்டர் வாகனங்கள் தேவையான எண்ணிக்கை மற்றும் குறித்த நேரத்திலும் March-Out செய்ய இயலவில்லை என தெரிவித்தனர்.

தெருக்களில் பல இடங்களில் குப்பை தொட்டிகள் நிரம்பி வழிவதாகவும் இதனால் சுகாதார கேடு விளைவதாகவும் ஊடகங்கள் மற்றும் செய்தி தாள்களில் சென்னை மாநகராட்சி குப்பை தொட்டிகள் குறித்து எதிர்மறை விமர்சனங்கள் வந்த வண்ணம் உள்ளது என்பதால் முதன்மை செயலர் / ஆணையர் அவர்களின் அறிவுறுத்தலின்படி, 12.03.2015 அன்று துணை ஆணையர் (பணிகள்) அவர்கள் முன்னிலையில் நடைப்பெற்ற சீராய்வுக் கூட்டத்தில் அவசர அவசியத்தை முன்னிட்டு இக்கொள்முதல் பணியினை இயந்திரப் பொறியியல் துறை மூலம் மேற்கொள்ளுமாறு அறிவுறுத்தப்பட்டது.

இயந்திரப் பொறியியல் துறையால் ஒரு வாகனத்திற்கு தோராயமாக 36 குப்பைத் தொட்டிகள் வீதம் 123 இலகுரக காம்பாக்டர் வானங்களுக்கு 4428 எண்ணிக்கையிலான காம்பாக்டர் குப்பைத் தொட்டிகள் தேவைப்படுகின்றது என்றும், ஏற்கனவே மன்றத் தீர்மானத்தில் 2500 எண்ணிக்கையிலான அடர்த்திமிகு பிளாஸ்டிக் காம்பாக்டர் குப்பைத் தொட்டிகள் கொள்முதல் செய்ய நிர்வாக அனுமதி பெறப்பட்டுள்ள

நிலையில் மொத்த தேவையான 4428ல் முதற்கட்டமாக 2500 எண்ணிக்கையிலான அடர்த்திமிகு பிளாஸ்டிக் குப்பைத் தொட்டிகள் கொள்முதல் செய்யலாம் என இயந்திர பொறியியல் துறையால் முதன்மை செயலர் / ஆணையர் அவர்களின் 18.3.2015 நாளிட்ட ஒப்புதல் பெறப்பட்டுள்ளது.

சென்னையில் பல பகுதிகளில் தொழிற்பட்டறைகள், மார்க்கெட் பகுதிகள் மற்றும் மக்கள் தொகை ஆகியவை அதிக அளவில் உள்ளன என்றும் இங்கு அதிக அளவில் தொழிற்சாலை கழிவுகள், மார்க்கெட் கழிவுகள் மற்றும் குப்பைகள் ஆகியவைகளை அகற்ற வேண்டிய நிலை உள்ளது என்றும் மேலும் குறுகலான தெருக்கள் அதிகம் உள்ளதால் கனரக காம்பெக்டர்களை பயன்படுத்த இயலாத நிலை உள்ளதால் இலகுரக காம்பெக்டர் வாகனங்களில் இரும்பு உலோகத்தினலான காம்பெக்டர் குப்பை தொட்டிகளை பயன்படுத்துவதால் காம்பெக்டர் வாகனங்களின் டெயில் கேட் பகுதியில் உள்ள குப்பை தொட்டிகளை தூக்கும்பகுதி (Bin Lifter Area) உடையும் நிலை ஏற்பட்டு வாகனங்கள் அடிக்கடி பழுதாகும் நிலை ஏற்படுவதாக இயந்திர பொறியியல் துறையால் தெரிவிக்கப்பட்டது. இதனால் குப்பைகள் அகற்றும் பணி மிகவும் பாதிப்பு அடைகிறது என்றும் மேலும் கனரக காம்பெக்டர் வாகனங்கள் (14 CUM) –க்கு இரும்பு உலோக குப்பை தொட்டிகள் பயன்படுத்துவதால் எந்தவித பாதிப்பும் இல்லை என்று இயந்திர பொறியியல் துறையால் அக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

எனவே, பரிட்சார்த்த முறையில் முதற்கட்டமாக கொள்முதல் செய்யப்படும் அடர்த்திமிகு பிளாஸ்டிக் குப்பைத் தொட்டிகளை இலகுரக வாகனங்கள் பயன்பாட்டிற்கு வழங்கலாம் என கருத்து தெரிவிக்கப்பட்டு 2500 எண்ணிக்கையில் அடர்த்திமிகு பிளாஸ்டிக் குப்பைத் தொட்டிகளை மன்றத்தின் பின்னேற்பிற்க்கு உட்பட்டு இயந்திர பொறியியல் துறை மூலம் கொள்முதல் செய்ய ஒப்பங்கள் கோருவதற்கு ஆணையர் அவர்களின் 18.3.2015 தேதியிட்ட ஆணை இயந்திர பொறியியல துறையால் பெறப்பட்டது.

இதன்படி, 2500 எணணிக்கையில் அடர்த்திமிகு பிளாஸ்டிக் குப்பைத் தொட்டிகளை கொள்முதல் செய்ய இயந்திர பொறியியல் துறையில் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. இது குறித்து சமர்ப்பிப்பதுயாதெனில், இவ்வகையான குப்பை தொட்டிகள் அயல்நாட்டில் உற்பத்தி செய்யப்பட்டு உள்நாட்டிலுள்ள விநியோகஸ்தர்களால் வழங்கப்படுகின்றன. எனவே இவ்வகையான குப்பை தொட்டிகளுக்கு ஒப்பந்ததாரர்கள் உத்தரவாதம் (Warranty) அளிப்பதில்லை மற்றும் பிளாஸ்டிக் குப்பை தொட்டிகள் அயல் நாடுகளில் உற்பத்தி செய்யப்படுவதால் பணி ஆணை வழங்கப்பட்ட நாளிலிருந்து குப்பை தொட்டிகள் வழங்க குறைந்தபட்சம் ஆறுமாத காலமாகும் என அறியப்பட்டு கொள்முதல் பணி நிறுத்தப்பட்டது.

இந்நிலையில், மாண்புமிகு மேயர் அவர்களின் தலைமையில் 9.5.2015 அன்று துப்புரவு பணிகள் குறித்த சீராய்வு கூட்டம் நடைபெற்றது. இக் கூட்டத்தில் முதன்மை செயலர் / ஆணையர், துணை ஆணையர் (சுகாதாரம்), துணை ஆணையர் (பணிகள்) ,தலைமை பொறியாளர்கள், அனைத்து கண்காணிப்பு பொறியாளர்கள், அனைத்து மண்டல அலுவலர்கள், அனைத்து செயற்பொறியாளர்கள் அனைவரும் கலந்து கொண்டனர். இக் கூட்டத்தில் மாண்புமிகு மேயர் அவர்கள் மண்டலங்களில் போதிய அளவு குப்பை தொட்டிகள் இல்லாததால் குப்பைகள் அள்ளுவதில் தொய்வு ஏற்படுகிறது என்றும் இதனால் பொது மக்களிடமிருந்து புகார்கள் எழுகிறது என்றும் தேவையான அளவு குப்பை தொட்டிகள் கொள்முதல் செய்யப்பட வேண்டும். அதாவது மொத்தம் உள்ள குப்பை தொட்டிகள் அனைத்தையும் மாற்றி வைக்க தேவையான அளவு கொள்முதல் செய்ய கொள்முதல் ஆணை வழங்கப்பட வேண்டும்.

ராம்கி நிறுவனத்தினரால் துப்புரவு பணிகள் மேற்கொள்ளப்படும் மண்டலங்களில் தேவையான அளவு குப்பை தொடிகள் வைக்கப்பட வேண்டும். பழுதடைந்த குப்பை தொட்டிகள் உடனுக்குடன் அகற்றப்பட்டு புதிய குப்பை தொட்டிகள் வைக்கப்பட வேண்டும். அதிகளவில் குப்பை சேரும் இடங்களில் கூடுதல் எண்ணிக்கையான குப்பை தொட்டிகள் வைக்கப்பட வேண்டும். தேவையான அளவில் குப்பை தொட்டிகளை வைக்கப்படவில்லை என்றாலோ, பழுதடைந்த குப்பை தொட்டிகள் மாற்றியமைப்படவில்லை என்றாலோ சென்னை மாநகராட்சியால் குப்பை தொட்டிகள் வைக்கப்பட்டு அதற்குரிய தொகை ராம்கி நிறுவனத்திடருந்து பிடித்தம் செய்யப்பட வேண்டும் என அறிவுறுத்தியுள்ளார்கள். துப்புரவு பணிகளை துரிதப் படுத்த காம்பாக்டர் குப்பை தொட்டிகளை உடனடியாக கொள்முதல் செய்யுமாறு அறிவுறுத்தினார்கள். இதற்கு பதில் அளித்த துணை ஆணையர் (சுகாதாரம்) அவர்கள் சுமார் 15,000 எண்ணிக்கையில் இரும்பு குப்பை தொட்டிகள் இரு வேறு அளவுகளில் கொள்முதல் செய்ய நடவடிக்க எடுக்க உள்ளதாக தெரிவித்தார்.

எனவே துப்புரவு பணிகள் குந்தகம் இன்றி நடைபெற, பிளாஸ்டிக் குப்பை தொட்டிகள் கொள்முதல் செய்வதில் மேலே தெரிவிக்கப்பட்ட இடர்பாடுகளினால் அதனை தவிர்த்து அதற்கு பதிலாக இரும்பு உலோகத்திலான குப்பை தொட்டிகள் செய்யலாம் என இக் கூட்டத்தில் முடிவு எடுக்கப்பட்டது.

இயந்திர பொறியியல் துறையால் இலகுரக காம்பாக்டர் வாகனங்களில் அடிக்கடி ஏற்படும் பழுதினை தவிர்க்கும் பொருட்டு குறைந்த எடை உடைய இரும்பு குப்பை தொட்டிகள் கொள்முதல் செய்யலாம் என இயந்திர பொறியியல் துறையால் முடிவெடுக்கப்படடதின் அடிப்படையில் இலகுரக வாகனங்கள் செல்லும் அனைத்து வழித்தடங்களிலும் 660 லிட்டர் கொள்ளளவுடைய இரும்பு உலோகத்திலான குப்பை தொட்டிகள் கொள்முதல் செய்யலாம் என கருத்து தெரிவிக்கப்பட்டு, இதன் எடை சுமார் 90 கிலோ ஆகும் என்றும் இதன் மூலம் இலகுரக காம்பாக்டர் வாகனங்களின் தூக்கும்பகுதி (Bin Lifter Area) அடிக்கடி உடைவது தவிர்க்கப்படும் என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது.

இதனடிப்படையில் இலகுரக காம்பாக்டர் வண்டிகள் செல்லும் அனைத்து சாலைகளிலும் 660 லிட்டர் கொள்ளளவுடைய இரும்பு உலோகத்திலான குப்பை தொட்டிகள் பயன்படுத்துவது என்றும் அந்த சாலைகளில் உள்ள 1100 லிட்டர் கொள்ளளவுடைய இரும்பு உலோகத்திலான குப்பை தொட்டிகளில் பழுதடைந்த நிலையில் உள்ளவைகளை தவிர்த்து மிகவும் நல்ல நிலையில் உள்ள குப்பை தொட்டிகளை கனரக காம்பாக்டர் வண்டிகள் செல்லும் தேவையான சாலைகளுக்கு கொண்டு செல்லலாம் என கருத்து தெரிவிக்கப்பட்டு மத்திய வட்டார அலுவலகத்திற்கு துப்புரவு பணிகளுக்கு தேவையான 1100 லிட்டர் கொள்ளளவுடைய குப்பை தொட்டிகள் 1000 எண்ணிக்கையும் மற்றும் 660 லிட்டர் கொள்ளளவுடைய குப்பை தொட்டிகள் 1900 எண்ணிக்கையிலும் கொள்முதல் செய்ய மன்றத்தின் அனுமதி வேண்டி குறிப்பு ஆணையர் அவர்களுக்கு சமர்ப்பிக்கப்பட்டது. இக் குறிப்பில் ஆணையர் அவர்கள் நிதி நிர்வாக பிரிவின் மூலம் சமர்ப்பிக்குமாறு அறிவுறுத்தினார்கள்.

துணை ஆணையர் (வருவாய் மந்றும் நிதி) அவர்கள் கடந்த ஆண்டுகளில் கொள்முதல் செய்த குப்பை தொட்டிகளின் செலவினங்களை மேற்கொள்காட்டி, கனரக வாகனங்கள் செல்லும் வழிதடங்களில் குப்பை தொட்டிகளின் விவரங்கள் மற்றும் இலகுரக வாகனங்கள் செல்லும் வழிதடங்களில் குப்பை தொட்டிகளின் விவரங்களை தெரியபடுத்துமாறு தெரிவித்துள்ளார்கள். துணை ஆணையர் (வருவாய் மந்றும் நிதி) அவர்களின் மேற்குறிப்பின்படி கீழ்கண்டவாறு பதில் அளிக்கப்பட்டது.

கடந்த 2013–14 ம் ஆண்டில் பொது பண்டகசாலையிலிருந்து மத்திய வட்டார அலுவலகத்திற்கு 783 எண்ணிக்கையில் குப்பை தொட்டிகள் வழங்கப்பட்டுள்ளது. மேலும் வட்டார அலுவலகம் 2014–ம் ஆண்டிலிருந்து இன்றைய நாள் வரை 333 எண்ணிக்கை குப்பை தொட்டிகள் கொள்முதல் செய்துள்ளார்கள். மொத்தம் 1116 எண்ணிக்கை குப்பை தொட்டிகள் ஆகும். மேலும் கனரக வாகன பாதையில் 1204 குப்பை தொட்டிகளும், இலகுரக வாகன பாதையில் 1102 குப்பை தொட்டிகளும் ஆக மொத்தம் 2306 எண்ணிக்கை குப்பை தொட்டிகள் உள்ளன. இதில் 2 ஆண்டுகளுக்கு குறைவாக பயன்படுத்தப்படும் குப்பை தொட்டிகளின் எண்ணிக்கை 1116 ஆகும். ஆதலால் இதில் மாற்றப்பட வேண்டிய 2 வருடங்களுக்கு மேலாக பயன்படுத்தப்பட்ட பழைய குப்பை தொட்டிகள் 1190 ஆக கணக்கிடப்பட்டுள்ளது. இந்த குப்பை தொட்டிகள் மாற்றப்பட வேண்டியுள்ளது. மேலும் வாங்கப்பட வேண்டிய கனரக வாகன பாதையில் 1100 லிட்டர் கொள்ளளவுடைய குப்பை தொட்டிகள் 88 எண்ணிக்கை தேவைப்படுகிறது. இதில் 20 சதவீதம் கூடுதலாக கணக்கிடும் பொழுது 100 எண்ணிக்கை 1100 லிட்டர் கொள்ளளவுடைய குப்பை தொட்டிகள் கொள்முதல் செய்யலாம் எனவும், இலகுரக வாகன பாதையில் 1102 குப்பை தொட்டிகள் உள்ளது. 1100 லிட்டர் கொள்ளளவுடைய குப்பை தொட்டிகள் வைக்கப்பட வேண்டிய இடத்தில் 660 லிட்டர் கொள்ளளவுடைய குப்பை தொட்டிகள் 2 மடங்காக வைக்க வேண்டியுள்ளதால் 2000 குப்பை தொட்டிகள் கொள்முதல் செய்யலாம் எனவும் தெரிவிக்கப்பட்டது.

மாண்புமிகு மேயர் அவர்கள் தெரிவித்துள்ளபடி, குப்பை தொட்டிகள் இல்லாத தொழில் நுட்பம் (Binless Technology) பரிட்சார்த்த முறையில் பரிசோதனை செய்யப்படுகிறது. மேலும் இதனை விரிவாக்கம் செய்து உபயோகிக்கும் முறை நடைமுறையில் கொண்டுவர கால அளவு தேவைப்படும் என்ற காரணத்தாலும் மற்றும் எதிர்நோக்கும் மழைக்காலத்தில் குப்பைகள் தேங்காவண்ணம் இருக்கவும் காம்பாக்டர் குப்பை தொட்டிகள் கொள்முதல் செய்யலாம் என கருத்து தெரிவிக்கப்பட்டு, அதனடிப்படையில் மத்திய வட்டார அலுவலகத்தின் கீழ் உள்ள மண்டலங்களின் குப்பை தொட்டிகளின் தேவை 1100 லிட்டர் கொள்ளளவுடைய குப்பை தொட்டிகள் 100 எண்ணிக்கையும், 660 லிட்டர் கொள்ளளவுடைய குப்பை தொட்டிகள் 2000 எண்ணிக்கையில் கொள்முதல் செய்யலாம் எனத் தெரிவிக்கப்பட்டு அவசர அவசியத்தை முன்னிட்டு மன்றத்தின் பின்னேற்புக்குட்பட்டு முதன்மை செயலர் மற்றும் ஆணையர் அவர்களின் ஒப்புதல் பெறப்பட்டது.

எனவே 2 எம்.எம். தடிமனுடைய இரும்பு தகடுகளான 1100 லிட்டர் கொள்ளளவுடைய குப்பை தொட்டிகளை சுமார் 118 கிலோ எடையுள்ள ஒரு குப்பை தொட்டியின் தோராய விலை ரூ.19,130/– ஆகும். இலகுரக வாகனங்களுக்கு பயன்படுத்த 1.6 எம்.எம். தடிமனுடைய இரும்பு தகடுகளான 660 லிட்டர் கொள்ளளவுடைய குப்பை தொட்டிகளை சுமார் 90 கிலோ எடையுள்ள ஒரு குப்பை தொட்டியின் தோராய விலை ரூ.15,970/– ஆகும். இந்த குப்பை தொட்டிகளை ஒரு வருட உத்தரவாதத்துடன் கொள்முதல்

செய்யலாம் என கருத்து தெரிவிக்கப்படுகிறது. குப்பை தொட்டிகளின் மதிப்பீடு கீழ்கண்டவாறு தயாரிக்கப்பட்டுள்ளது.

A) Basic cost of 1100 litre capacity compactor metal bin

1.	Weight of the bin – 118 kg,(App) (Material : Galvanized Iron) G.I.Sheet price 2015 (Rs.58/kg (118kg*58) Sheet thickness : 2 mm	-	Rs. 6844.00
2.	Compactor bin wheel (8” wheel) Rs.700*4 Nos.	-	Rs. 2800.00
3.	Material (welding rod+consumables)	-	Rs. 1000.00
4.	Painting Anti-corrasive rubbersied blackpaint (Approximate consumption of 2 ltrs. per bin)	-	Rs. 1500.00
5.	Painting and lettering works	-	Rs. 1350.00
6.	Labour cost	-	Rs. 2200.00
7.	Transportation cost	-	Rs. 500.00

	Total basic cost	-	Rs.16600.00
	E.D. @ 12.5 %	-	Rs. 2024.00
	VAT @ 5 %	-	Rs. 911.00

	Total cost		Rs.19129.00
			or
	R/o		Rs.19,130.00

B) Basic cost of 660 litre capacity compactor metal bin

1.	Weight of the bin – 90 kg,(App) (Material : Galvanized Iron) G.I.Sheet price 2015 (Rs.58/kg (90 kg*58) Sheet thickness : 1.6 mm	-	Rs. 5220.00
2.	Compactor bin wheel (6” wheel) Rs.600*4 Nos.	-	Rs. 2400.00
3.	Material (welding rod + consumables)	-	Rs. 1000.00
4.	Painting Anti-corrasive rubbersied black paint (Approximate consumption of 1.5 ltrs. per bin)	-	Rs. 1100.00
5.	Painting and lettering works	-	Rs. 1200.00
6.	Labour cost	-	Rs. 2100.00
7.	Transportation cost	-	Rs. 500.00

	Total basic cost	-	Rs.13520.00
	E.D. @ 12.5 %	-	Rs. 1690.00
	VAT @ 5 %	-	Rs. 761.00

	Total cost		Rs.15971.00
			or
	R/o		Rs.15,970.00

ஆகவே **1100** லிட்டர் கொள்ளளவுடைய இரும்பு உலோகத்திலான குப்பை தொட்டிகள் **100** எண்ணிக்கையும் மற்றும் **660** லிட்டர் கொள்ளளவுடைய குப்பை தொட்டிகள் **2000** எண்ணிக்கை யிலும் திடக்கழிவு மேலாண்மை துறையில் கொள்முதல் செய்யலாம் எனத் தெரிவிக்கப்படுகிறது. இக் கொள்முதல் தோராய மதிப்பு ரூ**3,38,53,000/–**ஆகும்.

எனவே,

1. மத்திய வட்டார அலுவலகத்திற்கு தேவையான **1100** லிட்டர் கொள்ளளவுடைய இரும்பு உலோகத்திலான குப்பை தொட்டி ஒன்றின் தோராய விலை ரூ.**19,130/–** வீதம் **100** எண்ணிக்கைக்கான தொகை ரூ.**19,13,000/–**ற்கும் மற்றும் **660** லிட்டர் கொள்ளளவுடைய இரும்பு உலோகத்திலான குப்பை தொட்டி ஒன்றின் தோராய விலை ரூ.**15,970/–** வீதம் **2000**

எண்ணிக்கைக்கான தொகை ரூ.3,19,40,000/–ற்கும் ஆக மொத்த தோராய மதிப்பான ரூ.3,38,53,000/–ற்கு கொள்முதல் செய்ய நிர்வாக அனுமதி அளிக்கவும்;

1. மேற்கண்ட காம்பாக்டர் குப்பை தொட்டிகளை கொள்முதல் செய்ய ஒப்பந்தங்கள் கோரவும்;
2. இதற்கான நிதி ஒதுக்கீட்டினை 2015–16ம் நிதியாண்டிற்கான திடக்கழிவு மேலாண்மை துறை மூலதன நிதியிலிருந்து மேற்கொள்ளவும்,

மேற்காணும் இனங்கள் 1 முதல் 3 வரை அவசர அவசியத்தை முன்னிட்டு நிலைக்குழு (பணிகள்) மற்றும் நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி)வின் மூலமாக மன்றத்தின் பின்னேற்பு அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

"ஏற்கனவே நிலைக்குழு (பணிகள்) கூட்டம் 22.07.2015 அன்று முடிவடைந்த நிலையில் இப்பொருளின் அவசரம் மற்றும் அவசியத்தன்மையை கருத்தில் கொண்டு 03.08.2015 அன்று தீர்மான எண்.187/2015ன்படி இதற்கு நிலைக்குழு (பணிகள்) சுற்றின் மூலம் பெரும்பான்மை உறுப்பினர்களின் பரிந்துரையை பெற்று நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி)வின் மூலமாக மன்றத்தின் பின்னேற்பு அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது ".

"ஏற்கனவே நிலைக்குழு (வ.வி.ம.நி) வின் கூட்டம் 24.07.2015 அன்று முடிவடைந்த நிலையில் இப்பொருளின் அவசரம் மற்றும் அவசியத்தன்மையை கருத்தில் கொண்டு 03.08.2015 அன்று தீர்மான எண்.218/2015ன்படி இதற்கு நிலைக்குழு (வ.வி.ம.நி)வின் சுற்றின் மூலம் பெரும்பான்மை உறுப்பினர்களின் பரிந்துரையை பெற்று மன்றத்தின் பின்னேற்பு அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது ".

"இதற்கு மன்றம் பின்னேற்பு அனுமதி அளிக்கின்றது"

****

தி.க.மே.து.ந.க.எண்.அ7/3709/2014

முதன்மை செயலர் / ஆணையர் அவர்களின் 03.08.2015 நாளிட்ட குறிப்பு

தீர்மான எண்.434/2015 **பொருள் எண்.83**

திடக்கழிவு மேலாண்மை துறை–குப்பை பதனிடுதல் திட்டத்தை உள்ளடக்கி மூன்று வெவ்வேறு திடக்கழிவு மேலாண்மை திட்டங்களுக்கு உலகளாவிய விருப்ப விண்ணப்பங்கள் கோரப்பட்டது–குப்பை பதனிடுதல் திட்டத்தை கூத்தம்பாக்கம் மற்றும் மீஞ்சூர்–வள்ளூரில் செயலாக்க தெரிவு செய்யப்பட்ட ஒப்பந்தப்புள்ளிதாரர்களிடமிருந்து தொழில் நுட்ப ஒப்பந்தப்புள்ளி பெறப்பட்டது – தொழில் நுட்ப ஒப்பந்தப்புள்ளிகளுக்கு மன்றத்தின் அனுமதி பெறப்பட்டது – தெரிவு செய்யப்பட்ட ஒப்பந்தப்புள்ளிதாரர்களிடமிருந்து ஒப்பந்தப்புள்ளி ஆவணம் (Request for Proposal) RFP வழங்க தயாரித்து வந்த நிலையில் உத்தேசிக்கப்பட்ட இடங்களான கூத்தம்பாக்கம் மற்றும் மீஞ்சூர்–வள்ளூர் பகுதிகளுக்கு பதிலாக முறையே தற்போது உள்ள பெருங்குடி மற்றும் கொடுங்கையூர் குப்பை கொட்டும் வளாகத்தியே செயலாக்க அரசுக்கு முன்மொழிவு அனுப்பப்பட்டு அவ்வாறே அரசாணை பெறப்பட்டதற்கு பின்னேற்பு அனுமதி

10.05.2012 என்று நாள் குறித்து, கீழ் குறித்த திட்டங்களுக்கு விருப்ப விண்ணப்பங்கள் ஆர்வமுள்ள ஒப்பந்தப்புள்ளிதாரர்களிடமிருந்து அழைக்கப்பட்டன.

திட்டக்கூறு–1: சென்னை மாநகர் மற்றும் சென்னைக்கு அருகாமையிலுள்ள, சென்னை மாநகராட்சியின் உதவியை நாடும் உள்ளாட்சி அமைப்புகளுக்காக நாள்தோறும் 2500 மெட்ரிக் டன் திடக்கழிவுகளை இறுதியாக தீர்வு செய்ய ஒருங்கிணைந்த திடக்கழிவு மேலாண்மை பதனிடுதல் வசதிகளை நிறுவுதல்.

திட்டக்கூறு–2: குறிப்பிட்ட காலக்கெடு நிர்ணயித்து கொடுங்கையூர் மற்றும் பெருங்குடியில் உள்ள குப்பை கொட்டும் வளாகங்களை சீரமைத்தல் மற்றும் அவைகளை அறிவியல் ரீதியில் மூடுதல்.

திட்டக்கூறு–3: சென்னை மாநகராட்சியினால் படிப்படியாக குறிப்பிடப்படும் மண்டலங்களில்/வார்டுகளில் உள்ள தெருக்களை பெருக்கி குப்பை அகற்றுதல் மற்றும் வீட்டுக்கு வீடு சென்று குப்பை சேகரித்தல் மற்றும் அவைகளை ஒருங்கிணைந்த திடக்கழிவுகள் பதனிடுதல் திட்ட வளாகத்திற்கு கொண்டு சென்று சேர்த்தல் ஆகிய திட்டங்களை செயலாக்குதல்

குறித்த நாளான 10.05.2012 அன்று கீழ்வரும் எண்ணிக்கையில் விருப்ப விண்ணப்பங்கள் பெறப்பட்டன.

திட்டக்கூறு 1	29
திட்டக்கூறு 2	23
திட்டக்கூறு 3	17

இந்த விருப்ப விண்ணப்பங்கள் இதற்கென நியமனம் செய்யப்பட்ட ஆலோசனை அமைப்பினால் மதிப்பீடு செய்யப்பட்டு திட்டக்கூறு 1க்கு 16 ஒப்பந்தப்புள்ளிதாரர்களும் திட்டக்கூறு 2க்கு 11 ஒப்பந்தப்புள்ளிதாரர்களும் திட்டக்கூறு 3க்கு 9 ஒப்பந்தப்புள்ளிதாரர்களும் பரிந்துரை செய்யப்பட்டனர். பின்னர் இதற்கென சென்னை மாநகராட்சியினால் நிர்மாணிக்கப்பட்ட வல்லுநர் குழுவினால் பரிந்துரை செய்யப்பட்டு மன்றத்தீர்மான எண்.292/2012 நாள். 25.07.2012–ன்படி மன்றத்தின் ஒப்புதலும் பெறப்பட்டது.

இந்த மன்றத்தீர்மானத்தில் கீழ்வருமாறு சொல்லப்பட்டுள்ளது.

''குப்பைகளை பதனிடுதல் திட்டத்தை செயலாக்க தேவையான நிலப்பரப்பினை தேர்வு செய்ய ஏற்கனவே நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு கீழ்வரும் இடங்களில் நிலங்கள் பார்வையிடப்பட்டன.

மலையப்பட்டு(காஞ்சிபுரம் மாவட்டம்)

கூத்தம்பாக்கம்(திருவள்ளூர் மாவட்டம்)

மீஞ்சூர் மற்றும் வள்ளூர்(திருவள்ளூர் மாவட்டம்)

மேற்கூறிய நிலங்கள் சென்னை மாநகராட்சியின் பயன்பாட்டிற்காக மாற்றம் செய்யக்கோரி அரசிற்கு முன்மொழிவு அனுப்பப்பட்டது. ''

மேற்கூறிய மன்றத்தீர்மானத்தின் அடிப்படையில் (1) குப்பை பதனிடுதல் திட்டத்தை செயலாக்க ஒப்பந்தப்புள்ளிகள் (Request for Proposal) தேர்வு செய்யப்பட்டுள்ள ஒப்பந்தப்புள்ளிதாரர்களிடமிருந்து கோரவும், (2) கொடுங்கையூர் மற்றும் பெருங்குடி குப்பை கொட்டும் வளாகம் மற்றும் கொடுங்கையூர் குப்பை கொட்டும் வளாகங்களை சீரமைக்க ஒப்பந்தப்புள்ளிகள் (Request for Proposal) கோரவும் மற்றும் (3) துப்புரவு பணியினை தனியார் மயமாக்க ஒப்பந்தப்புள்ளிகள் கோரவும் அரசிற்கு 16.08.2012 நாளிட்ட முன்மொழிவு அனுப்பப்பட்டது.

இந்த முன்மொழிவிற்கு அரசாணை(2டி)எண்.133, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல்(மா.ந.1), துறை, நாள்.10.12.2012ன்படி ஆட்சிமுறை ஒப்பளிப்பை அரசு வழங்கியுள்ளது.

திட்டக்கூறு 1, குப்பை பதனிடுதல் திட்டங்களை கூத்தம்பாக்கம் மற்றும் மீஞ்சூர்–வள்ளூர் ஆகிய இடங்களில் செயலாக்க ஒப்பந்தப்புள்ளிகள் வரைவு செய்யப்பட்டு கூத்தம்பாக்கம்(திட்டக்கூறு 1A) மற்றும் மீஞ்சூர்–வள்ளூர்(திட்டக்கூறு 1 B) ஆகிய இடங்களில் குப்பை பதனிடுதல் திட்டத்தை செயலாக்க தனித்தனி தொழில்நுட்ப ஒப்பந்தப்புள்ளிகள்(Request for Technical Proposal) 21.02.2013 என்று நாள் குறித்து தேர்வு செய்யப்பட்ட ஒப்பந்தப்புள்ளிதாரர்கள் கோரப்பட்டு தொழில்நுட்ப ஒப்பந்தப்புள்ளி ஆவணம் ஒப்பந்ததாரர்களுக்கு கூத்தம்பாக்கம்(சிப்பம் 1A) மற்றும் மீஞ்சூர்–வள்ளூர்(சிப்பம்–1 B)க்கு வழங்கப்பட்டது.

குறித்த நாளான 21.02.2013 அன்று கீழ்வரும் ஒப்பந்தப்புள்ளிதாரர்கள் தொழில்நுட்ப ஒப்பந்தப்புள்ளியினை சமர்ப்பித்தனர்.

சிப்பம் 1A க்கு

திருவாளர்கள். ராம்கி என்விரோ எஞ்சிநீயர்ஸ். பி. லிமிட்டட்
திருவாளர்கள். பிரதீபா சத்தாராம்
திருவாளர்கள். ட்ரைமெக்ஸ் இண்டஸ்ட்ரீஸ்
திருவாளர்கள். எஸ்ஸெல் இன்ப்ரா ப்ராஜெக்ட்ஸ் லிமிட்டட்
திருவாளர்கள். பேஸ்பவர் சிஸ்ட்மஸ் லிமிட்டட் பி. லிமிட்டட்

சிப்பம் 1 B க்கு

திருவாளர்கள். எஸ்ஸெல் இன்ப்ரா ப்ராஜெக்ட்ஸ் லிமிட்டட்
திருவாளர்கள். ராம்கி என்விரோ எஞ்சிநீயர்ஸ். பி. லிமிட்டட்
திருவாளர்கள். ட்ரைமெக்ஸ் இண்டஸ்ட்ரீஸ்
திருவாளர்கள். லோரோ என்விரோ பவர் சிஸ்டம்

இதற்கிடையில் தமிழக அரசு, தமிழ்நாடு ஒளிவுமறைவற்ற ஒப்பந்தப்புள்ளி(அரசு தனியார் பங்கேற்பு கொள்முதல்) விதிகள், 2012ஐ நிறைவேற்றி அமலுக்கு வரச்செய்யவே, சென்னை மாநகராட்சி அந்த விதிகளின் வழிவகைகள் நிறைவு செய்யப்பட ஒரு ஒப்பந்தப்புள்ளிகள் சரிபார்ப்பு மற்றும் மதிப்பீடு குழுவினை நிர்மாணம் செய்தது.

பெறப்பட்ட தொழில்நுட்ப ஒப்பந்தப்புள்ளிகள் இதற்கென உள்ள ஆலோசகர்களால் மதிப்பீடு செய்யப்பட்டு மேற்சொன்ன ஒப்பந்தப்புள்ளிதாரர்களின் தொழில்நுட்ப ஒப்பந்தப்புள்ளிகளை ஏற்கலாம் என்று பரிந்துரை செய்யப்பட்டு அது ஒப்பந்தப்புள்ளி சரிபார்ப்பு மற்றும் மதிப்பீட்டுக்குழுவினால் ஏற்கப்பட்டது. இந்த குழுவின் பரிந்துரையின் அடிப்படையில் மன்றத்தீர்மான எண்.364/2013 நாள். 26.06.2013ன்படி மன்றத்தின் ஒப்புதல் பெறப்பட்டது. மேலும் இந்த ஒப்பந்தப்புள்ளிதாரர்களுக்கு ஒப்பந்தப்புள்ளி ஆவணம் (Request for Proposal) வழங்கவும் அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

இதற்கிடையில் சென்னை மாநகராட்சி இந்த திட்டத்திற்கு அரசின் நிதியுதவியினை பெறலாம் என்று கருதி அதற்கென தமிழ்நாடு உள்கட்டமைப்பு மேம்பாடு வாரியத்திற்கு (Tamil Nadu Infrastructure Development Board) முன்மொழிவுகள் அனுப்பியதில் கூத்தம்பாக்கம் திட்டத்திற்கு ரூ.100 கோடியும் மீஞ்சூர் திட்டத்திற்கு ரூ.80 கோடியும் மானியமாக வழங்க தமிழ்நாடு உள்கட்டமைப்பு மேம்பாடு கழகம் கொள்கை அளவிலான ஒப்புதலை அவர்களின் உத்தரவு எண்.B.P.No.26, நாள் 08.11.2013ல் தெரிவித்துள்ளது.

தற்போது தெரிவு செய்யப்பட்டுள்ள ஒப்பந்தப்புள்ளிதாரர்களுக்கு வழங்கப்பட்ட ஒப்பந்தப்புள்ளி ஆவணம் (Request for Proposal) தயார் செய்யப்பட்டு ஒப்பந்தப்புள்ளி சரிபார்ப்பு மற்றும் மதிப்பீட்டுக்குழுவினால் பரிந்துரைக்கப்பட்டு தமிழ்நாடு உள்கட்டமைப்பு மேம்பாடு வாரியத்தின் முறைபடுத்தும் விதிகளின்படி அவர்களின் ஒப்புதல் வேண்டி அனுப்பப்பட்டு அவர்களின் பரிசீலனையில் உள்ளது.

இதற்கிடையில் கூத்தம்பாக்கத்தில் வசிக்கும் திரு.ஆறுமுகம் என்பவர், தேசிய பசுமைத் தீர்ப்பாயத்தில், மனு எண்.93/2013(SZ)ஐ தாக்கல் செய்து அதில் கூத்தம்பாக்கத்தில் திடக்கழிவு மேலாண்மை திட்டத்தை செயலாக்குவதற்கு சென்னை மாநகராட்சிக்கு தடைவிதிக்குமாறு கட்டளைகள் வேண்டியிருந்தார். இந்த நிலத்தில் சென்னை மாநகராட்சிக்கு நுழைவு உரிமை அளிக்கும் போது மாற்று மேய்க்கால் நிலம் கால்நடைகளுக்காக இனம் காணப்படவேண்டுமென்ற நிபந்தனையில் அரசாணை பிறப்பிக்கப்பட்டுள்ளது என்பதால் அந்த நிபந்தனையினை விலக்கிக்கொள்ள அரசாணை பிறப்பித்துள்ள தமிழக அரசின் வருவாய் துறைக்கு சென்னை மாநகராட்சி ஒரு முன்மொழிவினை அனுப்பியது. மேலும் அந்த தகவலை தனது பதிலுரையில் சென்னை மாநகராட்சி பசுமைத்தீர்ப்பாயத்தில் சமர்ப்பித்துள்ளது. மேலும், சென்னை மாநகராட்சி இந்த திட்டத்திற்கு தேவையான சுற்றுச்சூழல் இசைவுச்சான்றிதழ் (Environmental Clearance) மற்றும் இன்ன பிற தடையின்மைகள் (No objections) பெற்ற பிறகே செயல்படுத்தப்படும் என்று சென்னை மாநகராட்சி தனது பதிலுரையில் தெரிவித்துள்ளது.

இந்த வழக்கில் பசுமைத் தீர்ப்பாயம் தங்களது 20.02.2014 நாளிட்ட தீர்ப்புரையில், கூறப்பட்டுள்ள முக்கியமான பகுதியாவது,

> ‘‘it is needless to say that it has to undergo all stages before grant of environmental clearance. In particular it has to pass through the step of public hearing. It is always open to the applicants to raise objections not only at the time of public hearing. but at different stages also. What is all said in this application, as per averments, is only a visit made by the officials of the Corporation of Chennai, and that too, according to the 7th respondent, was only a site inspection. Hence, the contention put forth by the applicant’s side that active steps have been taken cannot be countenanced.
>
> 6) In view of the availability of the opportunity to the applicant, to raise objections, both legal and factual, at the appropriate stages, the tribunal is of the considered opinion that this application

has to be disposed of giving liberty to applicant to raise objections at the appropriate stage(s), and also if necessary ventilate the grievances before the proper form. Accordingly the application is disposed.''

இதன்படி பாதிக்கப்பட்டதாக கருதும் எந்த ஒரு நபரும் கூத்தம்பாக்கத்தில் நிறுவப்பட உத்தேசிக்கப்பட்டுள்ள இந்த திட்டத்தை எதிர்க்கலாம்.

மீஞ்சூர்–வள்ளூரிலும் திடக்கழிவு மேலாண்மை பதனிடுதல் திட்டத்தை செயலாக்க அப்பகுதி மக்களிடையே பரவலாக எதிர்ப்பு உள்ளது. இது குறித்து பொதுமக்கள் சாலை மறியலும் செய்துள்ளனர். இது தவிர, மாண்புமிகு முதலமைச்சரின் தனிப்பிரிவு மற்றும் மாண்புமிகு மேயர் அவர்களுக்கும் இங்கு திடக்கழிவு மேலாண்மை திட்டத்தை செயல்படுத்துவதற்கு எதிர்ப்பு தெரிவித்து அப்பகுதி மக்களிடமிருந்து புகார்கள் அளிக்கப்பட்டுள்ளன. கூத்தம்பாக்கம் மற்றும் மீஞ்சூர்–வள்ளூர் இரண்டு இடங்களும் குப்பை பதனிடுதல் திட்டங்களை செயலாக்க போதுமான பரப்பளவு கொண்டுள்ளதா என்று மட்டும் கருத்தில் கொள்ளப்பட்டதே தவிர அவ்விடங்களில் குப்பை பதனிடுதல் திட்டத்தை செயலாக்க சுற்றுச்சூழல் இசைவுச்சான்றிதழ் பெறுவது இயலுமா என்பது பற்றி சாத்தியக்கூறு ஆய்வு (Feasibility) மேற்கொள்ளப்படவில்லை.

மேலும், நகராட்சி திடக்கழிவுகள் (மேலாண்மை மற்றும் கையாளல்)விதிகள், 2000ல் நகராட்சி திடக்கழிவுகளை களைவதற்கான நிலப்பரப்பு அமைய வேண்டிய இடம் பற்றிய வரையறைகள் சொல்லப்பட்டுள்ளன. அதே விதிகளில் நடைமுறையில் உள்ள குப்பை கொட்டும் வளாகங்கள் மேம்பாடு செய்யப்படவேண்டும் என்றும் சொல்லப்பட்டுள்ளது. எனவே, குப்பை கொட்டும் வளாகங்கள் அமையப்பட வேண்டிய இடத்திற்கான வரையறைகள் இந்த விதிகள் அமலுக்கு வருவதற்கு முன்பாக செயல்பாட்டில் உள்ள குப்பை கொட்டும் வளாகங்களுக்கு பொருந்தாது. இதன்படி நடைமுறையில் உள்ள குப்பை கொட்டும் வளாகங்களை, குப்பைகளை திறந்தவெளியில் களைவதை கைவிட்டு பதனிடுதலுக்கு உட்படுத்துவதற்கு உபயோகப்படுத்துவதை விதிகள் தடுக்காது. மேலும் அவ்வாறு செய்யவேண்டியது உள்ளாட்சி அமைப்புகளின் கடமையும் ஆகும்.

இது தவிர ஆர்வம் காட்டும் விண்ணப்பங்கள் பெறப்பட்டு ஒப்பந்தப்புள்ளி ஆவணங்கள் தயாரித்தல் நடவடிக்கையில் உள்ளபோது, திருவாளர்கள் சி.டி.ஐ.ஏ (City Development Initiatives for Asia) அவர்களை சென்னை மாநகராட்சி, தற்போது சென்னை மாநகராட்சியில் நடைமுறையில் உள்ள திடக்கழிவு மேலாண்மை செயல்முறைகளை (Existing Solid Waste Management Practices) ஆய்வு செய்து அவைகளை மேம்பாடு செய்ய கருத்துருவினை வழங்குமாறு சென்னை மாநகராட்சி கேட்டுக்கொண்டது. அதன் அடிப்படையில் திருவாளர்கள் சி.டி.ஐ.ஏ. அவர்கள் சென்னை மாநகராட்சியின் திடக்கழிவு மேலாண்மையினையும் சென்னை மாநகராட்சி தனியார் மூலம் நிறைவேற்ற உத்தேசித்துள்ள குப்பை பதனிடும் திட்டங்கள் உட்பட அனைத்தையும் பரிசீலனை செய்து தங்களின் பரிந்துரையினை வழங்கியுள்ளனர். அதில் அவர்கள் கீழ்வருமாறு கூறியுள்ளனர்.

" Worldwide, the siting of waste disposal facilities is notoriously difficult, due in part to the NIMBY (not in my backyard) and NIMTOO (not in my term of office) syndromes. This is certainly the case in Chennai, where there are both historic and recent examples of sustained opposition to facility siting. As a result of these difficulties, a disposal siting assessment is normally Undertaken in order to locate, evaluate, and select potential sites on which to develop disposal facilities. Such a siting assessment conventionally includes a regional approach, identifying and evaluating sites up to and beyond 50-km distance from waste generation centers. Guided by a stakeholder steering committee, a siting assessment process normally commences with a determination of facility sizing requirements based on demand and required lifespan, followed by the formulation of site selection criteria, the identification and detailed comparative analysis of sites, reaching consensus on preferred sites through consultation processes, and only then, moving ahead to develop the preferred site or sites. Usually, in parallel with the siting assessment is an analysis of least cost technical options, that is, an analysis of the most favorable technological options for the various sites identified Although neither a siting assessment nor a least cost technological options evaluation have so far been conducted in Chennai, the COC is determined to proceed expeditiously with the development of the two facilities. In this context, it now proposes to conduct a rapid siting assessment in order to identify and evaluate pot ential sites for facility development. This is to be conducted in parallel with the ongoing PPP procurement process, as it is recognized that the procurement and concessionaire formalization process will take another several months to complete, during which time the rapid site assessment can be completed. It is proposed that the siting assessment also consider the potential of utilizing the existing Perungudi and Kodungaiyur dumpsite locations as the future locations for the new facilities. In this regard, it might be technically feasible to remediate these facilities in such a way as to create enough suitable land area on which to locate the new facilities. Consideration of this option would however obviously necessitate; (i) intense technical and environmental assessment of the site conditions to ensure site suitability, (ii) careful coordination and integration with the proposed remediation, closure, post closure and interim disposal Operations at the facilities, and (iii)

extensive community and stakeholder awareness, involvement and consensus particularly of nearby communities. ”

<u>இந்த கருத்துரையில் முக்கியமானது கீழ்வரும் கருத்துரையாகும்.</u>

‘‘ It is proposed that the siting assessment also consider the potential of utilizing the existing Perungudi and Kodungaiyur dumpsite locations as the future locations for the new facilities. In this regard, it might be technically feasible to remediate these facilities in such a way as to create enough suitable land area on which to locate the new facilities. Consideration of this option would however obviously necessitate’’

இந்த பரிந்துரையினை கருத்தில் கொண்டு பரிசீலனை செய்தாலும், கொடுங்கையூர் குப்பை கொட்டும் வளாகம் மற்றும் பெருங்குடி குப்பை கொட்டும் வளாகங்களை சீரமைக்க நடவடிக்கை எடுக்கும் அதே நேரத்தில் அவ்விடங்களிலேயே குப்பை பதனிடுதல் திட்டத்தையும் செயலாக்கலாம் என்று கருதப்படுகிறது.

பெருங்குடி மற்றும் கொடுங்கையூர் குப்பை கொட்டும் வளாகங்களை விட கூத்தம்பாக்கம் மற்றும் மீஞ்சூர்–வள்ளூர் அதிக தூரமாகும். எனவே, அவ்விடங்களில் குப்பை பதனிடுதல் திட்டங்களை செயல்படுத்த வேண்டிய நிலையில் குப்பைகளை திட்ட வளாகத்தில் சென்று வழங்க சென்னை மாநகராட்சி அதிக அளவில் போக்குவரத்து செலவினத்தை மேற்கொள்ள வேண்டியிருக்கும். மேலும் குப்பையின் உருவாக்கம் ஆண்டு தோறும் அதிகமாவதினால் அந்த செலவினமும் ஒவ்வோர் ஆண்டும் அதிகரிக்கும். எனவே, இந்த குப்பை பதனிடுதல் திட்டத்தை உத்தேசிக்கப்பட்டுள்ள கூத்தம்பாக்கம் மற்றும் மீஞ்சூர்–வள்ளூர் பகுதிக்கு பதிலாக முறையே பெருங்குடி மற்றும் கொடுங்கையூர் குப்பை கொட்டும் வளாகங்களிலேயே செயலாக்கலாம் என்று கருதப்படுகிறது.

ஒப்பந்தப்புள்ளிகள் தீர்வு செய்யப்பட்டு, ஒப்பந்தப்புள்ளிதாரருடன் உடன்படிக்கையும் நிறைவேற்றப்பட்டு, பின்னர் பலமாதங்கள் முயற்சிக்குப்பின்னர், ஒரு வேளை சுற்றுச்சூழல் இசைவுச்சான்றிதழ் (Environmental Clearance) கிடைக்காவிட்டால், இதுவரை மேற்கொள்ளப்பட்ட முயற்சிகள் வீணாவதுடன், கால விரயமும் ஏற்படும். மேலும், தற்போது குப்பைகொட்டும் வளாகங்களில் மேன்மேலும் குப்பைகள் கொட்டப்பட்டு அவைகள் நிரம்பி வழியும் நிலையும் ஏற்படும். மேலும், சென்னை மாநகராட்சியின் விரிவாக்கத்திற்கு பிறகு சென்னை மாநகராட்சியில் உருவாகும் குப்பையின் அளவு மிகவும் அதிகமாக உள்ளது. இந்த சூழ்நிலையில் சென்னை மாநகராட்சி மிகுந்த எச்சரிக்கையுடனும், தொலைநோக்கு பார்வையுடனும், எதிர்காலத்தையும் கருத்தில் கொண்டு நடவடிக்கை எடுக்க வேண்டியது அவசியமாகிறது. ஆகவே, புதிதான ஒரு இடத்தில் குப்பை மேலாண்மை திட்டங்கள் செயலாக்க சுற்றுச்சூழல் இசைவுச்சான்றிதழ் நிச்சயம் பெற இயலும் என்று உறுதியாக கூற இயலாத நிலையில், ஏற்கனவே குப்பை கொட்டும் வளாகங்கள் சீரமைக்கப்பட வேண்டும் என்று கூறப்பட்டுள்ளதற்கிணங்க அவ்விடங்களிலேயே குப்பை பதனிடுதல் திட்டங்களை செயலாக்க முயற்சிகள் எடுத்தால் சுற்றுச்சூழல் இசைவுச்சான்றிதழ் கிடைப்பதில் அதிக அளவு சிக்கல் இருக்காது என்று கருதப்படுகிறது. ஆயினும் அவ்வாறு, பெருங்குடி மற்றும் கொடுங்கையூர் குப்பை கொட்டும் வளாகங்களில் இந்த குப்பை பதனிடுதல் திட்டத்தை செயலாக்க முனையும் பட்சத்தில் இரண்டு திட்டங்களுக்குமே மத்திய அரசிடமிருந்து (Central level/MoEF) இசைவுச்சான்றிதழ்கள் பெறப்பட வேண்டும். ஏனென்றால், பெருங்குடி குப்பை கொட்டும் வளாகம் வனப்பகுதி என்று அறிவிக்கப்பட்டுள்ள கிண்டி தேசியப் பூங்காவிற்கு அருகில் உள்ளது. மேலும், கொடுங்கையூரும், மத்திய மாசுக்கட்டுப்பாடு வாரியத்தினால் அதிக அளவில் மாசுபட்ட இடமாக அறிவிக்கப்பட்டுள்ள (Critically polluted area) மணலிக்கு அருகில் உள்ளது.

இந்த திட்டத்தை செயலாக்க கூத்தம்பாக்கம் மற்றும் மீஞ்சூர்–வள்ளூர் என்று இடம் குறிப்பிட்டு தொழில் நுட்ப ஒப்பந்தப்புள்ளிகள் அழைக்கப்பட்டு அவைகள் மன்றத்தினால் ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளன. எனவே, கூத்தம்பாக்கம் மற்றும் மீஞ்சூர்–வள்ளூர் ஆகிய இடங்களுக்கு பெறப்பட்ட தொழில்நுட்ப ஒப்பந்தப்புள்ளிகளை அவ்வாறே பெருங்குடி மற்றும் கொடுங்கையூர் ஆகிய இடங்களுக்கு பெறப்பட்டதாக ஏற்க வேண்டும் என்று சென்னை மாநகராட்டிசியால் கோரப்பட்டது.

சென்னை மாநகராட்சி ஏற்கனவே, தமிழ்நாடு உள்கட்டமைப்பு மேம்பாட்டு வாரியத்தின் (Tamil Nadu Infrastructure Development Board) கொள்கை அளவிலான ஒப்புதலை (In-principle sanction) இந்த திட்டத்திற்கு மூலதன மானியமாக ரூ.180 கோடி (கூத்தம்பாக்கம் திட்டத்திற்கு ரூ.100 கோடி மற்றும் மீஞ்சூர்–வள்ளூர் திட்டத்திற்கு ரூ80 கோடி) ஏற்கனவே பெற்றுள்ளதால், பெருங்குடி மற்றும் கொடுங்கையூரில் இந்த திட்டத்தை செயலாக்கம் பெறவேண்டும். ஒப்பந்தப்புள்ளி ஆவணங்கள் (Request for Proposal) தமிழ்நாடு உள்கட்டமைப்பு மேம்பாட்டு வாரியத்தின் ஒப்புதலுக்கு அனுப்பப்பட்டுள்ளது. மேலும், அவர்களின் ஒப்புதலும் எதிர்பார்க்கப்படுகிறது. எனவே, கூத்தம்பாக்கம் மற்றும் மீஞ்சூர்–வள்ளூர் ஆகிய இடங்களில் மேற்சொன்ன திட்டத்தை செயலாக்க பெறப்பட்ட தொழில்நுட்ப ஒப்பந்தப்புள்ளிகளை முறையே பெருங்குடி மற்றும் கொடுங்கையூரில் செயல்படுத்த ஏற்குமாறு அரசிடம் வேண்டிக்கொள்ளப்பட்டது.

கொடுங்கையூர் மற்றும் பெருங்குடி குப்பை கொட்டும் வளாகங்ளில் முப்பது ஆண்டுகளுக்கும் மேலாக குப்பைகள் கொட்டப்பட்டு வருகின்றன. அங்கு குப்பைகள் கொட்ட ஆரம்பிக்கப்பட்ட காலங்களில் அதிகமாக குடியிருப்புப்பகுதிகள் இல்லை. ஆனால், நாளடைவில், மாநகரம் விரிவடைந்து இந்த இடங்களைச் சுற்றி அதிக

அளவில் குடியிருப்புப்பகுதிகள் உருவாயின. மேலும், குப்பைகள் அங்கு திறந்தவெளியில் களையப்படுவதால், மக்களிடமிருந்து அதிக அளவில் எதிர்ப்புகள் வந்த வண்ணம் உள்ளன. எனவே, பெருங்குடி மற்றும் கொடுங்கையூர் பகுதி மக்களின் நலனை கருத்தில் கொண்டு அப்பகுதியில் குப்பை கொட்டுவதை நிறுத்தவும் சென்னை மாநகரின் எல்லைக்கு அப்பால், குப்பை பதனிடுதல் திட்டங்களை செயலாக்கும் தொழிலகங்களை நிறுவவும் உத்தேசிக்கப்பட்டு மேற்சொன்ன கூத்தம்பாக்கம் மற்றும் மீஞ்சூர்–வள்ளூர் ஆகிய இடங்களில் குப்பை பதனிடும் திட்டங்களை செயலாக்க தொழில்நுட்ப ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டன. ஆயினும், அங்கும் பொதுமக்களின் எதிர்ப்பும் அதிகமாக உள்ளதாலும், அவ்விடங்களில் குப்பை பதனிடும் திட்டத்தை செயலாக்க அந்த இடங்களுக்கு சுற்றுச்சூழல் இசைவுச்சான்றிதழ் பெற இயலும் என்று உறுதியாக எதிர்பார்க்க இயலாத சூழ்நிலை உள்ளது.

மேற்கூறிய சூழ்நிலையில், கூத்தம்பாக்கம் மற்றும் மீஞ்சூர் ஆகிய இடங்களில் தற்போது குப்பை பதனிடும் திட்டங்களை செயலாக்க விருப்ப விண்ணப்பங்களும் மற்றும் அதன் பிறகு தொழில்நுட்ப ஒப்பந்தப்புள்ளிகளும் அழைக்கப்பட்டு தீர்வு செய்யப்பட்டு ஒப்பந்தப்புள்ளிதாரர்களுக்கு வழங்க ஒப்பந்தப்புள்ளி ஆவணங்கள் (Request for Proposal) வரைவு செய்யப்பட்டு அதற்கு ஒப்பந்தப்புள்ளி சரிபார்ப்பு மற்றும் மதிப்பீட்டுக்குழுவின் பரிந்துரையும் பெற்று தமிழ்நாடு உள்கட்டமைப்பு மேம்பாடு வாரியத்தின் அனுமதி எதிர்பார்க்கப்படுவதாலும், கூத்தம்பாக்கம் மற்றும் மீஞ்சூர்–வள்ளூர் ஆகிய இடங்களில் குப்பை பதனிடுதல் திட்டத்தை செயலாக்குவதற்கு பதிலாக பெருங்குடி மற்றும் கொடுங்கையூரில் செயல்படுத்துவதற்கு ஏற்கனவே, இந்த திட்டத்தை செயலாக்க தமிழ்நாடு உள்கட்டமைப்பு மேம்பாடு வாரியம் ரூ.180 கோடியினை (கூத்தம்பாக்கம் திட்டத்திற்கு ரூ.100 கோடி மீஞ்சூர்–வள்ளூர் திட்டத்திற்கு ரூ.80 கோடி) மானியமாக வழங்க கொள்கை அளவிலான ஒப்புதலை அளித்துள்ளதால், இந்த திட்டத்திற்கான வரைவு ஒப்பந்தப்புள்ளி (Request for Proposal)கள், ஒப்பந்தப்புள்ளி சரிபார்ப்பு மற்றும் மதிப்பீட்டுகுழு (Tender Scrutiny and Evaluation Committee)வின் ஒப்புதல் பெற்று தமிழ்நாடு உள்கட்டமைப்பு மேம்பாடு வாரியத்திடம் ஒப்புதல் வேண்டி அனுப்பப்பட்டுள்ளதால், மேற்சொன்ன திருத்தத்தை வரைவு ஒப்பந்தப்புள்ளியில் சேர்க்க அவர்களிடம் கோரலாம்.

மேலும், அரசிற்கு அனுப்பிய முன்மொழிவில் இந்த திட்டத்தை செயலாக்க கூத்தம்பாக்கம், மீஞ்சூர்–வள்ளூர் மற்றும் மலைபட்டு ஆகிய இடங்கள் பார்வையிடப்பட்டது என்று சொல்லப்பட்டுள்ளதால், தற்போது இந்த திட்டத்தை பெருங்குடி மற்றும் கொடுங்கையூர் ஆகிய இடங்களில் உள்ள குப்பை கொட்டும் வளாகங்களில் செயல்படுத்த அரசின் ஒப்புதலும் தேவையானதாகும். கால அவகாசத்தை கருத்தில் கொண்டு, மன்றத்தின் பின்னேற்பிற்கு உட்பட்டு, இந்த குப்பை பதனிடுதல் திட்டத்தை கூத்தம்பாக்கத்த்ற்கு பதிலாக பெருங்குடி குப்பை கொட்டும் வளாகத்திலும் மீஞ்சூர்–வள்ளூருக்கு பதிலாக கொடுங்கையூர் குப்பை கொட்டும் வளாகத்திலும் செயலாக்க அரசிற்கு முன்மொழிவிற்று கடிதம் அனுப்பப்பட்டதில், இதன் மீது மேல்நடவடிக்கை எடுக்கும் பொருட்டு உரிய ஆவணங்களின் நகல்களை அரசுக்கு அனுப்பி வைக்குமாறு கோரப்பட்டது. அதன்படி, கடந்த 12.01.2015 அன்று அரசுக்கு நேரிடையாக உரிய ஆவணங்கள் வழங்கப்பட்டு ஒப்புகை பெறப்பட்டுள்ளது.

அதன் அடிப்படையில் நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (மா.ந,1) துறை, அரசாணை (நிலை) எண்,106 நாள்.22.07.2012 பெறப்பட்டது. அதில் கீழ் கண்டவாறு ஆணையிடப்பட்டுள்ளது.

I. குப்பை பதனிடுதல் திட்டத்தை கூத்தம்பாக்கம் மற்றும் மீஞ்சூர்–வள்ளூரில் செயல்படுத்துவதற்கு பதிலாக, முறையே பெருங்குடி மற்றும் கொடுங்கையூர் குப்பை கொட்டும் வளாகங்களில் செயலாக்குதல்,

II. பெருங்குடி மற்றும் கொடுங்கையூர் குப்பை கொட்டும் வளாகங்களில், குப்பை பதனிடுதல் திட்டத்தை செயல்படுத்துவதற்கு புதிய ஒப்பந்தப்புள்ளி (fresh tender process has to be followed) கடைபிடித்தல்.

III. மேற்சொன்ன குப்பை பதனிடுதல் திட்டத்திற்கு, தமிழ்நாடு உள்கட்டமைப்பு மேம்பாடு வாரியத்தால் (Tamil Nadu Infrastructure Development Board) ரூ. 180 கோடி (கூத்தம்பாக்கம் திட்டத்திற்கு ரூ.100 கோடி எனவும் மற்றும் மீஞ்சூர்–வள்ளூர் திட்டத்திற்கு ரூ.80 கோடி எனவும் பயன்படுத்திக் கொள்ள) மூலதன மானியமாக வழங்க கொள்கை அளவில் வழங்கப்பட்ட ஒப்புதலை, முறையே கொடுங்கையூர் மற்றும் பெருங்குடிக்கு பயன்படுத்திக் கொள்ள தமிழ்நாடு உள்கட்டமைப்பு மேம்பாடு வாரியத்தின் (Tamil Nadu Infrastructure Development Board) ஒப்புதல் கோருதல்.

IV. ஏற்கனவே சென்னை மாநகராட்சி திடக்கழிவு மேலாண்மை திட்டத்தை கூத்தம்பாக்கம் கிராமத்தில் உள்ள 10.58.0 ஏக்கர் மேய்க்கால் புறம்போக்கு நிலத்தில் செயல்படுத்த, முன் நுழைவு அனுமதி அளித்து வழங்கப்பட்ட அரசாணை (நிலை) எண் 447, வருவாய் (நிமு5(2)) துறை, நாள். 21.02.2015ஐ ரத்து செய்வது தொடர்பாக, கூடுதல் தலைமைச் செயலாளர் / நில நிர்வாக ஆணையர் அவர்களுக்கு கருத்துரு அனுப்பவும், வருங்காலத்தில் மேற்படி இடம் தேவைப்படும் பட்சத்தில் அரசினை அனுகுமாறும், முதன்மைச் செயலாளர் / ஆணையாளர், சென்னை மாநகராட்சி அவர்களை அறிவுறுத்துதல்.

எனவே,

1. கூத்தம்பாக்கம் மற்றும் மீஞ்சூர்–வள்ளூரில் குப்பை பதனிடுதல் திட்டத்தை முறையே பெருங்குடி மற்றும் கொடுங்கையூர் குப்பை கொட்டும் வளாகத்தில் செயலாக்க அரசிற்கு முன்மொழிவிற்கு கடிதம் அனுப்பப்பட்டதற்கு மன்றத்தின் பின்னேற்பு அனுமதியும்,
2. கூத்தம்பாக்கம் மற்றும் மீஞ்சூர்–வள்ளூரில் குப்பை பதனிடுதல் திட்டத்திற்கு கோரப்பட்ட தொழில்நுட்ப ஒப்பந்தபுள்ளிகளை ரத்து செய்யவும்,
3. மேற்கூறிய அரசாணையில் பெருங்குடி மற்றும் கொடுங்கையூர் குப்பைக்கொட்டும் வளாகங்களில் குப்பை பதனிடுதல் திட்டத்தை செயல்படுத்துவதற்கு புதிய ஒப்பந்த புள்ளி செய்முறையினை (Fresh tender process has to be followed) கடைபிடிக்க தெரிவிக்கப்பட்டுள்ளதால், ஏற்கனவே 10.05.2012 அன்று தனியார் துறையின் பங்களிப்பு கொண்ட (Public Private Partnership) உலகளாவிய ஆர்வம் காட்டும் விண்ணப்பங்கள் மூன்று பெரும் திடக்கழிவு மேலாண்மை திட்டங்களுக்கு பெறப்பட்டதை ரத்து செய்யவும், இதன் சம்பந்தமான ஒப்ப நடவடிக்கைகள் அனைத்தையும் கைவிடவும் மற்றும் முன்வைப்பு தொகையாக (EMD) வங்கி உத்தரவாதமாக (Bank Guarantee) பெறப்பட்டதை உரிய ஒப்பந்ததாரர்களுக்கு திருப்பி அளிக்கவும்,

மேற்கண்ட 1 முதல் 3 வரை உள்ள இனங்களுக்கு நிலைக்குழு (பணிகள்) மற்றும் நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி)வின் மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

"ஏற்கனவே நிலைக்குழு (பணிகள்) கூட்டம் 22.07.2015 அன்று முடிவடைந்த நிலையில் இப்பொருளின் அவசரம் மற்றும் அவசியத்தன்மையை கருத்தில் கொண்டு 03.08.2015 அன்று தீர்மான எண்.190/2015ன்படி இதற்கு நிலைக்குழு (பணிகள்) சுற்றின் மூலம் பெரும்பான்மை உறுப்பினர்களின் பரிந்துரையை பெற்று நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி)வின் மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது ".

"ஏற்கனவே நிலைக்குழு (வ.வி.ம.நி) வின் கூட்டம் 24.07.2015 அன்று முடிவடைந்த நிலையில் இப்பொருளின் அவசரம் மற்றும் அவசியத்தன்மையை கருத்தில் கொண்டு 03.08.2015 அன்று தீர்மான எண்.227/2015ன்படி இதற்கு நிலைக்குழு (வ.வி.ம.நி)வின் சுற்றின் மூலம் பெரும்பான்மை உறுப்பினர்களின் பரிந்துரையை பெற்று மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது ".

"இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது"

****

சு.து. நக எண்.பி1 /4805 /2015

முதன்மை செயலர் மற்றும் ஆணையர் அவர்களின் 31.07.2015 நாளிட்ட குறிப்பு

தீர்மான எண்.435/2015 **பொருள் எண்.84**

பொதுசுகாதாரத்துறை– திருத்திய தேசிய காசநோய் கட்டுப்பாடு திட்டம் –சென்னை மாநகராட்சி பகுதிகளில் இத்திட்டத்தினை மேலும் சிறப்புடன் செயல்படுத்த அமெரிக்கா நாட்டிலிருந்து வழங்கப்படும் நிதி உதவியினை பெற மாநகராட்சியின் கருத்துரு அனுப்பப்பட்டு அதற்கான ஒப்புதல் பெறப்பட்டது – தற்போது நிதி உதவி பெறுவதற்கு முழுமையான (US Agency for International Development India Mission) த்திற்கு முன்மொழிவு அளிக்க அனுமதி

சென்னை மாநகராட்சியில் அனைத்து மாநகர ஆரம்ப சுகாதார நிலையங்களில் திருத்திய தேசிய காசநோய் கட்டுப்பாடு திட்டத்தின் கீழ் காசநோயாளிகளுக்கு 6 மாதம் முதல் 8 மாதம் வரை காசநோய் தடுப்பு மாத்திரைகள் DOTS முறையில் இலசமாக வழங்கப்படுகின்றன.

சென்னை மாநகரில் கீழ் 54 நுண்ணோக்கி மையங்கள் செயல்பட்டு வருகின்றன. இங்கு காசநோய்க்கான இலவசமாக சளி பரிசோதனை செய்யப்படுகிறது.

சென்னை மாநகராட்சி பகுதிகளில் 2014 ம் ஆண்டில் 73,057 நபர்களுக்கு காசநோய் பரிசோதனை செய்யப்பட்டது. அதில் 7331 பேருக்கு காசநோய் உள்ளது கண்டறியப்பட்டு அவர்களுக்கு உரிய சிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறது. இதில் 87 விழுக்காடு நோயாளிகள் பூரண குணம் அடைந்துள்ளனர்.

மத்திய காச நோய் பிரிவின் (Central T.B.Division) ஆய்வறிக்கையின்படி 1.00 லட்சம் மக்கள் தொகையில் 203 காசநோயாளிகள் இருப்பதாக கண்டறியப்பட்டுள்ளது. தற்போது சென்னை மாநகரில் தேசிய காசநோய் கட்டுப்பாடு திட்டத்தின் மூலம் கண்டறியப்படும் காசநோயாளிகளின் எண்ணிக்கை ஒரு லட்சம் மக்கள் தொகைக்கு 100 என்ற அளவிலேயே உள்ளது. இது மேற்குறிப்பிட்டுள்ள விகிதாச்சாரத்திற்கு 50% மட்டுமே ஆகும்.

மீதமுள்ள 50% காசநோயாளிகளில் சிகிச்சை எடுக்காமலும், சிலர் தனியார் மருத்துமனைகள், மற்றும் தனியார் மருத்துவர்களிடம் சிகிச்சை பெறுகின்றனர். மேலும் பலர் நோய் கண்டறியாமல் சிகிச்சை ஏதுமின்றி மருந்தகங்களில் மருந்து பெற்று சாப்பிட்டு வருகின்றனர்.

காசநோய் கண்ட நோயாளிகளை கண்டறிந்து முறையான சிகிச்சை அளிக்கப்படாவிடில் அவர்கள் சமூகத்தில் அவர்கள் மட்டும் பாதிக்கப்படுவதுடன் மற்றவர்களும் இந்த நோயினை பரப்பு வாய்ப்புள்ளது. மேலும் முறையான சிகிச்சை இல்லை எனில் இது தீவிரமான காச நோயாக (MDR TB) மாறவும் வாய்ப்புள்ளது. காசநோயினால் பொதுமக்கள் உடல்நலம் பாதிக்கப்படுவதுடன் இது அவர்களின் குடும்பத்திற்கு பெரும் பொருளாதார சுமையாகவும் மாறுகின்றது. எனவே, காசநோய் முழுமையான கண்டறிந்து குணப்படுத்த வேண்டியுள்ளது.

இதற்கென ஏற்கெனவே சென்னை மாநகராட்சி செய்து வரும் சேவைகளை தீவிரப்படுத்தவும், புதிய உத்திகளை கையாளுவதின் மூலமாக சென்னை மாநகரத்தில் காசநோயை கட்டுப்படுத்த இயலும். இத்திட்டத்திற்கென தேசிய காசநோய் ஆராய்சி நிறுவனம் (National Institute for Reserch in Tuberculosis (NIRT), தன்னார்வ தொண்டு நிறுவனமான REACH அரசு மற்றும் பெரிய தனியார் மருத்துமனைகளை கொண்டு ஒரு குழுமம் அமைக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது.

இக்குழுமத்தினை மூலம் காசநோய்க்கான கண்டறிதல் மற்றும் சிகிச்சை முறையினை வலுப்படுத்த கீழ்க்கண்டவாறு திட்டம் வகுக்கப்பட்டுள்ளது.

1. காசநோயினை கண்டறிய தற்போதுள்ள புதிய தொழிநுட்பத்தினை பயன்படுத்துதல்
2. காசநோயினை துரிதமாக கண்டறிந்து விரைவாக முறையான சிகிச்சை அளிப்பதன் மூலம் நோய்தாக்கத்தினை குறைத்தல்
3. காசநோயாளிகள் முழுமையான சிகிச்சையினை சரியான முறையில் (6–8 மாதம்) எடுக்க புதிய எளிமையான நடைமுறைகளை உருவாக்கி நோய் குணமடையும் விழுக்காடு 90% உயர்த்துதல்
4. தனியார் மருத்துவர்கள் மற்றும் மருத்துவமனைகளுக்கு முறையான பயிற்சி அளிக்கப்பட்டு ஒரே மாதிரியான சிகிச்சை முறையினை பின்பற்ற நடவடிக்கை எடுப்பதன் மூலம் தீவிரமான காசநோய் (MDR TB) நிகழ்வுகளை ஏற்படுவதை குறைத்தல்.
5. இந்த திட்டத்தினை செயல்படுத்த அரசு மற்றும் தனியார் மருத்துவமனைகள் ஒரே மாதிரியான தகவல் தொழில்நுட்பத்தினை உபயோகப்படுத்துதல்.

இந்த புதிய திட்டங்களை செயல்படுத்துவது தற்போது மத்திய அரசால் தேசிய காசநோய் ஒழிப்பு திட்டத்தின் கீழ் ஒதுக்கப்பட்டுள்ள நிதியில் மேற்கொள்வது போதுமானதாக இருக்காது என கருதப்படுகிறது. இதற்கென கூடுதல் நிதி தேவைப்படுகிறது. இந்த நிதி (US Agency for International Development India Mission) அமெரிக்க நிறுவனத்தினால் வழங்கப்படும் நிதியினை பயன்படுத்துவதல் இத்திட்டத்தினை முழுமையாக செயல்படுத்த இயலும் என கருதப்பட்டு அவர்களுக்கு நிதிகோரி கருத்துரு முதன்மை செயலர்/ஆணையர் அவர்களின் ஆணை பெறப்பட்டு 01.05.2015ல் மேற்கண்ட நிறுவனத்திற்கு அனுப்பப்பட்டது.

இந்த கருத்துரு மேற்கண்ட அமெரிக்க நிறுவனத்தினால் ஒப்புதல் அளிக்கப்பட்டு தற்போது முழுமையான முன்மொழிவாக(Proposal) சென்னை மாநகராட்சி மூலம் அனுப்ப தெரிவிக்கப்படுள்ளது.

(US Agency for International Development India Mission) அமெரிக்க நிறுவனமானது இந்த திட்டத்திற்கு தேவையான நிதியினை 4 வருடங்களுக்கு பிரித்து அளிக்க தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்த நிதி உதவியானது காசநோயினை முழுமையாக ஒழிப்பதற்கு ஒரு ஆரம்ப கட்ட உந்துதல் சக்தியாகவும் , மற்றும் முன்னோடியாகயும் இருக்கும் என கருதப்படுகிறது. இத்திட்டத்திற்கு சென்னை மாநகராட்சியிலிருந்து 10% நிதி பங்களிப்பு அளிக்கப்பட வேண்டியுள்ளது. இத்திட்டத்தினை செயல்படுத்துவதன் மூலம் காசநோயற்ற சென்னையினை (TB Free Chennai) உருவாக்க இயலும்.

எனவே

1. காசநோயினை சென்னை மாநகரில் முழுமையாக கண்டறிந்து அகற்ற அமெரிக்க நிறுவனத்திடமிருந்து நிதி உதவி சென்னை மாநகராட்சிக்கு பெறுவதற்கு அனுமதியும், பெறப்படும் தொகையில் 10% நிதி பங்களிப்பு அளிக்க அனுமதிக்கும்,
2. இத்திட்டதினை செயல்படுத்த ஒரு குழுமம் அமைக்கவும், மேலும் பெறப்படும் நிதியினை இக்குழுமம் மூலம் செயல்படுத்த அனுமதிக்கும்,
3. இந்த நிதி உதவி பெறுவதற்கு கருத்துரு அமெரிக்க நிறுவனத்திற்கு அளித்ததற்கு மன்றம் மற்றும் அரசின் பின்னேற்பு அனுமதி பெறவும்,
4. அமெரிக்க நிறுவனத்திற்கு சென்னை மாநகராட்சியிலிருந்து நிதி உதவி கோரி முழுமையான முன்மொழிவு அனுப்பவும்,

மேற்கண்ட 1 முதல் 4 வரையிலான இனங்களுக்கு நிலைக்குழு (சுகாதாரம்) மற்றும் நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

> ‘‘ஏற்கனவே நிலைக்குழு (பொது சுகாதாரம்) வின் கூட்டம் 16.07.2015 அன்று முடிவடைந்த நிலையில் இப்பொருளின் அவசரம் மற்றும் அவசியத்தன்மையை கருத்தில் கொண்டு 03.08.2015 அன்று தீர்மான எண்.37/2015,–ன்படி இதற்கு நிலைக்குழு (பொது சுகாதாரம்) சுற்றின் மூலம் பெரும்பான்மை உறுப்பினர்களின் பரிந்துரையை பெற்று நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது ’’.

> ‘‘ஏற்கனவே நிலைக்குழு (வ.வி.ம.நி) வின் கூட்டம் 24.07.2015 அன்று முடிவடைந்த நிலையில் இப்பொருளின் அவசரம் மற்றும் அவசியத்தன்மையை கருத்தில் கொண்டு 03.08.2015 அன்று தீர்மான எண்.228/2015ன்படி இதற்கு நிலைக்குழு (வ.வி.ம.நி)வின் சுற்றின் மூலம் பெரும்பான்மை உறுப்பினர்களின் பரிந்துரையை பெற்று மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது ’’.

‘‘இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது’’

****

சு.து.ந.க.எண். பி2/0356/2013

முதன்மை செயலர் மற்றும் ஆணையர் அவர்களின் 16.06.2015 நாளிட்ட குறிப்பு

தீர்மான எண்.436/2015 **பொருள் எண்.85**

பொது சுகாதாரத்துறை – உச்சநீதி மன்ற உத்திரவுபடி வீடற்றோருக்கென 28 காப்பகங்கள் ஆரம்பிக்கப்பட்டு தன்னார்வ தொண்டு நிறுவனங்கள் மூலம் நடைபெற்று வரும் காப்பகங்களுக்கு ஒரு வருட கால நீட்டிப்பு வழங்குவதற்கும் மற்றும் 2015–16ஆம் ஆண்டிற்கு தேவையான நிதி ஒதுக்கீடு செய்வதற்கு அனுமதி

உச்ச நீதி மன்ற பேரராணை PUCL Vs UOI WP. No.196/2001ன் படி காப்பகங்கள் நடத்துவது குறித்து வழி காட்டுதல்கள், உச்ச நீதி மன்ற உத்திரவின்படி, இந்திய நகர்புறங்களில் ஒரு லட்சம் மக்கள் தொகைக்கு ஒரு வீடற்றோர் காப்பகம் வீதம் உத்தரவிட்டுள்ளது.

இதனடிப்படையில் மன்றத் தீர்மான எண்.417/2012 26.06.2012 நாளிட்ட மன்ற தீர்மானத்தில் காப்பகங்கள் ஆரம்பிக்க அனுமதி பெறப்பட்டு, முதன்மை செயலர் /ஆணையரின் ஆணை நாள்.24.05.2013 சு.து.ந.க.எண்.பி2/0356/2013 ஆணையில் 30 காப்பகங்களை சென்னை மாநகராட்சியின் நிதியிலிருந்து துவங்கப்பட்டு, அமைப்பு சாரா நிறுவனம் (N.G.O) மூலமாக பராமரிக்க ஆணை பெறப்பட்டு 28 காப்பகங்கள் ஆரம்பிக்கப்பட்டு இயங்கி வருகின்றன. இந்த 28 காப்பகங்கள் தன்னார்வ தொண்டு நிறுவனங்களை கொண்டு சென்னை மாநகராட்சியால் நடத்தப்பட்டு வருகின்றன. சென்னை மாநகராட்சி கட்டிடங்களில் நடத்தப்படும் காப்பகங்களுக்கு ஓராண்டிற்கு ரூ.10,10,000ம், வாடகை கட்டிடங்களில் நடத்தப்படும் காப்பகங்களுக்கு ஓராண்டிற்கு நடத்துவதற்கு ரூ.13,10,000ம் தன்னார்வ தொண்டு நிறுவனங்களுக்கு வழங்க ஆணை பெறப்பட்டுள்ளது.

ஆணையரின் செயல்முறை ஆணைபடி 01.06.2013 முதல் மூன்று வருட காலத்திற்கு காப்பகங்களை நடத்த உத்திரவிடப்பட்டுள்ளது. அதற்கான மன்றத் தீர்மானமும் (தீர்மான எண்.417/2012 நாள்.26.09.2012) பெறப்பட்டுள்ளது.

முதன்மை செயலர் /ஆணையரின் ஆணை நாள்.24.05.2013 சு.து.ந.க.எண்.பி2/0356/2013ல் 1 முதல் 15 வரை மண்டலங்களில் உள்ள 30 காப்பகங்களுக்கும் சேர்த்து ரூ.3,51,00,000/–ம் நிதி ஒதுக்கீடு ஒரு வருட காலத்திற்கு (01.06.2013 முதல் 31.05.2014 வரை) செய்யப்பட்டு அனைத்து மண்டலங்களுக்கு வழங்கப்பட்டது.

மன்றத் தீர்மான எண்.472/2014 நாள்.28.08.2014ன் மன்ற தீர்மானத்தில், ஒரு வருடத்திற்கு (01.06.2014 முதல் 31.05.2015 வரை) கீழ்கண்டுள்ளவாறு 1 முதல் 15 மண்டலங்களில், 28 காப்பகங்களுக்கு நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு அனுமதி பெறப்பட்டுள்ளது.

தற்போது ஒரு வருடத்திற்கு (01.06.2015 முதல் 31.05.2016 வரை) கீழ்கண்டுள்ளவாறு 1 முதல் 15 மண்டலங்களில் செயல்பட்டு வரும் 28 காப்கங்களுக்கு நிதி ஒதுக்கீடு செய்யப்பட வேண்டியுள்ளது.

வ. எண்.	மண்டலம்	சென்னை மாநகராட்சி கட்டிடம் / கட்டிம் வாடகை கட்டிடம்	காப்பகங்களின் எண்ணிக்கை	ஒரு காப்பகத்திற்கு ஒதுக்கீடு ரூ.	மண்டல வாரியாக அளிக்க வேண்டிய தொகை ரூ.	காலாண்டிற்கு விடுவிக்கப்பட வேண்டிய தொகை ரூ.
1.	I	வாடகை கட்டிடம்	2	13,10,000	26,20,000	6,55,000
2.	II	சென்னை மாநகராட்சி கட்டிடம்	1	10,10,000	10,10,000	2,52,500
3.	III	சென்னை மாநகராட்சி கட்டிடம்	1	10,10,000	10,10,000	2,52,500
4.	IV	சென்னை மாநகராட்சி கட்டிடம்	3	10,10,000	30,30,000	7,57,500
5.	V	சென்னை மாநகராட்சி கட்டிடம்	4	10,10,000	40,40,000	10,10,000
6.	VI	சென்னை மாநகராட்சி கட்டிடம்	2	10,10,000	20,20,000	5,05,000
7.	VII	வாடகை கட்டிடம்	2	13,10,000	26,20,000	6,55,000
8.	VIII	சென்னை மாநகராட்சி கட்டிடம்	1	10,10,000	10,10,000	2,52,500
9.	IX	சென்னை மாநகராட்சி	3	10,10,000	30,30,000	7,57,500

		கட்டிடம்				
10.	X	சென்னை மாநகராட்சி கட்டிடம்	2	10,10,000	20,20,000	5,05,000
11.	XI	வாடகை கட்டிடம்	2	13,10,000	26,20,000	6,55,000
12.	XII	வாடகை கட்டிடம்	1	13,10,000	13,10,000	3,27,500
13.	XIII	சென்னை மாநகராட்சி கட்டிடம்	2	10,10,000	20,20,000	5,05,000
14.	XIV	வாடகை கட்டிடம்	1	13,10,000	13,10,000	3,27,500
15.	XV	சென்னை மாநகராட்சி கட்டிடம்	1	10,10,000	10,10,000	2,52,500
			28		3,06,80,000	76,70,000

எனவே,

1. 1 முதல் 15 மண்டலங்களில் செயல்பட்டு வரும் 28 காப்பகங்களுக்கு ஒரு வருட காலம் (01.06.2015 முதல் 31.05.2016 வரை) நீட்டிப்பு வழங்கிடவும்,
2. இதற்கான செலவினம் ரூ.3,06,80,000/– ஐ ஒதுக்கீடு செய்யவும், மேலும் இச்செலவினம் மாநகராட்சி நிதியிலிருந்து செலவழிக்கவும்,
3. இச்செலவினங்கள் சம்மந்தப்பட்ட மண்டலங்களில் மேற்கொள்ளவும்,
4. இச்செலவினம் பிரிவு குறியீடு 30–35–01 மற்றும் குறியீடு 230–20–21–00 என்ற தலைப்பின் கீழ் மேற்கொள்ளவும்,

மேற்கண்ட 1 முதல் 4 வரை உள்ள இனங்களுக்கு நிலைக்குழு (பொது சுகாதாரம்) மற்றும் நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி)வின் மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

"ஏற்கனவே நிலைக்குழு (பொது சுகாதாரம்) வின் கூட்டம் 16.07.2015 அன்று முடிவடைந்த நிலையில் இப்பொருளின் அவசரம் மற்றும் அவசியத்தன்மையை கருத்தில் கொண்டு 03.08.2015 அன்று தீர்மான எண்.30/2015,–ன்படி இதற்கு நிலைக்குழு (பொது சுகாதாரம்) சுற்றின் மூலம் பெரும்பான்மை உறுப்பினர்களின் பரிந்துரையை பெற்று நிலைக்குழு (வ.வி.ம.நி) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது ".

"ஏற்கனவே நிலைக்குழு (வ.வி.ம.நி) வின் கூட்டம் 24.07.2015 அன்று முடிவடைந்த நிலையில் இப்பொருளின் அவசரம் மற்றும் அவசியத்தன்மையை கருத்தில் கொண்டு 03.08.2015 அன்று தீர்மான எண்.213/2015ன்படி இதற்கு நிலைக்குழு (வ.வி.ம.நி)வின் சுற்றின் மூலம் பெரும்பான்மை உறுப்பினர்களின் பரிந்துரையை பெற்று மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது ".

"இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது"

****

ம.அ.3.ந.க.எண்.இ1/2474/2015

முதன்மை செயலர் / ஆணையர் அவர்களின் 31.07.2015 நாளிட்ட குறிப்பு

தீர்மான எண்.437/2015 **பொருள் எண்.86**

மண்டலம்–3, பகுதி–6, வார்டு–24 சூரப்பட்டு மதுரா மேட்டூர் இணைப்பு சாலையில் உள்ள மகளிர் கழிப்பிடம் இடித்து அகற்ற அனுமதி

வ. எண்	வார்டு எண்.24	மண்டலம்–3
1.	இடிக்கப்பட வேண்டிய கட்டிடத்தின் விவரம்	மண்டலம்–3, பகுதி–6, வார்டு–24 சூரப்பட்டு மதுரா மேட்டூர் இணைப்பு சாலையில் அமைந்துள்ள பழுதடைந்த மகளிர் கழிப்பிடம் இடித்து அகற்ற அனுமதி.
2	கட்டிடங்கள் கட்டப்பட்ட துறை மற்றும் வருடம்	1990–1991 ஆம் ஆண்டு
3	கட்டிடங்களின் பரப்பளவு, தளம் வாரியாக எவ்வளவு ?	747 சதுர அடி (தரை தளம் மட்டும்)
4	கட்டிடம் அமைந்துள்ள இடத்தின் பரப்பளவு	1000 சதுர அடி
5	கட்டிடத்தின் தற்போதைய புத்தக மதிப்பு	ரூ.83786/–
6	கட்டம் இப்போது பயன்பாட்டில் உள்ளதா ?	பயன்பாட்டில் இல்லை
7	கட்டிடம் இடித்ததற்கு பிறகு அவ்விடம் எந்தமாதிரியான பயன்பாட்டிற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளது ?	அருகில் உள்ள அம்மா உணவகத்தை இணைத்து சுற்றுச் சுவர் எழுப்பப்படும்
8	கட்டிடத்தை இடிப்பதற்கான காரணம்	மிகவும் பழுதடைந்து பயன்படுத்த முடியாத நிலையில் உள்ளது
9	கட்டிடத்தை இடிப்பதற்கு பரிந்துரை செய்தது யார் ?	மண்டல அலுவலர்–3 புழல் ஊராட்சி ஒன்றியத்தால் கட்டப்பட்டுள்ள இக்கட்டிடம் உள்ள பகுதி மழை தண்ணீர் தேங்கும் பகுதியாகவும் மேலும் பேஸ்மெண்ட் உயரம் மற்றும் சீலிங் உயரம் மிகவும் குறைவாக உள்ளதாலும் இவ்விடத்திற்கு அருகில் உள்ள அம்மா உணவக கட்டிடத்துடன் இணைத்து சுற்றுச் சுவர் கட்டப்படும்.
10	வார்டு குழு தீர்மான எண் மற்றும் நாள்	தீர்மான எண்.897 நாள் 15.4.2015

எனவே, மேற்காணும் மண்டலம்–3,வார்டு–24 சூரப்பட்டு மதுரா மேட்டூர் இணைப்பு சாலையில் அமைந்துள்ள பழுதடைந்த மகளிர் கழிப்பிடம் இடித்து அப்புறப்படுத்த நிலைக்குழு (சுகாதாரம்) மற்றும் நிலைக்குழு(பணிகள்)வின் மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

"ஏற்கனவே நிலைக்குழு (பொது சுகாதாரம்) வின் கூட்டம் 16.07.2015 அன்று முடிவடைந்த நிலையில் இப்பொருளின் அவசரம் மற்றும் அவசியத்தன்மையை கருத்தில் கொண்டு 03.08.2015 அன்று தீர்மான எண்.36/2015ன்படி இதற்கு நிலைக்குழு (பொது சுகாதாரம்) சுற்றின் மூலம் பெரும்பான்மை உறுப்பினர்களின் பரிந்துரையை பெற்று நிலைக்குழு (பணிகள்) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது ".

"ஏற்கனவே நிலைக்குழு (பணிகள்) கூட்டம் 22.07.2015 அன்று முடிவடைந்த நிலையில் இப்பொருளின் அவசரம் மற்றும் அவசியத்தன்மையை கருத்தில் கொண்டு 03.08.2015 அன்று தீர்மான எண்.203/2015ன்படி இதற்கு நிலைக்குழு (பணிகள்) சுற்றின் மூலம் பெரும்பான்மை உறுப்பினர்களின் பரிந்துரையை பெற்று மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது ".

"இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது"

****

ம.அ3.ந.க.எண்.இ1/2923/2015

முதன்மை செயலர் / ஆணையர் அவர்களின் 31.07.2015 நாளிட்ட குறிப்பு

தீர்மான எண்.438/2015 **பொருள் எண்.87**

மண்டலம்–3, பகுதி–7, வார்டு–28 அருள் நகர் பகுதியில் உள்ள பழுதடைந்துள்ள வார்டு அலுவலக கட்டிடத்தை இடித்ததற்கு பின்னேற்பு அனுமதி

வ. எண்	மண்டலம் – 3	வார்டு 28
1.	கட்டிடத்தின் விவரம்	அருள் நகர் பகுதியில் இருந்த பழுதடைந்த வார்டு அலுவலக கட்டிடம்
2.	கட்டிடங்கள் கட்டப்பட்ட துறை மற்றும் வருடம்	முந்தைய மாதவரம் நகராட்சியால் 1998ல் கட்டப்பட்டது.
3.	கட்டிடங்களின் பரப்பளவு	30.00 ச.மீ.
4.	கட்டிடங்களின் தற்போதைய புத்தக மதிப்பு	ரூ.52616/–
5.	கட்டம் இப்போது பயன்பாட்டில் உள்ளதா ?	–
6.	கட்டிடங்களை இடித்ததற்கு பிறகு அவ்விடம் எந்தமாதிரியான பயன்பாட்டிற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளது ?	புதிய வார்டு அலுவலகம் கட்ட ஒப்பம் தீர்வு செய்யப்பட்டு கட்டிடத்துறை மூலம் பணிகள் நடைபெற்று வருகின்றன.
7.	கட்டிடங்களை இடிப்பதற்கான காரணம்	மிகவும் பழுதடைந்துள்ள நிலையில் இருந்ததால்
8.	கட்டிடங்களை இடிப்பதற்கு பரிந்துரை செய்தது யார் ?	சென்னை மாநகராட்சி கட்டிடத்துறை
9.	வார்டு குழு தீர்மான எண் மற்றும் நாள்	மண்டலம்–3 வார்டு குழு தீர்மான எண். நாள் 6.7.2015

மேற்கண்ட மண்டலம்–3, வார்டு–28ல் உள்ள பழுதடைந்த பழைய வார்டு அலுவலகத்தை அவசரம் மற்றும் அவசியம் கருதி இடித்தமைக்கு நிலைக்குழு(பணிகள்) மூலமாக மன்றத்தின் பின்னேற்பு அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

"ஏற்கனவே நிலைக்குழு (பணிகள்) கூட்டம் 22.07.2015 அன்று முடிவடைந்த நிலையில் இப்பொருளின் அவசரம் மற்றும் அவசியத்தன்மையை கருத்தில் கொண்டு 03.08.2015 அன்று தீர்மான எண்.204/2015ன்படி இதற்கு நிலைக்குழு (பணிகள்) சுற்றின் மூலம் பெரும்பான்மை உறுப்பினர்களின் பரிந்துரையை பெற்று மன்றத்தின் பின்னேற்பு அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது ".

"இதற்கு மன்றம் பின்னேற்பு அனுமதி அளிக்கின்றது"

****

ம.அ.3.ந.க.எண்.இ1/2347/2015

முதன்மை செயலர் / ஆணையர் அவர்களின் 31.07.2015 நாளிட்ட குறிப்பு

தீர்மான எண்.439/2015 **பொருள் எண்.88**

மண்டலம்–3, வார்டு–29ல் சென்னை மாநகராட்சி நடுநிலைப் பள்ளியில் உள்ள பழுதடைந்துள்ள கழிப்பிடம் / சமையலறை கட்டிடங்கள் இடிக்க அனுமதி

வ. எண்	மண்டலம் – 3	வார்டு 29
1.	இடிக்கப்பட வேண்டிய கட்டிடத்தின் விவரம்	தேவராஜன் தெரு, சின்னசேக்காடு சென்னை நடுநிலைப் பள்ளியில் உள்ள பழுதடைந்த கழிப்பிட கட்டிடங்கள் (வடக்கு பக்கம் 2 எண்ணிக்கை, தெற்கு பக்கம் 1 எண்ணிக்கை) / சமையலறை கட்டிடம் (வடக்கு பக்கம் 1 எண்ணிக்கை).
2.	கட்டிடங்கள் கட்டப்பட்ட துறை மற்றும் வருடம்	முந்தைய சின்னசேக்காடு பேரூராட்சியால் 2002–2003ல் கட்டப்பட்டது
3.	கட்டிடங்களின் பரப்பளவு	115.24 ச.மீ.
4.	கட்டிடங்களின் தற்போதைய புத்தக மதிப்பு	ஏதுமில்லை.
5.	கட்டம் இப்போது பயன்பாட்டில் உள்ளதா ?	பயன்பாட்டில் இல்லை
6.	கட்டிடங்களை இடித்ததற்கு பிறகு அவ்விடம் எந்தமாதிரியான பயன்பாட்டிற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளது ?	பள்ளி வளாகத்தில் புதிய சமையலறை கட்டிடம் கட்டுவதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளது.
7.	கட்டிடங்களை இடிப்பதற்கான காரணம்	மிகவும் பழுதடைந்துள்ள நிலையில் உள்ளதால்
8.	கட்டிடங்களை இடிப்பதற்கு பரிந்துரை செய்தது யார் ?	பள்ளி தலைமை ஆசிரியை அவர்களால் பரிந்துரைக்கப்பட்டது.
9.	வார்டு குழு தீர்மான எண் மற்றும் நாள்	மண்டலம்–3 வார்டு குழு தீர்மான எண்.878/2015 நாள் 15.4.15

மேற்கண்ட மண்டலம்–3, வார்டு–29 தேவராஜன் தெரு, சின்னசேக்காடு, சென்னை நடுநிலைப் பள்ளியில் உள்ள பழுதடைந்த சென்னை மாநகராட்சி நடுநிலைப் பள்ளி கழிப்பிடம் / சமையலறை கட்டிடங்களை இடித்து அப்புறப்படுத்த நிலைக்குழு(கல்வி)வின் மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

> ‘‘ஏற்கனவே நிலைக்குழு (கல்வி) கூட்டம் 20.07.2015 அன்று முடிவடைந்த நிலையில் இப்பொருளின் அவசரம் மற்றும் அவசியத்தன்மையை கருத்தில் கொண்டு 03.08.2015 அன்று தீர்மான எண்.21/2015ன்படி இதற்கு நிலைக்குழு(கல்வி) சுற்றின் மூலம் பெரும்பான்மை உறுப்பினர்களின் பரிந்துரையை பெற்று நிலைக்குழு (பணிகள்)வின் மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது ’’.
>
> ‘‘ஏற்கனவே நிலைக்குழு (பணிகள்) கூட்டம் 22.07.2015 அன்று முடிவடைந்த நிலையில் இப்பொருளின் அவசரம் மற்றும் அவசியத்தன்மையை கருத்தில் கொண்டு 03.08.2015 அன்று தீர்மான எண்.205/2015ன்படி இதற்கு நிலைக்குழு (பணிகள்) சுற்றின் மூலம் பெரும்பான்மை உறுப்பினர்களின் பரிந்துரையை பெற்று மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது ’’.

‘‘இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது’’

****

பொ.து.ந.க.எண்.ஈ2/20082/2015

முதன்மை செயலர் மற்றும் ஆணையர் அவர்களின் 6.07.2015 நாளிட்ட குறிப்பு

தீர்மான எண்.440/2015 **பொருள் எண்.89**

உதவி வருவாய் அலுவலர் பதவிக்கான தெரிவு பட்டியலுக்கு அனுமதி

சென்னை மாநகராட்சி வருவாய்த்துறையில் வகுப்பு 2ன் கீழ் வரும் உதவி வருவாய் அலுவலர் பதவிக்கு 15.05.2015ஐ மைய நாளாகக் கொண்டு தெரிவுப்பட்டியல் தயாரிக்கப்படவேண்டும், அதற்கான விவரம் பின்வருமாறு:–

1	பதவி உயர்வுக்கான பதவியின் பெயர்	உதவி வருவாய் அலுவலர்
2	மைய நாள்	15.05.2015
3	ஊதிய விகிதம்	ரூ.15600–39100 + தர ஊதியம் 5400
4	காலிப்பணியிட மதிப்பீடு (Estimate of vacancies)	1) அனுமதிக்கப்பட்ட பணியிடம் – 46 (அ) தற்காலிக பணியிடம் – (ஆ) நிரந்தர பணியிடம் – 2) பட்டியல் ஆண்டில் பணியிலிருந்து ஓய்வு பெறுவதால் ஏற்படும் காலிப்பணியிடம் – 0 3) மைய நாளன்று உள்ள காலிப்பணியிடம் – 14 4) 5 சதவீதம் விடுப்பு காலிப்பணியிடம் – 0 5) பட்டியல் ஆண்டில் பதவி உயர்வினால் ஏற்படும் காலிப்பணியிடம் – 1 6) பட்டியல் ஆண்டில் புதியதாக தோற்றுவிக்கப்படும் பணியிடங்கள் – 0 15
5	வளர் நிலை பதவியின் பெயர் மற்றும் தகுதிகள்	வரிமதிப்பீட்டாளர் (அ) அங்கீகரிக்கப்பட்ட பல்கலைகழகத்தால் வழங்கப்பட்ட பட்டம். (ஆ) வரிமதிப்பீடு கண்காணிப்பாளராக தகுதிகாண்பருவம் முடித்தவராக இருக்க வேண்டும் அல்லது வரிமதிப்பீட்டாளர் பதவியில் ஐந்தாண்டு காலம் தகுதி பணி முடித்தவராக இருக்க வேண்டும். (இ) சார்நிலை அலுவலருக்கான கணக்கு தேர்வு பாகம்–1 மற்றும் 2ல் தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும். (ஈ) தமிழ்நாடு வருவாய் சார்நிலை அலுவலருக்கான வருவாய் தேர்வு பாகம் 1, 2, மற்றும் 3ல் தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும்.
6	கடந்த ஆண்டுக்கான தெரிவுப்பட்டியல் முழுமையாக பயன்படுத்தப்பட்டதா ?	ஆம்

பணிமூப்பின்படி வரிமதிப்பீட்டாளர்களின் விவரம் பின்வருமாறு :–

வ.எண்.	பெயர் (திருவாளர்கள்)	தற்போதுள்ள பதவியில் சேர்ந்த நாள்	தெரிவுப்பட்டியலில் சேர்க்கலாமா
1	ஜி.பார்த்தசாரதி மண்டலம்–5	04.07.2007	1)பியூசி அல்லது பிளஸ் டூ தேர்ச்சி பெறாமல் பட்டப்படிப்பு தேர்ச்சி. விதிகளின் படி முறையான கல்வித்தகுதி பெறவில்லை. 2) துறைத்தேர்வு (வருவாய்) களில் தேர்ச்சி பெறவில்லை. 3)தனியர் மீது தொடரப்பட்ட ஒழுங்கு நடவடிக்கையில் ஓராண்டு காலம் ஊதிய உயர்வு திரண்ட பயனின்றி நிறுத்தம் செய்து 16.04.2015 நாளிட்ட ஆணை வழங்கப்பட்டு தண்டனை நடப்பில் உள்ளது. 4)பணிக்கால தகுதி பெற்றுள்ளார். விதிகளின் படி தெரிவுப்பட்டியலுக்கு தகுதி பெறவில்லை.
2	எஸ்.மணி மொழி	07.09.2007	தற்காலிக பணிநீக்கம் விதிகளின் படி தெரிவுப்பட்டியலுக்கு தகுதி பெறவில்லை
3	எஸ்.முகமது கௌஸ்	30.09.2008	1)பியூசி அல்லது பிளஸ் டூ தேர்ச்சி பெறாமல் பட்டப்படிப்பு

	மண்டலம்–13		தேர்ச்சி. விதிகளின் படி முறையான கல்வித்தகுதி பெறவில்லை. 2) துறைத்தேர்வு (வருவாய்) களில் தேர்ச்சி பெறவில்லை. 3) ஒழுங்கு நடவடிக்கை/தண்டனை ஏதும் நிலுவையில் இல்லை 4) பணிக்காலத்தகுதி பெற்றுள்ளார். விதிகளின் படி தெரிவுப்பட்டியலுக்கு தகுதி பெறவில்லை
4	பி.கே.இளவரசு மண்டலம்–6	29.09.2008	1) கல்வித்தகுதி பெற்றுள்ளார். 2) துறைத்தேர்வு (வருவாய்) களில் தேர்ச்சி பெறவில்லை. 3) ஒழுங்கு நடவடிக்கை/தண்டனை ஏதும் நிலுவையில் இல்லை 4) பணிக்காலத்தகுதி பெற்றுள்ளார். விதிகளின் படி தெரிவுப்பட்டியலுக்கு தகுதி பெறவில்லை
5	பிரதீப் சூரியாகர் மண்டலம்–5	29.09.2008	1)கல்வித்தகுதி பெற்றுள்ளார். 2) துறைத்தேர்வுகளில் தேர்ச்சி பெற்றுள்ளார். 3)தனியர் மீது தொடரப்பட்ட ஒழுங்கு நடவடிக்கையில் ஓராண்டு காலம் ஊதிய உயர்வு திரண்ட பயனின்றி நிறுத்தம் செய்து 16.04.2015 நாளிட்ட ஆணை வழங்கப்பட்டு தண்டனை நடப்பில் உள்ளது. 4) பணிக்காலத்தகுதி பெற்றுள்ளார். தண்டனை நடப்பில் உள்ளதால் விதிகளின் படி தெரிவுப்பட்டியலுக்கு தகுதி பெறவில்லை.
6	எம்.கோதண்டராமன் மண்டலம்–10	29.09.2008	1) பட்டப்படிப்பில் தேர்ச்சி பெறவில்லை. 2) வருவாய் தேர்வில் தேர்ச்சி பெறவில்லை. 3)தனியர் மீது சென்னை மாநகராட்சி வகுப்பு 3 மற்றும் 4ஆம் நிலை பணியாளர்கள் (ஒழுங்கு மற்றும் மேல்முறையீடு) விதிகள் 1983 துணை விதி 9 (2)ன் கீழ் ஒழுங்கு நடவடிக்கை நிலுவையில் உள்ளது. 4) பணிக்காலத்தகுதி பெற்றுள்ளார். விதிகளின் படி தெரிவுப்பட்டியலுக்கு தகுதி பெறவில்லை.
7	வி.மோகன்ராம்சிங் மண்டலம்–4	29.9.2008	1) கல்வித்தகுதி பெற்றுள்ளார். 2) துறைத்தேர்வுகளில் தேர்ச்சி பெற்றுள்ளார். 3) ஒழுங்கு நடவடிக்கை/தண்டனை ஏதும் நிலுவையில் இல்லை 4) பணிக்காலத்தகுதி பெற்றுள்ளார். உதவி வருவாய் அலுவலர் பதவி உயர்வுக்குரிய அனைத்து தகுதிகளும் பெற்றுள்ளார்.
8	ஜெ.ஆர்.சரோஜாதேவி மண்டலம்–13	29.09.2008	1)பியூசி அல்லது பிளஸ் டூ தேர்ச்சி பெறாமல் பட்டப்படிப்பு தேர்ச்சி. விதிகளின் படி முறையான கல்வித்தகுதி பெறவில்லை. 2) துறைத்தேர்வுகளில் தேர்ச்சி பெற்றுள்ளார். 3) ஒழுங்கு நடவடிக்கை/தண்டனை ஏதும் நிலுவையில் இல்லை 4) பணிக்காலத்தகுதி பெற்றுள்ளார். விதிகளின் படி தெரிவுப்பட்டியலுக்கு தகுதி பெறவில்லை
9	என்.எஸ்.லட்சுமி மண்டலம்–8	29.09.2008	1)பியூசி அல்லது பிளஸ் டூ தேர்ச்சி பெறாமல் முதுகலைப்பட்டப்படிப்பு தேர்ச்சி. விதிகளின் படி முறையான கல்வித்தகுதி பெறவில்லை. 2) துறைத்தேர்வுகளில் தேர்ச்சி பெற்றுள்ளார். 3) ஒழுங்கு நடவடிக்கை/தண்டனை ஏதும் நிலுவையில் இல்லை 4) பணிக்காலத்தகுதி பெற்றுள்ளார். விதிகளின் படி தெரிவுப்பட்டியலுக்கு தகுதி பெறவில்லை
10	ச.பிரபாகரன் மண்டலம்–7	29.09.2008	1)இளங்கலை பட்டம் பெறாமல் முதுகலை பட்டம் பெற்றுள்ளதால் விதிகளின் படி முறையான கல்வித்தகுதி பெறவில்லை. 2) துறைத்தேர்வுகளின் தேர்ச்சி பெற்றுள்ளார். 3) ஒழுங்கு நடவடிக்கை/தண்டனை ஏதும் நிலுவையில் இல்லை 4) பணிக்காலத்தகுதி பெற்றுள்ளார். விதிகளின் படி தெரிவுப்பட்டியலுக்கு தகுதி பெறவில்லை.

11	பி.லட்சுமணகுமார் மண்டலம்–6	06.10.2008	1) பியூசி அல்லது பிளஸ் டூ தேர்ச்சி பெறாமல் முதுகலைப்பட்டப்படிப்பு தேர்ச்சி. விதிகளின் படி முறையான கல்வித்தகுதி பெறவில்லை. 2) துறைத்தேர்வு (வருவாய்)களில் தேர்ச்சி பெறவில்லை. 3) ஒழுங்கு நடவடிக்கை/தண்டனை ஏதும் நிலுவையில் இல்லை 4) பணிக்காலத்தகுதி பெற்றுள்ளார். விதிகளின் படி தெரிவுப்பட்டியலுக்கு தகுதி பெறவில்லை.
12	ஆர்.யுகமணி மண்டலம்–14	06.10.2008	1) மே 2004 ல் பட்டப்படிப்பு முடித்து அக்டோபர் 2012 ல் +2 தேர்ச்சி பெற்றுள்ளதால் விதிகளின்படி இவரது கல்வித் தகுதி ஏற்கதக்கதல்ல. 2) துறைத்தேர்வுகளில் தேர்ச்சி பெற்றுள்ளார். 3) ஒழுங்கு நடவடிக்கை/தண்டனை ஏதும் நிலுவையில் இல்லை 4) பணிக்காலத்தகுதி பெற்றுள்ளார். விதிகளின் படி தெரிவுப்பட்டியலுக்கு தகுதி பெறவில்லை.
13	கே.நாராயணன் மண்டலம்–10	10.10.2008	1)பியூசி அல்லது பிளஸ் டூ தேர்ச்சி பெறாமல் இளங்கலைப்பட்டப்படிப்பு தேர்ச்சி. விதிகளின் படி முறையான கல்வித்தகுதி பெறவில்லை. 2) துறைத்தேர்வு (வருவாய்)களில் தேர்ச்சி பெறவில்லை. 3) ஒழுங்கு நடவடிக்கை/தண்டனை ஏதும் நிலுவையில் இல்லை 4) பணிக்காலத்தகுதி பெற்றுள்ளார். விதிகளின் படி தெரிவுப்பட்டியலுக்கு தகுதி பெறவில்லை
14	கே.சங்கர் மண்டலம்–11	06.10.2008	1)பியூசி அல்லது பிளஸ் டூ தேர்ச்சி பெறாமல் முதுகலைப்பட்டப்படிப்பு தேர்ச்சி. விதிகளின் படி முறையான கல்வித்தகுதி பெறவில்லை. 2) துறைத்தேர்வு (வருவாய்)களில் தேர்ச்சி பெறவில்லை. 3) ஒழுங்கு நடவடிக்கை/தண்டனை ஏதும் நிலுவையில் இல்லை 4) பணிக்காலத்தகுதி பெற்றுள்ளார். விதிகளின் படி தெரிவுப்பட்டியலுக்கு தகுதி பெறவில்லை
15	ஆர்.விஜயகுமார் மண்டலம்–5	06.10.2008	1)பியூசி அல்லது பிளஸ் டூ தேர்ச்சி பெறாமல் இளங்கலைப்பட்டப்படிப்பு தேர்ச்சி. விதிகளின் படி முறையான கல்வித்தகுதி பெறவில்லை. 2) துறைத்தேர்வுகளில் தேர்ச்சி பெற்றுள்ளார். 3) ஒழுங்கு நடவடிக்கை/தண்டனை ஏதும் நிலுவையில் இல்லை 4) பணிக்காலத்தகுதி பெற்றுள்ளார். விதிகளின் படி தெரிவுப்பட்டியலுக்கு தகுதி பெறவில்லை
16	எம்.புகழேந்தி மண்டலம்–9	02.03.2009	1) பட்டப்படிப்பு தேர்ச்சி பெறவில்லை. 2) துறைத்தேர்வுகளின் தேர்ச்சி பெற்றுள்ளார். 3) ஒழுங்கு நடவடிக்கை/தண்டனை ஏதும் நிலுவையில் இல்லை 4) பணிக்காலத்தகுதி பெற்றுள்ளார். விதிகளின் படி தெரிவுப்பட்டியலுக்கு தகுதி பெறவில்லை.
17	கே.பாண்டியன் மண்டலம்–9	11.12.2009	1) கல்வித்தகுதி பெற்றுள்ளார். 2) துறைத்தேர்வு (வருவாய்)களில் தேர்ச்சி பெறவில்லை. 3) தனியர் மீது தொடரப்பட்ட ஒழுங்கு நடவடிக்கையில் 1 வருட கால ஊதிய உயர்வு நிறுத்தம் செய்து 05.10.2012 அன்று ஆணை பிறப்பிக்கப்பட்டு 01.01.2013 முதல் 31.12.2013 வரை தண்டனை நடப்பில் இருந்தது. தண்டனை பெற்ற 5 வருடங்களுக்குள் பதவி உயர்வு திரளுமாயின் ஒரு முறை பதவி உயர்வை நிறுத்தம் செய்ய வேண்டுமென தமிழ்நாடு சார்நிலை பணிவிதி 4(a) அட்டவணை 7ல் பாகம் D (f) (1–HH)ல் குறிப்பிடப்பட்டுள்ளது. 4)பணிக்காலத்தகுதி பெற்றுள்ளார். விதிகளின் படி தெரிவுப்பட்டியலுக்கு தகுதி பெறவில்லை.
18	எம்.பலராமன் மண்டலம்–10	04.01.2010	1) பட்டப்படிப்பு தேர்ச்சி பெறவில்லை. 2) துறைத்தேர்வு (வருவாய்)களில் தேர்ச்சி பெறவில்லை. 3) ஒழுங்கு நடவடிக்கை/தண்டனை ஏதும் நிலுவையில் இல்லை 4) பணிக்காலத்தகுதி பெற்றுள்ளார்.

			விதிகளின் படி தெரிவுப்பட்டியலுக்கு தகுதி பெறவில்லை.
19	ஜி.பிரதீப்குமார் தலைமையிடம்	01.12.2009	1) கல்வித்தகுதி பெற்றுள்ளார். 2)துறைத்தேர்வு (வருவாய் தேர்வு பாகம் 1 தாள் 1)தேர்ச்சி பெறவில்லை. 3) ஒழுங்கு நடவடிக்கை/தண்டனை ஏதும் நிலுவையில் இல்லை 4)பணிக்காலத்தகுதி பெற்றுள்ளார். விதிகளின் படி தெரிவுப்பட்டியலுக்கு தகுதி பெறவில்லை.
20	ஆர்.இராஜசேகரன் மண்டலம்–13	01.12.2009	1)பியூசி அல்லது பிளஸ் டூ தேர்ச்சி பெறாமல் முதுகலைப்பட்டப்படிப்பு தேர்ச்சி. விதிகளின் படி முறையான கல்வித்தகுதி பெறவில்லை. 2) துறைத்தேர்வு (வருவாய்)களில் தேர்ச்சி பெறவில்லை. 3) ஒழுங்கு நடவடிக்கை/தண்டனை ஏதும் நிலுவையில் இல்லை 4) பணிக்காலத்தகுதி பெற்றுள்ளார். விதிகளின் படி தெரிவுப்பட்டியலுக்கு தகுதி பெறவில்லை
21	வி.அசோக்குமார் மண்டலம்–1	02.12.2010	1) பட்டப்படிப்பு தேர்ச்சி பெறவில்லை. 2) துறைத்தேர்வு (வருவாய்)களில் தேர்ச்சி பெறவில்லை. 3) ஒழுங்கு நடவடிக்கை/தண்டனை ஏதும் நிலுவையில் இல்லை 4) பணிக்காலத்தகுதி பெறவில்லை. விதிகளின் படி தெரிவுப்பட்டியலுக்கு தகுதி பெறவில்லை.
22	பி.நாகராஜன் மண்டலம்–6	02.12.2010	1) பட்டப்படிப்பு தேர்ச்சி பெறவில்லை. 2) துறைத்தேர்வு (வருவாய்)களில் தேர்ச்சி பெறவில்லை. 3) ஒழுங்கு நடவடிக்கை/தண்டனை ஏதும் நிலுவையில் இல்லை 4) பணிக்காலத்தகுதி பெறவில்லை. விதிகளின் படி தெரிவுப்பட்டியலுக்கு தகுதி பெறவில்லை.
23	ஜி.வெங்கடசுப்பிரமணி மண்டலம்–9	02.12.2010	1) பட்டப்படிப்பு தேர்ச்சி பெறவில்லை. 2) துறைத்தேர்வுகளில் தேர்ச்சி பெற்றுள்ளார். 3) ஒழுங்கு நடவடிக்கை/தண்டனை ஏதும் நிலுவையில் இல்லை 4) பணிக்காலத்தகுதி பெறவில்லை. விதிகளின் படி தெரிவுப்பட்டியலுக்கு தகுதி பெறவில்லை.
24	ஆர்.நாராயணன் மண்டலம்–12	02.12.2010	1) பட்டப்படிப்பு தேர்ச்சி பெறவில்லை. 2) துறைத்தேர்வு (வருவாய்)களில் தேர்ச்சி பெறவில்லை. 3) ஒழுங்கு நடவடிக்கை/தண்டனை ஏதும் நிலுவையில் இல்லை 4) பணிக்காலத்தகுதி பெறவில்லை. விதிகளின் படி தெரிவுப்பட்டியலுக்கு தகுதி பெறவில்லை.
25	சி.கே.சேகர் மண்டலம்–11	02.12.2010	1)பியூசி அல்லது பிளஸ் டூ தேர்ச்சி பெறாமல் முதுகலைப்பட்டப்படிப்பு தேர்ச்சி. விதிகளின் படி முறையான கல்வித்தகுதி பெறவில்லை. 2) துறைத்தேர்வுகளில் தேர்ச்சி பெற்றுள்ளார். 3) ஒழுங்கு நடவடிக்கை/தண்டனை ஏதும் நிலுவையில் இல்லை 4) பணிக்காலத்தகுதி பெறவில்லை. விதிகளின் படி தெரிவுப்பட்டியலுக்கு தகுதி பெறவில்லை
26	ஆர்.சேகர் மண்டலம்–15	02.12.2010	1)பியூசி அல்லது பிளஸ் டூ தேர்ச்சி பெறாமல் முதுகலைப்பட்டப்படிப்பு தேர்ச்சி. விதிகளின் படி முறையான கல்வித்தகுதி பெறவில்லை. 2) துறைத்தேர்வு (வருவாய்)களில் தேர்ச்சி பெறவில்லை. 3) ஒழுங்கு நடவடிக்கை/தண்டனை ஏதும் நிலுவையில் இல்லை 4) பணிக்காலத்தகுதி பெறவில்லை. விதிகளின் படி தெரிவுப்பட்டியலுக்கு தகுதி பெறவில்லை
27	ஆர்.ரங்கநாதன்	02.12.2010	தற்காலிக பணிநீக்கம் விதிகளின் படி தெரிவுப்பட்டியலுக்கு தகுதி பெறவில்லை
28	டி.புருஷோத்தமன் மண்டலம்–4	02.12.2010	1)பியூசி அல்லது பிளஸ் டூ தேர்ச்சி பெறாமல் முதுகலைப்பட்டப்படிப்பு தேர்ச்சி. விதிகளின் படி முறையான கல்வித்தகுதி பெறவில்லை.

			2) துறைத்தேர்வு (வருவாய்)களில் தேர்ச்சி பெறவில்லை. 3) ஒழுங்கு நடவடிக்கை/தண்டனை ஏதும் நிலுவையில் இல்லை 4) பணிக்காலத்தகுதி பெறவில்லை. விதிகளின் படி தெரிவுப்பட்டியலுக்கு தகுதி பெறவில்லை.
29	ஜெ.வெங்கடேசன் மண்டலம்–12	02.12.2010	1)பியூசி அல்லது பிளஸ் டூ தேர்ச்சி பெறாமல் இளங்கலைப்பட்டப்படிப்பு தேர்ச்சி. விதிகளின் படி முறையான கல்வித்தகுதி பெறவில்லை. 2) துறைத்தேர்வு (வருவாய்)களில் தேர்ச்சி பெறவில்லை. 3) ஒழுங்கு நடவடிக்கை/தண்டனை ஏதும் நிலுவையில் இல்லை 4) பணிக்காலத்தகுதி பெறவில்லை. விதிகளின் படி தெரிவுப்பட்டியலுக்கு தகுதி பெறவில்லை
30	எஸ்.சுப்ரமணியன் மண்டலம்–14	29.03.2012	1) கல்வித்தகுதி பெற்றுள்ளார். 2) துறைத்தேர்வு (வருவாய்)களில் தேர்ச்சி பெறவில்லை. 3) ஒழுங்கு நடவடிக்கை/தண்டனை ஏதும் நிலுவையில் இல்லை 4) பணிக்காலத்தகுதி பெறவில்லை. விதிகளின் படி தெரிவுப்பட்டியலுக்கு தகுதி பெறவில்லை.
31	பி.என்.தேவராஜ்	15.09.2011	தற்காலிக பணிநீக்கம் விதிகளின் படி தெரிவுப்பட்டியலுக்கு தகுதி பெறவில்லை
32	பி.மோகன் மண்டலம்–9	15.09.2011	1)இளங்கலை பட்டம் பெறாமல் முதுகலைப்பட்டம் பெற்றுள்ளதால் விதிகளின் படி முறையான கல்வித்தகுதி பெறவில்லை. 2) துறைத்தேர்வு (வருவாய்)களில் தேர்ச்சி பெறவில்லை. 3) ஒழுங்கு நடவடிக்கை/தண்டனை ஏதும் நிலுவையில் இல்லை 4) பணிக்காலத்தகுதி பெறவில்லை. விதிகளின் படி தெரிவுப்பட்டியலுக்கு தகுதி பெறவில்லை.
33	எஸ்.ஜெகநாதன் மண்டலம்–9	15.09.2011	1)கல்வித்தகுதி பெற்றுள்ளார். 2) துறைத்தேர்வுகளில் தேர்ச்சி பெற்றுள்ளார். 3) ஒழுங்கு நடவடிக்கை/தண்டனை ஏதும் நிலுவையில் இல்லை 4) பணிக்காலத்தகுதி பெறவில்லை. விதிகளின் படி தெரிவுப்பட்டியலுக்கு தகுதி பெறவில்லை.
34	ஈ.துரை மண்டலம்–10	15.09.2011	1)தனியர் பியூசி அல்லது பிளஸ் டூ தேர்ச்சி பெறாமல் அடிப்படை படிப்பில் (Foundation Course) தேர்ச்சி பெற்று இளங்கலை பட்டம் பெற்றுள்ளார்.பியூசி அல்லது பிளஸ் டூ தேர்ச்சி பெறாமல் அடிப்படை படிப்பில் (Foundation Course) தேர்ச்சி ஏற்கத்தக்கதல்ல என அரசு கடித எண்.33448/எம்/2010–4, பணியாளர் மற்றும் நிர்வாகச்சீர்திருத்தத்துறை, நாள்: 03.12.2010ல் ஆணையிடப்பட்டுள்ளதால் தனியரது கல்வித்தகுதி ஏற்கத்தக்கதல்ல. 2)துறைத்தேர்வுகளில் (வருவாய் தேர்வு பகுதி–1 தாள்–1 தேர்ச்சி பெறவில்லை.) தேர்ச்சி பெறவில்லை. 3) ஒழுங்கு நடவடிக்கை/தண்டனை ஏதும் நிலுவையில் இல்லை 4) பணிக்காலத்தகுதி பெறவில்லை. உரிய கல்வித்தகுதி இன்மையால் விதிகளின்படி தெரிவுப்பட்டியலுக்கு தகுதி பெறவில்லை.

35	ப்பி.பாஸ்கர் மண்டலம்–8	15.09.2011	1)உயர்நிலைப்படிப்பு தேர்ச்சி பெற்று மேல்நிலைப்படிப்பு அல்லது பி.யூ.சி. தேர்ச்சி பெறாமல் தனியர் மார்ச் 1987ல் பத்தாம் வகுப்பு தேர்ச்சி பெற்று ஆகஸ்ட் 1987 முதல் ஜூலை 1988 வரை **ஐடிஐ ஒரு வருடமும்**, பின்னர் 16.10.1990 முதல் 15.10.1991 வரை **ஒரு வருடமும் தொழில் பயிற்சி முடித்துள்ளதாக** Provisional National Apprenticeship Certificateல் குறிப்பிடப்பட்டுள்ளது. அரசாணை (நிலை) எண்.242, உயர்கல்வித் (பி1) துறை, நாள்: 18.12.2012ல் பத்தாம் வகுப்பு, பிறகு **இரண்டு வருட தொழில் நுட்ப பயிற்சி (ஐடிஐ)** படித்து விட்டு தொலைத்தூரக் கல்வி நிறுவனம் மூலம் இளங்கலை பட்டப்படிப்பு படித்தவர்கள் 10ம் வகுப்பு மேல்நிலை (+2) வகுப்பு படிப்பு படித்து பின்பு இளங்கலை பட்டம் பெற்றவர்களுக்கு இணையாகக் கருதி வேலைவாய்ப்பிற்காக / பதவி உயர்விற்காக அங்கீகரிக்கப்பட்டுள்ளதால் இவரது பெயரை பணிவிதிகளின்படி பரிசீலிக்க இயலாது. 2)துறைத்தேர்வுகளில் தேர்ச்சி பெற்றுள்ளார். 3) ஒழுங்கு நடவடிக்கை/தண்டனை ஏதும் நிலுவையில் இல்லை 4)பணிக்காலத்தகுதி பெறவில்லை. விதிகளின் படி தெரிவுப்பட்டியலுக்கு தகுதி பெறவில்லை.
36	ஆர்.கோபி தெற்கு வட்டார இணை ஆணையர் அலுவலகம்	15.09.2011	1)பியூசி அல்லது பிளஸ் டூ தேர்ச்சி பெறாமல் முதுகலைப்பட்டப்படிப்பு தேர்ச்சி. விதிகளின் படி முறையான கல்வித்தகுதி பெறவில்லை. 2) துறைத்தேர்வு (வருவாய்)களில் தேர்ச்சி பெறவில்லை. 3) ஒழுங்கு நடவடிக்கை/தண்டனை ஏதும் நிலுவையில் இல்லை 4) பணிக்காலத்தகுதி பெறவில்லை. விதிகளின் படி தெரிவுப்பட்டியலுக்கு தகுதி பெறவில்லை
37	ஆர்.டில்லி மண்டலம்–7	16.09.2011	1) பட்டப்படிப்பு தேர்ச்சி பெறவில்லை. 2) துறைத்தேர்வு (வருவாய்)களில் தேர்ச்சி பெறவில்லை. 3) ஒழுங்கு நடவடிக்கை/தண்டனை ஏதும் நிலுவையில் இல்லை 4) பணிக்காலத்தகுதி பெறவில்லை. விதிகளின் படி தெரிவுப்பட்டியலுக்கு தகுதி பெறவில்லை.
38	ஜெ.சிவசங்கர் மண்டலம்–2	15.09.2011	1) கல்வித்தகுதி பெற்றுள்ளார். 2)துறைத்தேர்வு (வருவாய்)களில் தேர்ச்சி பெறவில்லை. 3)ஆறு மாத ஊதிய நிறுத்தம். 4)பணிக்காலத்தகுதி பெறவில்லை. விதிகளின் படி தெரிவுப்பட்டியலுக்கு தகுதி பெறவில்லை.
39	ஜெ.சுதாசினி மண்டலம்–10	15.09.2011	1)பியூசி அல்லது பிளஸ் டூ தேர்ச்சி பெறாமல் இளங்கலைப்பட்டப்படிப்பு தேர்ச்சி. விதிகளின் படி முறையான கல்வித்தகுதி பெறவில்லை. 2) துறைத்தேர்வு (வருவாய்)களில் தேர்ச்சி பெறவில்லை. 3) ஒழுங்கு நடவடிக்கை/தண்டனை ஏதும் நிலுவையில் இல்லை 4) பணிக்காலத்தகுதி பெறவில்லை. விதிகளின் படி தெரிவுப்பட்டியலுக்கு தகுதி பெறவில்லை
40	ஜெ.டைட்டஸ்அந்தோணி மண்டலம்–7	15.09.2011	1) கல்வித்தகுதி பெற்றுள்ளார். 2)துறைத்தேர்வுகளில் தேர்ச்சி பெற்றுள்ளார். 3) ஒழுங்கு நடவடிக்கை/தண்டனை ஏதும் நிலுவையில் இல்லை 4) பணிக்காலத்தகுதி பெறவில்லை. விதிகளின் படி தெரிவுப்பட்டியலுக்கு தகுதி பெறவில்லை
41	ஜெ.ரகுபதி மண்டலம்–13	15.09.2011	1)பியூசி அல்லது பிளஸ் டூ தேர்ச்சி பெறாமல் இளங்கலைப்பட்டப்படிப்பு தேர்ச்சி. விதிகளின் படி முறையான கல்வித்தகுதி பெறவில்லை. 2)துறைத்தேர்வு (வருவாய்)களில் தேர்ச்சி பெறவில்லை. 3) ஒழுங்கு நடவடிக்கை/தண்டனை ஏதும் நிலுவையில் இல்லை 4) பணிக்காலத்தகுதி பெறவில்லை. விதிகளின் படி தெரிவுப்பட்டியலுக்கு தகுதி பெறவில்லை
42	எம்.பி.திருப்பால்	29.02.2013	1) கல்வித்தகுதி பெற்றுள்ளார்.

	மண்டலம்–5		2)துறைத்தேர்வு (வருவாய்)களில் தேர்ச்சி பெறவில்லை. 3) தனியர் மீது தொடரப்பட்ட ஒழுங்கு நடவடிக்கையில் ஆறு மாத காலம் மற்றும் ஓராண்டு காலம் ஊதிய உயர்வு திரண்ட பயனின்றி நிறுத்தம் செய்து 11.07.2014 மற்றும் 16.04.2015 நாளிட்ட ஆணை வழங்கப்பட்டு தண்டனை நடப்பில் உள்ளது. 4)பணிக்காலத்தகுதி பெறவில்லை. விதிகளின் படி தெரிவுப்பட்டியலுக்கு தகுதி பெறவில்லை.
43	பெ.வே.நடராஜன் மண்டலம்–7	27.02.2013	1) பட்டப்படிப்பு தேர்ச்சி பெறவில்லை. 2) துறைத்தேர்வு (வருவாய்)களில் தேர்ச்சி பெறவில்லை. 3) ஒழுங்கு நடவடிக்கை/தண்டனை ஏதும் நிலுவையில் இல்லை 4) பணிக்காலத்தகுதி பெறவில்லை. விதிகளின் படி தெரிவுப்பட்டியலுக்கு தகுதி பெறவில்லை.
44	கு.ஜஸ்டினா மத்திய வட்டார துணை ஆணையர் அலுவலகம்	25.02.2013	1) கல்வித்தகுதி பெற்றுள்ளார். 2)துறைத்தேர்வு (வருவாய்)களில் தேர்ச்சி பெறவில்லை. 3) ஒழுங்கு நடவடிக்கை/தண்டனை ஏதும் நிலுவையில் இல்லை 4)பணிக்காலத்தகுதி பெறவில்லை. விதிகளின் படி தெரிவுப்பட்டியலுக்கு தகுதி பெறவில்லை.
45	எம்.சந்தானம் மண்டலம்–9	27.02.2013	1) கல்வித்தகுதி பெற்றுள்ளார். 2)துறைத்தேர்வு (வருவாய்)களில் தேர்ச்சி பெறவில்லை. 3)தனியர் மீது தொடரப்பட்ட ஒழுங்கு நடவடிக்கையில் ஆறு மாத காலம் ஊதிய உயர்வு திரண்ட பயனின்றி நிறுத்தம் செய்து 11.07.2014 நாளிட்ட ஆணை வழங்கப்பட்டு 01.04.2015 முதல் 30.09.2015 வரை தண்டனை நடப்பில் உள்ளது. 4)பணிக்காலத்தகுதி பெறவில்லை. விதிகளின் படி தெரிவுப்பட்டியலுக்கு தகுதி பெறவில்லை.
46	எஸ்.மஞ்சுளாதேவி மண்டலம்–9	27.02.2013	1) கல்வித்தகுதி பெற்றுள்ளார். 2)துறைத்தேர்வு (வருவாய்)களில் தேர்ச்சி பெறவில்லை. 3)தனியர் மீது தொடரப்பட்ட ஒழுங்கு நடவடிக்கையில் ஆறு மாத காலம் ஊதிய உயர்வு திரண்ட பயனின்றி நிறுத்தம் செய்து 11.07.2014 நாளிட்ட ஆணை வழங்கப்பட்டு 01.01.2015 முதல் 30.06.2015 தண்டனை முடிவு பெற்றுள்ளது எனினும், 15.05.2015 மைய நாளில் தண்டனை நடப்பில் இருந்தது. 4)பணிக்காலத்தகுதி பெறவில்லை. விதிகளின் படி தெரிவுப்பட்டியலுக்கு தகுதி பெறவில்லை.
47	எம்.எஸ்.பாலாஜி மண்டலம்–3	27.02.2013	1) கல்வித்தகுதி பெற்றுள்ளார். 2)துறைத்தேர்வு (வருவாய்)களில் தேர்ச்சி பெறவில்லை. 3) ஒழுங்கு நடவடிக்கை/தண்டனை ஏதும் நிலுவையில் இல்லை 4)பணிக்காலத்தகுதி பெறவில்லை. விதிகளின் படி தெரிவுப்பட்டியலுக்கு தகுதி பெறவில்லை.
48	வி.ராமன் மண்டலம்–4	27.02.2013	1)கல்வித்தகுதி பெற்றுள்ளார். 2)துறைத்தேர்வுகளில் தேர்ச்சி பெற்றுள்ளார். 3)தனியர் மீது தொடரப்பட்ட ஒழுங்கு நடவடிக்கையில் ஆறு மாத காலம் ஊதிய உயர்வு திரண்ட பயனின்றி நிறுத்தம் செய்து 11.07.2014 நாளிட்ட ஆணை வழங்கப்பட்டு 01.01.2015 முதல் 30.06.2015 வரை தண்டனை முடிவு பெற்றது. எனினும் 15.05.2015 மைய நாளில் தண்டனை நடப்பில் உள்ளது. 4) பணிக்காலத்தகுதி பெறவில்லை. விதிகளின் படி தெரிவுப்பட்டியலுக்கு தகுதி பெறவில்லை
49	ஜெ.வி.ரங்கராஜன் மண்டலம்–14	27.02.2013	1) கல்வித்தகுதி பெற்றுள்ளார். 2)துறைத்தேர்வு (வருவாய்)களில் தேர்ச்சி பெறவில்லை. 3) ஒழுங்கு நடவடிக்கை/தண்டனை ஏதும் நிலுவையில் இல்லை 4)பணிக்காலத்தகுதி பெறவில்லை. விதிகளின் படி தெரிவுப்பட்டியலுக்கு தகுதி பெறவில்லை.
50	ட்டி.கஜேந்திரபாபு மண்டலம்–2	25.02.2013	1)கல்வித்தகுதி பெற்றுள்ளார். 2)துறைத்தேர்வு(வருவாய்)களில் தேர்ச்சி பெறவில்லை.

			3) ஒழுங்கு நடவடிக்கை/தண்டனை ஏதும் நிலுவையில் இல்லை 4) பணிக்காலத்தகுதி பெறவில்லை. விதிகளின் படி தெரிவுப்பட்டியலுக்கு தகுதி பெறவில்லை
51	எஸ்.சரோஜினி மண்டலம்–15	01.03.2013	1) கல்வித்தகுதி பெற்றுள்ளார். 2)துறைத்தேர்வு (வருவாய்)களில் தேர்ச்சி பெறவில்லை. 3) ஒழுங்கு நடவடிக்கை/தண்டனை ஏதும் நிலுவையில் இல்லை 4) பணிக்காலத்தகுதி பெறவில்லை. விதிகளின் படி தெரிவுப்பட்டியலுக்கு தகுதி பெறவில்லை
52	கே.மோகன்ராவ் மண்டலம்–14	27.02.2013	1) கல்வித்தகுதி பெற்றுள்ளார். 2)துறைத்தேர்வு (வருவாய்)களில் தேர்ச்சி பெறவில்லை. 3)தனியர் மீது தொடரப்பட்ட ஒழுங்கு நடவடிக்கையில் ஆறு மாத காலம் ஊதிய உயர்வு திரண்ட பயனின்றி நிறுத்தம் செய்து 11.07.2014 நாளிட்ட ஆணை வழங்கப்பட்டு 01.01.2015 முதல் 30.06.2015 வரை தண்டனை முடிவு பெற்றுள்ளது. எனினும் 15.05.2015 மைய நாளில் தண்டனை நடப்பில் இருந்தது. 4)பணிக்காலத்தகுதி பெறவில்லை. விதிகளின் படி தெரிவுப்பட்டியலுக்கு தகுதி பெறவில்லை.
53	எ.அருள்தாஸ் மண்டலம்–11	27.02.2013	1) கல்வித்தகுதி பெற்றுள்ளார். 2)துறைத்தேர்வு (வருவாய் தேர்வு பாகம் 1 தாள் 1) தேர்ச்சி பெறவில்லை. 3) ஒழுங்கு நடவடிக்கை/தண்டனை ஏதும் நிலுவையில் இல்லை 4)பணிக்காலத்தகுதி பெறவில்லை. விதிகளின் படி தெரிவுப்பட்டியலுக்கு தகுதி பெறவில்லை.
54	வி.முருகேசன் மண்டலம்–5	28.02.2013	1) கல்வித்தகுதி பெற்றுள்ளார். 2)துறைத்தேர்வு (வருவாய்)களில் தேர்ச்சி பெறவில்லை. 3) தனியர் மீது தொடரப்பட்ட ஒழுங்கு நடவடிக்கையில் ஓராண்டு காலம் ஊதிய உயர்வு திரண்ட பயனின்றி நிறுத்தம் செய்து 16.04.2015 நாளிட்ட ஆணை வழங்கப்பட்டு தண்டனை நடப்பில் உள்ளது. 4)பணிக்காலத்தகுதி பெறவில்லை. விதிகளின் படி தெரிவுப்பட்டியலுக்கு தகுதி பெறவில்லை.
55	எ.காதர்பேக் மண்டலம்–1	01.03.2013	1)பியூசி அல்லது பிளஸ் டூ தேர்ச்சி பெறாமல் இளங்கலைப்பட்டப்படிப்பு தேர்ச்சி. விதிகளின் படி முறையான கல்வித்தகுதி பெறவில்லை. 2)துறைத்தேர்வு (வருவாய் தேர்வு பாகம் 1 தாள் 2) தேர்ச்சி பெறவில்லை. 3) ஒழுங்கு நடவடிக்கை/தண்டனை ஏதும் நிலுவையில் இல்லை 4) பணிக்காலத்தகுதி பெறவில்லை. விதிகளின் படி தெரிவுப்பட்டியலுக்கு தகுதி பெறவில்லை
56	ஏ.எஸ்.சுரேஷ் மண்டலம்–4	27.02.2013	1)கல்வித்தகுதி பெற்றுள்ளார். 2)துறைத்தேர்வுகளில் தேர்ச்சி பெற்றுள்ளார். 3)தனியர் மீது தொடரப்பட்ட ஒழுங்கு நடவடிக்கையில் ஆறு மாத காலம் ஊதிய உயர்வு திரண்ட பயனின்றி நிறுத்தம் செய்து 11.07.2014 நாளிட்ட ஆணை வழங்கப்பட்டு 01.01.2015 முதல் 30.06.2015 வரை தண்டனை முடிவு பெற்றுள்ளது. எனினும் 15.05.2015 மைய நாளில் தண்டனை நடப்பில் இருந்தது. 4) பணிக்காலத்தகுதி பெறவில்லை. விதிகளின் படி தெரிவுப்பட்டியலுக்கு தகுதி பெறவில்லை
57	எம்.அர்ஜுனன் மண்டலம்–5	27.02.2013	1)பியூசி அல்லது பிளஸ் டூ தேர்ச்சி பெறாமல் இளங்கலைப்பட்டப்படிப்பு தேர்ச்சி. விதிகளின் படி முறையான கல்வித்தகுதி பெறவில்லை. 2)துறைத்தேர்வு (வருவாய்)களில் தேர்ச்சி பெறவில்லை. 3)தனியர் மீது தொடரப்பட்ட ஒழுங்கு நடவடிக்கையில் ஆறு மாத காலம் மற்றும் ஓராண்டு காலம் ஊதிய உயர்வு திரண்ட பயனின்றி நிறுத்தம் செய்து 11.07.2014 மற்றும் 16.04.2015 நாளிட்ட ஆணை

			வழங்கப்பட்டு தண்டனை நடப்பில் உள்ளது. 4) பணிக்காலத்தகுதி பெறவில்லை. விதிகளின் படி தெரிவுப்பட்டியலுக்கு தகுதி பெறவில்லை
58	எஸ்.ஜி.லோகநாதன் மண்டலம்–3	27.03.2013	1) கல்வித்தகுதி பெற்றுள்ளார். 2)துறைத்தேர்வு (வருவாய் தேர்வு பாகம் 1 தாள் 1) தேர்ச்சி பெறவில்லை. 3) ஒழுங்கு நடவடிக்கை/தண்டனை ஏதும் நிலுவையில் இல்லை 4)பணிக்காலத்தகுதி பெறவில்லை. விதிகளின் படி தெரிவுப்பட்டியலுக்கு தகுதி பெறவில்லை.
